ஆகஸ்ட், 1957

ஹேவிளம்பி - ஆவணி

40 நயா பைசா

மஞ்சரி

சிற்பத்தின் இலக்கணம்

கலைஞன் ஆன்மிகச் சாதனையின் வலிமையைக் கொண்டே தெய்வ பிம்பங்களைப் படைக்கவேண்டும். ஆன்மிக நோக்கமே அவனுடைய சிறந்த, உண்மையான அளவுகோல், புற அறிவினால் காணும் பொருள்களை அவன் கொள்ளலாகாது.

—சுக்கிராசாரியர்.

மஞ்சரி

ஆசிரியர், பதிப்பாளர்:
என். ராமரத்தினம்

நிர்வாக ஆசிரியர்:
தி. ஜ. ரங்கநாதன்

பாஷை ஆசிரியர்கள்:

கி. வா. ஜகந்நாதன்
கா. ஸ்ரீ. ஸ்ரீ.
த. நா. ஸேனாபதி
வி. எச். சுப்பிரமணிய சாஸ்திரி
கௌரி அம்மாள்
கி. தாமோதரன்
கி. சாவித்திரி அம்மாள்
சீதா தேவி
'ஆர்வி'
மோ. ஸ்ரீ. செல்லம்

ஓவியர்கள்:
ஸாமி, மகான், சுசி, சுப்பு.

மஞ்சரி, தபாற் பெட்டி நெ. 604, மயிலாப்பூர், சென்னை-4. பிரதி ஆங்கில மாதமும் முதல் தேதி வெளிவரும். தனிப் பிரதி விலை 40 நயா பைசா (6½ அணா). வருஷ சந்தா ரூ. 4/75 (ரூ. 4-12-0). சந்தாத் தொகையை 'ஸர்க்குலேஷன் மானேஜர்' என்ற விலாசமிட்டு அனுப்புங்கள். விலாச மாற்றங்களைத் தங்கள் பழைய விலாசத்துடன் சந்தா எண்ணையும் குறிப்பிட்டுத் தெரிவியுங்கள். 'மஞ்சரி'யிலுள்ள எல்லாக் கட்டுரைகளும் கதைகளும் பதிப்புரிமை பெற்றவை.

ஆண்டு 10] ஸ்தாபிதம்: நவம்பர் '47 :: ஆகஸ்ட் 1957 [இதழ் 8

மஞ்சரி

மாதத்தின் சுவையான மலர்க்கதம்பம்

MAHARAJA SERFOJI'S SARASWATHI MAHAL LIBRARY
RECEIVED
8 AUG 1957

ஊரும் உலகமும்

★

காங்கிரஸும் சர்க்காரும்: காங்கிரஸ்காரர்களே காங்கிரஸ் சர்க்காரைபற்றிக் குறைகூறலாமா? இப்படி ஒரு கேள்வி. மேற் போக்காகப் பார்த்தால், இது சுலபமான கேள்வியாகத் தோன்றும். ஆனால், உண்மையில் இது சிக்கலான கேள்வி. காங்கிரஸ் கட்சி என்பது வேறு; காங்கிரஸ் சர்க்கார் என்பது வேறு. சில அரசியல் கொள்கைகளுக்காகச் செயல்புரிவது காங்கிரஸ் கட்சி. அந்தக் கொள்கைகளை நிறைவேற்ற, அந்தக் கட்சியின் ஆதரவில் பதவி யேற்பது காங்கிரஸ் சர்க்கார். ஆனால், அந்தச் சர்க்கார் அந்தக் கட்சிக்கு மாத்திரம் பொறுப்புள்ளதல்ல; தேச மக்களுக் கெல்லாம் பொறுப்புள்ளதாகும். கட்சியின் அரசியல் கொள்கைகளுக்கு விரோதமாக அந்தச் சர்க்கார் செயல் புரியக் கூடாது என்பது நியாயம். ஆனால், முற்றும் கட்சிக்கே கட்டுப்பட்டு, சகல நிர்வாக காரியங்களையும் காங்கிரஸ் சர்க்கார் புரியவேண்டும் என்பது தவறு. கட்சியின் கொள்கைகளுக்குத் தன் போக்கில் பொருள் செய்துகொண்டு சர்க்கார் செயல் புரியும். இதுமட்டும் அல்ல; தேச மக்களுக்கெல்லாம் பொறுப்புள்ளது - பொதுவானது- என்ற முறையில், சில சமயம் கட்சிக் கொள்கைகளை ஓரளவு மீறிக்கூடக் காங்கிரஸ் சர்க்கார் செயல்புரிய நேரலாம். காங்கிரஸ் சட்டசபைப் பிரிவு வேறு; காங்கிரஸ் ஸ்தாபன அமைப்பு வேறு. காங்கிரஸ் சட்டசபை உறுப்பினர்களுக்கே சில பிரச்னைகளில் அபிப்பிராய சுதந்தரம் அளிக்க நேரலாம். அப்போது சர்க்கார் விருப்பத்துக்கே மாறாகச் சட்டசபையின் முடிவு ஏற்பட்டுவிடலாம். சட்ட சபையின் முடிவுக்குக் கட்டுப்பட்டது சர்க்கார். இந்த விஷயங்களை யெல்லாம் பார்க்கும்போது, தனிப்பட்ட காங்கிரஸ்காரர்களுக்குக் காங்கிரஸ் சர்க்காரைப்பற்றிக் குறை கூற உரிமை இருக்கவேண்டும் என்றே ஏற்படும். ஆனால், கட்சிக்குள்ளே பிணக்கு ஏற்பட்டால் கட்சி சிதைந்துவிடாதா? எனவே தான் இது சிக்கலான சங்கதி. இதற்குப் பரிகாரமாகவும், பொது மக்களிடம் காங்கிரஸ்காரர், அதிகமாய்த் தொடர்பு கொள்ளவும் ஏற்ற முறையில் காங்கிரஸ் அமைப்பு விதிகளிலே சில சீர்திருத்தங்கள் செய்ய முயற்சி நடக்கிறது. காங்கிரஸ் காரியக் கமிட்டி அந்தச் சீர்திருத்தக் குறிப்புக்களைத் தயாரித்திருக்கிறது. அடுத்துவரும் டில்லிக் காங்கிரஸில் அவைபற்றி ஆலோசிக்கப் போகிறார்கள். விதி மாறுதல்கள் பற்றிய விவரம் தெரியவில்லை. அது எப்படியிருந்தாலும் சரி; இன்று இந்த முயற்சி பொருத்தமானது. சுதந்தரப் போராட்டம் நடத்திவந்த காங்கிரஸ் அல்ல இன்றிருப்பது; சுதந்தர இந்தியாவில் பதவியேற்றிருப்பது அது. இந்தப் புதிய நிலைமையில், தக்கபடி செயலாற்றி உரம்

படைத்த ஒரு கட்சியாக நிலைத்து அது வாழ வேண்டுமானால், அதன் அமைப்பிலே ஏற்ற சீர்திருத்தம் மிக மிக அவசியம்.

* * *

பாகிஸ்தான் சூழ்ச்சி: பாகிஸ்தான் பிரதம மந்திரி மிஸ்டர் சுஹ்ரவர்த்தி அமெரிக்காவுக்குப் போனார். காஷ்மீர் சம்பந்தமாக இந்தியாவைப்பற்றி - முக்கியமாக நேருவைப்பற்றி-மனம் போனபடி துஷ்பிரசாரம் செய்தார். இதைப் பற்றி அமெரிக்காவில் நம் சர்க்காரின் தூதர், அமெரிக்கச் சர்க்காரிடம் கண்டனம் தெரிவித்திருக்கிறார். இது ஒரு புறம் இருக்க, இந்தியா வசம் உள்ள காஷ்மீரில் பாகிஸ்தான் உளவர்கள் சூழ்ச்சியாக வெடிகுண்டு வெடித்திருக்கிறார்கள். அங்கே ஜனநாயக முறைப்படி தேர்தல் நடந்து, பக்ஷி குலாம் முகம்மதுவின் புதிய மந்திரிசபை அமைந்திருக்கும் நேரம் இது. இப்போது பாகிஸ்தான்காரர் விஷமம் தொடங்கியிருக்கிறார்கள். யாரிங் அறிக்கை பற்றி ஐக்கிய நாடுகளின் சபையில் சிறிது காலத்தில் விவாதம் நடக்கப் போகிறது. பாகிஸ்தான்காரர்கள் தாங்கள் ஆக்கிரமித்த தினத்தின் பத்தாவது ஆண்டு விழாவை, அந்த ஐ. நா. விவாத காலத்தில் கொண்டாடப் போகிறார்களாம். அப்படிக் கொண்டாடும்போது, விஷமம் புரிய எண்ணியிருக்கிறார்களாம். அதிலிருந்து, எல்லைக் கலகமோ முறையற்ற சிறு படையெடுப்போ நடத்திக் கலவரம் விளைவிக்க அவர்கள் முயலலாம். இதைச் சாக்காகச் சொல்லி, பல நாடுகளின் வீரர்கள் அடங்கிய ஐ. நா. படையை-அந்நியப் படையை-இந்திய மண்ணில் கொண்டுவந்து இறக்கும்படி செய்ய அவர்கள் திட்டமிட் டிருக்கிறார்களோ என்று நேருவே கவலைப்படுகிறார். ஐ. நா. படையை இந்தியாவுக்குள் நுழைக்க முன்பே பாகிஸ்தான் சம்மதித்தது; நேரு சம்மதிக்கவேயில்லை. இப்போது மீண்டும் அந்த முயற்சி நடக்குமானால், அதை இந்த உப கண்டத்துக்கே-இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்குமே-இழைக்கும் துரோகம் என்று நாம் பாவிக்க நேரும். அதனால் பல பெருந் தொல்லைகள் விளையும். பாகிஸ்தான் தலைவர்கள் இதை உணராதது, பெரிதும் வருந்தத் தக்க விஷயம்.

* * *

எடையிலே தசாம்சம்: நாணயத்திலே தசாம்ச முறை வந்தது. நயா பைசா இன்னும் பூர்ணமாய் நிலைப்படவில்லை. பொதுமக்களுக்கு அதனால் நூற்றுக்கு இரண்டு விகிதம் செலவு அதிகரித் திருக்கிறது என்று சர்க்கார் நிபுணர்களே கணக்கிட் டிருக்கிறார்களாம். வியாபாரிகளெல்லாம் ஒவ்வொரு பேரத்திலும் கால் பைசாவானாலும், தாங்கள் நஷ்டப்படத் தயாரில்லை; ஜனங்களுக்கே நஷ்டம் உண்டாக்குகிறார்கள். இப்போது எடையிலேயும் தசாம்ச முறையைக் கொண்டுவரப் போகிறார்கள். 1958-ஏப்ரல் 1-ஆம் தேதி ஆரம்பித்து, பத்து வருஷ காலத்தில் நாடெங்கும் தசாம்ச எடையைப் பரிபூர்ணமாக இந்திய சர்க்கார் ஏற்படுத்திவிடப் போகிறார்களாம். எடையிலே தசாம்ச முறை வந்தால், அப்போதும் ஜனங்கள் நஷ்டப்பட வேண்டிவரும். தசாம்ச நாணயத்தைப் போல அவ்வளவு சுலபமாய் அமலுக்குக் கொண்டுவரக் கூடிய தல்ல தசாம்ச எடை. அதில் பல சிக்கல்கள் இருக்கின்றன. நவீன விஞ்ஞான வளர்ச்சி யுற்றிருக்கும் இந்த நாளில் நாணயமும் சகல அளவுகளும் தசாம்ச ரீதியில் அமைவது முற்றும் பொருத்தமே. வருங் காலத்தில் அதனால் மிகுந்த நன்மை உண்டு; மக்களுக்கு மிகவும் சௌகரியம் உண்டு. ஆயினும் இன்று மக்களுக்குப் பெருஞ் சிரமம் கொடுக்காமல் - அவர்களுடைய வாழ்க்கைச் செலவுச் சுமையை மேலும் மேலும் அதிகரிக்கச் செய்துகொண்டே போகாமல் - தகுந்த முன்னெச்சரிக்கைகளை எடுத்துக்கொண்டு தசாம்ச முறைச் சீர்திருத்தங்களைச் செய்வதுதான் நல்லது.

டாக்டர் நாயுடு: அது ஒரு காலம்: இந்திய சுதந்தரப் போரிலே

அதைத் திலகரின் சகாப்தம் என்று சொல்ல வேண்டும். லோகமான்ய திலகர், பாரத நாட்டுக்குப் புத் துணர்ச்சி அளித்துத் தனித் தலைவ ராய் விளங்கினார். அவர் தூண்டி விட்ட மணிவிளக்குகள் எத் தனையோ. அவருடைய பேச்சும் எழுத்துந்தான், ஸாவர்க்கர், சிதம் பரம் பிள்ளை, சேலம் டாக்டர் வரதராஜுலு நாயுடு போன்ற பல தலைவர்களின் உள்ளத்திலே தேச பக்திக் கனலை மூட்டி விட்டன. மகாத்மா காந்தியின் ஒத்துழை யாமை இயக்கமெல்லாம் அப் போது இல்லை. தமிழகத்திலே மக் களுக்குச் சுதந்தர தாகம் எழுப்பி, அதற்காக ராஜத்துரோக வழக்கு களில் சிக்கி, சிறையும் சென்ற தியாகி டாக்டர் வரதராஜுலு நாயுடு. அவரைத் ''தென்னாட்டுத் திலகர்'' என்று நாடெல்லாம் கொண்டாடியது. டாக்டர் நாயுடு, அல்லோபதி என்ற ஆங்கில வைத் தியக் கல்வி பெற்ற டாக்டர் அல்ல; 'மின்ஸார ரஸ' டாக்டர். ஆயினும், டாக்டர் நாயுடு என்று தம்மைப் பிறர் குறிப்பதில்தான் அவருக்குப் பிரியம். அவருடைய 'தமிழ் நாடு' வாரப் பத்திரி கையும் தினப் பத்திரிகையும் பிரசித்தமாய் விளங்கின. அவற்றை அவர் நடத்திய விதமே தனி. 'தமிழ் நாடு' தினசரியிலே ஒவ்வொரு வரியையும் படித்து, பிசகுகளையும் தெளிவில்லாத நடை யையும் 'மார்க்' செய்து, மறு நாள் காலையில் உதவியாசிரியர்களுக்கு எச்சரிக்கை செய்வார். அவ ருடைய பேச்சிலும் எழுத்திலும் பொருள் நிறைந்திருக்கும்; அதே சமயம் மிகவும் வேகமும் பாமர மக்களுக்கும் புரியும் தெளிவும் அறிஞர் பாராட்டும் நயமும் எவர் மனத்தையும் கவரும் பொலிவும் அவற்றிலே இருக்கும். பிந்திய நாட்களில் சில காலம் காங்கிரஸி லிருந்து விலகி, மாறுபட்டார். அவருடைய பத்திரிகையும் நின்று விட்டது. அப்புறம் மீண்டும் காங்கிரஸில் சேர்ந்தார். ஆயினும், அவருடைய பழைய செல்வாக் கைக் காண முடியவில்லை. டாக்டர் நாயுடு தேச விடுதலைக்காகப் போரிட்டார்; தியாகம் புரிந்தார். தமிழ்ப் பத்திரிகை உலகிலே புது விழிப்பை உண்டாக்கினார். ஹிந்து தர்மத்துக்குப் பாடுபட்டார். தொழிலாளர் இயக்கத்தில் தலைமை தாங்கினார். அவர் பிரசாரக் கலை யில் நிபுணர். அவர் காலமானது எண்ணற்ற நண்பர்களுக்கும் பல தலைவர்களுக்கும் மக்களுக்கும் பெருந் துயர் அளிக்கும் செய்தி யாகும். அவருடைய மனைவிக்கும் மக்களுக்கும் நமது மனமார்ந்த அநுதாபம் உரியது.

காந்தியின் அபூர்வ போட்டோ

டில்லி ஹரிஜன் காலனியில் மகாத்மா காந்தியின் குடிசைக் கதவு எப்போதும் திறந்தே யிருக்கும். ஒரு நாள் ஒரு போட்டோவை எடுத்துக்கொண்டு குடிசைக்குள் நான் புகுந்தேன். போட்டோவில் மகாத்மாவின் கையெழுத்தை வாங்க எனக்கு ஆவல்.

போட்டோவை அவர் கையில் எடுத்தார். விழுந்து விழுந்து சிரித்தார்.

''ஏன் சிரிக்கிறீர்கள்?'' என்று கேட்டேன்.

அது மிக நல்ல போட்டோ என்பது என் அபிப்பிராயம்.

''இது நேர்த்தியான போட்டோதான்'' என்று அவரும் எனக்குத் திருப்தியாய்ச் சொன்னார். ஆனால், மேலும் தொடர்ந்து, ''இந்த நேர்த்தியான போட்டோவைப் பார்த் துத்தான், என் குருபத்தையே நான் சில சமயம் மறந்துவிடு கிறேன்'' என்று முடித்தார்.

—சாந்தா ராமராவ், 'திஸ் வீக்'.

சிப்பாய்க் கலகமா?

வீர ஸாவர்க்கர்

தமிழ்: ஜெயமணி சுப்பிரமணியம்

ஆகஸ்ட் 16-ஆம் தேதி பாரதமெங்கும் ஒரு விசேஷ நாளைக் கொண்டாட இந்திய சர்க்கார் திட்டமிட்டிருக்கிறது. முதல் இந்திய சுதந்தர யுத்தம் தொடங்கிய நாளின் நூற்றாண்டு விழா அது. முந்திய தலைமுறையினர் படித்த சரித்திரப் புத்தகத்திலெல்லாம் இதைச் 'சிப்பாய்க் கலகம்' என்றே குறித்திருப்பார்கள். 'இல்லை; அது முதலாவது இந்திய சுதந்தர யுத்தமே ஆகும்' என்று புரட்சி வீரர் ஸாவர்க்கர் நிலை நாட்டி, ஆங்கிலத்தில் ஒரு புத்தகம் எழுதி வெளியிட்டார். அதைப் பிரிட்டிஷ் சர்க்கார் தடை செய்து அமுக்கிவிட்டார்கள். ஆனாலும், ரகசியமாக அதன் பிரதிகள் சில அங்கங்கே வழங்கிக்கொண்டிருந்தன. மலேயாவில் ஜப்பானியர் புகுந்திருந்த காலத்தில் ஜெயமணி அதை 'எரிமலை' என்ற பெயருடன் மொழிபெயர்த்தார். நேத்தாஜியே, 'இது சிறந்த சேவை' என்று பாராட்டினார். அந்த நூல் இப்போது 'கலைமகள்' பிரசுரமாக வெளிவருகிறது. அதிலிருந்து எடுத்த ஒரு பகுதி இந்தக் கட்டுரை.

1857-ஆம் ஆண்டு பாரத கண்டத்தில் நடைபெற்ற முதலாவது சுதந்தர யுத்தத்தின் சரித்திரம் துரதிருஷ்டவசமாக, பாரபட்சமற்ற ஆழ்ந்த ஆராய்ச்சியுடன் எழுதப்படவில்லை. எனவே, அதுபற்றித் தவறான, நியாயமற்ற அபிப்பிராயமே நிலவி வருகிறது. அது விஷயமாக ஆங்கில சரித்திராசிரியர்கள் பித்தலாட்டமும் பொய்யும் கூறுவதில் தங்களுடைய முழுத் திறமையையும் காட்டியுள்ளனர். சிலர் அந்தப் போர் நிகழ்ச்சிகளை மாத்திரம் எழுதிவிட்டு, அவற்றின் காரணங்களை நன்கு ஆராயாமல் விட்டுவிட்டார்கள். பெரும்பாலோர் அந்த யுத்தம்பற்றித் தம் மனம் போன போக்கில் திரித்தும் பொறுப்பற்ற முறையிலும் பாரபட்சத்துடனுமேயே எழுதியுள்ளனர்.

பிஷாவரிலிருந்து கல்கத்தா வரையில் பொங்கி எழுந்த அரசியல் புரட்சி வெள்ளமானது யாதொரு காரணமும் இல்லாமலா எழுந்தது? டில்லி முற்றுகைகள், கான்பூர்ப் படுகொலைகள், தேசீயக் கொடிக்காகக் கணக்கற்ற வீரர்கள் புரிந்த உயிர்த் தியாகம் - இவைகளெல்லாம் மூலகாரணம் எதுவும் இல்லாமலா நிகழ்ந்தன? அப்போது எண்ணிக்கையற்ற பாரதத் தவப் புதல்வர்கள் புரிந்த வீர சாகசங்களுக்கு முக்கிய காரணம் இல்லாமல் இருக்க முடியுமா? அவற்றிற்கெல்லாம் தகுந்த காரணம் இல்லை என்று கூறுவோர், ஒன்று அரசியல் ஞானம் அற்றவர்களாக இருக்க வேண்டும்; அல்லது சுயநலப்

காப்பிரைட்: எரிமலை (தமிழ்ப் புத்தகம்); வெளியிடுவோர்: கலைமகள் காரியாலயம், சென்னை-4.

பேய்களான கொடியர்களாக இருக்க வேண்டும். இந்திய மகா ஜனங்கள் புரிந்த முதலாவது சுதந்தர யுத்தத்தைப்பற்றிய உண்மைகளைத் திரித்துக் கூறியுள்ள ஆங்கில சரித்திராசிரியர்களை, அரசியல் ஞான சூனியர்களென்று கூறுவதைக் காட்டிலும் அயோக்கிய சிகாமணிகள் என்பதே பொருந்தும்.

தோட்டாக்களில் கொழுப்புத் தடவும்படி ஆங்கில அதிகாரிகள் உத்தரவிட்டதால்தான், புரட்சி கிளம்பியது என்று ஸ்தாபிப்பதற்காக ஆங்கில சரித்திராசிரியர்கள் தங்களுடைய புத்தி, கற்பனு சக்தி எல்லாவற்றையும் உபயோகித்திருக்கிருர்கள்! கூலிக்கு மாரடிக்கும் சில இந்தியர்களும் அந்தச் சரித்திராசிரியர்களின் கூற்றுக்குத் தகுந்தவாறு தாளம் போட்டிருக்கிருர்கள். ஆங்கிலேயர்களின் செல்லப் பிள்ளைகளில் ஒருவரான இந்திய சரித்திராசிரியர், தோட்டாக்களில் பசு, பன்றிக் கொழுப்புத் தடவப்பட்டிருக்கிறது என்ற வதந்தியைக் கேட்டவுடன் மூட ஜனங்களுக்கு வெறி பிடித்துவிட்டதாகவும், அது உண்மையா பொய்யா என்றுகூட யாரும் விசாரிக்கவில்லை என்றும் கூறியிருக்கிருர்.

உண்மையில், தோட்டாக்களில் கொழுப்புத் தடவப்பட்டிருக்கிறது என்ற 'வதந்தி'யை இந்திய ஜனங்கள் குருட்டுத்தனமாக நம்பிவிடவில்லை. சரி, அந்த அற்ப காரணத்துக்காகச் சில அறிவீனர்களால் அந்தப் புரட்சி ஆரம்பமானதாகவே வைத்துக்கொள்ளுவோம். அப்படியானல் நானு சாஹிப், லக்ஷ்மிபாய், டில்லி சக்கரவர்த்தி பகதூர் ஷா, ரோஹில் கண்ட் கான்பகதூர்கான் முதலிய மேதாவிகளும் மண்டலாதிபதிகளும் வீரர்களும் அதில் ஏன் கலந்துகொண்டனர்? கொழுப்புத் தடவப்பட்ட தோட்டாக்களைத் தொடும்படியான அவசியம் அவர்களுக்கு ஏற்பட்டு விடவில்லை.

அவ்விதம் இருக்க, அந்த முதலாவது சுதந்தரப் போரில் அவர்கள் முக்கிய பாத்திரங்களாக விளங்கியதற்குக் காரணம் என்ன? அவர்கள் வெறி பிடித்த பைத்தியக்காரர்களா? மற்றும் அந்த வதந்திதான் அந்தப் பிரளயத்திற்குக் காரணம் என்ருல், 'இனி அந்தத் தோட்டாக்கள் உபயோகிக்கப்பட மாட்டா' என்று கவர்னர் - ஜெனரல் ஒரு பிரகடனம் விடுத்தவுடனேயே, புரட்சி அடங்கியிருக்க வேண்டும் அல்லவா? ஏன் அடங்கவில்லை? இந்திய சேனு வீரர்கள் ஏன் கொதித்தெழுந்தனர்? அவர்கள் மட்டுமா? அவர்களுடன் எவ்விதச் சம்பந்தமும் இல்லாத மகாராஜாக்கள், ராஜாக்கள், லட்சக்கணக்கான ஜனங்கள் முதலியோரும் அந்த வேள்வித் தீயில் குதித்ததற்குக் காரணம் என்ன? ஹிந்து - முஸ்லிம், அரசன் - ஆண்டி, சேனுவீரன் - சாதாரண மனிதன் முதலிய சகலரும் கொதித்தெழும்படி செய்தது அந்த அற்பச் சம்பவமா? இல்லை, இல்லை. பொய்யர்களான சரித்திராசிரியர்களோ, கூலிக்கு மாரடிக்கும் பேடிகளோ அதன் மூலகாரணத்தை மறைத்துவிட முடியாது.

அயோத்தி ராஜ்யத்தை ஆங்கிலேயர்கள் கைப்பற்றியது அந்தப் புரட்சிக்கு ஒரு காரணமென்று ஆங்கில சரித்திராசிரியர்கள் கூறியிருப்பதும் சரியல்ல. ஒருவேளை புரட்சிக்கான பல காரணங்களில் அதுவும் ஒன்ருக இருக்கலாம். எனினும், சுதந்தர யுத்தம் பீரிட்டெழுந்ததற்கு அது மூல காரணம் அல்ல.

அப்போது அயோத்தி நவாப் கல்கத்தாவில் சிறைப்பட்டிருந்தார். பிரஜைகள் அவர்மீது மிகவும் வெறுப்புக் கொண்டிருந்ததாக ஆங்கிலேயர்கள் கூறுகின்றனர். அப்படியிருக்க, அந்த ராஜ்யத்தைச் சேர்ந்த பிரபுக்கள், சிப்பாய்கள், சாதாரணப் பிரஜைகள் முதலிய யாவரும் வாளேந்தித் தங்கள் அரசருக்காகப் போர் புரிவானேன்? அரசரிடம் வெறுப்புக்கொண்ட பிரஜைகள் ஏன் அவ்வாறு செய்ய வேண்டும்? அப்போது அங்கு நிலவிய நிலைமைபற்றி இங்கிலாந்திலிருந்த வங்காளப் பிரமுகர் ஒருவர்

எழுதிய வியாசம் ஒன்றில் கீழ் வருமாறு குறிப்பிட்டிருந்தார்: 'நவாபை இதற்குமுன் ஒருபோதும் பார்த்திராதவர்களும், இனியும் பார்ப்பதற்குச் சந்தர்ப்பம் கிடைக்க ஹேது இராத சாதாரண ஜனங்களுங்கூட, அவருடைய துர்ப்பாக்கிய நிலைமையைக் குறித்துத் தங்கள் குடிசைகளில் கண்ணீர் வடிக்கிறார்கள் என்பதை நீங்கள் அறிய மாட்டீர்கள். வாஜித் அலி ஷாவுக்கு இழைக்கப்பட்டு வரும் அவமானத்திற்குப் பதிலாகப் பழிவாங்காது விடுவதில்லை என்று எவ்வளவோ வீரர்கள் தங்கள் வாட்களின்மீது ஆணையிட்டு ஆத்திரத்துடன் இருந்துவருகிறார்கள் என்பதையும் நீங்கள் சிறிதும் அறியமாட்டீர்கள்.'

நவாப் விஷயத்தில் சிறிதும் அக்கறை இல்லாத ஏராளமான மக்களும் அந்தப் புரட்சியில் சம்பந்தப்பட்டதிலிருந்து, புரட்சிக்கு அதுவும் மூலகாரணம் அல்ல என்பதை எவரும் அறிந்து கொள்ளலாம்.

பிரிட்டிஷார் அயோத்தி ராஜ்யத்தைக் கைப்பற்றாமலும், தோட்டாக்களுக்குக் கொழுப்புத் தடவாமலும் இருந்திருந்தால்கூட அந்தப் புரட்சி ஏற்பட்டே இருக்கும். ஏற்கனவே புகைந்துகொண்டிருந்த கனல், ஜ்வாலையைக் கக்கும்படி அந்த இரண்டு சம்பவங்களும் செய்திருக்கலாம். ஆனால் அவை புரட்சிக்கு மூலகாரணம் அல்ல. பிரான்ஸில் ஏற்பட்ட மகத்தான புரட்சிக்கு, உணவுப் பொருள்களின் விலையேற்றமும், அரசரின் அநீதிகளும், பாஸ்டில் கோட்டைப் பயங்கரச் சிறையும், பிரபுக்களின் அட்டூழியங்களும் சில்லறைக் காரணங்களே; மூல காரணம் வேறாகும்.

1857-ஆம் ஆண்டு பீரிட்டுக் கொண்டு எழும்பிய புரட்சிக்கு மூலகாரணம் என்ன? அற்ப காரணத்துக்காகவா ஆயிரக்கணக்கான சுத்த வீரர்கள் ஃபோர்க்களத்தில் வாள் வீசினர்? சாதுக்களான மக்கள் வீறு கொண்டு எழும்படியும், இழிவுபடுத்தப்பட்டுப் புழுதியில் கிடந்த தாயின் மணிக்கொடி மீண்டும் வானவீதியில் கம்பீரமாகப் பறக்கவும், மங்கிய கிரீடங்கள் மீண்டும் ஒளி பெற்றுத் திகழவும் செய்தது எது? புரட்சியில் கலந்து கொண்டவர்களை மௌல்விகளும் வேதியர்களும் வேற்றுமையின்றி ஒருங்கே வாழ்த்தியதன் மர்மம் என்ன? அவர்கள் வெற்றி பெறுவதற்காக டில்லி மசூதிகளிலும் காசிக் கோவில்களிலும் முறையே தொழுகையும் பூஜைகளும் பிரார்த்தனைகளும் நடந்த மர்மம் என்ன?

அந்தப் புரட்சியின் மூலகாரணங்கள் சுதர்ம நோக்கமும் சுதந்தர தாகமுந்தான். மத உணர்ச்சியை அழிப்பதற்காகத் தந்திரமான, அபாயகரமான, நாசகரமான முறைகளை ஆங்கிலேயர் கையாள ஆரம்பித்தவுடன் ஜனங்களிடையே எழுந்த 'தீன், தீன்!' என்ற வீர கோஷமே அதை விளக்கப் போதுமானது. அரசியல் அடிமைகள் ஆகி வரும் இந்திய ஜனங்களின் மத உணர்ச்சியையும் நசுக்கிவிட்டால், பின்னர் இந்தியாவைத் தாங்கள் எவ்வித இடையூறுமின்றி ஏகபோகமாக ஆட்சி புரியலாம் என்று ஆங்கிலேயர்கள் எண்ணி, அதற்கான அக்கிரமத் திட்டம் ஒன்றை வகுத்தனர். அதைக் கண்டதுந்தான் இந்திய மக்களிடையே ஆத்திரம் பொங்கியது. தங்கள் பிறப்புரிமைகளை அடியோடு நசுக்க ஆங்கிலேயர்கள் சூழ்ச்சி செய்து வருகின்றனர் என்பதை அறிந்ததும் மக்களின் மனத்தில் தேசபக்திக் கனல் மூண்டெழுந்தது.

உலகிலுள்ள வேறு எந்த நாட்டிலும் இத்தகைய பிரளயம் ஏற்பட்டதில்லை என்று கூறுவது மிகையாகாது. அரசியல் அல்லது மதம் காரணமாகப் புரட்சிகள் மூண்டது உண்டு. ஏக காலத்தில் நாட்டுப் பற்றையும் மதப்பற்றையும் அடிப்படையாகக் கொண்ட ஒரு புரட்சி மூண்டது, உலகிலேயே இதுதான் முதல் தடவையாகும். பாரபட்சமும் நிறத் திமிரும் துவேஷ புத்தியும் கொண்ட வெள்ளை ஆசிரியர்கள் நம் நாட்டின் பெருமையை மறைப்பதற்காக எவ்வாறு எழுதியபோதிலும் சரி, சித்தூரின்

பெயர் நம் சரித்திரத்தில் இடம் பெற்றிருக்கும் வரையிலும், பிரதாபாதித்தியன், குரு கோவிந்த சிம்மன் முதலியோரின் வீர தீரச் செயல்கள் நம் சரித்திர ஏடுகளை அலங்கரிக்கும் வரையிலும், பாரதத் தவப் புதல்வர்களின் சந்ததிகள் முதலாவது சுதந்தர யுத்தத்தை நடத்திய தலைவர்களை என்றென்றும் போற்றி வணங்கியே வருவார்கள்; அந்தப் புதல்வர்களின் நரம்புகளிலும் எலும்புகளிலும் வீர சுதந்தர ரத்தம் ஓடிக்கொண்டுதான் இருக்கும். கார்மேகங்கள் கதிரவனை மறைப்பதுபோல, அந்நியரின் அக்கிரமங்களால் பாரதப் புதல்வர்களின் பெருமை மங்கிக் கிடப்பது தாற்காலிகமானதே. அதை நிரந்தரமாக மறைக்கும் சக்தி உலகில் எவருக்கும் இல்லை.

'உயிரினும் இனிய மதத்தையும் தேசத்தையும் அபாயத்தினின்று விடுவிக்க எழுமின்' என்ற மூல மந்திரத்துடனே முதலாவது சுதந்தர யுத்தம் ஆரம்பமாயிற்று. அப்போது டில்லி சக்கரவர்த்தி விடுத்த அறிக்கை ஒன்று கூறியதாவது: 'ஹிந்துஸ்தான் சகோதர சகோதரிகளே! நாம் மட்டும் உறுதி கொண்டோமானல் எதிரிகளை நிமிஷத்தில் வென்றுவிட முடியும். அந்நியரின் ஆதிக்கத்திற்கு உட்படாமல் காப்பாற்ற முடியும்.' எனவே, 1857-ஆம் வருஷப் புரட்சிக்கு மூலகாரணம் தேச, மத விடுதலை லட்சியமே யன்றி வேறு எதுவும் இல்லை.

அப்போது பரேலியிலிருந்து வெளியிடப்பெற்ற சக்கரவர்த்தியின் பிரகடனம் கூறுவது: 'ஹிந்துக்களே, முஸ்லிம்களே, எழுங்கள்! கடவுளால் அளிக்கப்பட்ட கொடைகளில் சிறந்தது சுயராஜ்யந்தான். வெள்ளையர்களான கொடியவர்கள் நம்மை வஞ்சித்து அதை அபகரித்துள்ளனர். எனினும், அந்த அநீதி நிலைத்துவிடாது. ஆங்கிலேயர்களின் கொடுங்கோன்மை, கோர தாண்டவமாடி வருகிறது. நம் நாட்டை அடிமைப்படுத்திவரும் அவர்கள், இப்போது நமது மதத்தையும் நசுக்க முற்பட்டுள்ளனர். இனியும் நீங்கள் அலட்சியமாக இருக்கப் போகிறீர்களா? அப்படி இருப்பது நாம் கடவுளுக்கே அபசாரம் செய்வதாகும். வெள்ளையர்களை நாட்டிவிருந்து விரட்ட வேண்டும் என்ற உணர்ச்சி நமக்கு ஏற்பட்டிருப்பது இறைவனின் கிருபையே. வீரர்களான நீங்கள் ஆங்கிலேயர்கள் இந்தியாவில் இருந்த அடையாளமே இல்லாமல் செய்துவிட முடியும். நாம் எல்லோரும் நமது லட்சியத்தை நிறைவேற்ற எவ்விதப் பேதமுமின்றி ஒன்றுபடுவோமாக! புனித மதத்தையும் தேசத்தையும் நாம் காப்பாற்ற வேண்டும் என்பது கடவுளின் கட்டளையாகும்; நம் எல்லோருடைய முழு முதற் கடமையும் ஆகும். எனவே, சகலரும் ஆயுதம் ஏந்திப் போரில் குதியுங்கள்.'

'சுதர்மம்', 'சுயராஜ்யம்' என்று இங்கே தனித்தனியாகக் குறிப்பிட்டிருப்பினும், இரண்டும் ஒன்றுதான். சுதர்மம் இல்லாத சுயராஜ்யம் வெறுக்கத் தக்கது. அதுபோலவே சுயராஜ்யமின்றிச் சுதர்மம் என்ற பேச்சே எழ இடமில்லை. சுயராஜ்யமின்றி நாம் நமது சுதர்மத்தை எவ்வாறு அநுஷ்டிக்கவோ பாதுகாக்கவோ முடியும்? மதத்தை அழித்தால் சுதர்மம் அழிந்துவிடும்; பின்பு சுயராஜ்யத்துக்கே வழி இல்லாமல் போய்விடும். இந்த நோக்கத்துடனேயே ஆங்கிலேயர்கள் ஹிந்து, இஸ்லாம் மதங்களை அழிக்க முற்பட்டனர்.

டில்லி முற்றுகையிடப்பட்டு யுத்தம் கடுமையாக நடைபெற்று வருகையில், டில்லி சக்கரவர்த்தி விடுத்த மற்றொரு பிரகடனம் கூறியதாவது: 'நிலம், செல்வம், சக்தி முதலியவற்றை ஆண்டவன் எதற்காக அருளியிருக்கிறான்? குறிப்பிட்ட சிலர் மாத்திரம் பிறரைச் சுரண்டிச் சுகபோகம் அநுபவிப்பதற்காக அல்ல; நமது பரிசுத்தமான மதத்தைப் பாதுகாக்கும் புண்ணிய கைங்கரியத்துக்குப் பக்க பலமாகவே அவை வழங்கப்பட்டிருக்கின்றன. தெய்வம் கொடுத்த சுதந்தரத்தை மனிதன் அபகரிக்கும்படி விடுவது

மகா பாதகம் என்பதுடன் பேடித்தனமும் ஆகும்.

'நம் செல்வம் எங்கே, பூமி எங்கே, சக்தி எங்கே? எல்லாம் அடிமைத்தனத்தினுல் மறைக்கப்பட்டு விட்டன. நாம் மதத்தையும் தேசத்தையும் பாதுகாக்கும் சக்தியை இழந்தால், அவற்றை நாமே அழித்த பாதகம் நம்மைச் சாரும். எனவே, சுயராஜ்யம் பெற முயற்சி செய்யாதவனும் சுதர்மத்தை நிலைநிறுத்த ஆர்வம் கொள்ளாதவனும் அந்தப் பாவத்துக்கு ஆளாகியே தீரவேண்டும். ஆவேசம் கொண்டு எழாது, அடிமைத்தனத்தில் மௌனமாக ஆழ்ந்திருப்பவன் நாஸ்திகன், மத விரோதி, தேசத் துரோகி. ஆகையால் சுதர்மத்தையும் சுயராஜ்யத்தையும் ஸ்தாபிக்க எழுங்கள்!'

ஆஹா! இதற்காக நம் தேச மக்கள் எவ்வளவு தியாகங்கள் புரிந்துள்ளனர்! முனிவரும் கவியுமான குரு ராமதாஸ் இருநூற்றைம்பது ஆண்டுகளுக்கு முன் மகாராஷ்டிரர்களுக்கு என்ன கட்டளையிட்டார், தெரியுமா? 'உங்கள் தர்மத்தைப் பாதுகாக்க உயிரையும் லட்சியம் செய்யாதீர்கள். உயிர்களைப் பலிகொடுத்துப் போர் புரிந்து உங்கள் ராஜ்யத்தைத் திரும்பவும் பெறுங்கள்.'

குரு ராமதாஸ் அன்று செய்த இந்த உபதேசமானது எந்தக் காலத்துக்கும் பொருந்தும்.

1857-ஆம் வருஷத்திய சுதந்தர யுத்தத்தில் கலந்துகொண்டவர்களும் அந்த உபதேசத்தின்படியே நடந்துகொண்டார்கள். முதலாவது சுதந்தர யுத்தம் தோல்வி அடைந்துவிட்டது என்பதற்காக அதன் புனிதத் தன்மையையோ சிறப்பையோ இகழ்ந்து கூற முடியுமா? குரு கோவிந்த சிம்மர் தமது ஜீவிய காலத்தில் நிறைவேற்ற முடியாமற் போனதற்காக அவரது லட்சியத்தின் உயர்வை எவரும் அலட்சியம் செய்ய முடியாது. 1848-ஆம் ஆண்டு இத்தாலியில் ஏற்பட்ட மகத்தான புரட்சி தோல்வியடைந்தது என்பதற்காக, அதன் பெருமை குன்றிவிடுமா? பின்னர் இத்தாலியின் மகத்தான வெற்றிக்கு அது அஸ்திவாரமாக அமைந்ததுபோல், இந்தியாவின் முதலாவது சுதந்தர யுத்தமும் எதிர்காலத்தில் ஏற்படப் போகும் மகத்தான வெற்றிக்கு அஸ்திவாரமாக அமைந்துள்ளது. விஷத்தன்மை பொருந்திய வெள்ளை ஆசிரியர்கள் என்ன சூழ்ச்சி செய்தாலும் இந்தப் புனித உண்மையை மறைத்துவிட முடியாது.

வாழும் வழி

வாழும் வழிபற்றி நான் கொண்ட விதிகள் இவையே:

கடுமையாய் உழை; அளவோடு விளையாடு; பிறர் உன்னைப்பற்றி நல்லது சொன்னுலும் சரி, கெட்டது சொன்னுலும் சரி, கவலைப்படாதே. நண்பருக்கு ஒரு போதும் கேடு செய்யாதே. எதுபற்றியும் பெருங் கோபம் கொள்ளாதே. அந்த அந்தக் கணத்திலே எவ்வளவு உயர்வாய் வாழ முடியுமோ அவ்வளவு உயர்வாய் வாழ். வாழ்விலே திருப்தி அடை; ஆனுல், உன்னிடம் ஒருபோதும் திருப்தி கொள்ளாதே.

—ஜார்ஜ் ஜீன் நாதன்

கணக்குச் சரியா ?

762 பாவங்கள் இருக்கின்றன என்று ஒரு பாதிரியார் பிரசங்கம் செய்தார். இப்போது அவருக்கு ஏராளமான கடிதங்கள் வருகின்றன. பதில் எழுதி மாளவில்லையாம். தங்கள் தங்கள் ஜாபிதாவில் இத்தனை வரவில்லையாதலால், எவை விட்டுப்போயின என்று ஒவ்வொருவரும் விசாரிக்கிருர்களாம்.

—'நியூ யார்க் டெய்லி மிரர்'

பேதமற்ற நாடு

காபட் தந்த சித்திரம்

நவீன சர்வாதிகார ஆட்சிகளின் கேலிச் சித்திரம் போன்றது இட்னி காபெட் (1787-1856) எழுதிய 'இக்கேரியா யாத்திரை' என்ற நாவல். அதன் சாரத்தைத் தருகிறார் அறிஞர் ரா. ஸ்ரீ. தேசிகன்.

'இக்கேரியா யாத்திரை' என்ற நூலைப்பற்றி அதன் ஆசிரியர் மொழிந்த கருத்துக்கள் நம் சிந்தையைக் கவராமற் போகா. இது ஒரு நாவல் அமைப்பைப் பெற்றிருந்தாலும், ஒழுக்கம், தத்துவம், சமுதாயப் பொருளாதாரம், அரசியற் பொருளாதாரம் முதலிய விஷயங்களைப் பற்றிக் கூறும் விரிந்த கட்டுரையாகும். நீண்ட கால உழைப்பின் விளைவாகும் என்றும் கூறலாம். இது இடையருத தியானத்தாலும், விரிவான ஆராய்ச்சியாலும் பிறந்த நூலென்றே கருதுகிறேன். இதை எளிதில் அறிந்துகொள்ள முடியாது. பல தரம் படித்தால் தான் இதில் கோயில் கொண்ட கருத்துக்கள் புலனாகும் என்று ஆசிரியரே கூறுகிறார். மக்களிடம் வைத்த அன்பு வெள்ளத்தின் மீது மிதந்து வந்தது இது என்று இயம்பினால், அது மிகையாகாது. மக்களின் முன்னேற்றத்தில் இவருக்கு அளவு கடந்த நம்பிக்கை உண்டு என்பது இவருடைய நூலைத் துருவி ஆராய்வோர்க்கு விளங்கும்.

தொழிலாளர் குடும்பம் ஒன்றில் 1788 - ஆம் ஆண்டில் பாரிஸ் மாநகரத்தில் ஆசிரியர் பிறந்தார். தொழிலாளர் குலத்தில் தோன்றினாலும், நல்ல கல்வியைப் பெற்றார். வக்கீல் தொழிலில் அமர்ந்து நல்ல புகழும் அடைந்தார். இளம் வயதில் அரசியல் இவர் உள்ளத்தைக் கவர்ந்தது. முடிவேந்தராட்சியை - அதுவும் அறிவு மிக்க வேந்தராட்சியை - இவர் தாங்கினார். லூயி ஃபிலிப் (Louis Phillipe) அரியாசனம் ஏறினதும், இவரைக் கார்சிகாவில் அட்டர்னி - ஜெனரலாக அவன் நியமித்தான். வேந்தன் தாம் சொன்னதைக் கேட்பான் என்று எண்ணி அவனுடைய அலுவல்களில் தலையிடத் தொடங்கினார். அதனால் இவருக்கு மிகுந்த அவமானம் ஏற்பட்டது. தம் உத்தியோகத்தையும் இழந்தார். பாரிஸ் மாநகரத்துக்குத் திரும்பி வந்து பத்திரிகைத் தொழில் ஆரம்பித்தார். அதில் வந்த ஒரு கட்டுரைக்காக இவர்மீது குற்றஞ் சாட்டினார்கள். "இரண்டு வருஷம் சிறைவாசத்தை ஏற்றுக் கொள்ளுகிறீரா? அல்லது ஐந்தாண்டு வெளி நாட்டு வாசத்தை ஏற்றுக்கொள்ளுகிறீரா?" என்று அரசாங்கம் கேட்டது. இவர் வெளிநாட்டு வாசத்தையே விரும்பினார்.

1834 - ஆம் ஆண்டு மே மாதம் இவர் லண்டன் மாநகரத்துக்கு வந்தார். பல தொழில்களையும் பார்த்த இவருக்கு, நீண்ட ஓய்வு காலம் பொறுக்க முடியாதபடி விரியத் தொடங்கிற்று. காலம் இவருக்கு ஒரு சுமையாய்க் காட்சி அளித்தது. ஆங்கிலம் தெரியாத காரணத்தால், ஆங்கிலேயரோடு சகஜமாயும், சாதாரணமாயும் பழக இவரால் இயலவில்லை. லண்டன் மாநகரம் இவருக்கு நீண்ட சிறைவாசமாய்ப் பட்டது. மற்றவர்களைப் போலப் பிரிட்டிஷ் பொருட்காட்சிச்சாலையில் பொழுதைப் போக்கினார். தம்முடைய

நூலை அமைத்தல் பொருட்டு வேண்டிய விஷயங்களைத் திரட்டினார். அதிகமாகப் படித்ததால் இவருடைய மனோதர்மத்துக்கு - ஆழ்ந்த சிந்தனைக்கு - செறிந்த கற்பனைக்கு-இடம் இராமல் போய் விட்டது என்று, இவருடைய நூலைத் துருவி ஆராய்ந்த விமர்சனப் புலவர் மொழிகிறார். ஹாரிங்டனின் கடற்கன்னி ((Harrington's Oceana), மோரின் (More) 'எங்குமில்லா நாடு' போன்ற கற்பனை உலகங்கள் இவருடைய உள்ளத்தைக் கவர்ந்தன. இந்தத் துறையில் ஏசுநாதர், கிறிஸ்துவ மடாதிபதிகள், பிராசீன கிறிஸ்துவர்கள், கிறிஸ்துவ மத இயக்கத்தில் புரட்சியை நாடுகிறவர்கள், பதினெட்டாம் நூற்றாண்டில் தோன்றிய தத்துவ ஞானிகள், பிரெஞ்சு நாட்டுப் புரட்சிக்காரர்கள், சமத்துவத்தையும் சகோதரத் தன்மையையும் பரப்புகிற முற்போக்காளர்கள்-இத்தகையோர்கள் நண்பர்களாய்த் திகழ்ந்தனர்.

மேலும் 'பாபோவிஸ்ட்ஸ்' (Babouvists) கொள்கைகள் இவரை ஆட்டி வைத்தன என்பதில் ஐயமில்லை.

ஜெரார்ட்வின்ஸ்டான்லி (Gerrard Winstanley) இங்கிலாந்தில் அபேத தத்துவத்தைப்பற்றிப் பேசினாலும் தனி மனிதனுடைய சுதந்தரத்தை மறக்கவில்லை. ஆனால் காபெட் தந்த நூலில் சுதந்தரம், தனி மனிதனுடைய உரிமைகள் இவைகளைப்பற்றிய விஷயம் இடம் பெறவில்லை. பாபோஸ் ஒரு சிறிய குழுவைக் கொண்டு அரசாங்கத்தைக் கவிழ்க்க முயன்றார்; 'காபெட்' சமுதாயமே அபேத வாதத்தைச் சட்டென்று ஏற்றுக் கொண்டு அலுவல்களில் இறங்க வேண்டும் என்றார். தொழில் முறைக்கு அதிகமான சலுகை காண்பித்தார். யந்திரங்களின் மூலம் தொழிலை வளர்த்தால் எல்லோரும் எல்லாச் செல்வமும் அடைய முடியும் என்ற கொள்கையில் இவருக்கு முழு நம்பிக்கை உண்டு. ராபர்ட் ஓவன் அடிச்சுவட்டை இவர் பின்பற்றினார். தம் கொள்கைகளுக்குத் தக்க உருக் கொடுக்க அமெரிக்காவில் சில குழுக்களை நிறுவினார். இவருடைய கற்பனை உலகப் புத்தகத்துக்குப் பெரிய ஆதரவு கிடைத்தது. தொழிலாளர்கள் தனித் தனியாக இவருடைய புத்தகத்தை வாங்க முடியாது போனாலும், பல தொழிலாளர்கள் சேர்ந்து அதை வாங்கினார்கள். காபெட்டின் கருத்துக்களைப் பரப்பும் குழுக்களும் பிரெஞ்சு நாட்டில் தோன்றின. 1898 - ஆம் ஆண்டுவரையில் காபெட்டை ஆதரிக்கும் குழுக்கள் இருந்தன; இறுதியில் அவைகள் மெல்லத் தேய்ந்து மறைந்து போயின. இக்கேரியா என்னும் கற்பனை நாட்டில் நாம் சற்றுத் திரிவோமே.

உலகத்திலுள்ள மற்றைய நாடுகளிலிருந்து இக்கேரியா பிரதேசம் பிரிந்திருக்கிறது. வடக்கிலும், தெற்கிலும் ஓங்கு மலைகள் காட்சி அளிக்கின்றன. கிழக்கிலும் மேற்கிலும் அகலமான ஆறுகளும் ஆழ்ந்த கடலும் விரிந்து கிடக்கின்றன.

நூறு மாகாணங்களாக இது பிரிந்திருக்கிறது. எல்லாம் ஒரே வடிவுதான். ஜனத்தொகையிலும் சற்றும் வித்தியாசம் இல்லை. ஒவ்வொரு மாகாணமும் கம்யூன் என்ற பத்துச் சிறு பிரிவுகளாகப் பிரிந்திருக்கிறது. மாகாணத்தின் தலைநகரம் அதன் நடுவில் திகழ்கிறது. சிறு பிரிவின் தலைநகரும் அதன் மத்தியில் அமைந்திருக்கிறது. சிறு பிரிவிலே ஒரு நகரம் விளங்குவதோடுகூட, அதன் கீழ் எட்டுக் கிராமங்களும் கழனிகளும் காட்சி அளிக்கின்றன. பிரதேசம் முழுவதிலும் எல்லாம் ஒழுங்காய்ச் சமைந்திருப்பதை நாம் பார்க்கிறோம். பின்னிய வலை போலப் பாதைகள் எங்கும் ஓடுகின்றன; எல்லாப் பாகங்களையும் இவைகள் சேர்த்து வைப்பதையும் நாம் காண்கிறோம். மோர் எழுதிய கற்பனை உலகில் காண்பது போல இந்தக் கற்பனை உலகிலும் எல்லாம் ஓர் அளவுக்கு ஒழுங்காய்ப் போவதை அறிகிறோம்.

தலைநகரான இக்கேரா ஒரு வட்ட வடிவமாய்த் திகழ்கிறது. இப்படி அமைந்து கிடப்பதில் அதில் ஓடுகிற ஆற்றின் வடிவமும் மாறுகிறது. இரண்டு பெரிய சுவர்களுக்கிடையே அது ஓடுவதைப் பார்க்கிறோம். நகரத்தின் நடுவே ஆறு இரு கிளைகளாகப் பிரிகிறது. இதற்கிடையே ஒரு தீவு எழுகிறது. அந்தத் தீவிலே மரங்கள் செறிந்த ஒரு சதுரத்தைப் பார்க்கிறோம். அதன் நடுவில் நகரத்தின் முக்கியமான கட்டிடம் தோன்றுகிறது. அதன் மாடத்திலும் ஒரு தோட்டம் விரிந்து நிற்பது உணரத் தக்கது. அதன் நடுவில் ஒரு கம்பம் இலங்குகிறது. அந்தக் கம்பத்தின்மீது ஒரு வியன் சிலை காட்சி அளிக்கிறது. மற்றைய கட்டிடங்களின்மீது அது ஆட்சி புரிவது போலத் திகழ்கிறது. தெருக்கள் ஒழுங்காகவும் விசாலமாகவும் இருக்கின்றன. வீட்டுப் புழைக்கடையில் தோட்டங்கள் மிகக் கவின் பெறத் தோன்றுகின்றன.

தெருக்களில் இரண்டு நிமிஷங்களுக்கு ஒரு முறை பல்லாயிரக் கணக்கில்தான் வண்டிகள் பல திசைகளில் ஓடுகின்றன. வண்டி நிற்கும் கூரை போட்ட நிலையங்களில் ஜனங்கள் நிற்பார்கள். ஆபத்துக்கள் நிகழாவண்ணம் கால்நடையாய்ச் செல்வோர்களுக்குத் தனிப் பாதைகளை வகுத்திருக்கிற விஷயம் சிந்திப்பதற்குரியது.

சுகாதாரம், ஓர் ஒழுங்கு, ஒரு முறை, எதையும் செவ்வனே செய்கிற பண்பாடு இவை யாவும் அந்த நகரில் ஆட்சி புரிகின்றன. நிபுணர்களைக் கொண்டு எல்லாம் ஒழுங்காய் அமைகின்றன. மேலும் எல்லாம் அரசாங்கத்தின் அலுவல்களாய்ப் போய்விடுகின்றன. தனி மனிதனின் கற்பனைக்கோ அவனுடைய மனோதர்மத்துக்கோ அங்கே இடம் இல்லை. நகர அமைப்புத் தொழில் முதற்கொண்டு குல்லாய் நெய்கிற தொழில் வரையில் சட்டந்தான் ஆட்சி செய்கிறது. சாப்பாட்டின் திட்டத்தைக் கூடச் சட்டமே வகுக்கிறதென்றால், மற்றவைகளைப்பற்றி மொழிவானேன்?

இக்கேரியா அரசாங்கம் ஒரு குடியரசுதான். ஜனங்களின் இச்சைதான் (Writ) செங்கோல் ஆகும். அது தேசீய சபைகள் மூலம் உருவாகும். சேர்ந்து உழைப்பதிலும், சமமாக இருப்பதிலுந்தான் இன்பம் தோன்றும் என்று அந்த நாட்டு மக்கள் நன்கு உணர்ந்திருக்கிறார்கள். எல்லோரும் சமானமானவர்கள். சமமான உரிமைகளுக்கேற்ற கடமைகளும் பணிகளும் எல்லோருக்கும் உண்டு. எல்லோரும் தம்மை ஒரு குடும்பமாகக் கருதி அதற்கேற்ற பொறுப்புக்களை உணர்கிறார்கள். முதலெல்லாம் அரசாங்கத்தைச் சார்ந்தது. அந்த ஊர் மாந்தர்கள் ஏதாவது ஒரு தொழிலில் இறங்கியாக வேண்டும். எல்லோரும் சமுதாயத்தின் முதலை வளர்ப்பதற்காக இடையறாத முயற்சிகள் செய்வதே அந்த நாட்டின் நோக்கமாகும்.

'கல்விதான் அரசாங்கம்' என்று வெல்ஸ் (Wells) பல நூல்கள் வாயிலாக உலகத்துக்கு முரசடித்தார். காபெட் இந்தத் தத்துவத்தை முன்னமேயே போதித்துள்ளார்.

இக்கேரியா நாட்டின் அஸ்திவாரம் கல்வியே. கம்பரும் கோசல நாட்டைச் சித்திரிக்கிறபொழுது, கல்வி என்ற வித்திலிருந்துதான் எல்லாம் தழைத்தன என்று கூறுகிறார். சமுதாய முதலிலிருந்துதான் உணவு, உடை, இல்லம், உட்காருவதற்கும் தூங்குவதற்கும் வேண்டிய சாமான்கள் எல்லாம் அரசாங்கச் சட்டங்களின்படி அமையும். எல்லோருக்கும் சமமான உரிமைகளும் உண்டு. தேர்தல் உரிமைகளைப்பற்றிச் சொல்ல வேண்டியதில்லை. எல்லோரும் எல்லாப் பதவிகளையும் அடைய வாய்ப்பு உண்டு. இக்கேரியா நாட்டு மக்கள் ஒரு பள்ளத்தாக்கில் கூடித் தங்களுடைய சட்டதிட்டங்களை அமைத்துக்கொள்ளலாம். ஆனால் ஏககாலத்தில் இப்படி இயலாத காரணத்தால், ஜனநாயக சபை ஒன்றுக்கு அங்கத்தினரைத் தேர்ந்தெடுத்து அனுப்புவார்கள். 2000 நபர்கள்

கொண்டது அந்தச் சபை? அது ஒரு நிரந்தரமான சபையே யாயினும், அதில் பாதி அங்கத்தினரை ஆண்டுதோறும் புதிதாய்த் தேர்ந்தெடுப்பார்கள். அதன் சட்ட திட்டங்களைக் குடிகள் ஆமோதித்தால்தான் அவை அமலுக்கு வரும். எனவே அத்தனை உரிமைகளும் மக்களிடமே தங்கி நிற்கின்றன என்பதில் யாதோர் ஐயமுமில்லை.

சட்ட திட்டங்களை அமலுக்குக் கொண்டு வருகிற நிர்வாக இலாகாவுக்கு (The Executive) ஒரு தலைவன் (President) உண்டு. பதினைந்து அங்கத்தினர் அவனோடு ஒத்துழைப்பார்கள். ஒவ்வோர் ஆண்டும் பாதி அங்கத்தினர்களைப் புதுப்பிக்கலாம்.

மக்களின் உரிமைகளைத் தக்கபடி உருவாக்குவதன் பொருட்டு, நாட்டை நூறு மாகாணங்களாய்ப் பிரித்திருக்கிறார்கள். இவைகளையும் கம்யூன் என்ற ஆயிரம் பிரிவுகளாய்க் கூறு இட்டிருக்கிறார்கள். எல்லோரும் எல்லாச் செய்திகளையும் துருவி ஆராயும் பொருட்டுப் புள்ளி விவரம் (Statistics) எடுக்கும் இலாகாவில் பதிவு செய்வார்கள். ஜனநாயகப் பத்திரிகையில் அரசாங்க விஷயம் யாவும் விளம்பரமாகும். உணவைப்பற்றிப் பொதுவாக எந்த அரசாங்கமும் கவலைப்படுவதில்லை; ஆனால் இந்த நாட்டிலோ உணவைப்பற்றிய சட்டங்களை அரசாங்கத்தார் வகுத்திருக்கிறார்கள். ஆண்களுக்குத் தக்கபடி, பெண்களுக்குத் தக்கபடி, வயதுக்குத் தக்கபடி உணவை அளந்து கொடுக்கிறார்கள். ஒவ்வொரு குடும்பத்துக்கும் ஒருவித அளவான ஆகாரமே அளிப்பார்கள். காலை ஆறு மணிக்குத் தொழிலாளிகள் வேலையைத் தொடங்குவதற்கு முன்பு, தொழிற்சாலைகளில் தொழிற்சாலை சம்பந்தப்பட்ட உண்டிச் சாலையில் சமைத்த உணவைச் சேர்ந்து உண்பார்கள். ஒன்பது மணிக்குத் தொழிற்சாலையில் சிற்றுண்டி நடைபெறும். அவர்களுடைய மனைவி மக்கள் தம் தம் வீடுகளில் உண்டி அருந்துவார்கள். இரண்டு மணிக்குத் தெருவிலுள்ள மாந்தர்கள் ஜனநாயக உண்டிச்சாலைகளில் சேர்ந்து உண்பார்கள்.

ஒவ்வொரு நாளும் இரவில் சுமார் ஒன்பது மணியிலிருந்து பத்து மணிக்குள் ஒவ்வொரு வீட்டிலும், இல்லாள் சமைத்த உணவை உண்பார்கள் பிறகு இக்கேரியா நாட்டின் சிறப்பைப் புகழ்ந்து பாடுவார்கள். இந்த நாட்டில் எல்லோருக்கும் சமமாய்க் கிடைக்கும் உணவு, வெளிநாட்டில் திகழ்கிற செல்வர்கள் இல்லங்களிலுங்கூடக் கிடைக்காது.

உடைக்காக ஒரு குழுவை அமைத்திருக்கிறார்கள். எல்லா நாட்டினரின் உடைகளையும் ஆராய்ந்து பார்த்த பிறகே, இவர்கள் தங்கள் உடைகளின் அளவையும், அமைப்பையும் வகுத்துக் கொண்டனர். ஆடம்பரமான உடைகளை இவர்கள் விலக்கிவிட்டனர். எல்லாம் யந்திரங்களே செய்கின்றன. பலவித அளவுகள் கொண்ட உடைகளை அமைத்த காரணத்தால், அவரவர்களுக்குத் தகுதியான உடைகளைப் பெற்றுக் கொள்ளலாம். உடைகளுக்கு அளவு கொடுக்கும் நிர்ப்பந்தம் அந்த நாட்டில் இல்லை. யந்திரங்களே எல்லா வேலைகளையும் செய்கின்றன இங்கே.

ஏழை பணக்காரர்கள் இந்த நாட்டில் இல்லை. சமுதாயத்துக்காக மக்கள் திகழ்கிறார்களே தவிர, மக்களுக்காகச் சமுதாயம் இல்லை என்ற உண்மை மனத்தில் பாயாமற் போகாது. இத்தாலி தேசத்தில் திகழ்ந்த பாஸிஸ்ட் கொள்கையையும், ருஷியாவில் மிளிர்கிற போல்ஷிவிக் கொள்கையையும் பார்த்துக் கேலி செய்கிற சித்திரமோ என்று இக்கேரியா நாடு தோன்றுகிறது.

ஒவ்வொரு தனி மனிதனின் அகவுயிர் வளர்ச்சிக்கும் தக்க வழியை இங்கே காண முடியாது. உணவு, உண்டியோடா வாழ்க்கை நின்றுவிடுகிறது? இவைகளுக்கும் அப்பால் ஒரு பெருநெறி விரிகிறது என்பதைக் காபெட் மறந்துவிட்டாரோ ஒரு வேளை!

என்னைக் கேளுங்கள்

காப்டன் என். சேஷாத்திரிநாதன்

வைத்தியம், சுகாதாரம், ஆரோக்கியம் இவைபற்றி 'மஞ்சரி' வாசகர்கள் கேட்கும் கேள்விகளுக்கு இயன்றமட்டும் பதிலளிக்க இந்த டாக்டர் இசைந்திருக்கிறார். இவர் வைத்தியத் துறையில் கல்வியும் அநுபவமும் நிறைந்தவர்; ரத்த பரிசோதனை நிபுணர்; கிண்டி இன்ஸ்டிட்யூட் அதிகாரியாக இருந்தவர். நோயுள்ளவரின் தனித்தனி நிலையை நேரில் கவனித்தே டாக்டர் வைத்தியம் செய்ய வேண்டும். ஆகவே, இதில் வரும் பதில்களைப் பொதுவாகக் கொள்ளலாமே தவிர, வைத்தியமே இவற்றைக் கொண்டு செய்துகொள்ளலாம் என்று நண்பர்கள் நினைக்கக் கூடாது.

செல்வராஜன், சென்னை.

கே. 1: ஃப்ளூ என்ற நச்சுக் காய்ச்சல் தொத்து வியாதியாகக் காற்று வாக்கில் பரவுகிறது என்பது விஞ்ஞான உண்மையாக இருந்தாலும், ரேடியோ ஆக்டிவிடி என்ற கதிரியக்க விஷத்தின் காரணமாக ஏன் பரவி இருக்கக்கூடாது?

வி: 1919-ஆம் ஆண்டு உலகம் முழுவதும் ஃப்ளூ நோய் பரவிய போது, கதிரியக்க ஆராய்ச்சி ஒன்றும் நடைபெறவில்லை. ஃப்ளூ வைரஸ் என்ற நுண் கிருமியையும் அப்பொழுது கண்டு பிடிக்கவில்லை. ஆகவே, 'இன்ஃப்ளூவென்சா பாசில்லஸ்' என்னும் கிருமியே காரணம் என்று நினைத்தார்கள். கதிரியக்கம் ஒருவேளை மக்களுடைய உடல் வலிமையைக் குறைத்திருக்கலாம்; அதனால் ஃப்ளூ-வைரஸ் சுலபமாய் மக்களைப் பற்றிக்கொண்டிருக்கலாம். இது ஊக நிலையில் இருக்கிறது.

கே. 2: தொண்டையில் கபக் கட்டுப் போன்ற சளி இருக்கிறது. அடிக்கடி ஏப்பம் வருகிறது. சுலபமான மல வெளியேற்றம் இல்லை. மூக்குச் சளி வருவதைப் போன்று மலத்தினூடே சளி வருகிறது. இரண்டு வருஷமாக இப்படி இருக்கிறது. உடம்பு இளைத்துக் கொண்டே போகிறது.

வி: நீடித்த சீதபேதி இது. மலப் பரிசோதனை செய்துகொண்டு தக்க சிகிச்சை பெறவேண்டும்.

சுப்பிரமணியம், சேலம்.

கே: வயது 25. பெருந்துறை ஸானட்டோரியத்தில் 2½ வருஷம் க்ஷயரோகத்துக்குச் சிகிச்சை செய்து குணம் உண்டாயிற்று. மேலும் 2½ ஆண்டுகளாக வேலைக்குப் போய் வருகிறேன். எடை 155 பவுண்டு. ஆனால் கை கால் மார்பு வளர்ச்சியற்றிருக்க வயிறு மட்டும் அளவுக்கு மீறிப் பருத்துவிட்டது. தினம் முட்டையும் பாலும் தவறாமல் சாப்பிட்டு வருகிறேன். தேகப் பயிற்சி செய்யப் பயமாயிருக்கிறது. வெளி விளையாட்டில் கலந்துகொண்டால் தலை சுற்றுகிறது. தொந்தி குறைய என்ன செய்யலாம்?

வி: எடை 155 மிகவும் அதிகம். தொந்தி விழுந்திருப்பது ஆரோக்கியத்தைக் குலைக்கக் கூடும். தேகப் பயிற்சியைப் படிப்படியாய் அதிகமாக்கிக்கொண்டு வரலாம். முதலில் இரண்டு தண்டால், ஒரு வாரத்துக்குப் பிறகு மூன்று- இப்படியே ஏற்றிக்கொண்டு போனால், தொந்தி குறையும்; எடையும் குறையும். கோளாறு ஒன்றும் ஏற்படாது.

ஊட்டத்தை அதிகரித்து எடையைப் பெருக்கிக்கொள்வது சில ஆண்டுகளுக்கு முன்னே க்ஷய



ரோகத்துக்கு ஒரு வைத்திய முறையாக இருந்தது. பூஞ்சண மருந்துகள் கண்டுபிடித்த பிறகு இந்தச் சிகிச்சை முறையில் அதிகம் கருத்துச் செல்வதில்லை. ஆகவே, நண்பர் இனி முட்டையும் பாலும் அதிகம் சாப்பிடுவதை நிறுத்திக்கொண்டு அரிசியையும் குறைத்துக்கொள்ளலாம். அரிசிக்குப் பதிலாகக் கோதுமையை உபயோகிக்கலாம்.

இளவரசு, சேலம்.

கே: உடலும் முகமும் பளபளப்பாகவும் வழவழப்பாகவும் ஆக முட்டை பயன்படும் என்ருர் ஒருவர். அது எப்படி? வேறு வழிகள் என்ன?

வி: உடல் பளபளப்பாவதற்கும் மழமழப்பாவதற்கும் முட்டையைச் சருமத்தின்மீது தடவினுல் பயன் அளிக்காது. சருமத்தின் ஆரோக்கியமே பளபளப்புக் கொடுக்கும். முட்டையும் பாலும் சாப்பிட்டால் சருமம் அழகாகக் கூடும். ஏ-வைட்டமின் நிறைந்த கீரை, கனிவகை போன்ற வேறு பதார்த்தங்களையும் உண்ணலாம்.

பீரு சாஹிப், கொழும்பு.

கே: வயது 22. எனக்குச் சரீரமெல்லாம் நடுங்குகிறது. கை எழுத முடியாமல் பதறுகிறது. இது எதனுல்? மருந்து உண்டா?

வி: உள்ளத்தில் ஏதோ அச்சம் இருப்பதால் இப்படி நடுங்கலாம். இன்ஃப்ளூவென்சா நோய் தோன்றிய பிறகு சிலருக்கு நரம்புகள் தளர்ந்து அயர்வு ஏற்படலாம். அதனுல் உடம்பு நடுங்கலாம். உடம்புக்குப் புஷ்டி தரும் ஆகாரங்களைச் சாப்பிட்டுக் குணப்படுத்திக் கொள்ளலாம். இது பயன் தராவிட்டால் வைத்தியரை நேரில் கண்டு சோதித்துக் கொள்ள வேண்டும்.

பாலையன், கும்பகோணம்.

கே: கை, கால், மார்பு முதலிய இடங்களில் மயிர் அடர்ந்து நீண்டு வளர என்ன உபாயங்களைக் கையாளலாம். ஏதாவது தைலம் உபயோகிக்கலாமா?

வி: இவன் ஒரு சிறுவன்தான் என்று நினைக்கிறேன். இந்த வயதில் இந்த ஆசை ஏற்படுவது இயல்பே. நான் தைலம் விற்பவனுயிருந்தால், இரண்டு மூன்று வருஷம் என் தைலத்தை உபயோகித்து வரச் சொல்வேன். அதற்குள் அநேகமாய் மயிர் உடம்பெல்லாம் அடர்ந்து வளர்ந்துவிடும். என் தைலத்தின் பலனுக அல்ல; இயற்கையாகவே வளரும்.

ஜயசந்திரன், வள்ளம்.

கே: வயது 14. சுமார் மூன்று வருஷ காலமாக என் இடது மார்பு வலது மார்பைவிட அதிகமாக வளர்ந்திருக்கிறது. என் இதயத் துடிப்புச் சத்தமும் சாதாரணமான மனிதர்களுக்கு இருப்பதுபோல் இல்லை. என்னுல் நடக்கவும் பேசவும் முடியவில்லை. அதிகம் பேசினுலும் நடந்தாலும் மயக்கமாய் விழுந்துவிடுகிறேன். இந்த நோயைப் போக்க என்ன செய்ய வேண்டும், நோய்க்குக் காரணம் என்ன?

வி: வயது 14தான் ஆகிறது. ஆனுல் மிகப் புத்திசாலியாயிருக்கிருன். நோயின் குறிகளைத் தெளிவாக வர்ணித்திருக்கிருன். நோய் இதய நோய். இடது மார்பு அதிகம் வளர்ந்ததாய்த் தோன்றி இதயம் பருத்திருப்பதற்குக் காரணம், நெஞ்சு இடது பக்கம் முன் தள்ளியிருப்பதுதான். நோய் மிகவும் சிறு வயதிலேயே ஆரம்பமாகி இருக்க வேண்டும். குற்றம் பிறவியிலேயே ஏற்பட்டிருக்கலாம். வைத்தியரை நேரில் கேட்டுப் பரிகாரம் தேடிக் கொள்வது நலம்.

ராமநாயக்கன், மாணூர்.

கே: இங்கே ஒரு காட்டுக்குள் ஓர் ஓட்டு வீட்டுக்குள் இருக்கிறோம். ஈக்களின் உபத்திரவம் தாங்கவில்லை. பினைல் போட்டோம். வசம்பு அரைத்து மெழுகினோம். ஒன்றும் பலிக்கவில்லை. நாளுக்கு நாள் ஈக்கள் பெருகுகின்றன. என்ன செய்யலாம்?

வி: இந்தக் காலத்தில் மழை பெய்துகொண்டிருக்கும் காட்டுக்குள் பிராணிகளுடைய மலமும், மரங்களிலிருந்து இலைகளும் கனிகளும் விழுந்து அழுகிக்கொண்டிருக்கும். இது ஈக்களுக்கு முட்டையிட்டுக் குஞ்சு பொரிக்க வெகு வசதியாயிருக்கும். இதனாலேயே ஈக்கள் அதிகமாயிருக்கின்றன. உண்ணும் உணவு இருக்கும் பாத்திரங்களை நன்றாய் மூடி வைக்க வேண்டும். வீட்டுத் தரையில் சாணித் தண்ணீர் போட்டு மெழுக வேண்டும். உலர்ந்த இலைகளையெல்லாம் குவித்து எரித்துவிட வேண்டும். அழுகும் கனிகளையும் பிராணிகள் மலத்தையும் மண் போட்டுப் புதைத்து விடவேண்டும். சாத்தியமானால் வீட்டு வாயில்களுக்கு வலைக் கதவு மாட்டலாம்.

வெ. பெரியசாமி, பெங்களூர்.

கே: எனக்குச் சோம்பல் அதிகம். சோம்பல் இயற்கையாக வருகிறதா? அல்லது நாமாக உண்டாக்கிக் கொள்வதா? அதைப் போக்க உபாயம் வேண்டும்.

வி: பிள்ளைகள் சோம்பேறிகளாயிருந்தால், பெற்றோரும் உபாத்தியாயரும் இகழ்ந்து பேசுவதும் அடிப்பதும் வழக்கம். சோம்பல் இயற்கையென்று சொல்ல முடியாது. சுறுசுறுப்பாக இருப்பது ஆரோக்கியத்தின் குறி. சோம்பலுக்குக் காரணம் ஆரோக்கியக் குறைவு என்பது என் அபிப்பிராயம். வயிற்றில் இரைப் பூச்சி அல்லது கொக்கிப் புழு இருப்பது, வைட்டமின் சத்துக் குறைவினால் அயர்வு தோன்றுவது இவை போன்ற காரணங்கள் சோம்பலுக்குக் காரணமாகும். குழந்தை நிலையிலிருந்தே வேலை செய்வதில் பழக்கம் ஏற்படவேண்டும். பெற்றோரிடமிருந்து உதவி எப்பொழுதும் இருந்தால் குழந்தை சுறுசுறுப்பாக இருக்க மாட்டான். விருப்பம் இராத விஷயங்களில் கருத்துச் செல்லாதபோது, அதையும் சோம்பல் என்று சொல்வதுண்டு. ஆரோக்கியக் குறைகளைச் சரிக்கட்டிக்கொண்டால், சோம்பல் போகலாம்.

ஒரு திருத்தம்

ஜூலை இதழில், நா. பாலாஜிக்குத் தந்துள்ள பதிலில் ''நோயாளியிடமிருந்து மாட்டுக்குத் தாவிய..'' என்றிருப்பது தவறு. அது, ''மாட்டுக்குத் தனியாக ஏற்பட்ட (பொவைன்)...'' என்றிருக்க வேண்டும்.

சரித்திர ரீதியாகவும் விஞ்ஞான ரீதியாகவும் பார்த்தால்—

பெண்ணே உயர்ந்தவள்

புரொபஸர் கே. ஸி. பீட்டர்

இயற்கையிலே ஆணைவிடப் பெண்ணே உயர்ந்தவள்.

இதைக் கேட்டதும் புருவத்தைச் சுளிப்பீர்கள்; வம்புக்கு வருவீர்கள். ஆணாயிருந்தால் கேலி செய்து சிரிப்பீர்கள்; பெண்ணாயிருந்தால் சிலிர்ப்புற்றுக் கூச்சலிடுவீர்கள். கொஞ்சம் தீரமான பெண் ஆணின் பெருமையைக் காப்பாற்ற ஓடி வருவாள். அப்படி அவள் வராவிட்டால், ஆணின் பெருமை நில்லாது; விழுந்துவிடும். உலகை நிறைக்கப் பிறந்தவள் பெண்தான். இந்த லட்சியத்தை நிறைவேற்றுவதற்காக, எத்தனையோ நூற்றாண்டுகளாக எண்ணற்ற பழிகளையும் நிந்தைகளையும் அவள் ஏற்று வந்திருக்கிறாள். தத்தள தளதள என்று சமையலறையில் பொங்கும் காபிக் கெட்டில் வெந்நீரை அப்படியே விட்டுவிட்டு, ஒரு நிமிஷம் அவள் கூடத்துக்கு வருவாள். தன் கணவனை நோக்கிப் புன்சிரிப்புடன் மிக மெல்லிய தேனொழுகும் குரலில், ''இவர் எழுதியிருப்பது தப்பு; சந்தேகமென்ன? பாவம்! ஏதோ அசடு போல் இருக்கிறது. இப்போது பெண்கள் இயக்கம் வந்திருக்கிறதில்லையா; அவர்கள் பிரசாரத்துக்காக ஏதாவது இவருக்கு லஞ்சம் கொடுத்திருப்பார்கள்'' என்பாள். மேலும், ''சகல மேதைகளும்-மகாகவிகள், ஓவியர்கள், தத்துவ சாஸ்திரிகள், விஞ்ஞானிகள் எல்லாரும் - ஆண்களே இல்லையா? எத்தனை ஷேக்ஸ்பியர்கள், காளிதாஸர்கள், பெர்னார்ட் ஷாக்கள், டார்வின்கள், ஐன்ஸ்டைன்கள் பெண்களிலே பிறந்திருக்கிறார்கள்? எங்கே, விரலை மடக்குங்கள் பார்க்கலாம்'' என்று அவள் கேட்பாள்.

கடைசியாக இப்போது லண்டன் ராயல் ஸொஸைட்டி பெண்களுக்குத் தன் கதவைத் திறந்துவிட்டது. மாடம் க்யூரி, ஐரீன் ஜூலியட் க்யூரி, லிஸா மீட்னர், கெர்ட்டி கோரி, ஸெல்மா லாகர் லாஃப், பெர்ல் பக், கேப்ரியேலா மிஸ்ட்ரல் இவர்களெல்லாம் நம் மனத்திலே புகழ் விளங்க இடம் பெற்றுவிட்டார்கள். அனைவரும் நோபெல் பரிசு பெற்றவர்கள். நம்முடைய இந்தக் காலத்திலேயே ஸரோஜினி நாயுடு, விஜயலட்சுமி பண்டித், அமிருத கௌர், மார்காரெட் ஸாங்கர், ஹெலன் கெல்லர் இவர்களுடைய சாதனைகளைத்தான் அளவிட முடியுமா? பெண்கள் மகத்தான வெற்றி பெற்றிருக்கிறார்கள்.

நம்முடைய அழகான பழைய சரித்திரத்தைப் பார்த்தால், பெண்ணுக்கு ஆண் இழைத்த கொடுமை நன்றாய்த் துலங்குகிறது. நாம் பெருமைப்படும் லட்சியங்களையெல்லாம், கவலையற்ற சலவைத் தொழிலாளி மாதிரி துணியில் விழும் சுருக்கம் போலக் காலதேவன் சுருக்கிவிடுகிறான்.

ஏதென்ஸ் நகரம் ஜனநாயகம் தவழ்ந்த தொட்டில் என்பார்கள். அங்கேயே பெண்களுக்குப் படிப்பு இல்லை என்றார்கள்; சுதந்தரம் கிடையாது என்றார்கள்; வோட்டுரிமையை மறுத்தார்கள். 'குழந்தை, பெண், வேலையாள்' மூவரையும் ஒரே வகுப்பாகப் பிளேட்டோ சேர்த்துவிட்டார்.

''வேசைகள் நம் உடம்பின் தினசரித் தேவைகளைப் பூர்த்தி செய்யவும் நமக்கு இன்பம் அளிக்கவும் வேண்டும்; நமக்குச் சட்டரீதியான குழந்தைகளைப் பெற்றுத் தரவும் வீட்டைப் பார்த்துக்கொள்ளவும் மனைவிகள் வேண்டும்'' என்று டெமாஸ்தனீஸ் முழங்குகிறார்.

காப்பிரைட்: இந்தியன் ரெவ்யூ (ஆங்கிலம்: மே '57), சென்னை-1.

அழகிய குழந்தைகளைப் பெறுவது எப்படி என்பதை ஆராயும் கலைஞர்களெல்லாம் சொர்க்கம் என்று ஸ்பார்ட்டா நகரைக் கொண்டாடுவார்கள். அங்கே பெண்கள் மல்லுக் கட்டுவார்கள்; குத்துச் சண்டை போடுவார்கள்; ஓட்டப் பந்தயத்தில் கலப்பார்கள்; ஆனாலும் அவர்களுடைய ஒரே கடமை அசகாய சூரர்களான வீரப் புதல்வர்களைப் பெற்று வளர்ப்பதுதான்.

ரோம் நகரில் பெண்மீது ஆண் ஆதிக்கம் செலுத்திக் கொடுமை புரிந்தான். முதலில் தகப்பன் அவளை அடக்கியாள்வான்; பிறகு கணவன் அடக்கியாள்வான். அவளுடைய உடல் உடைமை எல்லாம் கணவனுக்கே சொந்தம்.

ஆதிகாலக் கிறிஸ்துவ சமயந்தான் என்ன வாழ்ந்தது! பெண்ணை 'அசுத்தமானவள்' என்றார் தீர்க்கதரிசி மோஸஸ். பைபிளிலே வரும் கர்த்தர் பெண்ணைச் சுமை இழுக்கும் ஆடுமாடாகப் போகும்படி சாபமே கொடுத்துவிட்டார். கிறிஸ்துவத் திருச் சபைகளெல்லாம் ஆணுக்குப் பெண் அடங்கி நடக்க வேண்டும் என்றே சொல்லி வந்திருக்கின்றன. ஆதிகாலத்துலத்தீன் கிறிஸ்துவ சமய குருவான டெர்ட்டில்லியன் என்பவர், பெண்ணைப் பார்த்து, "உங்கள் இனத்தின்மீது கடவுள் விதித்த தண்டனை இன்னும் இருந்து வருகிறது. நீங்கள்தான் நரகத்தின் வாசல்படி. கர்த்தரின் பிரதிபிம்பமான மனிதனை அழிப்பவர் நீங்கள்" என்று கூறுகிறார்.

முகம்மது நபிக்குத் தெய்வ அருள் சுரந்துவிட்டது. அந்த நேரத்திலே, "பெண்ணை விட ஆணுக்குப் பெருங்கேடு வேறில்லை" என்கிறார். டௌட்டி என்பவர், "இங்கே (அரபு நாடுகளில்) வேசையாய், அடிமையாய் வாழ்வதே பெண்ணின் தலைவிதியாக இருக்கிறது" என்று எழுதுகிறார். அந்த நாடுகளில் மசூதிக்குள்ளே பெண்ணை விடுவதில்லையாம்.

இறந்த ஜமீன்தாரின் சொத்தோடு அவன் மனைவியையும் கூசாமல் ஒரு சிற்றரசன் எடுத்துக் கொண்டு விடுவான்; மந்திரக்காரிகள் என்று சொல்லிப் பல பெண்களைக் கொன்றிருக்கிறார்கள். கன்னி மாடங்களில் பெண்களை அடைத்தார்கள். நல்ல பண்பாடும் படிப்பும் உள்ள பெண்களெல்லாம் ஆணின் கொடுமைக்குப் படிந்து கிடந்தார்கள்.

தந்தையையே தலைவனாகக் கொண்ட குடும்பம் உள்ள வீட்டை, "சிறுமியின் சிறை; பெண்ணின் தொழிற்சாலை" என்று பெர்னார்ட் ஷா வர்ணித்தார்.

இருபதாம் நூற்றாண்டின் முன் பாதியில்கூட, பெண்ணின் உலகம், "அவளுடைய புருஷன், குழந்தை, குடும்பம், வீடு இவ்வளவே" என்று சொல்லி ஹிட்லர் அவளை இதற்குள்ளே அடக்கி வைத்தார். "போருக்கு ஆண்; பிள்ளை பெறப் பெண்" என்று சூத்திரம் செய்தார் முஸலீனி.

இப்படியாகச் சமூகம், சமயம், சாஸ்திரம், பொருளாதார அமைப்பு, ஆணின் ஆதிக்கம் எல்லாமாய்ச் சேர்ந்து சூழ்ச்சி செய்து பெண்ணைத் தாழ்த்தி அடிமைப்படுத்தி விட்டன. 'குழந்தை, காமம், மது' என்ற சூத்திரத்துக்குள்ளே ஜெர்மன் சக்கரவர்த்தி கெய்ஸரும் பெண்ணைக் கட்டிப் போட்டு விட்டார். கீழ் நாட்டிலே பெண் கண்டிப்பாய் ஆணுக்குக் கீழ்ப்படிந்து நடக்க வேண்டும். சமீப காலம் வரைக்கும் இந்தியாவும் இதற்கு விலக்காக இல்லை.

பழைய ஞாபகங்களை மென்று அசை போடும் ஆண், தன் ஆதிக்கத்தைப் பெண்மீது அப்படியே பாதுகாத்து வைத்துக்கொள்ளக் கோமாளித்தனமான கடைசி முயற்சி ஒன்றைச் செய்யலாம். பொருளாதார சக்தியை அதற்குப் பயன்படுத்தலாம். ஆயினும், பெண்ணிடம் ஆண் வெகு விரைவாய்ப் புத்தி கற்றுவருகிறான்.

பழங்கால நாகரிக மக்கள் ஒவ்வொருவரும் செல்வச் செழிப்புக்களின் மகோன்னத தேவதை என்று பெண் தெய்வத்தையே வணங்கி யிருக்கிறார்கள். கிரீஸ் நாட்டில் டெல்ஃபிக் ஆரக்கிள் என்ற குறி சொல்லும் தெய்வத்துக்

குப் பூஜாரிணிகளே இருந்தார்கள். யூத சமூகத்தில் 'ஸாபாத்' என்ற ஓய்வு நாளுக்கு முதல் நாள் மாலையில் பெண்களே ஆலய தீபங்களை ஏற்றித் தேவாராதனை நடத்துவார்கள். ஹிந்து தர்மம் பெண்ணை 'அன்னை' என்று போற்றுகிறது. கிரேக்கர்களின் பல்லாஸ் அதீனு என்ற யுத்த தேவதை, ஜ்யூஸ் என்ற தலைமைத் தெய்வத்தின் தலையிலே உதித்தாள். தோன்றும்போதே பூர்ண யுத்த கவசம் பூண்டிருந்தாள். அறிவாராய்ச்சி வலுத்த காலத்தைப் பார்க்கலாம். அறிவுத் தெய்வத்துக்குப் பிரெஞ்சுப் புரட்சிக்காரர்கள் சுறுசுறுப்பாகப் பல பலி பீடங்களைக் கட்டிவிட்டார்கள்.

பழங்கால நாகரிக மக்கள் எவரைப் பார்த்தாலும் சரிதான்; அநேகமாக ஒவ்வொரு மக்களிடையிலும் மேதைகளான பெண்கள் இருந்திருக்கிறார்கள். ப்ளேட்டோ என்ற கிரேக்கத் தத்துவ சாஸ்திரிக்குக் காதல்கலையைப் போதித்தவள் டயோட்டிமா என்ற ஒரு பெண். ஏதென்ஸ் நகரிலே ஆட்சி புரிந்த பெரிக்ளீஸ் என்ற ராஜதந்திரிக்கு உதவி புரிந்தவள் அயல் நாட்டில் பிறந்த அஸ்பேஸியா என்ற பெண். 'இயற்கை நீதியையே அவள் தாங்கினாள்; எதிரியின் ஈமச்சடங்கிலே பெரிக்ளீஸ் புரிந்த புகழ் பெற்ற பிரசங்கத்தை எழுதியவள்கூட அவள்தான். கலை, இலக்கியம், அரசியல் இவற்றைக் கற்ற உன்னத ரோமன் தாய்மார்களை, ஸிஸெரோ, கேட்டோ, ஜூவினல் என்ற ரோமன் ராஜதந்திரிகளெல்லாம் பாராட்டினார்கள்.

இடைக் கால சரித்திர நாட்களில், கன்னி மாடத் தலைவிகளாகவும் ஹாஸ்யம், கல்வி இவற்றில் தேர்ந்தவர்களாகவும் பெண்கள் இருந்திருக்கிறார்கள். சமயப் போர்களின் விளைவாக, கன்னியரைப் பாதுகாக்கும் வீரம் தோன்றியது. அதிலிருந்து, 'தேவலோகத்துக் கன்னியையும் அவளுடைய பிரதிநிதியாகப் பூலோகத்துக் கன்னியையும் தொழுது போற்றும்' வழக்கம் பிறந்தது.

பதினாறும் நூற்றாண்டில் 'நியோ-ப்ளேட்டானிஸம்' என்ற நவீன பிளேட்டோ இயக்கம் ஒன்று ஆரம்பித்தது. ஆணும் பெண்ணும் ஆத்மிகக் காதல் கொள்ள வேண்டும் என்பதே அந்தத் தத்துவம். அந்த இயக்கத்தினர் பெண்களுக்கு நிறையச் சுதந்தரம் அளித்தார்கள்.

பதினெட்டாம் நூற்றாண்டில் பெண்களின் அந்தஸ்து ஏதோ சிறிது தாழ்ந்தது. ஆனால் பத்தொன்பதாம் நூற்றாண்டில் பெண்கள் உரத்துப் பேசத் தொடங்கி விட்டார்கள். ப்ளூஸ்டாக்கிங் க்ளப் என்ற படித்த பெண்களின் சங்கங்கள் போன்ற ஸ்தாபனங்கள் தோன்றின. ஆணுக்கும் பெண்ணுக்கும் சம உரிமை வேண்டும் என்ற புரட்சி தொடங்கியது. பிறகு ருஷியப் புரட்சி எழுந்தது. ''ஆணுக்குச் சமமாக உழைக்க, ஓய்ந்திருக்க, சமூகப் பாதுகாப்பான இன்ஷ்யூரன்ஸ் செய்துகொள்ள, படிக்க - இந்த உரிமையெல்லாம் பெண்ணுக்கு வேண்டும்; தாய், குழந்தை இருவரின் நலன்களையும் அரசாங்கமே பாதுகாக்க வேண்டும்; கர்ப்பந்தரித்த பெண்ணுக்குச் சம்பளத்தோடு லீவு கொடுக்க வேண்டும்; நாடெங்கும் பிரசவ ஆஸ்பத்திரிகளும் மருத்துவச்சிகளும் கிண்டர்கார்ட்டன் பள்ளிக்கூடங்களும் ஏற்படுத்தவேண்டும்'' என்று லெனின் பகிரங்கமாகப் பேசிப் பெண் உரிமைகளை ஆதரித்தார். இந்த இயக்கம் வெகு சீக்கிரத்திலே ஐரோப்பா, அமெரிக்கா, கீழ் நாடு எங்கும் பரவியது. ஆனால் இன்னுங்கூடப் பதினைந்து நாடுகளில் பெண்ணுக்கு வோட்டுரிமை இல்லை.

''குழந்தை பெறும் சக்தி தனக்கே இருக்கிறது என்று பெண் பெருமை கொள்ளவேண்டியதில்லை. இயற்கை மட்டும் இஷ்டப்பட்டால், ஆண், பெண் சம்பந்தம் இல்லாமலே வேறு முறைகளில் குழந்தைகளைப் படைக்க முடியும். இப்போதே இந்தமாதிரி சில பிராணிகள் இருக்கின்றன'' என்று ஜான் லாங்டன் டேவீஸ் என்பவர்

வாதிக்கிறார். ஆனால், அவரே, ''இந்த ஆண், பெண் தொடர்பு முறையால் விதம் விதமாக எத்தனையோ மாறுதல்கள் மனித சிருஷ்டியில் ஏற்பட வசதி இருக்கிறது; அதனால் வாழ்க்கைப் போராட்டத்திலே வெற்றி பெற்று உயரவும் வழி உண்டாகிறது'' என்று ஒப்புக்கொள்கிறார். ஆகவே, பெண் ஆணுக்குச் சமமாயிருக்கிறாள். அதோடு, கருத் தரித்துத் தாயாகும் தனிச் சிறப்பும் அவளுக்கு இருக்கிறது.

ஆண்களைவிடப் பெண்களுக்கே அதிகமாய் இயற்கை இடம் அளிக்கிறது. 108 பையன்களுக்கு 100 பெண்கள் வீதம் பிறக்கலாம். ஆயினும், அதிகமான பையன்கள் செத்துவிடுவார்கள். உடல் அமைப்பில் ஆணைவிடப் பெண்ணே அதிகச் சிறப்புப் பெற்றிருக்கிறாள். முக்கியமான முப்பது தேசங்களை ஆராய்ந்தார்கள். எல்லாக் காலத்திலும் ஆணைவிடப் பெண்ணுக்கே ஆயுள் அதிகம் என்று புலனாயிற்று. அளவிலும் வலிமையிலும் ஆண் உயர்ந்தவன். இது ஒன்றும் பெரிதல்ல. ஆயினும், மனிதகுலம் தோன்றிய நாளிலிருந்து மனைவியையும் குழந்தைகளையும் காப்பாற்றும் பெரும் பொறுப்பை ஆண் ஏற்று வந்திருக்கிறான். உடலின் நிறைக்கு நிறை மூளையின் நிறையை ஒப்பிட்டுப் பார்த்தால், ஆணைவிடப் பெண்ணுக்கே மூளையின் நிறை அதிகம். தேக வலுவின் திறமையால், ஆண் அதிக தீரம் காட்டியிருக்கிறான். ஆபத்துக்குத் துணிந்து செயல் புரிந்திருக்கிறான். குழந்தைப் பருவத்திலிருந்தே இதற்கு அவன் பழக்கப் பெற்றிருப்பதே காரணம். பெண்ணையோ எந்த ஆபத்துக்கும் துணியக் கூடாது என்று தடுத்துவிடுகிறார்கள். புலமையான வாக்குத் திறமை, கலைச்சுவையும் கற்பனையும் மிக்க சொல்நயம், வர்ணக் கோளாறு இல்லாத கண்பார்வை, ஆடை தயாரிப்பதிலும் வீட்டை அலங்கரிப்பதிலும் கலைத் திறமை - இந்த அம்சங்களிலெல்லாம் ஆணைவிடப் பெண் மிக உயர்ந்து நிற்கிறாள்.

முதல் உலக யுத்தம் நடந்தபோது, ஆணுக்குப் பதிலாகப் பெண்ணே பல அலுவல்களை ஏற்க வேண்டியதாயிற்று. அவள் பஸ் ஓட்டினாள்; டிக்கட் கொடுத்தாள்: தொழிற்சாலையில் உழைத்தாள்; பண்ணையில் உழுதாள்; நிர்வாகம் புரிந்தாள். இதைப்பற்றி ஆஷ்லி மாண்டேகு என்பவர் இப்படி எழுதியிருக்கிறார். ''ஆண் மாதிரி பெண் வேலை செய்யவில்லை என்று முதலில் தூற்றினார்கள். அவ்வளவு மோசமில்லை என்று பிறகு சொன்னார்கள். யுத்தம் முடிந்தபோதோ, பெண்ணைவிட்டுப் பழையபடி ஆணை அமர்த்திக்கொள்ளப் பல முதலாளிகளுக்கு மனமே இல்லை. இரண்டாவது உலக யுத்தத்திலே பெண்கள் அதிக வெற்றியுடன் நடந்துகொண்டார்கள். ஸோவியத் ருஷியாவில் ஆணுடன் பெண்ணும் தோளோடு தோள் நின்று சண்டையிட்டாள். போர்க்களத்தில் காயம் அடைந்த வீரர்களை முதுகிலே தூக்கிச் செல்லும் இணையற்ற வீரப் பணியைப் புரிந்தாள். இவற்றையெல்லாம் பார்க்கும்போது ஒன்று புலனாகிறது: ஆல்ஃபிரட் ஆல்டர் என்பவர் அதைக் குறிப்பிடுகிறார்: ''ஆணே உயர்ந்தவன் என்பது இயற்கையில் உண்மை அல்ல....ஆணுக்குச் சில சிறப்புக் குணங்கள் இருக்கின்றன என்றும், பெண்ணுக்குச் சில சிறப்புக் குணங்கள் இருக்கின்றன என்றும் சொல்லிக்கொண்டிருக்கிறோம்; ஆனால் இதற்கு ஒன்றும் ஆதாரம் இல்லை....இந்த மாதிரி சொல்லுவதற்கு ருசுவைப் போல் சில குணங்கள் தோன்றலாம். ஆனால், அவற்றைக் கூர்ந்து ஆராய்ந்து பாருங்கள். தன்மயக்கத்தால் தோன்றிய ஒரு மனோபாவமே இதற்குக் காரணம் என்று காண்பீர்கள்.''

ஆண், பெண் உடம்புகளில் உள்ள 'க்ரோமொஸோம்' என்ற அணுப் பொருளின் அமைப்பு மிகவும் சுவாரஸ்யமானது. 'ஸெக்ஸ் - ஸெல்' என்ற ஆண்பால் அல்லது பெண்பால் துணுக்குகளில் 24 க்ரோமொஸோம் இருக்கின்றன. இவற்றில் ஒன்றே ஒன்றுதான்

ஆண்பால் அல்லது பெண்பாலை நிர்ணயிப்பது. ஆணின் விந்தணுக்களில் பாதி 'எக்ஸ்' க்ரோமொஸோம்; பாதி 'ஒய்' க்ரோமொஸோம். பெண்ணிடமிருக்கும் அண்டத்தில் உள்ள அத்தனையும் 'ஒய்' க்ரோமொஸோம். அண்டத்தை 'எக்ஸ்' க்ரோமொஸோம் உள்ள விந்தணு கருவுறச் செய்தால் பெண் குழந்தை உண்டாகிறது; 'ஒய்' க்ரோமொஸோம் உள்ள விந்தணு கருவுறச் செய்தால், ஆண் குழந்தை உண்டாகிறது. 'ஒய்' க்ரோமொஸோம் என்றால் என்ன? மூளியாய்ப் போன 'எக்ஸ்' க்ரோமொஸோம் என்றே அதைச் சொல்லலாம். 'எக்ஸ்' க்ரோமொஸோமில் மிஞ்சிய ஒரு துளி அது. 'எக்ஸ்' க்ரோமொஸோம் மிகவும் பக்குவமாய் வளர்ச்சியடைந்த ஓர் அம்சம். 'ஒய்' க்ரோமொஸோம் அப்படிப்பட்டதல்ல. ஆகவே, மூளியான ஒரு பெண் தான் ஆண் என்று சொல்லலாம்.

''அதனால் என்ன?'' என்று கேட்கிறீர்களா? அதுதான் எத்தனையோ விஷயங்களுக்குக் காரணமாயிருக்கிறது. இந்த மூளியினால்தான் கருத்தரிக்க ஆணால் முடியவில்லை. இந்த மூளியால் தான், ஆணின் தோல் மரப்பட்டைபோல் அமைகிறது; காதிலே மயிர் அடர்த்தியாய் முளைக்கிறது; கையிலும் காலிலும் விபரீத மாறுதல் ஏற்படுகின்றன; கால் விரல்களுக்கிடையே சிறிது ஜவ்வு ஏற்படுகிறது. ஹெமோஃபிலியா என்ற வியாதிக்கு 'எக்ஸ்' க்ரோமொஸோம்தான் காரணமாம். ஆனால், ஆண்களுக்கு மட்டுமே இந்த வியாதி ஏற்படுகிறது. ஏனென்றால், இந்த வியாதிக்கு மூலமான விபரீத 'ஜீன்' என்ற பாரம்பரிய அம்சத்தை அடக்கும் சக்தி 'ஒய்' க்ரோமொஸோமுக்குக் கிடையாது. ஆண்களில் நூற்றுக்கு 8 பேர் நிறக் குருடர்; பெண்களில் ஒரே ஒருவர்தான் இப்படி நிறக் குருடர். இதற்கும் அதுவேதான் காரணம்; இன்னும் என்ன வேண்டும்?

பெண் மிகவும் கோழை மனமுள்ளவள் என்கிறார்கள். இது பொய் என்று இரண்டு உலக யுத்தங்களும் நிரூபித்துவிட்டன. முற்றுகை, குண்டுவீச்சு, முகாம் சிறை இவற்றின் கொடுமைகளையெல்லாம் ஆணைவிடப் பெண்ணே அதிக தீரத்துடன் சகித்துக்கொண்டாள். யுத்தத்தால், மனமுடைந்து போனவர்களில் ஆணே அதிகம். பைத்தியக்கார ஆஸ்பத்திரிகளில் பெண்ணைவிட ஆண்தான் மிகுதி. பல விபத்துக்களாலும் ஆண்தான் அதிகமாய்ச் சாகிறான். பெண்ணுக்கு அடிக்கடி நோய் வருகிறது; ஆனால், சுலபமாக, சீக்கிரத்திலே அவள் குணமடைந்து விடுகிறாள். ஐக்கிய அமெரிக்காவில் பெண் 71-வயசு வாழலாம் என்று எதிர்பார்க்கிறாள்; ஆணோ 65½ வயசுதான் வாழ எதிர்பார்க்கலாம். அதிர்ச்சிகளை ஆணைவிடப் பெண்ணே சிறப்பாய்த் தாங்கிக்கொள்கிறாள். இன்று ஹிஸ்டீரியா என்ற மனக்கோளாறு, ஒரு பெண்ணுக்கு வந்தால், 7 ஆணுக்கு வருகிறது. காக்கை வலிப்பும் ஆணுக்கே அதிகம். ஒரு பெண்ணுக்குத் திக்குவாய் என்றால், எட்டு ஆணுக்குத் திக்குவாயாக இருக்கிறது. எனவே, பெண்ணுக்கு நாம் தலைவணங்க வேண்டும். அவள் நல்ல உடல் அமைப்பு உள்ளவள்; ஆணைவிட மேலானவள். இதைக் கேட்டதும், நீர் ஆணாயிருந்தால் உமக்கு மூக்குக்குமேல் பேராத்திரம் வரலாம். பெண்ணை ஒரேயடியாய் அடக்கி வைக்க நீர் எண்ணலாம். ஆனால், அது வீண் வேலை; பலிக்காது.

உயிர்நூல் (பயாலஜி) ரீதியிலே பார்த்தால், பெண்தான் உண்மைச் 'சரக்கு'; ஆண் போலிச் 'சரக்கு.'

''எந்தக் காலத்திலும் ஆள்பவன் ஆண்; ஆளுகைக்கு ஆட்பட்டவள் பெண்'' என்று வேர்ட்டிங்ஸ் என்பவர் சொல்லுகிறார். ஆனால், ''ஆண் தன்மையும் பெண்தன்மையும் சமூகத்துக்குச் சமூகம் மாறுபடுகின்றன'' என்று மார்

காரெட் மீட் என்பவள் கூறுகிறாள்.

பொதுவாகச் சொன்னால், ஆணுக்கு மூளை இருக்கிறது; பெண்ணுக்கு மூளையும் அதோடு ஒரு கருப்பையும் இருக்கின்றன. ஆணைச் செயல் புரியத் தூண்டும் மையஸ்தானம் ஒன்றே ஒன்று; பெண்ணுக்கோ அந்த மையஸ்தானம் இரண்டு. பெண்ணுக்கு ஆண்-பெண் தொடர்புபற்றிய செயல் ஜீவாதாரமானது. 'ஸீ அர்ச்சின்' என்ற சிறு கடல் ஜந்துக்களின் முட்டைகளை விசேஷமான உப்பு நீரில் போட்டால், அவை குஞ்சு பொரித்து விடுகின்றன. இதை லீப் என்ற அமெரிக்க விஞ்ஞானி மெய்ப்பித்திருக்கிறார். ஆகவே, அவற்றின் வம்ச விருத்திக்கு ஆண் ஜந்துக்களே தேவையில்லை.

ஏற்பது, பாதுகாப்பது, படைப்பது இவையெல்லாம் பெண்ணின் வம்சவிருத்திச் செயல். ஜடத்தின் பரிபூர்ண உரு என்று பெண்ணை அரிஸ்டாட்டில் மதிக்கிறார்; ஸ்விஸ் விஞ்ஞானி பாச்சோஃபென், 'உலகத்தையே மெய்யாகக் கருதுபவள் அவள்' என்கிறார். பிரத்தியட்சத்தையே நம்பி, ஆத்மிகத்தை மறுப்பவள் பெண் என்பது ஃப்ராப்னியஸ் என்ற அறிஞரின் கருத்து. எனவே, பெண் வரவர விசாலமாய் வளர்கிறாள். பக்குவம் அடைவதில்லை; ஆனால், படைப்பின் மூலம் எங்கும் வம்சத்தைப் பரப்புகிறாள். பெண் சாமர்த்தியசாலி. இதனால்தான் பூஜாரிணி, மந்திரக்காரி, சூன்யக்காரி என்றெல்லாம் பட்டம் பெற்றாள். பெண்ணின் பெருமையைப் புரொபஸர் மார்ஜார்டி நிக்கோல்ஸன் என்பவர் இப்படிக் குறிப்பிட்டார்: ''அவளுக்குப் பெண்டாட்டி கிடையாது.'' அவளுக்கு உலகமெல்லாம் ஒன்று.

பெண்ணின் தர்க்க சாஸ்திரம் லௌகிகமாயிருக்கும். பொருள்களின் இயற்கை விதிகளையே அவள் ஏற்பாள். தானே இயற்கையாய்த் தேர்ந்துகொண்ட தர்மத்தையும் கடமையையுந்தான் அவள் ஏற்பாள். ஆணின் பரபரப்பைத் தூண்டிவிட்டு, படைப்புத் தொழிலை அவள் ஆரம்பிப்பாள். ஆனால், அதன் முடிவு அவளுடைய இஷ்டத்தைப் பொறுத்த விஷயம். அவளுக்கு இஷ்டம் இல்லாவிட்டால், அசட்டையாக நடந்துகொள்வாள். காரியம் முடிந்ததும், ஆணின் பரபரப்பெல்லாம் அடங்கிவிடும்; பெண்ணிடமோ அது மிஞ்சி நிற்கும். ஆணைப்போல் அல்ல; குழந்தைபோல் அவள் நடந்துகொள்வாள்.

இந்த விஷயத்தில் ஆணுக்குச் சுகம் அநுபவிப்பதே நோக்கம். பெண்ணுக்கோ பரவசமான காதற் கடல் யாத்திரை அப்போதுதான் ஆரம்பமாகிறது. முப்பது வயசு ஆகும்போதுதான் காதல் வாழ்க்கைக்கு ஏற்ற முழுப்பக்குவத்தைப் பெண் அடைகிறாள். பெண்ணின் காதல் சாசுவதமானது. ஒரு முறை அவள் காதல் செய்யும்போது, அவளுடைய ஜீவனிலே ஒரு பகுதி செத்துவிடுகிறது; ஆணுக்கு ஒரு கண இன்பம்; பெண்ணுக்கு வாழ்வே மாறிய மாறுதல்.

அண்டங்களை நீக்கிக் கருத்தடை செய்வதால், பெண்ணின் பெண்மை குன்றாது. ஆணின் பீஜத்தை எடுத்துவிட்டால் அவனுடைய ஆண்மை போய்விடும். சமீபத்திலே செய்த பரீட்சைகளிலிருந்து ஒன்று புலனாகிறது: பெண்ணை எளிதில் ஆணாக மாற்றலாம்; ஆணைப் பெண்ணாக மாற்ற இயலாது. எனவே, பெண்ணைவிட ஆணே அதிகப் பக்குவம் அடைந்த ஜீவன் இல்லையா என்று நீங்கள் கேட்கலாம். ஒரு நாளும் இல்லை. மிக வலுவான வேற்றுமையும் அங்கவீனம் என்றால் அப்படியே குன்றிப் போவதும் வீழ்ச்சியின் குறிகளே யாகும். மனித குலம் இறுதியான 'பெண்' ரகம் ஒன்றை நோக்கியே பரிணாமம் அடைந்து வருகிறது என்று ஹாவ்லக் எல்லிஸ் கூறுகிறார். சிருஷ்டியின் உன்னதச் 'சரக்கு' என்று ஆணை உயிர்நூல் ஏற்கவில்லை. ''அன்னை பூமியைப் போன்றவள் பெண். அவளை விட்டு

ஆத்மிக வானத்திலே ஆண் பறக்கப் பார்க்கிறான். பிறகு அவள் மடியிலே வந்து விழுகிறான்'' என்று ஆஸ்வால்ட் ஸ்வார்ட்ஸ் என்பவர் சொல்லுகிறார். ''பழங்குடி மக்களில் பெண்ணே சமூகத்தின் நடு நாயகமாய் விளங்குகிறாள். ஆண்கள் எங்கெங்கோ திரிந்து வீரச் செயல் புரிந்துவிட்டுத் திரும்பி வருவார்கள்'' என்று விக்ளீன் என்பவர் குறிப்பிடுகிறார். துன்பத்திலேதான் அதிக இன்பம் காண்பாள் பெண். ஆண் ஒரு விஷயத்தில் தேர்ச்சி பெறப் பார்ப்பான்; பெண் சகல விஷயங்களிலும் தேர்ச்சி அடைய முயல்வாள்.

குழந்தைகளுக்கும் தாய்க்கும் உள்ள உறவே மனிதவர்க்கத்தின் உறவுகளுக்கெல்லாம் மூல காரணம். அன்பு, தியாகம், கூட்டுறவு, பரோபகாரம் இந்த உணர்ச்சிகளெல்லாம் ஆணைவிடப் பெண்ணுக்கே அதிகம். ஆணின் மனசு பெரும்பாலும் ஒரே சுவட்டில் செல்லும். பெண்ணோ அவசியமான மன மாறுதல்களைச் செய்து கொள்வாள். மனித குலம் முழுவதனிடமும் பெண் அன்பு செலுத்துகிறாள்; ஆணோ அதனிடம் அநேகமாய்ப் பகைமைதான் கொள்ளுகிறான். மனிதனைய் நடந்துகொள்ளும்படி ஆணுக்குப் போதிப்பது பெண்ணின் கடமை.

''போதிய தாய்மார் வேண்டும்; இல்லையென்றால், வாழ்வே கசந்து போம். அன்னை பூமி ஆண்களின் யுத்தகளமாகிவிடுவாள்; தங்கள் பிள்ளைகளையே அவர்கள் கொன்று குவிப்பார்கள்; தாங்களும் மாய்ந்து போவார்கள்'' என்று ஆஷ்லி மாண்டேகு கூறுகிறார். பெண்ணுக்குரிய இடத்தை உடனே அவளுக்கு நாம் அளிக்க வேண்டும். நாம் நாசம் ஆகாதிருக்க அதுதான் நல்ல வழி. பெர்ட்டிராண்ட் ரஸ்ஸல் சொல்லியிருக்கும் இந்த விஷயத்தை நாம் பார்க்க வேண்டும்: ''எவ்வளவுக்கு எவ்வளவு அறியாமை உங்களிடம் இருக்கிறதோ, அவ்வளவுக்கவ்வளவு உங்கள் ஆத்திரம் பொங்கி விடுகிறது.''

பொக்கிஷ வாசற்படியில்

1929-இல் பிரிட்டனில் கன்ஸர்வெடிவ் மந்திரிசபை போய்த் தொழிற்கட்சி மந்திரிசபை வந்தது.

பொக்கிஷ மந்திரியாக இருந்த சர்ச்சில், பொக்கிஷ உள்ளே இருந்து வாசற்படிக்கு வந்துகொண்டிருந்தார். அந்தப் பதவியைப் புதிதாக ஏற்ற ஃபிலிப் ஸ்னோடன் வெளியிலிருந்து உள்ளே புகுந்தார். வாசற்படியிலே இருவரும் சந்தித்ததும் தலையை ஆட்டி மரியாதை செய்துகொண்டார்கள்.

சர்ச்சில் பெரிய புன்சிரிப்புடன், கையை ஆட்டி அபிநயத்தோடு, ''கல்லாப் பெட்டி காலி'' என்று சொல்லி நகர்ந்தார்.

—ஆர்த்தர் எச். பூத், 'பிரிட்டிஷ் ஹஸ்டிங்ஸ்' என்ற நூலில்.

நமூனா பூர்த்தியாயிற்று

தென்னாப்பிரிக்காவில் வாழும் அந்நியன் ஒருவனுக்குச் சர்க்காரிடமிருந்து ஒரு நமூனா வந்தது. அதை அவன் வெகு சிரமப்பட்டு இப்படிப் பூர்த்தி செய்து, கச்சேரியில் கொண்டு வந்து கொடுத்தான்.

பெயர்: இவான் லென்ஸ்கி;
பிறந்தது: உண்மை;
தொழில்: சுகமில்லை.

—'தி அவுட் ஸ்பான்', தென்னாப்பிரிக்கா.

விராட் புருஷனின் திருவுருவாகவே ஆலயம் அமைக்கிறார்கள்.

ஆலயத் தத்துவம்

கே. பி. நாராயண பிஷாரடி

பாரத மக்கள் தங்கள் உள்ளத்தில் குடிகொண்ட கடவுளை ஆலயங்களில் பிரதிஷ்டை செய்து வழிபட ஆரம்பித்து எவ்வளவு காலம் ஆயிற்று என்பது ஒருவருக்கும் தீர்மானமாகத் தெரியாது. காசி, ராமேசுவரம், கோகர்ணம் முதலிய புண்ணிய க்ஷேத்திரங்கள் இல்லாதிருந்திருக்கக்கூடிய ஒரு காலத்தை நம்மால் கற்பனைகூடச் செய்யமுடியாது. பரசுராம க்ஷேத்திரம் என்று புகழ் பெற்ற கேரளத்தை 'ஆலயங்களின் நாடு' என்றே கூறலாம். அரசாட்சி முதல் யாவற்றையும் தேவாலயங்களுக்கு அர்ப்பணம் செய்து கேரள மக்கள் அனைவரும் கடவுளின் தொண்டராக வாழ்க்கை நடத்தி வந்த காலம் ஒன்று இருந்தது. குறிப்பிடத் தகுந்த பெரிய ஆலயங்களே இங்கே நூற்றுக்கணக்கில் உண்டு. சிறிய ஆலயங்களைப்பற்றிக் கணக்கிடுவதற்கே இல்லை. விஷ்ணு, சிவன், சங்கரநாராயணன், துர்க்கை, சுப்பிரமணியன், சாஸ்தா, கணபதி, பத்திரகாளி முதலிய மூர்த்திகள்தான் கேரளத்தில் முக்கியமாக ஆலயங்களில் குடிகொண்டிருக்கிறார்கள். கிருஷ்ணன், ராமன், பரதன் முதலிய மூர்த்திகளையும், அவர்கள் விஷ்ணுவின் அவதாரமாதலால் கேரள மக்கள் விஷ்ணு என்றே வழிபட்டு வருகிறார்கள். கேரள நாட்டு ஆலயங்களில் ஆயிரம் ஆண்டுகளுக்கு மேலாக இருந்து வரும் சில ஆலயங்களும் உண்டு. முன்னாளில் யாக ஹோமாதி கர்மாக்களுக்கும், வேதபுராணாதி வித்தைகளுக்கும், சித்திரம் சிற்பம் முதலிய கலைகளுக்கும் உரிய இடமாகவே ஆலயத்தை மக்கள் கருதி வந்தார்கள். பழங்காலக் கலைகளில் ஏதோ ஒரு பகுதியாவது அழியாமல் இருக்கிற தென்றால் அது கோயில்களில்தான் என்று கூறலாம்.

அனைத்தையும் அளாவி நிற்பவர் மகா விஷ்ணு. அவரே எல்லாவற்றுக்கும் ஆதாரமானவர். அவருடைய நாபியிலிருந்து ஒரு தாமரைக் கொடி தோன்றிற்று. அதன் நுனியில் மலர்ந்த செந்தாமரையில் ஆதிக் கலைஞரான பிரம்மதேவர் தாமாகவே தோன்றினார். அவர் தமது ஆசனமாகிய தாமரையைக் கொண்டு இந்த உலகைப் படைத்தார். அந்தத் தாமரைக் கொடியின் கிழங்குதான் ஆதி வராகம். அதன் தண்டுதான் ஆதி சேஷன். அந்தத் தாமரைப் பூவே பூலோகம். இது உலகத்தின் உற்பத்தியைப்பற்றிப் புராணம் கூறும் ஒரு கருத்து. இந்தக் கருத்தை அடிப்படையாக வைத்

திருவஞ்சிக்குளம் கோயில்

காப்பிரைட்: மாத்ருபூமி (மலையாளம்: 28-4-'57), கோழிக்கோடு.

துக்கொண்டுதான் நம் ஆலயங்களைக் கட்டியிருக்கிறார்கள் என்பதை ஆலய நிர்மாண நூல்களும் பூஜை முறைகளும் தெளிவுபடுத்துகின்றன. கர்ப்பக்கிருகத்தின் அடியில் ஒரு நிதிக் கும்பம். அதற்கு மேல் கல்லில் செய்த தாமரை; அதன்மேல் கல் ஆமை. அதன் பேரில் தாமரைத் தண்டு. அந்தத் தண்டில் மலர்ந்திருப்பதுபோல் ஒரு தாமரைப் பூவைக் கல்லில் செதுக்கி யிருப்பார்கள். இந்த அமைப்புக்குத்தான் கர்ப்பக் கிருகம் என்று பெயர். அந்தத் தாமரையின் நடுவே இருக்கும் கர்ணிகையில் பிம்பத்தைப் பிரதிஷ்டை செய்வார்கள். பூஜா விதியில் ஆதார சக்தி முதலியவற்றுக்குச் செய்துவரும் பீட பூஜையும் இந்தக் கருத்தையே விளக்குகிறது. இதிலிருந்து உலகம் என்ற தாமரைப் பூ வடிவத்தில்தான் ஒவ்வோர் ஆலயமும் ஏற்பட் டிருக்கிறது என்பது தெளிவு.

கீதையில் பகவான் விசுவரூபம் காட்டி, அந்த வடிவங் கொண்ட சரீரத்தையே ஆலயம் என்று கூறியிருக்கிறார். இதிலிருந்து ஆலயம் என்பது சரீரத்தின் வேற்றுருவமே என்று தெளிவாகிறது. பிராகாரத்தோடு சேர்ந்த ஆலயம் ஒரு புருஷனின் சரீரம். உலகம் அனைத்தையும் ஆட்கொண்டு நிற்கும் விராட் புருஷனின் சரீரத்தில் இருக்கும் எல்லா உலகமும் ஆலயத்தில் இருப்பதாக நம் சாஸ்திரத்தின் நம்பிக்கை. அந்த விராட் புருஷனுடைய இதய கமலந்தான் கர்ப்பக்கிருகம். அதைச் சுற்றி இருக்கும் ஆலயத்தின் பகுதி விராட் புருஷனின் வயிறு, மார்பு முதலிய உறுப்புக்களுடன் கூடிய ஸ்தூல சரீரம். ஆகவே, பிராகாரத்துடன் கூடிய ஆலயத்தைப் புருஷனின் சரீரம் என்ற கருத்துடன் தான் அதன் எல்லாப் பாகங்களையும் அமைத்திருக்கிறார்கள்.

சிற்பத்தின் சிறப்புக்கு இருப்பிடம் என்றே கர்ப்பக்கிருகத்தை நாம் சொல்ல வேண்டும். பல பூக்களில் ஊறும் தேன் துளிகள் ஒரு தேனடையில் சேர்ந்திருப்பதுபோல் பல சிற்பிகளின் திறமையும் கர்ப்பக்கிருகத்தில் சேர்ந்திருக்கும். சில ஆலயங்களில் இரண்டு மூன்று கர்ப்பக்கிருகங்கள் இருக்கலாம். அவற்றிலே ஒவ்வொன்றின் உருவமும் சிற்பமும் வேறு வேறாகவே இருக்கும். சதுரமாகவும், வட்டமாகவும், முன் பகுதி சதுரமும் பின் பகுதி வட்டமுமாகவும் கர்ப்பக்கிருகங்கள் பல உருவங்களில் இருக்கின்றன. பொதுவாகக் கர்ப்பக்கிருகத்துக்கு ஒரு நிலைதான் இருக்கும். சில பெரிய கோயில்களில் இரண்டு நிலைகளும் வைப்பது உண்டு. சில மகா க்ஷேத்திரங்களில் அபூர்வமாக மூன்று நிலைகளையும் பார்க்கலாம்.

பிரளயம் வந்தாலும் தம் கலா சிருஷ்டி அழியக்கூடாது என்றுதான் முன் காலத்திய கலைஞர்கள் எண்ணிவந்தார்கள். அதனால் அவர்கள் தங்கள் சிற்பத்துக்கு ஏற்ற பொருளாகக் கருங்கல்லை எடுத்துக்கொண்டார்கள். விக்கிரகத்தையும் கர்ப்பக்கிருகத்தின் தரையையும் கல்லில்தான் செய்ய வேண்டும் என்று அவர்கள் உறுதியா யிருந்தார்கள். முன்னோர் செலுத்திய கவனத்துக்கு அறிகுறியாக இன்னும் ஆலுவாய்ப்புழையின் நடுவே இருக்கும் ஆலயத்தின் தரை இருந்து வருகிறது. எத்தனையோ நூற்றாண்டுகளில் பெரும் பிரவாகம் வந்தும் அதில் இருக்கும் ஒரு கல்லைக்கூட அசைக்க முடியவில்லை. கருங்கல்லுக்கு அடுத்தபடியாக வெட்டுக் கல் (மலையிலிருந்து வெட்டிச் சதுரமாக எடுக்கும் செம்புறைக் கல்), செங்கல், மரம், சுண்ணம்பு இவற்றை ஆலய நிர்மாணத்தில் சிற்பிகள் உபயோகித்தார்கள். கடுக்காய்க் கஷாயமும் கருப்பஞ்சாறும் சேர்த்து அரைத்து எடுத்த சுண்ணும்புக் கலவைக்கு இந்த நாள் கான்கிரீட்டைவிட உறுதி அதிகந்தான். விக்கிரகப் பிரதிஷ்டைக்காக உபயோகிக்கும் அஷ்டபந்தனத்தின் உறுதி ஆச்சரியமாயிருக்கிறது. இதுபோல் பழங்காலக் கலைஞர்களின் சாயக் கலவையும் இத்தனை நாளாகியும் கொஞ்சமும் மங்கவில்லை.

கர்ப்பக்கிருகத்தின் உள் பக்கத்தில் இருக்கும் தரை வேலையில் பல விதங்கள் உண்டு எந்த விதமானாலும் அது திடமாயும் நிலையாயும் இருக்கும். அந்தத் தரையின்மேல் தான் தூண்களையும் சுவர்களையும் கட்டி உயர்த்துவார்கள். பெரிய கர்ப்பக்கிருகங்களில் உள்ளும் புறமும் இரு சுவர்களும் நடுவே நடைப் பாதையும் இருக்கும். கர்ப்பக்கிருகத்தின் மேல்புறத்தைப் பூவின் மொட்டைப்போல் உருவாக்கி மூடுவார்கள். விட்டம், வளைகள், பட்டிகைகள் முதலிய வற்றைப் பருமனாயும் கெட்டியாயும் செய்வித்து அதன்மேல் தாழிக்குடம் வைப்பார்கள்.

கர்ப்பக்கிருகத்துக்கு வாயில் நிலை ஒன்றுதான் இருக்கும். ஆயினும், மற்ற மூன்று புறங்களிலும் நிலைகள் அமைத்துக் கதவைச் சாத்தியிருக்கும் பாவனையில் சுவரில் வேலை செய்திருப்பார்கள். கீழேயிருந்து கர்ப்பக்கிருகத்துக்குள் ஏறுவதற்குப் படிகளும் இரு புறமும் கைபிடிச் சுவர்களும் அவசியம் வேண்டும். வாயிலின் இரு புறமும் கையில் ஆயுதம் தாங்கிய இரண்டு துவாரபாலகர்களை நிறுத்துகிறார்கள். அதேபோல் கர்ப்பக்கிருகத்திலிருந்து ஜலம் வெளிவர நீண்ட கல் ஒன்றை யாளி முகத்தோடு எல்லாக் கோயில்களிலும் அமைப்பது வழக்கம்.

கர்ப்பக்கிருகத்தின் வெளிப் பக்கத்தில் தூண், தோரணம் போன்ற பல அலங்காரங்கள் உண்டு. தவிர, யாளி முகம், மீன் முகம், யானை, சிங்கம், பூக்கள் இந்த மாதிரி பல விதப் பொருள்களும் அலங்கார விளக்குகளில் இடம் பெறும். ஒன்றை ஒன்று சுற்றிப் பிணைந்துகொண்டு படம் எடுத்துக் கொத்தும் பாம்புகள், துதிக்கைகளை ஒன்றுக்கொன்று பின்னிக்கொண்டு இழுக்கும் கொம்பன் யானைகள், யானைகளின் தலையில் ஏறி மஸ்தகங்களைப் பிளக்கும் பயங்கரமான சிங்கங்கள், பாம்புகளைக் கொத்தும் மயில்கள், துதிக்கையுள்ள சிங்கங்கள், சிங்கமுக யானைகள், குதிரை முக மனிதர்கள் இப்படியெல்லாம் கலைஞனின் கற்பனைக்கு எட்டிய பல சித்திரங்களையும் கர்ப்பக்கிருகத்தின் நான்கு புறமும் செதுக்கியிருப்பார்கள். ஒரு வரிசையில் புறா, கிளி, அன்னம் இவற்றில் ஏதாவது ஒன்றைத் தொடர்ந்து சித்திரித்திருப்பார்கள். அதன் அடுத்த வரிசையில் மிருகங்களில் பலவற்றைச் செதுக்கியிருப்பார்கள். ஒரு புறம் நாட்டிய நிலைகளும், மற்றொரு புறம் காம கலா விலாஸங்களும் இருக்கக் காணலாம். இந்திராதி திக்பாலகர்களும் பிற தேவர்களும் சில இடங்களில் இடம் பெற்றிருப்பார்கள். வேறு இடங்களில் புராண கதாபாத்திரங்களும் கதைகளும் சித்திரித்திருப்பார்கள். கர்ப்பக்கிருகம் இரண்டு அடுக்கு மூன்று அடுக்குகள் இருந்தாலும், அரை அங்குலங்கூட இடம் விடாமல் இவ்விதம் கலை மலர்களால் அதை நிரப்பியிருப்பார்கள். இனி ஆலயத்தின் நான்கு புறத்தையும் பார்க்கலாம்.

கர்ப்பக்கிருகத்துக்கு அடுத்து முன் பக்கத்தில் முக மண்டபம், அதற்குச் சற்று முன்புறத்தில் சதுர வடிவமான நமஸ்கார மண்டபம், அதற்குச் சற்று வட கிழக்கில் ஒரு கிணறு, கர்ப்பக்கிருகத்துக்கும் மண்டபத்துக்கும் நாலு புறங்களிலும் திறந்த வெளி, அதிலேயே திக்பாலகர்களுக்கும் ஏழு மாதாக்களுக்கும் பலி பீடங்கள் இவையெல்லாம் இருக்கும். பத்திர காளியின் ஆலயத்தில் மாதாக்களுக்கு மாத்ருசாலை ஒன்று இருப்பதைக் காணலாம். இவற்றுக்கெல்லாம் நாலுபுறமும் 'நாலம்பலம்' (நான்கு புறமுள்ள கோயிலைச் சுற்றியுள்ள கட்டிடம்) இருக்கும். இதில் மடைப்பள்ளி, மாலைப் பள்ளி (மாலை கட்டும் இடம்), உக்கிராணம் இவை இருக்கும். நாலம்பலத்துக்கு வெளியே பிராகாரச் சுவருக்கு உட்புறம் இருக்கும் இடத்தைச் சுற்றம்பலம் என்பார்கள். அதில் கணபதி, சாஸ்தா முதலிய உபதெய்வங்களைப் பிரதிஷ்டை செய்திருப்பார்கள். நாலம்பலத்தின் வெளிப்புறத்தில் இடைவிடாமல் வரிசையாக

விளக்குகள் வைத்திருப்பார்கள். இதை விளக்கு மாடம் என்பார்கள். உற்சவ காலங்களில் இந்த விளக்குகளை ஏற்றுவார்கள். அப்பொழுது ஆலயம் பொன்னில் புதைந்தது போல் காட்சி அளிக்கும். ஆலயத்துக்கு உள்ளே இருந்து வெளியே வரும் நடையில் சுமார் ஓர் ஆள் அல்லது ஒன்றரை ஆள் உயரத்தில் ஒரு 'பலிக் கல்' இருக்கும். அதில் இருக்கும் சித்திரக்கலைகளைப் பார்த்தால் அது ஒரு சிறிய கர்ப்பக்கிருகமாகவே காட்சி அளிக்கும். அங்கிருந்து கொஞ்சம் உள்ளே சென்றால், கொடி மரம் இருக்கும். அதன் சிகரத்தில் அந்த ஆலய மூர்த்தியின் வாகன உருவை அமைத்திருப்பார்கள்.

சுற்றம்பலத்துக்கும் பிராகாரச் சுவருக்கும் இடையே பிரதட்சிணம் செய்யும் இடம் இருக்கும். இவை அனைத்தையும் சுற்றிக் கொண்டு ஒரு 'யானைப் பள்ளையன் மதில்' (யானையின் வயிறுபோன்ற மதில்) நிமிர்ந்து நிற்கும். அதைப் பார்க்க யானைகள் அணிவகுத்து நிற்பதுபோலவே தோன்றும். நான்கு பக்கங்களிலும் இரண்டு மூன்று அடுக்குகள் உள்ள கோபுரங்களைத் தூரத்திலிருந்தே காணலாம். பிராகாரச் சுவரோடு ஒட்டிய ஊட்டுப்புரை, அதன் மடைப்பள்ளி, சாமான்களையும் தானியங்களையும் வைக்கக்கூடிய 'பத்தாயப்புரை' இவை எல்லாம் பெரிய ஆலயங்களில் அமைந்திருக்கும். ஆச்சரியமான சிற்பங்களைத் தாங்கும் கூத்தம்பலங்களும் (பல வித ஆட்டம் ஆடும் இடங்கள்), விசாலமான யானைக் கொட்டில்களும் சில ஆலயங்களில் இருக்கும். பெரிய குளமோ, நதியோ ஆலயத்தின் அருகில் கட்டாயம் இருக்கும். தழைந்து வளர்ந்த அரசமரங்கள் பிராகாரத்துக்குள் ஆலயத்துக்கு அலங்காரமாக நிற்கும். ஜல சௌகரியத்தையும் ஸ்தல சௌகரியத்தையும் பார்த்துத்தான் நம் முன்னோர் பெரிய ஆலயங்களை உருவாக்கினார்கள். இதையெல்லாம் கவனிக்கும்போது உலகப் படைப்பின் கலைத்திறன் முழுவதும் ஆலயத்தில் இருப்பது நமக்குப் புலனாகும்.

பிற தேச ஆலயங்களையும் கேரள ஆலயங்களையும் ஒப்பிட்டுப் பார்த்தால், இரண்டுக்கும் இடையே எவ்வளவோ மாறுபாடுகள் உண்டு என்பதை அறியலாம். ஏழு பிராகாரங்கள், இருபத்தெட்டுக் கோபுரங்கள், ஒவ்வொரு கோபுரத்திலும் ஏழு அல்லது ஒன்பது அல்லது பதினொரு நிலைகள், ஆயிரக்கால் மண்டபம் இவைபோன்ற ஆச்சரியமான கலாசிருஷ்டி கேரளத்தில் இல்லை. பிற தேச ஆலயங்களில் கல்லில் உருவான சிற்பம் அதிகம். கேரளத்தில் அந்தச் சிற்பம் மரத்தில் உருவாகியிருக்கிறது. ஆயினும், கேரள மக்களின் அடக்கம், தூய்மை, அழகு இவற்றை அவர்களுடைய ஆலயச் சிற்பத்திலும் காணலாம்.

சர்ச்சிலின் பிரசங்க ரகசியம்

பிரபல பிரிட்டிஷ் பிரதம மந்திரி சர்ச்சில் பிரமாதமான பிரசங்கி என்றே எல்லாரும் நினைத்துக்கொண்டிருக்கிறார்கள். அவர் ஒன்றும் பிரசங்கியே அல்ல; ஆனால் பிரமாதமான எழுத்தாளர். தாம் வெகு ஜாக்கிரதையாய்ச் சிந்தித்து எழுதும் கருத்துக்களுக்கு, முன் யோசனையே செய்யாத பேச்சைப் போன்ற உருவம் கொடுத்துவிடுகிறார்.

''பிரமாதமான பிரசங்கங்களின் ரகசியம் என்ன?'' என்று யாரோ அவரைக் கேட்டார்கள்.

''பவுண்டன் பேனாவிலே உறுதியான நிப்; தூரத்திலே உள்ள கடிதாசைப் படிக்கக்கூடிய மூக்குக் கண்ணாடி - இந்த இரண்டுந்தான்'' என்று அவர் பதில் அளித்தார்.

—டபிள்யூ. ஜே. ப்ரௌன், 'தி இங்கிலீஷ் டைஜெஸ்ட்'.

தாயும் குழந்தையும்

சரசு சம்பந்தம்

இந்தப் பெண்மணி எழுதியதும் திருநாவுக்கரசு தயாரிப்புமான நூலிலிருந்து எடுத்த ஒரு சிறு பகுதி இது. மணமான ஒரு பெண்ணுடன் நேரே பேசுவது போல, அநுப்வபூர்வமான அரிய யோசனைகள் பல வற்றை இதிலே ஆசிரியை தருகிறார். புத்தகம் முழுதும் நல்ல ஓட்டம் இருக்கிறது. அமைப்பு வசீகரமா யிருக்கிறது; பொருள் சுவாரஸ்யமா யிருக்கிறது.

அப்பொழுதுதான் அலமுவுக்கு முதல் குழந்தை பிறந்தது. பிள்ளைக் குழந்தையாய்ப் பிறந்தது குறித்து, கணவனுக்கும் மனைவிக்கும் கொள்ளைச் சந்தோஷம். பாலூட்டிச் சீராட்டிப் பக்குவமாய் வளர்த்து வந்தாள் அலமு. அந்தச் சமயத்தில், ஊரில் ஏதோ பிரபல மான சினிமாப் படம் ஒன்று ஓடிக் கொண்டிருந்தது. திரள் திரளாக ஜனங்கள் சென்று பார்த்து வந்தார்கள். அலமுவுக்கும் ஆசை இராதா! தன் கணவனிடம் தெரிவித்தாள். அவன், "அதற்கென்ன? போனால் போகிறது. இப்பொழுது தானே இரண்டாவது வாரம் ஆரம்பித்திருக்கிறது படத்துக்கு" என்று சூள் கொட்டினான்; ஆனாலும், "இந்தப் படம் முடிவதற்குள் உன்னை அவசியம் அழைத்துப் போகிறேன்" என்று உறுதியளித்தான். நாட்கள் ஓடின. அன்று படத்தின் கடைசி நாள். கணவனுக்கு நினைவூட்டினாள் அலமு. அவனுக்கு வேறு வழியில்லை; ஆபீசுக்கு லீவு போட்டுவிட்டு மனைவியுடன் சினிமாவுக்குப் புறப்பட்டு விட்டான். அலமுவும், தன் செல்லக் குழந்தைக்குக் கம்பளிக் குல்லாய் எல்லாம் போட்டுக்கொண்டு சொகுசாய்ச் சென்றாள்.

படம் ஆரம்பமாயிற்று. சிறிது நேரத்துக்குள் குழந்தை லேசாய் அழத் தொடங்கினான். படத்தைப் பராக்குக் காட்டிச் சற்று ஆசுவாசப்படுத்தினாள் அலமு. சற்று நேரத்துக்குள் மீண்டும் அழத் தொடங்கிவிட்டான் குழந்தை. எப்படி எப்படியோ ஆசுவாசப் படுத்திப் பார்த்தாள். குழந்தை ஓயவில்லை. அதற்குள் ஜனங்கள் வேறு 'உஸ் உஸ்' என்று முனங்கத் தொடங்கிவிட்டார்கள். என்ன செய்வது! "சற்று வெளியே போய் வருகிறேன்!" என்று கணவனிடம் சொல்லி, குழந்தையுடன் கிளம்பிவிட்டாள் அலமு. அவள் இத்தனை நாட்களாகப் பார்க்க ஏங்கிக் கிடந்த அந்தப் படத்தின் அழகான கட்டம் அப்பொழுது ஓடிக்கொண்டிருந்தது. ஆனால் அலமு, குழந்தையுடன் வெளியிலே இருந்தாள்! அங்கே அதையும் இதையும் வேடிக்கை காட்டவே, குழந்தையின் அழுகை சற்றுத் தணிந்தது.

உடனே மெதுவாய் உள்ளே திரும்பினாள். உள்ளே விரவியிருந்த இருட்டு அவள் குழந்தைக்குப் பிடிக்கவில்லை. நுழைந்தும் நுழையாமலும் இருக்கும்பொழுதே

மூலம்: வெற்றிகரமாகக் குடும்பம் நடத்துவது எப்படி? (தமிழ்ப் புத்தகம்). வெளியிட்டோர்: வானதி பதிப்பகம், தி. நகர், சென்னை-17. விலை ரூபாய் இரண்டு.

"வீல்' என்று அழத் தொடங்கிவிட்டான். உம் ஓம்டன் வெளியே!

அதற்குள் படம் பாதிக்குமேல் ஓடிவிட்டது. அலமு மறுபடியும் உள்ளே போக முயன்றாள்; குழந்தை விடவில்லை. கணவனும் மனம் பொறுக்காமல் வெளியே எழுந்து ஓடிவந்தான். "இப்படி என்னிடம் சற்றுக் குழந்தையைக் கொடுத்துவிட்டு நீ போய்ப் படம் பாரேன். சீக்கிரத்தில் முடியப் போகிறது!" என்று பரிதாபமாய்ச் சொன்னான். "உம், குழந்தையை விடவா படம்?" என்றாள் அலமு. குழந்தையும் அவனிடம் வந்தால் தானே! அப்பொழுதுதான் அலமுவிடம் பால் குடிக்கத் தாவினான். பிறகு என்ன செய்வது? அப்படியே உட்கார்ந்துவிட்டாள் அலமு. அவள் கணவன் மாத்திரம் உள்ளே சென்று படம் பார்த்தான்.

படம் முடிந்ததும் இருவரும் வீடு திரும்பினார்கள். அப்பொழுது அலமுவைப் பார்க்கப் பார்க்கப் பரிதாபமாயிருந்தது கணவனுக்கு. என்ன செய்வது! சினிமா பார்ப்பது சிறிய விஷயந்தான். ஆனால் அவள் புரிந்த தியாகம்! யாரால்? எதற்கு? ஆதியில் மிக்க உரிமையுடன் தன் வாழ்வைத் தொடங்கிய ஒரு பெண், தான் பெற்ற குழந்தையின் தாயாக வாழும்பொழுது, எப்படி எல்லா உரிமைகளையும் உதறிவிட்டு அன்புருவாக உயர்கிறாள், பார்த்தாயா? பிடிவாத குணம் பெருகி நின்ற ஒரு பெண்ணை இயற்கை இப்படி மாற்றி, நாளடைவில் தியாகத்தின் திருவுருவாக அல்லவா செய்துவிடுகிறது! இன்னும் குழந்தையால் நாளடைவில் உன் மனமாசுகள் எல்லாங்கூடக் கரைந்து போகுமே!

குழந்தையை வளர்க்க அடிக்கடி பால் கொடுப்பதோடு நீயே மருந்தும் உண்கிறாய். இரவெல்லாம் கண் விழித்துச் சீராட்டுகிறாய். உன் வாயைக் கட்டி, வயிற்றைக் கட்டி, நீ குழந்தைக்காகப் படும் பாடு கொஞ்சமா என்ன!

அன்பாய வேளையோடு பால் கொடு குழந்தைக்கு. குறைந்த பட்சம் ஒரு வருஷமாவது தாய்ப்பால் குடித்தாக வேண்டும் குழந்தை: அப்பொழுதுதான் அது நோய் நொடி இல்லாமல் புஷ்டியுடன் சௌக்கியமாயிருக்கும். சில பெண்கள் தங்கள் உடலழகைப் பாதுகாப்பதாக எண்ணி, சில மாதங்களுக்குள்ளாகவே தாய்ப்பாலை மறக்கடித்துவிடுகிறார்கள். அது தவறு. உண்மையாகத் தங்கள் குழந்தையிடம் அன்புள்ள பெண்கள் அப்படிச் செய்ய மாட்டார்கள். குழந்தைக்குத் தாய்ப்பால் தானே சிறந்த உணவு!

சிலருக்குப் பாலே சுரக்காமல் போய்விடும். அப்பொழுது என்ன செய்வது? பசும்பாலைக் காய்ச்சி, நிறையத் தண்ணீர் கலந்து, சிறுகச் சிறுகப் புகட்ட வேண்டும். பாலில் கொஞ்சம் சர்க்கரையையும் சேர்த்துக்கொண்டுவிட்டால், குழந்தை சப்புக் கொட்டிக் கொண்டே சாப்பிட்டுவிடும். அப்பொழுது குழந்தைக்குப் புரை ஏறாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். குழந்தை திணறிப் போகாதபடி லேசாகக் குளிப்பாட்டவும் தெரிந்து வைத்துக்கொள்.

இன்னும் கைக் குழந்தைக்கு அடிக்கடி சிறு தொந்தரவுகள் ஏற்படலாம். காலையில் நன்றாயிருந்த குழந்தைக்குத் திடுக்கென்று மாலைக்குள் ஏதாவது உடம்புக்கு வந்துவிடும் இது மாதிரி சிறு நோய்க்கெல்லாம் டாக்டரிடம் ஓட முடியுமா என்ன? தவிர, நீ இருக்கும் இடத்தில் வைத்திய வசதியே இல்லாவிட்டால்தான் என்ன செய்வாய்? இதற்கெல்லாம் நீயே உன் பெற்றோரிடமிருந்தோ விஷயப் தெரிந்த பெரியோரிடமிருந்தோ கை வைத்திபம் ஏதாவது தெரிந்து வைத்துக்கொண்டிருக்க வேண்டுப்.

குழந்தைகளைப் பேணிக் காப்பதில் இவ்வளவு சிரமங்கள் இருந்தும் சிலர் அதிகக் குழந்தைகளைப் பெற்றுவிட்டு வாழ்க்கையில் திண்டாடுவதுண்டு. அதோடு வருஷத்துக்கு ஒன்றாய்ப் பெற்றெடுத்தால் உன் உடல்தான் என்னத்துக்காகும்? எத்தனை பெண்கள் குழந்தைகள் பெற முடியாமலே அகாலத்தில் இறந்திருக்கிறார்கள் தெரியுமா?

குழந்தைகள் பெற்றுக்கொள்வதும் பெருது போவதும் உங்களிடந்தானே இருக்கிறது! அதனுல் மனேவியும் கணவனுமான நீங்கள் தான் அதற்கு வழி வகை செய்து கொள்ள வேண்டும். குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்தை மேற்கொண்டு, பிறப்பதைத் தடுப்பதில் பாவம் ஒன்றும் இல்லேயே! கர்ப்பம் ஏற்பட்டு, பிறகு தடுத்துக்கொள்வதைவிட, கர்ப்ப உற்பத்தியைத் தடுத்துக்கொள்வதே சிறந்தது. அதற்காகக் கண்டபடி அல்லது கேட்டபடி அதையும் இதையும் செய்துகொண்டு இன்பக் கலவிக்கு இடையூறும் செய்து கொள்ளக்கூடாது. இப்போது நம் அரசாங்கமே இதில் சிரத்தை காட்டுகிறது. இது விஷயமாக நமக்கு யோசனே சொல்ல அங்கங்கே இதற்கென்று மருத்துவ சாலேகளும் ஏற்படுத்தி வருகிருர்கள். இவ்வளவு சிரமம் ஏன்? மகாத்மா காந்தி சொல்லியிருப்பது போல் நாம் புலன் அடக்கத்தைப் பயிற்சி செய்துகொண்டு முயன்ருல்? அது எளிது என்று நான் சொல்ல வரவில்லே. அதற்குச் சிறு முயற்சி போதாது; விடா முயற்சி வேண்டும்.

சிலர், தங்கள் சௌகரியத்துக்கேற்ருற்போல் விரும்பிய எண்ணிக்கை குழந்தைகள் பிறந்துவிட்டதும், ஆப்பரேஷன் மூலம் நிரந்தரமாகவே தடை செய்து கொண்டு விடுகிருர்கள். இது தவறு என்று சொல்வேன் நான். பிறந்த குழந்தைகள் அனைத்தும் நீடித்து வாழும் என்பது என்ன நிச்சயம்! அவற்றின் ஆயுள் குறைந்துபோனல்..! அதன் பிறகு குழநதைகள் வேண்டு மென்ருல் என்ன செய்வது? ஆகவே, அப்போதப்போது தடை செய்துகொள்வதே நல்லது என்று எனக்குத் தோன்றுகிறது.

பிரம்மாண்டமான நாவல்

மிகப் பெரிய நாவல் ஒன்று வேண்டும் என்று, ஒரு நாள் காலேயில் ஒரு பெண் என்னேக் கேட்டாள். 'ஆந்தனி ஆட்வெர்ஸ்' என்ற பிரம்மாண்டமான சரித்திர நாவலே எடுத்து அவளிடம் கொடுத்தேன்.

அதை ஆவலோடு ஒரு கையில் வாங்கி வைத்துக் கொண்டே, ''ஆமாம். இதுதான், இதுதான் எனக்கு வேண்டும்'' என்ருள் பெண்.

இதன் மர்மம் என்ன என்று அறிய எனக்கு ஆவலாயிருந்தது. ''ஏனம்மா பெரிய புஸ்தகமாய் வேண்டும் என்றீர்கள்? நான் அறியலாமோ?'' என்று கேட்டேன்.

அவள் என் முகத்தை நிமிர்ந்து பார்த்தாள். உதட்டிலே புன்சிரிப்பு அரும்ப, ''நான் எப்போதும் படுக்கையிலே தான் படிப்பேன். என் புருஷன் ஒரு கிழடு. பேய் மாதிரி குறட்டை விடும். கொஞ்ச நேரத்துக்கு ஒரு தரம் அதை மொத்த ஒரு பெரிய புஸ்தகமாய்த்தான் வேண்டியிருக்கிறது'' என்ருள். —வில்லியம் லவுண்டெஸ் (பி. பி. ஸி. பேச்சு).

பெருகிவரும் ஜனத்தொகை

போன நூற்ருண்டில் உலக ஜனத்தொகை ஒன்றுக்கு இரண்டாகப் பெருகியது. இப்போது, உலகத்திலே 250 கோடி மக்கள் இருக்கிருர்கள். வருஷம் ஒன்றுக்கு 3 கோடி மக்கள் அதிகரித்துக்கொண்டே வருகிருர்கள். ருஷியாவில் மட்டும் 1850-இல் இருந்ததைப் போல் நான்கு மடங்கு மக்கள் இப்போது இருக்கிருர்கள்.

—'குட் ஹவுஸ்கீப்பிங்'

பகாசுர வதம்

★

வியாச முனிவர் பாண்டவர்களையும் குந்தி தேவியையும் சாலிஹோத்திர முனிவரின் ஆசிரமத்திலிருந்து ஏகசக்ரா நகரத்துக்கு அழைத்து வந்து ஒரு பிராம்மணனின் வீட்டில் இருக்கச் செய்து மறைந்துவிட்டார். பாண்டவர் அழகிய காடுகளையும் மலைகளையும் ஆறுகளையும் குளங்களையும் பார்த்துக்கொண்டு, மகிழ்ந்தார்கள். ஐந்து பாண்டவர்களும் பிட்சை எடுத்துக் காலங் கழிக்கலானார்கள். ஜடை தரித்த அழகிய பிரம்மசாரிகளின் உருவத்தில் அவர்கள் பிட்சை எடுப்பதைக் கண்டு பட்டணத்து மக்கள், 'இவர்கள் யார்? தேவர்களைப் போல் காண்கிறார்களே! இவர்கள் பிட்சை எடுக்க ஏற்றவர்களா? ஆளப் பிறந்தவர்களைப்போல இருக்கிறார்களே! எல்லா லட்சணங்களும் பொருந்திய இவர்கள் ஏதோ காரியத்துக்காகத்தான் இப்படிப் பிட்சை எடுக்கிறார்கள்' என்று தமக்குள் பேசிக்கொண்டார்கள். அவர்கள் கொண்டுவரும் பிட்சைப் பாத்திரங்களில் பட்சணம், அன்னம் இப்படி உணவுப்பண்டங்களை இட்டார்கள். பர்ண்டவர்கள் மௌனமாய்ப் பிட்சை எடுத்துத், 'தாயார் கவலைப் படுவாளே' என்று விரைவில் வீடு திரும்புவார்கள். பிட்சை எடுத்த பொருளைத் தாயாரிடம் கொடுத்து அவள் பகிர்ந்து கொடுப்பதை உண்பார்கள். பொதுவாக, பிட்சை எடுத்துவரும் பொருளில் ஒரு பாதியைப் பீமனும் மற்றப் பாதியை மற்றவர்களும் பகிர்ந்து உண்டு வந்தார்கள். அப்படியிருந்தும் பீமன் முகம் வாடிக் கறுத்தது; உடம்பு இளைத்தது. இப்படிச் சிறிது காலம் சென்றது.

பீமன் அந்தணர்களோடும் மற்ற நண்பர்களோடும் விளையாடிக் கொண்டிருந்தான். அப்பொழுது அவன் மண்வனைஞன் ஒருவனுடன் பழக நேர்ந்தது. இருவரும் நண்பர்கள் ஆகிவிட்டார்கள்.

ராமாயணத்தைப்போல் பிரசித்தமானது பாரதம். பாண்டவர், கௌரவர் வரலாற்றை மட்டும் அல்ல; கீதை மொழிந்த கண்ணனின் கருணைச் செயல்களையும் இதில் காணலாம்.

அவன் பீமனுக்கு ஒரு பெரிய பாத்திரத்தைக் கொடுத்தான். அதை எடுத்துக்கொண்டு பீமன் பிட்சைக்கு வருவதைக் கண்டு மக்கள் நகைத்தார்கள். அதில் ஏராளமான தின்பண்டங்களையும் உணவையும் மக்கள் போட்டு நிரப்பினுர்கள். அதைப் பீமன் தனியே உண்டுவந்தான்.

ஒரு நாள் மற்றப் பாண்டவர்கள் பிட்சைக்காகச் சென்றிருந்தபோது பீமன்மட்டும் குந்தியுடன் வீட்டில் இருந்தான். அவர்கள் குடியிருந்த பிராம்மணன் வீட்டில் எல்லோரும் சேர்ந்து அழுது புலம்பிக்கொண்டிருப்பதைக் கண்டாள் குந்தி. இளகிய மனம் உள்ளவளாகையால் அவள் பீமனிடம், ''மகனே, இந்தப் பிராம்மணன் வீட்டில் துரியோதனனுக்குத் தெரியாமல் நாம் சௌக்கியமாக வாழ்கிறோம். அதனால் இவனுக்கு ஏதாவது உதவி செய்ய வேண்டும் என்று யோசித்துக் கொண்டே இருக்கிறேன். செய்நன்றி மறக்காததுதான் மனிதத் தன்மை. இப்பொழுது இவர்களுக்கு ஏதோ துன்பம் நேர்ந்திருக்கிறது. நம்மால் முடிந்தால் ஏதாவது செய்வோம்'' என்றுள்.

பீமன், ''தாயே, என்ன துன்பம் என்று அறிந்து வா. எனக்கு அதனுல் சிரமம் இருந்தாலும் பரவாயில்லை. நான் இவர்களுக்கு உதவி செய்கிறேன்'' என்றுன்.

அப்போது மீண்டும் அந்தணனும் அவன் மனைவியும் வருந்தி அழுவது கேட்டது. குந்தி அங்கே விரைந்து சென்றுள். மனைவி, மகன், மகள் மூன்று பேரோடும், தலைகுனிந்து உட்கார்ந்து அந்தணன் பேசிக் கொண்டிருப்பதைக் கண்டாள். ''வாழ்வே மிகக் கஷ்டமானது. வாழ்நாளோ மிகக் குறைவு. உங்களோடு சொற்பகாலம் வாழ்ந்து பிரியும் நிலை வந்து விட்டது. இந்த ஆபத்திலிருந்து மீள வழியே தெரியவில்லை. நான் முன்பே உன்னிடம், 'இந்த ஊரை விட்டுப் போய்விடுவோம்' என்

றேன். அதற்கு நீ, 'நான் இங்கேயே பிறந்து வளர்ந்தேன். என் தாய் தந்தையர்களும் இங்கே தான் இருந்தார்கள்' என்ருய். உன் தாய் தந்தையர்களோ இறந்து விட்டார்கள். உறவினர்களும் இல்லை. இந்த ஊரின்மேல் உனக்கு ஏன் ஆசை? நீ என் வார்த்தையைக் கேட்கவில்லை. இப்பொழுது இந்த ஆபத்திலிருந்து எப்படித் தப்புவது? நீ எப்போதும் என்னுடன் தர்மம் செய்து வருகிருய், வேலைக்காரிபோல் எனக்குப் பணிவிடை செய்கிருய். தாயைப்போல் என்னைக் காப்பாற்றுகிருய். நீ தெய்வம் எனக்கு அளித்த உற்ற தோழி. தாய்தந்தையர் இல்லாமல் இருந்தபோதிலும் நான்தான் கதி என்று இருக்கிருய். உன்னைப் காப்பாற்றுவதாக மந்திரம் சொல்லி மணந்துகொண்டு என் உயிரைக் காக்க உன்னை எப்படிப் பலி இடுவேன்? மகளையோ பிறருக்காகக் கடவுள் என்னிடம் ஒப்படைத்திருக்கிருர். அவளுக்கு உலகத்தில் வாழ எவ்வளவோ ஆசை இருக்கும். எனக்கு மகள், மகன் இருவரும் சமம். அதனுல் நான் இருவரையும் அரக்கனுக்குக் கொடுத்து என்னைக் காப்பாற்றிக்கொள்ள முடியாது. நான் என்னைக் கொடுத்து உங்களைக் காப்பாற்றலாம். ஆனுல் நான் இறந்தால் நீங்கள் உயிர் வாழமாட்டீர்கள்! அதனுல் நாம் எல்லாரும் சேர்ந்து இறப்பதே மேல்'' என்ருன்.

அப்போது அவன் மனைவி, ''நீங்கள் சாமானிய மனிதர்களைப் போல் வருந்துவது நன்ருக இல்லை. மனிதர் எல்லாரும் இறக்க வேண்டியவர்களே. ஆகவே, வருந்திப் பயன் என்ன? மேலும், மனைவி மக்கள் எல்லாரும் உங்களுக்காகத் தானே இருக்கிருர்கள்; அதனுல் நீங்கள் எங்களுக்காக உயிர் விடுவது சரியில்லை. கணவனுக்குப் பணிவிடை செய்துவருவதே மனைவியின் கடமை. உயிரை விட்டாவது உங்களுக்கு நன்மையே செய்ய வேண்டும். நீங்கள் இல்லறத்தைக் கடைப்பிடித்தாயிற்று. ஒரு மகனையும் மகளையும் நான் பெற்று விட்டதால் என் கடன் தீர்ந்து விட்டது. நீங்கள் உயிர் விட்டால் இந்தக் குழந்தைகளை என்னுல் காக்க முடியாது. பிள்ளையைப் படிக்கச் செய்து நல்ல வழியில் இருக்கச் செய்யவும், பெண்ணை நல்ல மருமகனைப் பார்த்து மணம் செய்து கொடுக்கவும் எனக்குத் திறமை உண்டா? நீங்கள் இறந்தால் நான் உயிர் வாழமாட்டேன். நாம் இருவரும் இல்லாமல் இந்தக் குழந்தைகள் எப்படிப் பிழைத்திருக்கும்? ஆகவே, என் உயிரைக் கொடுத்தாவது உங்கள் உயிரைக் காப்பாற்றுகிறேன்'' என்ருள்.

தாய் தந்தையர் இருவரும் இப்படி மிகவும் வருத்தத்துடன் கூறும் வார்த்தைகளைக் கேட்ட மகள், ''நீங்கள் ஏன் இப்படி அழுகிறீர்கள்? எப்படி இருந்தாலும் நீங்கள் என்னை விட வேண்டியதுதான். தாய் தந்தையர் பெண்ணும் பிள்ளையும் தம்மைக் கடைத்தேற்றுவார்கள் என்ற எண்ணத்தாலேயே அவர்களை வளர்க்கிருர்கள். என்னைப் பலி கொடுத்து உங்களை இந்த ஆபத்திலிருந்து கடைத்தேற்றுகிறேன். என் தம்பி சிறிய குழந்தை. தாய் இல்லாவிட்டால் அவன் உயிர் வாழமாட்டான். தாய் இறந்தால் தந்தையும் இறந்து விடுவார். முடிவில் நம் வம்சமே அற்றுவிடும். மேலும், தந்தை இறந்தால் நாங்கள் வயிறு வளர்க்கப் பிச்சை எடுக்க வேண்டியதுதான். ஆகவே, நான் ஒருத்தி உயிர் துறந்தால் குடும்பமே இன்புற்று வாழும்'' என்ருள். ஒரு சிறு பெண் இப்படிக் கூறுவதைக் கேட்டுத் தந்தை தாய் இருவரும் அழுதார்கள். அதைக் கண்டு மகளும் அழுதாள். அவர்கள் அழுவதைப் பார்த்து ஆண் குழந்தை மழலைச் சொல்லில், ''அம்மா, அழாதே! அப்பா, அழாதே! அக்கா அழாதே!'' என்று அவர்களிடம் தனித்தனியாகக் கூறியது. அருகில் இருந்த புல்லை எடுத்துக்கொண்டு, ''இதனுல் அந்த ராட்சசனைக் கொன்று விடுவேன்'' என்றது. வருத்தமுற்றுப் புலம்பிக்கொண்டிருக்கும்போதுகூடக் குழந்தையின் வார்த்தையைக் கேட்டதும் அவர்களுக்குச் சற்றே மகிழ்ச்சி ஏற்

பட்டது. அந்தச் சந்தர்ப்பம் பார்த்துக் குந்தி அங்கே வந்து அவர்கள் ஏன் இப்படி வருத்தப் படுகிறார்கள் என்று விசாரித்தாள். பிராம்மணன், "எங்கள் துன்பத்தை மனிதரால் போக்க முடியாது. இருந்தாலும், விஷயம் இதுதான்: இந்தக் கிராமத்துக்குச் சிறிது தூரத்தில் யமுனைக் கரையிலே ஒரு குகையில் பகன் என்று ஓர் அரக்கன் இருக்கிறான். அவன் மனிதரைத் தின்பவன். இந்த நாட்டுக்கு அவன்தான் அரசன். பதின்மூன்று வருஷங்களாக அவன் இந்தக் கிராமத்தைத் துன்புறுத்து கிறான். இங்கே இருக்கும் பெண் கள், குழந்தைகள், கிழவர்கள், இளைஞர்கள் எல்லாரையும் கண்ட படியெல்லாம் மொத்தமாகத் தின்று வந்தான். இதைக் கண்டு கிராமத்தில் வாழும் அந்தணர்கள் ஒன்று சேர்ந்து அவனிடம் ஓர் ஏற் பாடு செய்துகொண்டார்கள், 'ஐயா, எங்களை ஒரே அடியாகக் கொல்லவேண்டாம். நாள் தோறும் நாங்கள் உங்களுக்குப் பூமாலை, எள் கலந்த அன்னம் ஒரு வண்டி, பொரி, அப்பம், கள், காட்டுப்பன்றிகள் எருமைகள் கரடிகள் இவைகளின் மாமிசம், பல குடங்களில் ரத்தம் முதலிய வற்றையும், கறுப்புக்காளைகள் இரண்டையும் ஒவ்வொரு வீட்டி லிருந்தும் கொடுக்கிறோம். நீங்கள் இந்த ஏற்பாட்டை ஏற்றுக் கொள்ள வேண்டும்' என்று வேண் டினார்கள். அவனும் அதற்கு இணங்கினான்.

"பிற அரசர்களிடமிருந்து துன் பம் நேராதபடி இந்த நாட்டை அவன் காத்து வருகிறான். அதற்காக நாள்தோறும் ஒரு மனி தனையும் ஒவ்வொரு வீட்டிலிருந் தும் அவனுக்குக் கொடுக்கவேண் டும். குலத்தையே அழிக்கும் அந்த முறை இன்று என் வீட்டுக்கு வந் திருக்கிறது. இதனால்தான் நாங்கள் வருத்தப்படுகிறோம்" என்றான்.

குந்தி, "நீங்கள் இதற்காக வருத்தப்படாதீர்கள். உங்க ளுடைய ஒரே பிள்ளையை அரக்க னுக்கு அனுப்பிக் குலத்தை அழித் துக் கொள்வது சரியில்லை. எனக்கு ஐந்து பிள்ளைகள் இருக்கிறார்கள். அவர்களில் ஒருவனை அரக்கனுக் காக வைத்திருக்கும் அன்னம், கள், மாமிசம் முதலியவற்றை எடுத்துக் கொண்டு போகச் சொல்லு கிறேன்" என்றாள்.

அதற்கு அந்தணன், "எங்களுக் காக ஒரு பிராம்மணனைப் பலி கொடுக்கச் சம்மதிக்கமாட்டேன். ஓர் உயிரைக் காப்பாற்ற நம் உயிரைக் கொடுக்க வேண்டும். அப்படி இருக்க, பிறர் உயிரைப் பலியிட்டு நம் உயிரைக் காப்பாற் றிக் கொள்வது மிகவும் ஈன மானது. நீங்கள் என் வீட்டுக்கு விருந்தாளியாக வந்திருக்கிறீர்கள். விருந்தாளியின் உயிரைப் பலியிட்டு எங்கள் உயிரைக் காத்துக்கொள் வது மேலும் கொடுமை. அதனால் உங்கள் யோசனையை ஏற்கமாட் டேன்" என்று மறுத்துவிட்டான்.

உடனே குந்தி, "நானும் அந்தணராகிய உங்களுடைய உயி ரைக் காக்கவே இப்படிச் சொல்லு கிறேன். என் மகன் அரக்கனைக் கொல்லும் பலம் படைத்தவன். மந்திர சித்தி அவனுக்கு உண்டு. அவன் பல அரக்கர்களிடம் போரிட்டு வெற்றி பெற்றிருக் கிறான். கட்டாயம் பகாசுரனுக்கு உணவைக் கொடுத்துவிட்டுத் தன்னை விடுவித்துக்கொண்டு வரு வான். நீங்கள் என் மகனுடைய திறமையைப்பற்றிப் பிறர் யாரிடம் சொல்லாமல் இருக்க வேண்டும்" என்று கேட்டுக் கொண்டாள்.

அந்தணனும் அவன் மனைவியும் மகிழ்ச்சியுற்றார்கள். குந்தியும் அந்தணனும் சேர்ந்து பீமனைப் பகாசுரனிடம் சென்று வரும்படி சொன்னார்கள். அவனும் அதற்கு இணங்கினான்.

பிறகு குந்தியும் பீமனும் தம் இருப்பிடம் வந்தார்கள். அப் பொழுது தர்மன் முதலியோர் பிச்சை எடுத்துக்கொண்டு வந்தார் கள். பீமன் முகத்தில் என்றும் இல்லாத மகிழ்ச்சியைப் பார்த்துத் தர்மன், "என்ன விசேஷம்?" என்று தாயைக் கேட்டான். குந்தி யும் நடந்ததை ஒளிக்காமல் சொல்லிவிட்டாள். அதற்குத்

தர்மன், ''தாயே, தன் மகனைப் பலியிட்டுப் பிறர் மகனைக் காப்பது தர்மமா? பீமனை நம்பித்தானே நாம் வாழ்கிறோம். துரியோதனனுக்கும் பீமனிடந்தான் பயம். பீமனைக்கொண்டு உலகம் முழுவதையும் வென்று விடலாம் என்று நம்பியிருக்கிறேன், அம்மா. உன் புத்திதான் மாறிவிட்டதா?'' என்றான்.

அதற்குக் குந்தி, ''தர்மா, நான் யோசிக்காமல் இப்படிச் செய்து விடவில்லை. பீமனுக்குப் பதினாயிரம் யானையின் பலம் இருப்பது எனக்குத் தெரியும். இடிம்பனைக் கொல்லும்போது அவன் திறமையை நான் பார்த்திருக்கிறேன். நீ கவலைப்படாதே! பீமன் அரக்கனைக் கொன்று இந்த ஏழைக் குடும்பத்தையும் இந்தக் கிராமத்தையும் காப்பாற்றுவான். அந்தப் புண்ணியம் நமக்குக் கிட்டும்'' என்று பதில் அளித்தாள். தர்மனும் குந்தியின் இளகிய மனத்தைப் பாராட்டிப் பீமனுக்கு விடைகொடுத்தனுப்பினான்.

மறுநாள் காலை, பீமன் பலவித மாமிசம், மோதகங்கள், சித்திரான்னங்கள் இவற்றை உண்டான். குடம் குடமாகத் தயிரைக் குடித்தான். ஒரு வண்டி நிறையத் தயிர்ச்சாதத்தை ஏற்றிக்கொண்டான். இரண்டு கறுப்புக்காளை கட்டிய அந்த வண்டியில் ஏறிக்கொண்டான். கிராம மக்கள் சூழ அரக்கன் இருக்கும் இடத்தை நோக்கிப் புறப்பட்டான். வாத்தியங்களும் முழங்கிக்கொண்டு அவனுடன் சென்றன. கூட வந்தவர்கள் பகன் இருக்கும் இடத்துக்கு வெகு தூரத்திலேயே பயந்து நின்றுவிட்டார்கள். பீமன் தனியாகவே பகன் வாழும் இடத்துக்கு வந்தான். அங்கே ஒரு பெரிய மரம் இருந்தது. அதன் அருகில் உலர்ந்தும் பச்சையுமாக இருந்த கைகள், கால்கள், தலை மயிர், ரத்தம் இவை தென்பட்டன. கொடிய கழுகு முதலிய பறவைகளும் நரிகளும் சூழ்ந்த மயானத்தைவிட மிகவும் பயங்கரமாக இருந்தது அந்த இடம்.

பீமன், 'அரக்கன், வந்தால் வண்டியில் இருக்கும் உணவு முழுவதும் சண்டையிடும்பொழுது சிதறிப் போய்விடும். ஆகவே, அவன் வருவதற்குமுன் முழுவதையுமே சாப்பிட்டு விடுகிறேன்' என்று தீர்மானித்தான். பீமன் மெதுவாக உட்கார்ந்து அந்த உணவைச் சாப்பிட்டுக் கொண்டிருந்தான். கூடவந்தவர்கள் தூரத்திலிருந்து மரத்தின்மேல் ஏறிப் பீமன் உண்பதைப் பார்த்து, ''இவன் என்ன புதிய பகாசுரனாக இருக்கிறானே!'' என்றுக் கூறிக்கொண்டார்கள். பீமன் சாப்பிட்டுக்கொண்டே பகாசுரனை உரக்கக் கூவி அழைத்தான். பயங்கர உருவத்தோடு அரக்கன் அவன்முன் கோபம் பொங்க வந்தான். தனக்காகக் கொண்டுவந்த உணவைப் பீமன் உண்பதைப் பார்த்து, ''யார் இவன், புத்தியில்லாதவன்! எனக்காக வைத்திருப்பதைச் சாப்பிடுகிறானே! யமலோகத்துக்கு விரைவில் போகத்தான் இப்படிச் செய்கிறான்'' என்று பீமன் காதில் விழும்படி சொன்னான். பீமன் அதைச் சட்டை செய்யவில்லை. முன்போலவே சாப்பிட்டுக் கொண்டிருந்தான். அரக்கன் பீமனை நோக்கிக் கைகளைத் தூக்கிக் கொண்டு ஓடிவந்தான். அதையும் சட்டை செய்யவில்லை பீமன். அவன் சாப்பிட்டுக்கொண்டே இருந்தான். அதையும் கவனியாமல் சாப்பாட்டிலேயே பீமன் ஈடுபட்டிருந்தான். அரக்கன் மரத்தைப் பிடுங்கி அடிக்க வந்தபொழுது அதை இடது கையால் பிடித்துக் கொண்டு வலது கையால் சாப்பிட்டுக்கொண்டிருந்தான். பிறகு பீமன் உணவு முழுவதையும் உண்டுவிட்டுக் கைகால்களைக் கழுவிக்கொண்டான். மலைபோல் அசைவற்றுப் பகன்முன் போருக்குத் தயாராக நின்றான். ''வெகு நாட்களாக உன் உடல் ஏராளமான தீனியால் பருத்திருக்கிறது. இதோ அந்த உடலைப் பிசைந்து விடுகிறேன். இன்று முதல் இந்தக் கிராமத்து மக்கள் துன்பம் தீர்ந்து வாழப் போகிறார்கள்'' என்று கூறிக்கொண்டே அரக்கனை நோக்கி ஓடினான். அரக்கனும் ஓடிவந்தான். இருவரும் மோதிக்கொண்டு மல்

யுத்தம் தொடங்கினார்கள். பூமி நடுங்கியது. அவர்களுடைய உடல் பட்டு மரங்கள் கீழே விழுந்தன. ஒருவருக்கு ஒருவர் இடித்துக் கொண்டார்கள். கீழே தள்ளிக் கொண்டார்கள். தரையில் இழுத்துக்கொண்டார்கள். மீண்டும் எழுந்தார்கள். கட்டிக்கொண்டு புரண்டு போரிட்டார்கள். இப்படி வெகுநேரம் போரிட்ட பிறகு அரக்கன் சளைக்கும் சமயம் பார்த்துப் பீமன் அவனைக் காலால் அழுத்திக் கீழே தள்ளினான். அவனை உருட்டி, முதுகில் உட்கார்ந்து வலது கையால் கழுத்தை நெரித்தான். இடது கையால் இடுப்புக்குக் கீழே பிடித்து முறித்தான். பகன் வாயிலிருந்து ரத்தம் கொட்டியது. அவன் உயிர் அறந்து தரையில் கிடந்தான்.

பகன் இறந்தவுடன் அவனுடைய சுற்றத்தார் பீமனிடம் வந்து சரண் புகுந்தார்கள். பீமன் அவர்களைத் தேற்றி, "இனிமேல் மனிதரைக் கொல்லக் கூடாது. அப்படிச் செய்தால் நீங்களும் பகனுடைய நிலையை அடைய நேரும்" என்று கண்டிப்பாகக் கூறி விட்டான். அவர்களும், அவனுக்கு அடங்கி நடப்பதாக உறுதி கொடுத்தார்கள்.

அடிபட்டுச் சிதைந்து கிடக்கும் பகனுடைய உடலைப் பீமன் இழுத்துக்கொண்டு அந்த ஏகசக்ர கிராமத்தின் வாயிலில் கொண்டுவந்து போட்டான். மாடுகளையும் வண்டியையும் அந்தணனிடமே கொண்டு சேர்த்து விட்டான். தாயிடமும் சகோதரரிடமும் நடந்ததைக் கூறினான். எல்லாரும் களிப்புற்றார்கள். மற்றுமுள்ள கிராம மக்கள் இந்தச் செய்தியைக் கேட்டு வியந்து பீமனைக் கொண்டாடிப் போற்றினார்கள்.

பட டைரெக்டர் லட்சணம்

ஜான் ஃபோர்டு என்ற ஸினிமா டைரெக்டரிடம் ஜான் காரடீன் என்பவர் பல சமயம் உழைத்திருக்கிறார். அவர் சொன்னார்: "ஃபோர்டுக்கு ஒரு ஸ்க்ரிப்ட் படிக்கத் தெரியாது; கதையை விளக்கத் தெரியாது; நடிகர் என்ன செய்ய வேண்டும் என்று சொல்லத் தெரியாது."

"அப்படியானால், ஃபோர்டு இத்தனை அரிய படங்களை எப்படிப் பிடித்தார்? இத்தனை அகாடமி பட்டங்களை எப்படிப் பெற்றார்?" என்று யாரோ ஒருவர் கேட்டார்.

"ஏனென்றால், இவை எல்லாவற்றோடும் அவரிடம் ஒரு மேதையும் இருக்கிறது" என்றார் காரடீன்.

—லியனார்டு லயான்ஸ்

புன்சிரிப்பு வைத்தியம்

டாக்டர்: 'எப்போதும் புன்சிரிப்போடிரு; உன் தொல்லையெல்லாம் போய்விடும்' என்று சொன்னேனே. அப்படிச் செய்து பார்த்தாயா?

பெண் டைபிஸ்ட்: செய்து பார்த்தேன், டாக்டர்.

டாக்டர்: பலன் என்ன?

பெண் டைபிஸ்ட்: இதுவரைக்கும் மூன்று தடவை என் எஜமான் என்னைப் பார்த்து, 'சும்மா இளிக்காதே; வேலையைப் பார்' என்று கண்டித்திருக்கிறார். இதுதான் கண்ட பலன்.

—பால் டான்ஃபீல்டு, 'டெய்லி மெயில்'.

ஆகாயக் காவல்

அமெரிக்காவின் தற்காப்பு முஸ்தீப்பு ஜரூராக நடக்கிறது. அதிலே ஓர் அங்கம் இது. இந்த விவரத்தைப் படங்களுடன் உதவியவர்: அமெரிக்க இன்ஃபர்மேஷன் ஸெர்வீஸ், சென்னை.



1. 28 - அடி உயரம் உள்ள ஆண்டென்ன



2. டெக்ஸாஸ் டவர்



3. 'கிரேனை' இயக்குவோர்

கடல் வாழ்க்கை என்றாலே, கொஞ்சம் வீரச் செயல்களும் விநோதங்களும் நிறைந்து தான் இருக்கும். ஐக்கிய அமெரிக்காவின் வடகிழக்குக் கடற்கரைக்கு 110 மைல் தூரத்தில் சில மனிதர்கள் கடலிலே வாழ்ந்துகொண்டு ரேடார் நிலையம் ஒன்றில் வேலை செய்கிறார்கள். அவர்களுடைய வாழ்க்கை இன்னும் ஆச்சரியமானது.

அந்த நிலையத்தை 'மனிதர் அமைத்த தீவு' என்று சொல்லலாம்; அல்லது 'நிலையான கப்பல்' என்று கூறலாம். கப்பல் மாதிரிதான் அதன் ஊழியர்களை ஏற்பாடு செய்திருக்கிறார்கள். ஆயினும், அத்தனை பேரும் விமானப் படையைச் சேர்ந்தவர்கள். மேற்குத் திசையில் அட்லாண்டிக் சமுத்திரத்தைக் கடந்து ஐக்கிய அமெரிக்காவை நோக்கி வரும் விமானங்களைக் கவனித்துக்கொண்டு காவல் புரிவதுதான் அந்த ஊழியர்களின் முக்கியமான வேலை.

எஃகும் கான்கிரீட்டும் கொண்டு பிரம்மாண்டமான மூன்று தூண்களை நட்டிருக்கிறார்கள். அவை நீருக்குமேலே 87-அடி உயரம் நீண்டிருக்கின்றன. அவற்றின் மீதுதான் முக்கோண

வடிவில் இந்த நிலையத்தைக் கட்டியிருக்கிறார்கள். பொதுவாக இதை 'டெக்ஸாஸ் டவர்' என்று குறிப்பிடுகிறார்கள். ஏனென்றால், டெக்ஸாஸ் மாகாணத்தில் எண்ணெய் தோண்டியெடுக்கும் கோபுரங்களைப் போலவே இதுவும் தோற்றம் அளிக்கிறது. சங்கிலித் தொடர் போலப் பல ரேடார் நிலையங்களை ஐக்கிய அமெரிக்காவின் கீழக்கடற்கரை எங்கும் அமைக்கப்போகிறார்கள். அந்தச் சங்கிலித் தொடரில் முதல் முதலாக அமைந்திருப்பது இந்த நிலையம். இதற்குச் சர்க்கார் வைத்திருக்கும் பெயர் 'ஜார்ஜஸ் பாங்க்ஸ் ஏர் ஃபோர்ஸ் ஸ்டேஷன்' என்பதுதான்.

விமானப் பாதைகளையும் கப்பல் பாதைகளையும் விட்டு எங்கேயோ ஒதுக்குப் புறமாக இருக்கும் இந்த நிலையம் அமைந்திருக்கும் முக்கோண வடிவான இடத்தின் ஒவ்வொரு பக்கமும் சுமார் 200 அடி இருக்கும். இந்த விஸ்தீர்ணத்துக்குள்ளே பல ஆட்கள் உழைத்து உண்டு உறங்கி ஓய்வு எடுத்துக்கொண்டு வாழ்கிறார்கள். அவர்களுக்குத் தென்படும் காட்சியெல்லாம் அலை வீசி நுரைத்தெழும் பிரமாண்டமான சமுத்திரந்தான். அலை வந்து மோதுவதால் டவர் சற்று அதிரும்; இந்த அதிர்ச்சி ஒன்றுதான் அவர்களுக்கு ஏற்படும் சலனம். அங்கே இங்கே போய் அவர்கள் வேலை செய்யத் தேவையில்லை; இருக்கும் இடத்திலேயே வேலை காத்திருக்கிறது. கடலிலே தாங்கி உழைக்கும்படியும், மேற்கொண்ட வேலைக்கு உகந்தபடியும் நிலையத்தை அமைத்திருக்கிறார்கள். அதே சமயம், அதில் உழைப்பவர்களுக்கு வேண்டிய சகல சௌகரியமும் செய்து வைத்திருக்கிறார்கள். அவர்கள் வசிக்கும் அறைகள், தரைப் படைத்தளக் குடியிருப்புக்களைவிட விசாலமானவை. பொழுது போக்குவதற்கு ஸினிமா, டெலிவிஷன், புத்தகசாலை, விளையாட்டுக்கள்



4. உப்பு நீரை நல்ல நீராக மாற்றும் 'இவாப்பரேட்டர்' யந்திரம்



5. ப்ளாஸ்டிக் டோம்



6. டவரில் சாப்பாட்டு நேரம்

. ரேடியோ எஞ்சினீர்

முதலிய வசதிகள் இருக்கின்றன; மும்முரமாய்த் தேகாப்பியாசம் செய்யச் சிறிய பயிற்சிக் கூடம் ஒன்று இருக்கிறது.

மாசத்துக்கு ஒரு முறை சமயப் பிரசங்கங்கள் நடக்கின்றன. தரைப் படைத் தளத்தில் உள்ள பாதிரிகள் முறை போட்டுக்கொண்டு ஹெலிகாப்டர் விமானத்தில் வந்து இறங்கி டவரில் சில நாள் தங்கிவிட்டுப் போகிறார்கள். அவர்கள் சமயப் பிரசங்கம் செய்வதோடு, சமய நூல்களை வழங்குகிறார்கள்; சமய சம்பந்தமான ஸினிமா காட்டுகிறார்கள். ஆட்கள் விரும்பினால், அவர்கள் கேட்கும் விஷயங்கள்பற்றி ஆலோசனை சொல்லுகிறார்கள். டவரில் ஆட்கள் மிக்க ஒழுக்கத்தோடும் மனோதிடத்தோடும் வாழ்வதாக இந்தப் பாதிரிகள் கூறுகிறார்கள்.

தொடர்ந்து தனிமையான இடத்தில் வாழ்வதால் சலிப்பு ஏற்படுமே; அதற்குப் பரிகாரமாக ஓர் ஏற்பாடு செய்திருக்கிறார்கள். காப்டன் தொடங்கிச் சமையற்காரன் வரையில் டவரில் உள்ள ஒவ்வோர் ஆளுக்கும் பதிலி ஆள் ஒருவன் தரைப் படைத் தளத்தில் இருப்பான். முப்பது நாளைக்கு ஒரு தரம் இரண்டு ஆட்களும் முறை போட்டு இடம் மாறிக் கொள்வார்கள். சில சமயம் கால நிலை மோசமானாலும் ஒருவன் நோயுற்றாலும் ஒரே ஆளே 80 நாள்வரையில் கூட டவரிலேயே வாழ்வான்.

ரேடார் மூலம் இந்த ஆட்கள் ஒவ்வொரு நாளும் 12-மணி நேரம் ஆகாயத்தை ஆராய்ச்சி (ஸ்கான்) செய்வார்கள். டவரிலே ஒருவரோடொருவர் இணைந்த ஒரு கோஷ்டியாக இவர்கள் வேலை செய்கிறார்கள்.

மூன்று ஆண்டென்னாக்கள் (ட்ரோப் டிஷஸ்) இருக்கின்றன. அவற்றில் ஒன்றைத்தான் முதல் படம் காட்டுகிறது. இது 28 அடி உயரம் உள்ளது. இதில் ஓர் ஆள் வேலை செய்கிறான்;

இங்கே ரேடார் மூலம் கிடைக்கும் விவரங்களை அந்தக் கணத்திலேயே தரைப் படைத் தளத்துக்கு, இது 'ரீலே' செய்து விடுகிறது.

படம் 2 'டெக்ஸாஸ் டவர்'. அதில் உள்ள மூன்று 'டோம்' களும் மூன்று ஆண்டென்னுக்களுக்குப் பாதுகாப்பா யிருக்கின்றன.

வந்த சாமான்களை இறக்கும் கிரேன் ஒன்றை நிர்வகிக்கும் இரண்டு ஸார்ஜண்டுகள் வேலை செய்வதைப் படம்-3 காட்டுகிறது. கிரேனை ஒரு ஸார்ஜண்ட் இயக்குகிறுன். மற்றவன் அதற்கு வேண்டிய மின்சார 'வோல்டேஜ்' கொடுக்கிறுன்.

160-காலன் உப்பு நீரை ஒரே மணி நேரத்தில் நல்ல நீராக மாற்றிவிடும் 'இவாப்பரேட்டர்' யந்திரமே படம்-4.

வரும் விமானம் பறக்கும் உயரத்தைக் கணக்கிடும் ஆண்டென்னு ஓயாமல் வட்டமாய்ச் சுழன்றுகொண்டே யிருக்கிறது. அதை வெயிலும் மழையும் கெடுக்காமல் வைத்திருக்கும் 'ப்ளாஸ்டிக் டோம்' படம்-5.

டவரில் எல்லாரும் ஆவலாய் எதிர்பார்க்கும் நேரம் ஒன்று உண்டு. அதுதான் சாப்பாட்டு வேளை. இந்தச் சாப்பாடு நடக்கும் காட்சிதான் படம்-6. நல்ல சாப்பாடு நாள் ஒன்றுக்கு நாலு வேளை வயிறு நிறைய வட்டிக்கிறுர்கள்.

நிலையத்தில் உள்ள சகல ரேடியோ கருவிகளையும் பத்திரமாய்ப் பார்த்துக்கொள்ள ஓர் எஞ்சினீர் இருக்கிறுர். படம்-7-இல் அவர் வேலை செய்கிறுர்.

படம் வரையும் 'ப்ளாட்டிங் போர்டு' ஒன்று இருக்கிறது. அது சுத்தமான கண்ணுடிபோல் மறு புறத்தில் உள்ளது துலங்கும்படி அமைந்திருக்கும். இங்கே இரண்டு பேர் வேலை செய்வதை 8-ஆம் படத்தில் காண்கிறேம்.வேறேர் அறையில் ரேடாரில் ஒருவன் வேலை செய்வான். தூரத்திலே வரும் விமானத்தின் பாதை விவரங்



8. விமானப் பாதை புள்ளி புள்ளியாக விழுகிறது



9. ஓய்ந்த வேளையில் பிங்பாங்



10. சாமான் வந்த ஹெலிகாப்டர்



11. கடல் அலையின் அசைவை அளக்கும் ஆபீஸர்



12ஓ ரேடார்

13. சங்கீதத்தோடு தெய்வப் பிரார்த்தனை

களை அவன், இந்த இருவரில் இடது பக்கம் உள்ளவனுக்கு டெலிபோன் மூலம் தெரிவிக்கிறான். வலது புறம் உள்ளவன் உடனே அதை இடமிருந்து வலமாக மாற்றிப் புள்ளி புள்ளியாகக் குறிக்கிறான். வெளியிலிருந்து பார்ப்பவருக்கோ அது சரியானபடி-அதாவது வலமிருந்து இடமாகவே-புலப்படும். இரண்டு பேர் 'பிங் பாங்' என்ற டேபிள் டென்னிஸ் பந்தாட்டம் ஆடுவதைப் படம்-9-இல் காணலாம்.

டவரிலே 6 ஆபீஸர்களும் 54 ஆட்களும் இருக்கிறார்கள். அவர்களுக்கெல்லாம் வேண்டிய சாமான்கள் ஹெலிகாப்டரில் வந்து இறங்கியிருப்பதைப் படம்-10 காட்டுகிறது. கனத்த சாமான்களாயிருந்தால் படகில்தான் வந்து இறங்கும்.

கடல் அலையின் அசைவை அளப்பதும் தற்காப்பு ஆராய்ச்சியிலே ஒரு முக்கியமான வேலை. அதைச் செய்யும் நிபுணருக்கு 'ஹைட்ரோக்ராஃபர்' என்று பெயர். அப்படிப்பட்ட ஓர் அதிகாரி தம் கருவியைக் கவனிக்கும் காட்சி படம்-11.

கிழக்கே டவருக்கு 100 மைல் தூரத்தில் ஒரு கப்பலில் சிறிய ரேடார் கருவி ஒன்று இருக்கிறது. அதில் வேலை செய்கிறவனைக் காட்டுகிறது 12-ஆம் படம். ஏதோ ஒரு விமானம் வருவதை இவனுடைய ரேடாரில் இவன் காண்கிறான். அதை உடனே டவருக்குத் தெரிவிக்கிறான். டவர் ரேடாரும் விமானத்தைக் கண்டுபிடிக்கிறது. இரண்டு விவரங்களையும் தாமதமில்லாமல் தரைப்படைத் தளத்துக்குச் சொல்லி விடுகிறார்கள்.

சாப்பாட்டுக் கூடத்தில் பல சமயத்தினரும் சங்கீதத்தோடு தெய்வப் பிரார்த்தனை நடத்துவதைக் கடைசிப் படத்தில் காணலாம். முன்புறமுள்ள 'ஆர்கன்' என்ற சிறிய வாத்தியம் சங்கீதம் முழங்குகிறது.

1857-இல் நடந்த முதல் இந்திய சுதந்தரப் போரில் இணையற்ற வீரம் காட்டி உயிரைத் துறந்த வீரப் பெண்-

ஜான்ஸி ராணி

யமுனா சேவடே

லட்சுமிபாயின் தந்தையான மோரோபந்த் தாம்பே, பேஷ்வாக்களிடம் காரியஸ்தராக இருந்தார். ஆயினும், பேஷ்வாக்களின் பிள்ளைகளோடு லட்சுமிபாயும் பிரம்மாவர்த்தத்தில் வளர்ந்தாள். அவள் நானா சாகப், ராவ் சாகப் முதலியவர்களோடு துப்பாக்கியைக் குறிவைத்துச் சுடவும், வாள் பயிற்சியும் குதிரைச் சவாரி செய்யவும் கற்றுக்கொண்டாள். அவளுடைய எழிலைக் கவனித்த பாஜி ராவ் அவளை 'அழகி' என்றே அழைத்து வந்தார். ஜான்ஸி அரசரான கங்காதர ராவ் நேவாள்கர் என்பவரோடு அவளுக்குக் கல்யாணத்தை முடித்து வைத்தவரும் அவரே.

ஜான்ஸிக்குச் சென்றதும் லட்சுமிபாய் தன் இனிய சுபாவத்தினால் யாவரையும் வசப்படுத்திக் கொண்டாள். அங்கு வழங்கிய புந்தேல்கண்டி மொழியை அவள் நன்கு பயின்றாள். ஜான்ஸிப் பெண்கள் முகத்திரை இடுபவர்கள் ஆதலின் வெளியே செல்ல மாட்டார்கள். ஆனால் லட்சுமிபாய் தன் அரண்மனைக்குள்ளேயே போர்க்கலையை விடாது பயின்று வந்தாள். மங்கையர் நல்ல உடலழகைப் பெறுவதுடன் நில்லாமல் படைக்கலப் பயிற்சியும் பெறவேண்டுவது அவசியமென்று அவள் ஊர்ப் பெண்களிடம் கூறினாள். எல்லாப் பெண்மணிகளையும் மஞ்சள் குங்குமத்துக்கு அழைத்து, அப்பொழுது அவள் தன் கொள்கைகளை விவரிப்பாள். இதனால் பல பெண்கள் அவளுக்கு மாணவிகள் ஆனார்கள்.

கங்காதர ராவ் எந்த வகையில் பார்த்தாலும் லட்சுமிபாய்க்குப் பொருத்தமானவர் அல்ல. இருவருக்கும் வயதில் மிகுந்த வேற்றுமை இருந்தது. அரசி மென்மையான உள்ளம் உடையவள்; கங்காதர ராவோ கோபத்தில் துர்வாசர். அரசி தூய நல்லொழுக்கம் வாய்ந்தவள்; கங்காதர ராவோ நாடக சாலைகளில் ஈடுபட்டவர். ஆங்கிலேயர் கொடுக்கும் பிச்சையை ஏற்று மகிழ்பவர் கங்காதரர்; அரசியோ தனியாட்சி என்

காப்பிரைட்: ஸ்திரீ (மராட்டி: ஜூன் 1957), கிர்லோஸ்கர்வாடி, ஸாதாரா ஜில்லா.

னும் பரந்த கனவைக் காண் பவள்.

அவர் நாடகசாலைகளில் ஈடுபடுவதுபற்றியும் ஆங்கிலேயரை முகஸ்துதி செய்வதுபற்றியும் அவள் சில சமயம் கிண்டலாகவும் வேடிக்கையாகவும் பேசுவது உண்டு. சில சமயம் அவரைக் கடுமையாக எதிர்ப்பதும் உண்டு. 1853-ஆம் ஆண்டின் முடிவில் கங்காதர ராவ் நோய்வாய்ப்பட்டார். தமக்குப் பிறந்த குழந்தை இறந்துவிட்டதனால், ஆட்சிக்கு வாரிசு வேண்டுமென்று அவர் தமது குடும்பத்திலேயே தாமோதர ராவை முறைப்படி சுவீகாரம் செய்துகொண்டார். மேஜர் எல்லிஸ் அவருக்கு மிகவும் வேண்டியவராக இருந்தார். அரசியின் திறமையைக் கங்காதர ராவ் நன்கு அறிந்தவராதலால், பையனுக்கு வயதாகும் வரையில் அவளே ராணியாக இருந்து அரசு செலுத்த வேண்டுமென்றும், ஆங்கிலேயர் அவளுக்கு எவ்வகைத் தொந்தரவும் கொடுக்கலாகாதென்றும் எல்லிஸிடம் வாக்குறுதி பெற்றுக்கொண்டார். இதற்குப் பின்பு அவர் அமைதியாக இறந்தார்.

ஜான்ஸி ஆட்சியைப்பற்றிக் கங்காதர ராவ் வகுத்த திட்டத்தின் நகலை, எல்லிஸ், பொலிடிகல் ஏஜெண்டான மால்கமுக்கு அனுப்பினார். மால்கம் அதைக் கவர்னர் ஜெனரலான லார்டு டல்ஹௌஸிக்கு அனுப்பினார். டல்ஹௌஸி அப்பொழுது அயோத்தியில் சுற்றுப் பயணம் செய்துகொண்டிருந்ததனால் மூன்று நான்கு மாதங்கள் வரையில் அவரிடமிருந்து பதிலே வரவில்லை. ஜான்ஸி அரசவையில் முக்கியஸ்தர்கள் மிகுந்த கவலையில் ஆழ்ந்தார்கள். ஏனெனில், டல்ஹௌஸி இந்தியாவில் கால்வைத்த நாளிலிருந்தே அரியணைகள் அனைத்தையும் கவிழ்ப்பதில் முனைந்திருந்தார். புனா, ஸாதாரா, நாக்பூர், அயோத்தி, பஞ்சாப் - இப்படி ஒன்றன்பின் ஒன்றாகப் பல ராஜ்யங்களை அழித்து, இந்திய தேசப்படத்தைச் சிவப்பு நிறத்தால் தீட்ட அவர் கங்கணம் கட்டியிருந்தார். புந்தேல்கண்டில் எஞ்சியிருந்த ஜான்ஸி சம்ஸ்தானத்தை விழுங்கக் கூடிய இந்தச் சந்தர்ப்பம் வந்திருக்கும்போது அவர் எப்படி அதைக் கைநழுவ விடுவார்? நாக்புரில் ரகுஜி போன்ஸ்லே சுவீகாரம் எடுத்துக்கொள்ளவில்லை என்பதற்காக அந்த நாட்டைக் கம்பெனி ஆட்சியில் சேர்த்துக்கொண்டார். ஜான்ஸி ராணி சுவீகாரம் எடுத்துக் கொண்டாள் என்பதற்காக இதையும் சேர்த்துக்கொள்ளத் தடை என்ன? வாக்குறுதி, நீதி, உடன்படிக்கை முதலியவற்றுக்கெல்லாம் அவர் எவ்வகை மதிப்பும் தருவதில்லை. இந்த நிலையில் ஜான்ஸி ஆட்சி எப்படி மாறுமோ என்று மக்கள் திகில்கொண்டிருந்தார்கள்.

டல்ஹௌஸி, ஜான்ஸி ராணியின் சுவீகாரத்தை ரத்துச் செய்து அந்த நாட்டைக் கம்பெனியோடு சேர்க்க உத்தரவு பிறப்பித்து, அந்த உத்தரவை மால்கமுக்கு அனுப்பினார். ஜான்ஸி அரசவையில் அந்த உத்தரவை அறிவிக்கும் பொறுப்பு, மேஜர் எல்லிஸிடம் வந்து சேர்ந்தது. அரசியிடம் மக்களுக்கு இருந்த அன்பு அவருக்குத் தெரியும். உத்தரவை மிகவும் ரகசியமாக வைத்துக்கொண்டு அவர் அரசவையில் புகுந்தார். ஆங்கிலேயரிடமிருந்து என்ன பதில் வருகிறதோ என்று எல்லாருமே ஆவலுடன் இருந்தார்கள். குலாம் கௌஸ்கான் என்பவன், அதைக் கேட்டதும் மரியாதைக் குண்டு போடுவதற்கும் தயாராக இருந்தான். அண்மையில்தான் விதவையான பதினெட்டு வயதினளான இளம் அரசி, அரசவையில் திரை மறைவில் அமர்ந்திருந்தாள். 'ஜான்ஸி ராஜ்யத்தைக் கம்பெனி ஆட்சியில் சேர்த்துக் கொண்டு, அரசிக்கு மாதம் ஐயாயிரம் ரூபாய் பென்ஷன் கொடுத்திருப்பதாக'க் கவர்னர் ஜெனரல் பிறப்பித்த உத்தரவை எல்லிஸ் படித்துக் காண்பித்தார். மக்கள் தம் காதுகளை நம்பவில்லை. எங்கும் மயான அமைதி பரவியிருந்தது. அரசிக்குச் சினம் பொங்கியது; ''நான் என் ஜான்ஸியைக் கொடுக்கமாட்டேன்!'' என்ற அவளுடைய அமுதச் சொற்கள் அந்தப் பயங்கர அமைதியைக் கலைத்தன;

அடுத்த கணமே எல்லிஸ் துரை அங்கிருந்து விர்ரென நழுவி விட்டார்.

இதே உத்தரவை இதுவரை எத்தனையோ அரசர்களும் பேரரசர்களும் கேட்டிருக்கிருர்கள். அவர்கள் இதைக் கேட்டுக் கை பிசைந்து கொண்டு சும்மா உட்காருவதைத் தவிர வேறு ஒன்றும் செய்ய முடியவில்லை. ஆனல் ஜான்ஸி ராணியா அப்படி உட்காருகிறவள்? அரண்மனைக்குள் வந்ததும் அவளுடைய தோழிகள் அழலானர்கள். அப்பொழுது அரசி, ''வீணுக அழுது உங்கள் சக்தியை இழக்காதீர்கள். நம்முடைய அடுத்த வழி இன்னது தான் என்பது தீர்மானமாகி விட்டது. ராஜ்யம் போனல் போகட்டும். நாம் நிற்பதற்கு ஊசியளவு நிலம் இல்லாமற் போனலும் போகட்டும். நமது லட்சிய வழியிலிருந்து நாம் சிறிதும் விலகலாகாது'' என்று அவர்களுக்கு ஆறுதல் கூறினள்.

ஆங்கிலேயரிடம் நட்போடு இருப்பது தவிர வேறு வழி இல்லை. ஆதலால் மேலுக்கு அவர்களிடம் அரசி சுமுகமாகவே இருக்கலானள். அவள் பென்ஷன் பெற ஒப்புக் கொண்டாள். ஜான்ஸி ராஜ்யத்தின் சார்பாக இங்கிலாந்துக்கு முறையீடுகள் ஒரு புறம் சென்ற வண்ணமாக இருந்தன; மறுபுறம் ஆங்கிலேயரை எதிர்க்கும் ரகசியத் திட்டத்திலும் அவள் பங்கு கொண்டாள். தன் சிறுபிராயத்துத் தோழர்களான நான சாகப், தாத்யா டோபே ஆகியவர்களுடன் அவள் அந்தத் திட்டத்தை வகுக்கலானள்.

நானவும் தாத்யாவும் அடிக்கடி ஜான்ஸிக்கு வந்து போனர்கள். ஹைதராபாத் நிஜாம் முதல் டில்லி பாதுஷா வரையில் யார் எந்த அளவுக்குப் புரட்சிப் போரில் உதவி செய்வார்கள் என்பதை அறிவதற்கு ஒரு வேவுப் படை இந்தியா முழுவதும் திரிந்து வேலை செய்து வந்தது. பொது மக்களுக்கு மட்டுமன்றி ஆங்கிலப்படை முகாம்களுக்கும் நாட்டின் புரட்சிச் செய்தியைப் பரப்பிய பக்கீர்களும் சாமியார்களும் எங்கும் உலாவி வந்தார்கள். மக்களின் ஆத்திரம் மிகுந்தது. புரட்சிக்காகக் குறிப்பிட்டிருந்த நாள் நெருங்குமுன்பே, மங்கல பாண்டே முகூர்த்தத்தைத் தொடங்கிவிட்டார். பராக்பூர், பிரோஸ்புர், கான்புர், மீரட் எங்கும் புரட்சியொலி எழுந்தது. ஜான்ஸி அரசி தற்காப்புக்காகச் சேனைக்கு ஆள் திரட்ட அநுமதி கோரினள்; ஆங்கிலேயர் அதை அநுமதித்தனர். புரட்சித் தலைவர்களின் உத்தரவுக்குக் கீழ்ப்படியாமல், ஜான்ஸியிலும் முன்னதாகவே எழுச்சி ஏற்பட்டது. ''வளம் ஆண்டவனுடையது. நாடு பாதுஷாவினுடையது. ஆட்சி ஜான்ஸி ராணியினுடையது!'' என்று கோஷித்துக்கொண்டு புரட்சி வீரர்கள் டில்லியை நோக்கிப் புறப்பட்டனர்.

ஜான்ஸியைக் காப்பவர் யாரும் இல்லாத நிலையில் அரசி அதன் ஆட்சியை ஏற்றுக்கொண்டாள். ''புரட்சியாளர்களால் ஜான்ஸிக்குத் தீங்கு நேரக்கூடாது என்பதற்காக, ஆங்கிலேயரின் சார்பில் இந்த நாட்டின் ஆட்சியை நான் ஏற்றுக் கொள்கிறேன்'' என்று அவள் தந்திரமாக, ஜபல்புர் கமிஷனருக்குக் கடிதம் எழுதினள். மகாராஷ்டிர தேசீயச் சின்னமான காவிக் கொடியுடன் யூனியன் ஜாக்கையும் அவள் பறக்கவிட்டாள். இதே சமயத்தில் சதாசிவ ராவ் நேவாள்கர் தன் சைனியத்தோடு ஜான்ஸிமேல் படையெடுத்து வந்து ஆட்சி தனக்கே உரியது என்ருன். அரசி அவனை ஓட ஓட விரட்டியடித்தாள். ஜான்ஸி ராஜ்யம் ஓர் இளம்பெண்ணின் ஆதீனத்தில் இருப்பதனல் அதை எளிதில் கைப்பற்றிவிடலாம் என்று கருதி ஓர்ச்சா திவான் நதேகான் என்பவன் இருபதினயிரம் படைவீரர்களுடன் ஜான்ஸியைத் தாக்கினன். அரசியின் படை அவனை எதிர்த்துத் தொமிசம் செய்தது. படைக்கலங்களைப் போட்டுவிட்டு அவன் வந்த வழியே ஓடித் தப்பித்தால் போதும் என்று ஆகிவிட்டது!

ஜான்ஸிக்கு அக்கம் பக்கத்தில் கொள்ளைக் கூட்டத்தினர் கும்மாளம் அடிக்கலானர்கள். அரசி அந்தக்

கூட்டத்தினரின் தலைவனான ஸாகர் சிங் என்பவனைப் பிடிக்கச் செய்து அவனைக் கடுமையாகத் தண்டித்தாள். தன் சேனையை ஒழுங்கு படுத்தி ஜான்ஸியிலேயே வெடி குண்டு செய்யும் தொழிற்சாலையை ஏற்படுத்தினாள். புதிய பீரங்கிகளைச் செய்வித்தாள். பெண்கள் துப்பாக்கி சுடவும் குண்டு வீசவும் கற்றுக்கொள்ளலாயினர். ஜான்ஸி ராணி ஆண் வேஷத்தில் அரசவைக்குச் செல்வாள். மக்களின் வழக்குகளைத் திறமையாகத் தீர்ப்பாள். நாடு முழுவதும் அவளைத் தெய்வமாகக் கொண்டாடியது. ஆனால் இந்த அமைதி பத்து மாதங்களுக்கு மேல் இல்லை.

புரட்சியாளர்களின் கையிலிருந்த இடங்களை மீண்டும் பெறுவதற்கு ஆங்கிலேயர் ஒரு போர்த் திட்டம் வகுத்தனர். அதன்படி ஸர் ஹ்யூ ரோஸ், மார்ச் மாதம் 23-ஆம் தேதி ஜான்ஸிமீது படையெடுத்தான். பம்பாய், சென்னை, ஹைதராபாத் ஆகிய நகரங்களில் இருந்த படைகள் அவனுடைய உதவிக்கு வந்தன. அரசியும் போருக்கு ஆயத்தங்கள் செய்தாள். தொலைநோக்குக் கருவியால் இந்த ஆயத்தங்களைக் கண்ட ஹ்யூ ரோஸ், "இதென்ன! பெண்கள் எதிரணி வகுத்து, வெடிகுண்டுகளைக் கொண்டு வருகிறார்களே!" என்று கூவினான். அரசிக்காக ஜான்ஸி மக்கள் அனைவரும் உயிரையும் கொடுத்துப் போராடினார்கள்.

கால்பியில் இருந்த பேஷ்வாக்களிடம் அரசி படையுதவி கேட்டிருந்தாள். ஆனால் அந்தப் படை வர நாளாயிற்று. இதற்கு மாறாக, ஹ்யூ ரோஸிடம் நீண்ட பீரங்கிகளும், கட்டுப்பாடான சேனையும், நவீனப் போர்க் கருவிகளும் நிறைய இருந்தன. ஆயினும் மார்ச் 31-ஆம் தேதி வரையில் அவனால் ஒன்றும் செய்ய முடியவில்லை. கால்பியிலிருந்து இருபத்திரண்டாயிரம் படைவீரர்களுடன் தாத்யா டோபே வந்தான்; ஆனால் ஆங்கிலப் பீரங்கிகள் நெருப்பைக் கக்கிய போது அவனுடைய சைனியம் ஓட ஆரம்பித்தது. போர்க்கருவிகளை அங்கேயே போட்டு அவன் ஓட்டம் பிடித்தான். ஆங்கிலேயருக்கு இது நன்மை யாயிற்று. ஜான்ஸி ராணி எந்தப் படையுதவியை நம்பி இவ்வளவு நாள் தாக்குப் பிடித்தாளோ அந்தப் படையின் கதி இப்படி ஆயிற்று. இனி அவள் உதவிக்கு யார் இருக்கிறார்கள்? ஆயினும், அவள் துணிவை இழக்கவில்லை. "பேஷ்வாவை நம்பியா நாம் இதுவரை இடுக்கண்களுக்கு ஈடு கொடுத்தோம்? இதுவரையில் உயிருக்குத் துணிந்து போராடியது போலவே இனியும் எதிரியைத் தாக்குங்கள்" என்று அவள் மக்களிடம் கூறினாள். கோட்டை, கொத்தளம், மாடம், வீடு ஆகிய எல்லா இடங்களிலிருந்தும் தீ மழையாகப் பொழிந்து ஆங்கிலேயரைத் தாக்கியது. இறுதியில் ஒரு நீசன் நம்பிக்கைத் துரோகம் செய்து, தெற்கு வாயிலை ஆங்கிலேயருக்கு எளிதில் திறந்துவிட்டான்.

ஆங்கிலப் படைவீரர்கள் குபுகுபு வென்று உள்ளே புகுந்தனர். எங்கும் குண்டுவீச்சுகள்; ரத்தம் ஆறாகப் பெருகியது. எதிரிகள் கொள்ளையிட்டும் தீயிட்டும் நாட்டை நாசமாக்கினர். தன் அன்பு நாட்டின் இந்த நிலையைக் கண்ட அரசி கண்ணீர் பெருக்கி அழுதாள். ஆனால் அவளுக்கு அழப் பொழுது ஏது? அவள் ஆண்வேஷம் தரித்து ஆயுதம் தாங்கி, தாமோதரனை முதுகில் கட்டிக்கொண்டு புறப்பட்டாள். அங்கங்கே காவலாக இருந்த ஆங்கிலேயரிடம் தப்பி, இரவோடு இரவாக எல்லாச் சேனைகளின் சூழலையும் கடந்து வந்து, குதிரையைத் தட்டிவிட்டாள். லெப்டினண்ட் போகர் அவளைத் தொடர்ந்து வந்தான். இருவருக்கும் போர் நடந்தது. அரசி போகரை வெட்டி வீழ்த்தினாள். அவன் குதிரையின் முதுகிலிருந்து தரையில் சாய்ந்தான். அவனுடைய சேனை இதைக் கண்டு பயந்து ஓடிவிட்டது. அரசி சௌக்கியமாகக் கால்பிக்குப் போய்ச் சேர்ந்தாள்.

ஜான்ஸி வீழ்ந்தபின்பும் அரசியின் சுயராஜ்ய முயற்சி தளரவில்லை. மீண்டும் பேஷ்வாவின் சேனையைத் திரட்டிக்கொண்டு

அவள் குச்காம்மீது படையெடுத்தாள். ஆனால் பேஷ்வாப் படை வீரர்களிடம் ஒழுங்கு இல்லை. ஒவ்வொருவனும் தன் விருப்பப்படி நடந்துகொள்வான். உயிரைக் காத்துக்கொண்டே போராடத்தான் அவர்கள் முயன்றார்கள். இதன் பயனாகப் பேஷ்வாவின் படை தோற்று, தாத்யாவும் அரசியும் மிகுந்த பாடுபட்டு அந்தச் சேனையைக் கால்பிவரை அழைத்துச் சென்றார்கள். ராவ் சாகப் பேஷ்வா பரந்த மனப்பான்மையுள்ளவன்; ஆயினும் திடநோக்கம் உள்ளவனல்ல. கால்பிக்குத் திரும்பிவந்த வீரர்கள் தங்கள் தோல்வியைப்பற்றிக் கூறாமல், 'எவ்வளவு சாதுரியமாக நாங்கள் தப்பிவந்தோம், தெரியுமா?' என்று பேஷ்வாவிடம் வர்ணிக்கலானார்கள். அரசிக்கு இதைக் கண்டு மிகுந்த துயரம் உண்டாயிற்று.

அவள் தன் இருக்கையினின்று எழுந்து, இடுப்பிலிருந்து வாளை எடுத்துப் பேஷ்வாவின் எதிரில் வைத்து, ''உங்கள் முன்னோர்கள் இந்த வாளை எங்கள் முன்னோர்களுக்கு வீரப் பரிசாக அளித்தார்கள். இன்றுவரைக்கும் அது பயன்பட்டது; இனித் துருப் பிடிப்பதைவிட அதற்கு வேலை இல்லை. எனவே, இதை நீங்கள் திரும்பிப் பெற்றுக்கொள்ளுங்கள்'' என்றாள்.

அவையில் இருந்தவர்கள் அனைவரும் திகைத்துவிட்டனர். ராவ் சாகப் அந்த வாளை அரசியினிடமே திரும்பக் கொடுத்து, ''ஆங்கிலேயரை எதிர்த்துத் தாங்கள் ஜான்ஸியைக் காத்த வீரத்தையும் துணிவையும் நாங்கள் போற்றுகிறோம். நீங்கள் வகுக்கும் திட்டத்தை நாங்கள் தலைமேல் ஏற்றுக்கொள்கிறோம். சுயராஜ்யத்துக்காக நீங்கள் எடுத்துக்கொண்ட பிரதிக்ஞை நிறைவேற வேண்டும்'' என்றார்.

அரசி வாளைப் பெற்றுக் கொண்டு, ''வீரத்தில் நாம் ஆங்கிலேயரைவிடச் சிறந்தவர்கள். ஆனால் ஒழுங்கும் கட்டுப்பாடுமின்றி வீரம் வீணாகிறது. சேனையில் சரியான ஒழுங்கு இல்லையேல் அனைத்தும் வீண்'' என்று கூறினாள்.

அரசி போட்ட திட்டப்படியே போர்த் தளங்கள் அமைந்தன. ஆயினும் மீண்டும் யாவரும் ராவ் சாகபைத் தங்கள் படைத்தலைவராக்கி, அழியா இழிவைத் தேடிக்கொண்டனர். ஸர் ஹ்யூ ரோஸ் கால்பியைத் தாக்கினான். அரசி முழு வீரத்தோடு போரிட்டுங்கூடப் பேஷ்வாவின் சேனை தோற்றது. கால்பி வீழ்ந்தது. போர்க்கருவிகளைப் போட்டுவிட்டுப் புரட்சித் தலைவர்கள் ஓடவேண்டியதாயிற்று. ராவ் சாகபும் லட்சுமிபாயும் முன்னமே கோபாலபுருக்குப் போய் விட்டார்கள். அடுத்தபடி என்ன செய்வது என்ற கேள்வி எழுந்தது. இருந்த படைப்பலமோ மிகவும் குறைவு. குவாலியர் கோட்டையைப் பிடித்துக்கொண்டு அங்கிருந்து ஆங்கிலேயரை எதிர்க்க வேண்டும் என்று அரசி திட்டம் வகுத்தாள். இது மிகவும் துணிச்சலான திட்டம். ஏனெனில், குவாலியர் அரசனான ஜயாஜி சிந்தே என்பவன் ஆங்கிலேயருக்குக் கையாள். சிந்தேயின் படையைத் தன் பக்கம் திருப்ப முடியுமா என்று பார்ப்பதற்காக, அரசியின் உத்தரவினால் தாத்யா டோபே குவாலியருக்குச் சென்று, அந்தச் செயலை நிறைவேற்றிக்கொண்டு வந்தான்.

''நமது பழைய உறவை நினைவில் கொண்டு, சுயராஜ்யம் நிறுவும் செயலில் எமக்கு உதவுங்கள்'' என்று பேஷ்வா, சிந்தேக்குக் கடிதம் எழுதினார். அந்தக் கடிதம் பயன்படாமல், ஜயாஜி பெரும் படையோடு பேஷ்வாவைத் தாக்க வந்தான். நாட்டுத் துரோகியான சிந்தேயைக் கண்டதும் அரசிக்குச் சினம் பொங்கியது. அவன்மீது அவள் கோபத்தோடு பாய்ந்தாள். அவளுடைய காளியுருவத்தைக் கண்ட குவாலியர் அரசன் வெலவெலத்து ஓடிப்போய் ஆக்ராவில் ஆங்கிலேயரைப் புகலடைந்தான். குவாலியர் படை, பேஷ்வாப் படையை எதிர்க்கவில்லை. குவாலியரில் இருந்த படை, கோட்டை, பொக்கிஷம், போர்க்

கருவிகள் உட்பட அந்த நாடு முழுவதும் புரட்சிக்காரர் வசமாயிற்று. புரட்சிப் போரில் கிடைத்த மிகப் பெரிய வெற்றி இது. ஆனால் பேஷ்வா இதைச் சரியாகப் பயன்படுத்திக்கொள்ளவில்லை. ஜூன் 3-ஆம் தேதி ராவ் சாகப் குவாலியரில் ராஜ்யாபிஷேகம் செய்து கொண்டார். படைவீரர்களின் கும்மாளத்தைச் சொல்லி முடியாது. அரசி எவ்வளவோ அறிவுரை கூறியும் யார் செவியிலும் ஏறவில்லை.

குவாலியர் புரட்சியாளர்களின் வசமான செய்தி கேட்டு, ஸர் ஹ்யூ ரோஸ் அதிர்ந்து போய் விட்டான். ஜான்ஸி, குச்காம், கால்பி ஆகிய இடங்களில் வரிசையாகத் தோற்றபிறகும், ஜான்ஸி ராணியைத் தவிர வேறு யாரும் இவ்வளவு துணிவாகக் குவாலியரைக் கைப்பற்றியிருக்க முடியாது என்பதை அவன் உணர்ந்தான். அரசியை வீழ்த்தும் கருத்துடன் அவன் உடனே குவாலியரை நோக்கிச் சென்றான். அவன் வரும் செய்தி எட்டியதும் பேஷ்வாவின் வெற்றி வெறி தணிந்தது. இப்போதுதான் யாவருக்கும் அரசியின் நினைவு வந்தது.

அரசி போருக்குத் திட்டம் வகுத்தாள். ''என் மெய் பொருள் ஆவியை ஈந்து என் கடமையை ஆற்றப் போகிறேன். நீங்கள் உங்களைக் காத்துக்கொள்ளுங்கள்!'' என்று கூறி அவள் போர்க்களத்துக்குப் புறப்பட்டாள்.

லட்சுமிபாய் தினமும் கீதை படிப்பாள். அதில் கூறிய நிஷ்காம கர்மயோகத்தை அவள் வாழ்வில் கடைப்பிடித்து வந்தாள். ஆங்கிலேயர் முற்றுகையிட்டதை அறிந்ததுமே அவள் வேகமாகப் போர்க்களத்துக்கு வந்தாள். ஸர் ஹ்யூ ரோஸ், ஜயாஜி சிந்தேயை முன்னால் நிறுத்தினான். அவனுடைய தந்திரம் பலித்தது. சிந்தேயைக் கண்டதுமே புரட்சிப் படையிலிருந்த வீரர்களில் பாதிக்கு மேற்பட்டவர் ஆங்கிலேயரோடு கலந்து கொண்டார்கள். அப்போதும் தளராமல், அரசி மின்னல்போலப் போர்க்களத்தில் மிளிர்ந்தாள். இருபத்திரண்டு வயதுள்ள அந்த இளம்பெண்ணின் கையால் மாய்ந்த எதிரிகளுக்குக் கணக்கே இல்லை. அவளுடைய வீரத்தைக் கண்டு வியந்த ஸர் ஹ்யூரோஸ், ''She was the bravest of all'' (அனைவரினும் வீரம் மிகுந்தவளாக அவள் விளங்கினாள்) என்று மனமாரப் போற்றினான்.

தன் படைவலிமை குறைந்து கொண்டே வந்தபோதும் அரசி பின்வாங்கவில்லை. புரட்சியாளரின் பீரங்கிகள் தணிந்துவிட்டன. ஆங்கிலச் சேனை நாற்புறமும் குவிந்து வந்தது. பத்துப் பன்னிரண்டு குதிரை வீரர்களும் இரண்டு தோழியருமே அவளுடன் எஞ்சியிருந்தார்கள். அதுவரைக்கும் அவள் தளராமல் போரிட்டாள். எதிரியின் சூழலைக் கடந்து செல்வதற்காக அவள் குதிரையை மிகவும் வேகமாகத் தட்டி விட்டாள்.

வழியில் சோணரேகை என்ற வாய்க்கால் வந்தது. ஒரே தாண்டில் அதைக் கடக்க அவள் விரும்பியபொழுது, குதிரை அங்கேயே சோர்ந்து வட்டமிட லாயிற்று. இதற்குள் ஆங்கில வீரர்கள் பலர் அவளை அணுகினார்கள். அவள் தன்னந்தனியே அவர்கள் யாவரின் தலையையும் சீவித் தள்ளினாள். இதற்குள் ஒருவன் அவள் மண்டையைத் தாக்கினான். வலப்பக்கத்து மண்டையும் வலக் கண்ணும் சிதறித் தொங்கியபொழுது அவள் மார்பில் மற்றோர் அடி விழுந்தது. அந்த நிலையிலும், தன்னைத் தாக்கிய ஆங்கிலேயனை அவள் வெட்டி வீழ்த்தினாள். அவளிடம் அசையாத சிரத்தை கொண்டிருந்த அவளுடைய வீரர்கள், ரத்தத்தில் தோய்ந்த நிலையிலேயே அவள் உடலை, அருகில் இருந்த பாபா கங்காதாஸ் என்ற சாமியாரின் குடிலுக்கு எடுத்துச் சென்றார்கள். பாபாஜி அவளுக்குத் தண்ணீர் கொடுத்தார். வாயில் கங்கா ஜலத்தையும் ஊற்றினார்.

வாழ்வின் கடைசிக் கணம் வரையில் பயனை எதிர்பாராமல் செயலாற்றிய அந்த வீரப் பெண், அழியாப் புகழ் பெற்று வீர சொர்க்கத்தை எய்தினாள்.

பெரிய பெரிய கம்பெனிகளையே திணற அடிக்கின்றன இந்தச் சிறு பிராணிகள்!

மனிதனை மிஞ்சும் மரங்கொத்தி

பீட்டர் மிட்செல்

ஐக்கிய அமெரிக்காவில் அணில்களும் மரங்கொத்திகளும் மின்சாரக் கம்பம், கேபிள் கம்பிகள் இவற்றைப் பாழ்படுத்துவதால் லட்சக் கணக்கான டாலர்கள் செலவாகின்றன. இந்தப் பெருந் தொல்லைக்கு யாராலும் - காட்டில் வாழ்ந்து பழகியவர்கள், கேபிள் கம்பெனி எஞ்சினீயர், உத்தியோகஸ்தர் இப்படி எவராலும் - ஒரு பரிகாரமும் செய்ய முடியவில்லை. பெல் டெலிஃபோன் லேபரட்டரியைச் சேர்ந்த எஞ்சினீயர்கள் பல ஆண்டுகளாக அணிற்பிள்ளை உபத்திரவத்தைக் கவனித்துத்தான் வருகிறார்கள்; இருந்தாலும், இப்படி ஏன் மின்சாரக் கேபிளை அது பிய்த்து அமர்க்களம் பண்ணுகிறது என்பதுதான் விநோதமாக இருக்கிறது! —புதிய கேபிள்கள் வாங்க வேண்டியிருப்பதால் அந்தக் கம்பெனி ஒன்றுக்கே இதனால் 5 லட்சம் டாலர் வீண் செலவு ஏற்படுகிறதென்றால் பாருங்கள்!

கார்ட்டூன் பிலிம்களில் மரங்கொத்திகள் கொத்தி எடுக்கிற மாதிரி பிரம்மாண்டமான மரங்களைச் சில நிமிஷநேரத்தில் எந்த மரங்கொத்தியும் உண்மையில் கொத்தி வீழ்த்துவதில்லை. ஆனாலும், கொண்டையுள்ள மரங்கொத்தி உளிபோன்ற தன் அலகினால் 6 அங்குல நீளத்துக்கு மரச் சிம்புகளைக் கொத்தி எடுக்கும்; இப்படி ஒரு மரங்கொத்தி ஒரு நாளில் 24 அங்குலம் குறுக்களவுள்ள கம்பத்தினுள் ''9 × 6'' அங்குலத்துக்குத் துளையிட்டிருப்பதாகத் தெரிகிறது.

மரங்கொத்தியின் உபத்திரவம் ஐக்கிய அமெரிக்காவில் சுமார் பத்து ஆண்டுகளாகத்தான் இருந்து வருகிறது. சமீபத்தில் அந்த நாட்டைச் சேர்ந்த நாலு மின்சாரக் கம்பெனிகள் சில நிபுணர்களைக் கொண்டு, 'மரங்கொத்திகள் இப்படி மரக் கம்பங்களையும் பச்சை மரங்களையும் துளைக்காதபடி அவைகளின் பழக்கவழக்கத்தை மாற்ற ஏதாவது உபாயம் உண்டா?' என்று பார்த்தார்கள். இதுவரைக்கும் அவர்கள் முயற்சி பலிக்கவில்லை. இதேமாதிரி கிழக்குப்



காப்பிரைட்: அமிர்த பஜார் பத்திரிகை
(ஆங்கிலம்: 16-6-'57), கல்கத்தா.

பகுதியில் பல மின்சாரக் கம்பெனிகள் சேர்ந்து பென்ஸில்வேனியா சர்வகலாசாலையில் காட்டு வாழ்வு சம்பந்தமாக ஆராய்ந்த அறிஞர்களைக் கொண்டு செய்த முயற்சியும் பயன் அளிக்கவில்லை.

டாக்டர் ரிச்சர்டு ஜோர்கன்ஸன், டாட் ஃபிட்ஸென்மேயர் என்ற இரண்டு நிபுணர்கள் பென்ஸில்வேனியா சர்வகலாசாலையில் இந்த ஆராய்ச்சியில் ஈடுபட்டு வருகிறார்கள். அவர்கள், ''மரங்கொத்தி ஏன் கொத்துகிறது என்று தெரிந்தாலொழிய இந்த உபத்திரவத்துக்கு என்ன பரிகாரம் என்று கண்டுபிடிப்பதற்கில்லை'' என்கிறார்கள். ஆகவே, சின்னச் சம்மட்டி போன்ற தன் அலகினால் அது ஏன் இப்படிக் கொத்துகிறது என்று மனத்தத்துவ முறையில் ஆராய வேண்டியிருக்கிறது. இதில் முக்கியமான ஒரு சங்கடம் என்னவென்றால், கொண்டையுள்ள மரங்கொத்தியைப் பிடித்துவைத்து ஆராய முடியாதிருப்பதுதான். அவைகளை இப்படிக் கூட்டில் அடைத்து வைத்தால் அவை அதிக நாள் உயிரோடிருப்பதில்லை. ஃபிட்ஸென்மேயர் மரங்கொத்திக் குஞ்சு ஒன்றைப் பிடித்து வளர்த்து வருகிறார்; அவரும் அவருடைய சகாக்களும் அதன் பழக்க வழக்கங்களைக் கவனித்து வருகிறார்கள். நன்றாக ஆராய்ந்து முடிவு செய்யக் கொஞ்ச நாள் பிடிக்கும். இதற்கிடையே, 21-அங்குல உயரமுள்ள இந்தச் சிவப்புக் கொண்டை மரங்கொத்தியினால் உண்டாகும் உபத்திரவம் கொஞ்ச நஞ்சமில்லை. தொலைவிலுள்ள பிரதேசங்களில் மின்சாரக் கம்பங்கள் பழுதடைந்து கீழே விழுந்து வருகின்றன.

மரங்கொத்தி மனித நடமாட்டம் இருக்கும் இடத்தை நெருங்காதிருப்பது ஒரு சங்கடம். ஆகவே, மலை, காடு, சதுப்பு நிலம் இப்படி எளிதில் ஆட்கள் சென்று பழுது பார்த்துக் கம்பம் நட முடியாத இடங்களில்தான் அவை அதிகச் சேதம் விளைவிக்கின்றன. ''தொலைவிலே சதுப்பு நிலங்களில் கம்பம் பழுதடைந்துவிட்டால் அங்கே புதிதாகக் கம்பம் நடுவதற்கு ஆள் அனுப்பவே சுமார் 1000 டாலர் செலவாகிறது'' என்று ஓர் எஞ்சினீயர் மதிப்பிட்டிருக்கிறார்.

கொண்டை உள்ள மரங்கொத்திக்கு இவ்வளவு வலிமையும், சம்மட்டி உளிபோல் மரத்தைக் கொத்தி எடுக்கும் திறமையும் இருப்பதற்குக் காரணம் அதன் அலகும் மண்டையோடும் ஒரே எலும்புத்துண்டைச் சேர்ந்த பகுதிகளாக இருப்பதுதான். மற்றப் பறவைகளுக்கு அலகு வேறாகவும் மண்டையோடு வேறாகவும் இருக்கும்; மரங்கொத்திக்கும் அந்த மாதிரி இருந்தால், அது இப்படி வன்மையாக மரத்தைக் கொத்தும்போது அலகு பெயர்ந்து வந்துவிடும். கொண்டை உள்ள இந்த மரங்கொத்தி எவ்வளவு கெட்டியான மரத்தையும் தாக்கித் தகர்த்துவிடும். இதற்கு ஒரே பரிகாரம், எஃகு மின்சாரக் கம்பங்களை நடுவதுதான். ஆனால் எஃகுக் கம்பங்களுக்கு ஆகக்கூடிய செலவைக் கவனித்தால் இது வெறும் யோசனை அளவில் நிற்கவேண்டியதுதான்; நடைமுறையில் சாத்தியம் இல்லை. மரங்கொத்திகளை மிரட்டி வெருட்ட எல்லாவித உபாயங்களையும் கையாண்டு பார்த்துவிட்டார்கள். கம்பங்களில் பிசின் தடவினால் மரங்கொத்தி அப்படியே ஒட்டிக்கொள்ளும்படி செய்துவிடலாம் என்று சிலர் சொன்னார்கள். ஆனால் மின்சாரக் கம்பெனி ஆட்கள் கம்பங்களில் ஏறி இறங்க வேண்டியிருந்தால் அவர்களுக்கும் இது தடங்கலாகத்தானே இருக்கும்! கிங் - பெர்டு என்ற பறவையைக் கண்டால் இவை அஞ்சி நடுங்கும்; அதற்காகக் கிங் - பெர்டு போல் மரத்தில் செய்து கம்பங்களில் வைத்துப் பார்த்தார்கள். ஆனால் மரங்கொத்திகள் அவைகளைச் சட்டை செய்தால்தானே! பாம்பு, ஆந்தைகளைப்போல் செய்து வைத்தும் மரங்கொத்திகள் துளிக்கூட அஞ்சவில்லை. கிட்ட நெருங்காதபடி ரசாயனப் பூச்சுத் தடவிப் பார்த்தும் பயன் ஏற்படவில்லை. கம்பங்களுக்கு முள்கம்பி சுற்றிப் பார்த்தார்கள். மரங்கொத்திகள்

மரக்கம்பத்தைக் கொத்துவதற்கு முன் இந்த முள் கம்பிகளை மெல்ல நீக்கிவிட்டன! மரங்கொத்தி திகிலுற்றுக் கத்தும்போது 5 மைல் தொலைவுக்கு அந்த ஒலி எட்டும்படி சமீபத்தில் 'ஆம்ப்ளிஃபையர்' என்ற கருவி அமைத்துப் பார்த்திருக்கிறார்கள். ஆனால் எஞ்சினீயர்களுக்கு இதிலோ, சிவப்பு நிறத்தைக் கண்டால் அவை ஓடிவிடும் என்று மின்சாரக் கம்பத்துக்கு அந்த நிறம் பூசி வைப்பதிலோ நம்பிக்கை இல்லை.

இதிலிருந்து ஒரு விஷயம் முடிவாகத் தெரிகிறது: 'மனிதனுக்கு ஏதாவது தொல்லை விளைவித்துக் கொண்டேயிருக்க வேண்டும். அவனை விட யுக்தியோடு நடந்து கொள்ள வேண்டும்' என்று மரங்கொத்திக்கு ஓர் எண்ணம் இருக்கிறது. கொஞ்ச நாளைக்கு முன் எஞ்சினீயர்கள், ஏற்கனவே இப்படி இவை கொத்தி எடுத்த கம்பங்களை இருந்த இடத்தில் விட்டுவிட்டுப் புதிய கம்பங்களை அவற்றின் அருகில் நட்டுப் பார்த்தார்கள். மரங்கொத்திகள் பழைய கம்பங்களை நெருங்கினால்தானே! அப்படியே அவைகளை விட்டுவிட்டுப் புதிய கம்பங்களைக் கொத்தித் துளைக்கத் தொடங்கி விட்டன.

இந்த உபத்திரவம் அளவுக்கு மிஞ்சிப் போய்விட்டால் மரங்கொத்திகளுக்கு விஷம் வைத்துக் கொன்றுவிட முடியும். நிலைமை அப்படித்தான் மோசமாகிவிடும் போல இருக்கிறது; மரங்கொத்திகளின் தொகை மிகுதியாகிக் கொண்டு வருவதுதான் இதற்குக் காரணம். அமெரிக்க ராஜ்யங்களுக்கிடையே 1916-இல் கையெழுத்தான ஒப்பந்தப்படி மரங்கொத்தி இனம் அழிந்துவிடாமல் காக்க வேண்டியிருக்கிறது. ஆகவே, வேண்டுமென்றே அவைகளைக் கொல்வதென்பது சாத்தியமில்லை.

மரங்கொத்தியால் மின்சார நிலையத்தாருக்கும் டெலிஃபோன் ஆபரேட்டர்களுக்கும் விளையும் தொல்லை போதாதென்று அணிற்பிள்ளை வேறு சத்துருவாக வந்து சேர்ந்திருக்கிறது. சென்ற நூற்றாண்டின் முடிவிலிருந்து அணில்கள் தந்திக் கம்பிகளுக்குமேல் மூடியிருக்கும் ஈய உறையை என்னவோ ஓயாமல் துருவி எடுத்துத் தின்று வருகின்றன. இன்றுவரை இதைத் தடுக்க எவ்வளவோ முயன்றும் ஒரு பலனும் இல்லை.

மரங்கொத்திகளைப் போலவே அணில்களுக்கும் பாதுகாப்பு உண்டு. ஆகவே, கேபிள்களின் மேல் ஆர்சனிக்கும் கண்ணாடித் தூளும் கலந்த (விஷத்) திரவத்தைப் பூசுவது சாத்தியமில்லை.

ஈய மேலுறையை அணில்கள் துருவி விடுவதால் தந்திக்கம்பிகளில் ஈரம் பட்டுப் பழுது ஏற்படுகிறது; மின் ஓட்டம் வீணாகிறது. பல ஆண்டுகளுக்கு முன்பே காட்டில் வாழும் பிராணிகள் சம்பந்தமாக அநுபவமுள்ள நிபுணர்களும் டெலிஃபோன் எஞ்சினீயர்களும், அப்படி அணிலுக்குப் பிடிக்கும்படி ஈயத்தில் என்ன இருக்கிறது என்று ஆராய்ந்தார்கள். அதன் உணவில் கால்ஷியம், ஃபாஸ்ஃபரஸ் சத்து இவை போதாதிருப்பதுதான் காரணம் என்பது ஒரு சாரார் கருத்து. ஆகவே, எஞ்சினீயர்கள் டெலிஃபோன் கம்பங்களில் பெரிய பெரிய உப்புக் கண்டங்களை வைத்துப் பார்த்தார்கள். ஒரு வருஷ காலம் உப்பைத் தின்று வந்தன அணில்கள்; அதுவரையில் கம்பங்களுக்குப் பழுது விளைவிக்கவில்லை. பிறகு மறுபடியும் கேபிள் கம்பிகளைத் துருவத் தொடங்கிவிட்டன!

காட்டில் வாழும் பிராணிகள் சம்பந்தமாக ஆராய்ந்த வாலிப நிபுணர் ஒருவர் சமீபத்தில், அசல் அமெரிக்க பாணியில், "இயல்பாகவே எரிச்சலும் ஆத்திரமும் கொண்ட அணில்கள்தான் டெலிஃபோன் கம்பிகளை இப்படிப் பாழாக்குகின்றன" என்கிறார். உணர்ச்சி வசப்பட்டுச் சுயநிலை இழந்த அணிற்பிள்ளைகளும், குட்டி அணில்களுமே இந்தமாதிரி அழிவு வேலையில் ஈடுபடுகின்றன என்பது அவர் முடிவு. இதில் சற்று உண்மை இருக்கலாம் என்றுதான் படுகிறது. இருந்தாலும், அவர் இந்த உபத்திரவத்துக்குப் பரிகாரம் ஒன்றும் தெரிவிக்கவில்லை. அதுமட்டுமா? ஆத்திரம் பிடித்த

அந்த அணிற்பிள்ளைகள் ஈயத்தோடு விட்டால் தேவலையே; கம்பிகளைச் சுற்றி அமைத்திருக்கும் கண்ணாடி டேப், செம்பு எல்லாவற்றையுங்கூடத் துருவித் தின்று வருகின்றன என்றால் பாருங்கள்! உலோகங்களென்றால் அவ்வளவு பிடித்திருக்கும் போல் இருக்கிறது அவைகளுக்கு.

பெல் டெலிஃபோன் கம்பெனியார் அணிற்பிள்ளைகள் தந்திக் கேபிள்களை நெருங்காதபடி எவ்வளவுதான் முயற்சி எடுத்துக் கொண்டும் ஒன்றும் பலிக்கவில்லை. கம்பிமேல் எஃகு டேப் சுற்றிவைப்பது, அணில் நெருங்கவொட்டாதபடி தடுக்க ரசாயனம் தடவி வைப்பது, டெலிஃபோன் கம்பங்களின் மேலே மின்சாரம் பாய்ச்சிய 24-அங்குலம் கொண்ட இரும்புத் தடுப்புகளை வைப்பது, மின்சார அதிர்ச்சி தரும் கருவிகளை வைப்பது, குளோரின் காஸ் செலுத்திய ஹைட்ரோ கார்பன் பூச்சு - இப்படி நூற்றுக் கணக்கில் 'பரிகாரம்' சொல்லியிருக்கிறார்கள் பல பேர். கடைசியாகக் குறித்திருப்பதுதான் (பூச்சு) சரியான பரிகாரம் என்று கொஞ்ச நாள் எண்ணிவந்தார்கள். ஆனால் அணில்கள் சாதாரண ஈய உறையிட்ட கேபிள்களை விட்டு ரசாயனப் பூச்சுத் தடவிய கேபிள்களைப் பின்னும் விருப்புடன் தின்னத் தொடங்கிவிட்டன!

பெல் டெலிஃபோன் கம்பெனியாருக்கு இப்போது சலித்துவிட்டது; அவர்கள், 'நாம் என்னதான் செய்தாலும் அணில்கள் நம்மையும் மிஞ்சி விடுகின்றன. ஆகவே, தடை ஒன்றும் செய்யாமல், இவைகளால் என்னதான் சேதம் விளைந்தாலும் விதியே என்று சகித்துக்கொண்டு வேறு கேபிள்களைப் போடுவதுதான் இருப்பதற்குள் சிக்கன வழி' என்ற முடிவுக்கு வந்துவிட்டார்கள்! மரங்கொத்தியைப் போலவே அணிலுக்கும் இந்த விஷயத்தில் வெற்றிதான். இன்னும் சில பிராணிகளும் யுக்தியில் மனிதனை மிஞ்சி விடுகின்றன. கனேடியன் பசிஃபிக் ரெயில்வே கம்பெனிக்கும் (மீன் பிடிக்கும் பருந்து வகையைச் சேர்ந்த) ஆஸ்ப்ரீ என்ற பறவை ஒன்றுக்கும் இப்படி ஒரு போட்டி. இது பெட்டை. மூன்று ஆண்டுகளாக இது கானடா முழுவதும் டெலிஃபோன் இணைப்புள்ள ஒரு தந்திக்கம்பத்தின்மேல் கூடு கட்டி வந்தது; முழு அளவுக்குக் கூடு கட்டி முடியும்போதெல்லாம் டெலிஃபோனில் கொர கொர வென்று சத்தம் கேட்கத் தொடங்கிவிடும். ரெயில்வேக்காரர்கள் ஒவ்வொரு தரமும் இந்தக் கூட்டைக் கலைத்துப் போட்டுத்தான் வந்தார்கள். இருந்தாலும், இந்தப் பறவை பிடிவாதமாக அந்த இடத்திலேயே திரும்பத் திரும்பக் கூடு கட்டிக்கொண்டு வந்தது. கடைசியில் ரெயில்வே கம்பெனிதான் தோற்றது. ஆஸ்ப்ரீக்குப் பிடித்த அந்தத் தந்திக் கம்பத்தின் மேல் இன்னும் ஒரு குறுக்குக் கட்டையை உயரமாக வைத்து முடுக்கி, கூட்டை அப்படியே மூன்று முட்டைகளோடு அதில் தூக்கி வைத்தார்கள். இந்த ஒரே உபாயத்தால்தான் இதைத் தோற்க அடிக்க (இது தோல்வி என்று சொல்லும்பட்சத்தில்!) முடிந்தது!

உலகத்தில் மிகவும் நீளமான தந்தி 'லைன்,' ஆஸ்திரேலியாவின் வட பகுதியிலுள்ள டார்வின் துறைமுகத்திலிருந்து தென்பகுதியில் இருக்கும் ஆகஸ்டா துறைமுகம் வரை அமைத்திருப்பதுதான். இதன் நீளம் 1900 மைலுக்கு மேல் இருக்கும். 17 ஆண்டுகளுக்குமுன் தபால் இலாகா எஞ்சினீயர்கள் கம்பங்களை நடும்போது காக்கை போன்ற மாக்பை என்ற ஒரு வகைப் பறவையும் கறையானும் பெரிய உபத்திரவமாக இருப்பது தெரிந்தது.

மாக்பைகள்தான் முதலில் தொல்லை விளைக்கத் தொடங்கின. கூடு கட்டுவதற்குத் தந்தி வொயர்கள் மிகவும் வாய்ப்பானவை என்று கண்டுகொண்டன. வொயரிலிருந்து துண்டுகளைக் கொத்தி எடுக்கலாயின. இதனால் தந்திப் போக்குவரத்துக்குத் தடை ஏற்

பட்டது. கடைசியில் யுக்திசாலியான ஓர் எஞ்சினீயர் அங்கங்கே பல இடங்களில் சில வொயர்களைக் கொத்துக் கொத்தாக வைத்து அவைகளின் தொல்லையைச் சமாளித்துவிட்டார். மாக்பை சோம்பேறி. ஆகவே, கம்பத்தின் மேல் உள்ள தந்தி வொயர்களைச் சிரமப்பட்டுக் கொத்தி எடுப்பதை விட்டு இவைகளைப் பயன்படுத்திக் கொண்டது.

பிறகு கறையான்களால் தொல்லை ஏற்பட்டது. மரத்தில் செய்த 36,000 தந்திக் கம்பங்களை ஒரு கை பார்த்துவிட்டன; மரத்தோடு இன்ஸுலேஷன் வொயர் முதலிய எல்லாவற்றையுந்தான் அரித்துச் சாப்பிட்டுவிட்டன! அந்தப் பொருள்களும் அவ்வளவு ருசியாக இருந்திருக்கின்றன என்றால் பாருங்கள்! கறையான் அண்டாதிருப்பதற்காக மேலே பூசியிருந்த ஆர்சனிக் என்ற பாஷாணப் பூச்சை அவை துளிக்கூடச் சட்டை செய்யவில்லை!

மரக் கம்பங்களுக்குப் பதில் எஃகுக் கம்பங்களை நடுவதுதான் ஒரே பரிகாரம். ஆனால் இதற்கு ஏராளமாகப் பணம் செலவாகும். ஆகவே, கறையான்கள் பாடு கொண்டாட்டந்தான்!

முன்னும் பின்னும்

பிரபல பிரெஞ்சு சர்வாதிகாரி நெப்போலியன் சாதாரணப் படை வீரனாக இருந்த சமயம் அவனும் மற்ற வீரர்களும் ஓர் இடத்தில் கூடாரம் அமைத்து முகாம் போட்டிருந்தார்கள். பகல் நேரத்தில் ஓய்வு மிகுதியாக இருந்தது. அதனால் எல்லா வீரர்களும் கூடாரத்தை விட்டு வெளியே சென்று விளையாடிக்கொண்டும், உல்லாசமாக அலைந்து கொண்டும் இருந்தார்கள். நெப்போலியன் மட்டும் பொழுதை வீணாக்காமல் கூடாரத்தில் இருந்து, நல்ல நூல்கள் சிலவற்றைக் கவனமாகப் படித்துக்கொண் டிருந்தான்.

தற்செயலாக அந்தப் பக்கமாகச் சென்ற கிராமப் பெண் ஒருத்தி அவனைப் பார்த்து, ''எல்லாரும் சிரித்துக்கொண்டும் விளையாடிக்கொண்டும் இருக்கிறார்கள். என்ன ஐயா, இது? நீ மட்டும் இங்கே 'கோஷா' மாதிரி உட்கார்ந்திருக்கிறாயே!'' என்று ஏளனமாகக் கேட்டுச் சிரித்தாள்.

நெப்போலியன் இதற்குப் பதில் ஒன்றும் சொல்லவில்லை. பெண் புறப்பட்டுப் போய்விட்டாள்.

பன்னிரண்டு ஆண்டுகளுக்குப் பின் நெப்போலியன் பிரெஞ்சு நாட்டின் சக்கரவர்த்தியாகி அந்த ஊருக்கு வந்திருந்தான். அந்தப் பெண் எங்கே இருக்கிறாள் என்று விசாரித்து அறிந்துகொண்டான். அவளுடைய வீட்டுக்கு வந்து, ''என்ன அம்மா, என்னை ஞாபகம் இருக்கிறதா?'' என்றான்.

அவள் அவனைப் பணிந்து, ''பிரெஞ்சுச் சக்கரவர்த்தி நெப்போலியனா!.... ஆ! உங்களை முன்னால் எங்கோ பார்த்திருக்கிறேனே!'' என்றாள் வியப்போடு.

''ஆமாம், அம்மா, ஆமாம்....ஒரு காலத்தில் இதே ஊரில் நான் சாதாரண ஸோல்ஜராகக் கூடாரத்தில் உட்கார்ந்திருந்தேன். அப்போது நீ என்னைக் 'கோஷா' என்று ஏளனம் செய்தாயே; ஞாபகம் இருக்கிறதா? மற்றவர்களைப்போல் நானும் விளையாடிக்கொண் டிருந்தால் இன்னும் அவர்களைப் போலத்தானே இருந்திருப்பேன்!'' என்றான் நெப்போலியன்.

அவள் வாயடைத்துத் திகைத்து நின்றாள்.

—எம். டி. எட்வின்

★ வேதநாயகம் பிள்ளை 1826-ஆம் ஆண்டில், திருச்சியை அடுத்த குளத்தூரில், சைவ சமயத்திலிருந்து கிறிஸ்துவ மதத்துக்கு மாறிய குடும்பம் ஒன்றில் பிறந்தவர். அவருக்கு இளமை முதற்கொண்டே ஆழ்ந்த தெய்வபக்தியும், தமிழிலும் இசையிலும் பற்றும் ஏற்பட்டிருந்தன.

★ அவர் மாயூரம், சீர்காழி, தரங்கம்பாடி முதலிய இடங்களில் முன்சீப்பாக வேலை பார்த்தார். அவருடைய தீர்ப்புகள் நீதி தவறாத் தன்மைக்குப் பெயர் பெற்றவை.

★ முன்சீப்பு வேலையிலிருந்து ஓய்வு பெற்ற பிறகு அவர் மாயூரம் முனிசிபல் தலைவராகத் தேர்ந்தெடுக்கப் பெற்றுப் பொதுவாழ்வில் ஈடுபட்டுத் தொண்டுகள் செய்து வந்தார்.

★ பெண் கல்விக்காகவும், முதியோர் கல்விக்காகவும் அவர் மிகுந்த சேவை செய்தார். அவர் கிறிஸ்துவ சமயத்தைச் சார்ந்தவராயினும் அவரது பரந்த சமரச மனப்பான்மை, ஆழ்ந்த அன்பு இவை காரணமாக எல்லா மதத்தாருடைய நட்பும் அவருக்குக் கிட்டியது. அவர் இயற்றிய நூல்களில் இந்தச் சமரச நோக்குப் பெரிதும் காணக் கிடக்கிறது.

★ அவர் இயற்றிய இசை நூல்களுள் புகழ் வாய்ந்தது 'சர்வ சமய சமரசக் கீர்த்தனை.' அவர் இயற்றிய மற்ற நூல்கள்: நீதி நூல், சித்தாந்த சங்கிரகம், பெண்மதி மாலை, சுகுணசுந்தரி சரித்திரம், பிரதாப முதலியார் சரித்திரம் முதலியன. இவற்றுள் பிரதாப முதலியார் சரித்திரம் தமிழ் மொழியின் முதல் நாவலாகும்.

★ அவர் 1889-ஆம் ஆண்டில் மறைந்தார்.

தமிழ் வளர வழி

வேதநாயகம் பிள்ளை

தமிழிலே முதல்முதலாக நாவல் எழுதியவர் ஸ்ரீ வேதநாயகம். அதன் பெயர் பிரதாப முதலியார் சரித்திரம். தென் மொழிகளின் புஸ்தக டிரஸ்ட் ஆதரவில் அதன் சுருக்கம் ஒன்று 'உமாதேவன்' வெளியீடாக வந்திருக்கிறது. அதில் கதாநாயகி பேசும் ஒரு பேச்சு இது. பிள்ளையவர்களின் நடை தெள்ளத் தெளிந்தது. தனித் தமிழ் என்று சொல்லிச் செயற்கை நடை ஒன்றை அவர் எழுதவில்லை. அவருடைய தமிழ்ப் பற்று எவருடைய தமிழ்ப் பற்றுக்கும் சளைத்ததல்ல. அதற்கு இந்தக் கட்டுரையே சான்றாகும். உமாதேவன் பதிப்பு மிக அழகாகவும் சிறந்த காகிதத்திலும் அமைந்திருக்கிறது. சிறிதும் கதைப் போக்கு ஊறடையாமல், சுவை குன்றாமல் 'பிரதாப முதலியார் சரித்திர'த்தை ஸ்ரீ இ. மு. சுப்பிரமணிய பிள்ளை சுருக்கியிருக்கிறார்.

இங்கு ஸ்தாபிக்கப்பட்டிருக்கிற தமிழ்க் கோர்ட்டுகளில் சில தமிழ் நியாயவாதிகள் தமிழில் வாதிக்காமல், இங்கிலீஷில் வாதிக்கிறார்களென்று கேள்விப்படுகிறோம். தேச பாஷையும் தமிழ்! கோர்ட்டில் வழங்காநின்ற பாஷையும் தமிழ்! நியாயாதிபதியும் தமிழர்! வாதிக்கிற வக்கீலும் தமிழர்! மற்ற வக்கீல்கள், கட்சிக்காரர்கள் முதலானவர்களும் தமிழர்கள்! இப்படியாக, எல்லாம் தமிழ் மயமாய் இருக்க, அந்த வக்கீல்கள் யாருக்குப் பிரீதியாய் இங்கிலீஷில் வாதிக்கிறார்களோ தெரியவில்லை! நியாயாதிபதியாவது வக்கீலாவது இங்கிலீஷ்காரராய் இருக்கிற பட்சத்தில் இங்கிலீஷில் வாதிப்பது நியாயமாயிருக்கலாம். தமிழ் நியாயாதிபதி முன்பாகத் தமிழ் வக்கீல் இங்கிலீஷில் வாதிப்பது ஆச்சரியம் அல்லவா? ஜனங்களுக்கு இங்கிலீஷ் தெரியாதாகையால் ஐரோப்பியர்கள்கூட இத்தேச பாஷையில் பரீட்சை கொடுக்கவேண்டுமென்றும், அவர்கள் தேச பாஷையிலே சம்பாஷிக்க வேண்டுமென்றும் சட்டம் ஏற்பட்டிருக்கிறது. அவர்கள் அந்தப்படி பரீட்சை கொடுத்துவருவது மன்றிக் கட்சிக்காரர்களிடத்தில் தேச பாஷையிலே சம்பாஷிக்கவும் பிரியப்படுகிறார்கள். அப்படியிருக்க, சுதேசிகளான வக்கீல்கள் சொந்தப் பாஷையைத் தள்ளிவிட்டு, அந்நிய பாஷையில் வாதிப்பது சரிப்படாது அல்லவா? தங்களுக்குத் தமிழில் நன்றாகப் பேசத் தெரியாமையினால் இங்கிலீஷில் வாதிப்பதாகவும், அது தங்களுக்குக் கௌரவம் போலவும் அவர்கள் சொல்லிக்கொள்கிறார்கள். சுய பாஷை பேசத் தெரியாமலிருப்பது போல இழிவான காரியம் வேறொன்று இருக்கக் கூடுமா? ஓர் ஐரோப்பியர் தம்முடைய சுய பாஷையில் தமக்குப் பேசத் தெரியாதென்று சொன்னால், இந்த வக்கீல்களே அவரைப் பழிக்கமாட்டார்களா? அப்படியே தங்களுடைய சுய பாஷையில் தங்களுக்கு வாதிக்கத் தெரியாதென்று சொல்வது அவர்களுக்கு அவமானம் அல்லவா?

மூலம்: பிரதாப முதலியார் சரித்திரம் (தமிழ் நாவல்); வெளியிட்டோர்: உமாதேவன் கம்பெனி, தேனாம்பேட்டை, சென்னை-18. விலை ரூ. 1-25.

நியாய சாஸ்திரங்கள் எல்லாம் இங்கிலீஷ் பாஷையில் இருப்பதாலும், இங்கிலீஷில் இருக்கிற நீதி வாக்கியங்களுக்குச் சரியான பிரதி பதங்கள் தமிழில் இல்லாமையாலும் தாங்கள் இங்கிலீஷ் பாஷையை உபயோகிப்பதாகச் சில வக்கீல்கள் சொல்லுகிறார்கள். இங்கிலீஷ் வார்த்தைக்குச் சரியான பிரதிபதங்கள் தமிழில் இல்லையென்று சொல்வது, அவர்களுடைய தெரியாமையேயல்லாமல் உண்மை அல்ல. தமிழ் நூல்களைத் தக்கபடி அவர்கள் ஆராய்ந்தால், பிரதி பதங்கள் அகப்படுவது பிரயாசமா? அப்படித்தான் இரண்டொரு குறிப்பான வார்த்தைகளுக்குத் தமிழிலாவது சம்ஸ்கிருதத்திலாவது பிரதிபதங்கள் அகப்படாது போனால் அந்த வார்த்தைகளைமட்டும் இங்கிலீஷிலே பிரயோகித்தால், அவர்களை யார் கோபிக்கப் போகிறார்கள்? வக்கீல்கள் இங்கிலீஷில் வாதிப்பது அக்கிரமம் என்று சில தமிழ் நியாயாதிபதிகளுக்குத் தெரிந்திருந்தும், அதைக் கண்டித்தால் தங்களுக்கு இங்கிலீஷ் தெரியாதென்று வக்கீல்களும் மற்றவர்களும் நினைப்பார்கள் என்று எண்ணி, இங்கிலீஷ் வாதத்துக்கு இடங் கொடுத்து வருகிறார்கள்.

கோர்ட்டில் நடக்கிற விவகாரங்களைக் கேட்டு விவேகம் அடைவதற்காகவே, ஜனங்கள் கூட்டம் கூட்டமாய்க் கோர்ட்டுகளுக்குப் போய்க் காத்திருக்கிறார்கள். அவர்களுடைய முகத்திலே க்ரியைத் தடவுவது போல, அவர்களுக்குத் தெரியாத பாஷையில் விவகாரம் நடந்தால், அவர்களுக்கு என்ன ஞானம் உண்டாகக் கூடும்? குருடன் கூத்துப் பார்க்கப் போனது போலவும், செவிடன் பாட்டுக் கேட்கப் போனது போலவும் யாதொரு பிரயோஜனமும் இல்லாமல், அவர்கள் வீட்டுக்குத் திரும்புகிறார்கள். தமிழ் நியாயாதிபதி முன்பாக இங்கிலீஷில் வாதிக்கிற தமிழ் வக்கீல், இந்தத் தமிழ் நாட்டையும், சகல ஜனங்களையும் மெய்யாகவே அவமானப்படுத்துகிறார். அந்த வக்கீல்களுடைய வாதம் அபவாதமாக முடிகிறபடியால், நீங்களும் அவர்களைப் போல அந்நிய பாஷைகளில் வாதிக்காமல், தமிழிலேயே வாதிப்பீர்கள் என்று நம்புகிறோம்.

இங்கிலீஷில் வாதிக்கிற வக்கீல்களைப் பார்த்து, இங்கிலீஷ் தெரியாத சில வக்கீல்களும் இங்கிலீஷில் வாதிக்கத் துணிகிறார்கள். அவர்கள் சொல்லுவது கோர்ட்டாருக்குத் தெரியாமலும், கோர்ட்டார் சொல்வது அவர்களுக்குத் தெரியாமலும் அவஸ்தைப்படுகிறார்கள். அப்படிப்பட்ட ஒரு வக்கீல், ஒரு பெரிய வழக்கில், ஒரு ஜமீன்தாருக்கு வக்கீலாயிருந்தார். அந்த வக்கீலினுடைய இங்கிலீஷ் வாதத்தினாலேயே அந்த வழக்கு, அபஜயமாய்ப் போய், ஜமீன்தாருக்கு விரோதமாய்க் கோர்ட்டார் இங்கிலீஷில் தீர்ப்பு எழுதிப் படித்தனர். அந்தத் தீர்ப்பு ஜமீன்தாருக்கு அநுகூலம் என்று வக்கீல் பிசகாக எண்ணிக்கொண்டு, ஜமீன்தாருடைய ஊருக்குப் போய், அவர் பக்கம் தீர்ப்பானதாகத் தெரிவித்தார். அதைக் கேட்டவுடனே ஜமீன்தாருக்கு ஆனந்தம் உண்டாகி, வக்கீலுக்கு அளவற்ற வெகுமானம் செய்ததுமன்றி, கோயிலுக்கு அபிஷேகங்களும் தானதர்மங்களும் விருந்துகளும் வேடிக்கைகளும் செய்தார். கோர்ட்டார் தீர்ப்புச் சொன்ன அன்றைய தினமே கோடைக்காலத்துக்காக இரண்டு மாத காலம் கோர்ட்டு மூடப்பட்டு, எல்லாரும் அவரவர்களுடைய ஊர்களுக்குப் போய்விட்டதால், ஜமீன்தாருக்கு உண்மை தெரிய இடமில்லாமல் போய்விட்டது. வரப்போகிற வழக்குச் சொத்தை நம்பி, கையிலிருந்த சொத்துக்களை யெல்லாம் மேலே கூறியபடி விரயம் செய்துவிட்டார். கோர்ட்டு திறந்து உண்மை தெரிந்ததும், ஜமீன்தாருக்கும் வக்கீலுக்கும் என்ன பிரமாதம் நடந்திருக்கும் என்பதை நான் சொல்ல வேண்டுவதில்லை.

எண்ணிறந்த தேவாலயங்களும், பிரமாலயங்களும், அன்ன சத்திரங்களும், நீர்வளமும், நிலவளமும், நாகரிகமும், ஆசாரநியமங்களும்

நிறைந்த இந்தத் தமிழ் நாடு, மற்றைய நாடுகளிலும் விசேஷமென்றும், அப்படியே தமிழ்ப் பாஷையும் எல்லா விதங்களிலும் மேலான பாஷையென்றும் சகலரும் அங்கீகரிக்கிறார்கள். அகஸ்தியர் நாவிலே பிறந்து, ஆரியத்தின் மடியிலே வளர்ந்து, ஆந்திரம் முதலிய பாஷைகளின் தோழமை பெற்று, சங்கப் புலவர்கள் நாவிலே சஞ்சரித்து, வித்துவான்கள் வாக்கிலே விளையாடி, திராவிட தேசம் முழுதும் ஏக சக்ராதிபத்தியம் செலுத்தி வந்த தமிழ் அரசியை இப்போது நாம் இகழலாமா? நம்மைப் பெற்றதும் தமிழ்; வளர்த்ததும் தமிழ்; நம்மைத் தாலாட்டித் தூங்க வைத்ததும் தமிழ். நம்முடைய மழலைச் சொல்லால், நம் தாய் தந்தையரைச் சந்தோஷிப்பித்ததும் தமிழ். நாம் குழந்தைப் பருவத்தில் பேச ஆரம்பித்தபோது, முதலில் உச்சரித்ததும் தமிழ். நம்முடைய அன்னையும் தந்தையும் நமக்குப் பாலோடு புகட்டினதும் தமிழ். தாய், தந்தை, குரு முதலானவர்கள் நமக்கு ஆதியில் உபதேசித்ததும் தமிழ். ஆதிகாலம் முதல் நம்முடைய முன்னோர்கள் எல்லோரும் பேசின பாஷையும், எழுதி வைத்த பாஷையும் தமிழ். இப்போது நம்முடைய மாதா பிதாக்களும், பந்து ஜனங்களும், இஷ்டமித்திரர்களும், இதரர்களும் பேசுகிற பாஷையும் தமிழ். நம்முடைய வீட்டுப்பாஷையும் தமிழ்; நாட்டுப் பாஷையும் தமிழ்.

இங்கிலீஷ், பிரெஞ்சு முதலிய ராஜ பாஷைகளைப் படிக்க வேண்டாமென்றும் நாம் விலக்கவில்லை. அந்த ராஜ பாஷைகளில் அநேக அருமையான கிரந்தங்கள் இருக்கிறபடியால் அவைகளைப் படிக்கப் படிக்க அறிவு விசாலிக்கும் என்பது திண்ணமே. ஆனால் மாதா வயிறு எரிய மகேசுவர பூஜை செய்வதுபோல, சொந்தப் பாஷைகளைச் சுத்தமாக விட்டு விட்டு, ராஜ பாஷைகளை மட்டும் படிப்பது தகுதியின்மை அல்லவா? அநேகர் சுய பாஷைகளில் தங்களுடைய கையெழுத்துக்களைக் கூடப் பிழையில்லாமல் எழுத அசக்தர்களா யிருக்கிறார்கள். சிலர் தமிழ்ப் பாஷை தெரியாமலிருப்பது தங்களுக்குக் கௌரவமாகவும், அந்தப் பாஷையை அறிந்திருப்பது தங்களுக்கு அகௌரவமாகவும் எண்ணுகிறார்கள்; சுய பாஷா ஞானம் தங்களுக்கு எவ்வளவு குறைவாய் இருக்கிறதோ அவ்வளவுக்கு ராஜ பாஷைகளில் தங்களைச் சமர்த்தர்கள் என்று சகலரும் எண்ணுவார்கள் என்று நினைத்து, சுய பாஷைகளை முழுதும் அலட்சியம் செய்கிறார்கள். அவர்கள் தமிழ்ப் புத்தகங்களைத் தொடுவதாயிருந்தால், பாம்பின் புற்றுக்குள்ளே கையை விடுவதுபோல் இருக்கும். அவர்களுக்குத் தமிழ்ப் பாஷை பேசுகிறது வேப்பிலைக் கஷாயம் குடிப்பதுபோல் இருக்கும். தமிழ் வார்த்தைகளைக் கேட்பதும் அவர்களுக்குக் கர்ண கடூரமாயிருக்கும். அவர்கள் தமிழ்ப் பாஷையைப் பேசினாலும், முக்கால் பங்கு இங்கிலீஷும் கால் பங்கு தமிழுமாகக் கலந்து பேசுவார்கள். அவர்களுக்குத் தேசாபிமானமும் இல்லை; பாஷாபிமானமும் இல்லை.

யானை முதல் எறும்பு கடையாக உள்ள சகல ஜீவ ஜந்துக்களுக்கும் தனித்தனியே ஒவ்வொரு பாஷை சொந்தமாய் இருக்கிறது. அந்த அந்த ஜந்துக்களுக்குரிய பாஷைகளை அவைகள் ஒரு காலத்திலும் மறவாமல் எப்போதும் உபயோகித்துக்கொண்டு வருகின்றன. இங்கிலீஷ்காரர் முதலிய ஐரோப்பியர்கள், தங்கள் தங்களுடைய சொந்தப் பாஷைகளை எவ்வளவோ கௌரவமாகப் போற்றி வருகிறார்கள் என்பதை அவர்களே அறிவார்கள். அவர்கள்மட்டும் தங்கள் ஜன்ம பாஷையாகிய தமிழையும் தமிழ் வித்துவான்களையும் அவமதிக்கலாமா? தமிழ் நூல்களையே பாராத அவர்கள் அவைகளுக்கு எப்படிப் பழுது சொல்லக்கூடும்? திருவள்ளுவருடைய குறளை அவர்கள் ஜன்மாந்தரத்திலும் பார்த்திருப்பார்களா? கம்பருடைய கற்பனையைக் கனவிலும் கேட்டிருப்பார்களா? நாலடியார் செய்தவர்களுடைய காலடியையாவது கண்

டிருப்பார்களா? ஔவையாருடைய நீதி நூலைச் செவ்வையாக அறிவார்களா? அதிவீரராம பாண்டியனை அணுவளவும் அறிவார்களா? இன்னும் எண்ணிக்கை யில்லாத தமிழ்ப் புலவர்களுடைய பிரபந்தங்களை அவர்கள் எக்காலத்திலும் பார்த்திரார்கள்.

இங்கிலீஷ், பிரெஞ்சு முதலிய பாஷைகளைப்போலத் தமிழில் வசன காவியங்கள் இல்லாமலிருப்பது பெருங்குறை என்பதை நாம் ஒப்புக்கொள்ளுகிறோம். அந்தக் குறையைத் தீர்ப்பதற்காகத்தான் எல்லாரும் ராஜ பாஷைகளும் தமிழும் கலந்து படிக்கவேண்டுமென்று விரும்புகிறோம். ராஜ பாஷைகளும், சுதேச பாஷைகளும் நன்றாக உணர்ந்தவர்கள் மட்டும் உத்தமமான வசன காவியங்களை எழுதக் கூடுமே யல்லாது, இதரர்கள் எழுதக்கூடுமா? வசன காவியங்களால் ஜனங்கள் திருந்தவேண்டுமேயல்லாது செய்யுட்களைப் படித்துத் திருந்துவது அசாத்தியம் அல்லவா? ஐரோப்பிய பாஷைகளில் வசன காவியங்கள் இல்லாமலிருக்குமானால், அந்தத் தேசங்கள் நாகரிகமும் நற்பாங்கும் அடைந்திருக்கக் கூடுமா? அப்படியே நம்முடைய சுயபாஷைகளில் வசன காவியங்கள் இல்லாமலிருக்கிற வரையில் இந்தத் தேசம் சரியான சீர்திருத்தம் அடையாது என்பது நிச்சயம்.

ஆதலால், இங்கிலீஷ், பிரெஞ்சு முதலிய ராஜ பாஷைகளைப் படிக்கிறவர்கள், தேச பாஷைகளையும் தீர்க்கமாக உணர்ந்து, இந்தத் தேசத்தைச் சூழ்ந்திருக்கிற அறியாமை என்னும் அந்தகாரம் நீங்கும்படி வசன காவியங்கள் என்னும் ஞான தீபங்களை ஏற்றுவார்களென்று நம்புகிறோம். தமிழ் படிக்காதவர்கள், தமிழ் நாட்டில் வசிக்க யோக்கியர்கள் அல்லர். அவர்கள் எந்த ஊர்ப் பாஷைகளைப் படிக்கிறார்களோ, அந்த ஊரே அவர்களுக்குத் தகுந்த இடமாகையால், சுயபாஷையைப் படிக்காமல் இங்கிலீஷ் மட்டும் படிக்கிறவர்களை இங்கிலாந்து தேசத்துக்கு அனுப்பி விடுவோம். பிரெஞ்சு மட்டும் படிப்பவர்களைப் பாரீசுப் பட்டணத்துக்கு அனுப்புவோம். லத்தீன் முதலிய பாஷைகளுக்குச் சொந்த ஊர் இல்லாதபடியால், அந்தப் பாஷைகளைப் படிப்பவர்களை அநாமகரணத் தீவுக்கு அனுப்புவோம்.

ஸோல்ஜரின் கனவு

"நான் மிக நேர்த்தியான கனவு ஒன்று கண்டேன்" என்றான் ஒரு ஸோல்ஜர்.

"அப்படியா? யார் அவள்?" என்றான் தோழன்.

"அவள் அல்ல; அவன்தான்: நான் ஸேவாய் ஹோட்டலில் தங்கியிருக்கிறேன். இதோ நம் ஆபீஸர் இருக்கிறாரே; இவர் அங்கே கூலியாளாக இருக்கிறார்: 'எனக்கு ஒரு டாக்ஸி கொண்டு வா' என்று மழையிலே இவரை நான் வெளியிலே விரட்டுகிறேன். இதுதான் என் கனவு" என்றான் ஸோல்ஜர்.

—'ரிவர் ப்ளேட் சண்டை'

கடவுள் இல்லையா?

'கடவுள் இல்லை' என்று சொல்லுகிறாய்? அப்படியானால், உன்னை நான் ஒன்று கேட்கிறேன்: அழகும் அற்புதமும் நிறைந்து, ஏதோ திட்டப்படி அமைந்திருப்பதாகத் தோன்றும் எல்லையற்ற பிரபஞ்சம் ஒன்றிலே ஓர் அணுவான பூமியின்மீது ஒரு கணப்பொழுது வாழ்ந்து சாகும் அற்பத் தூசியான நீ எப்படி அவ்வளவு நம்பிக்கையோடு இவ்வளவு அசம்பாவிதமான அபிப்பிராயத்தைக் கொண்டாய்?

—டாக்டர் சார்லஸ் எலியட்

நட்ட ஒரே வருஷத்தில் பலன் கொடுக்கும்
லாபமான பழ மரம் -

இனிப்பான பப்பாளி

லட்சுமி



பப்பாளி மரத்தை நம் நாட்டில் இப்பொழுது எங்கும் காண லாம். மேற்கிந்தியத் தீவுகளில் மட்டும் இருந்த இது தென்னுப் பிரிக்கா, ஆஸ்திரேலியா, பிலிப் பைன் தீவுகள், ஹவாய்த் தீவுகள், இந்தியா, சிங்களம் ஆகிய பல நாடு களில் பரவிவிட்டது. இதை நம் நாட்டுக்குக் கொண்டு வந்தவர்கள் போர்த்துக்கீசியர்.

தினந்தோறும் நாம் சாப்பிடும் உணவில் பழங்களும் சேரவேண் டும். அதனுல் நம் உடலுக்கு வேண்டிய உப்புச் சத்துக்களும் விட்டமின்களும் கிடைக்கும். 'தினந்தோறும் ஓர் ஆப்பிள் சாப் பிடும் வசதி பெற்றவர்கள் டாக்ட ரிடம் போக வேண்டியதில்லை' என்று ஒரு பழமொழி கூட இருக் கிறது. ஆனுல் நம் நாட்டில் எல்லாருக்கும் தினந்தோறும் பழங்கள் கிடைக்கின்றனவா?

சற்றுச் சிரமப்பட்டால் பழம் தரும் மரங்களைப் பயிரிடலாம். சீக்கிரம் பலனைக் கொடுக்கும் வகையைச் சேர்ந்தது பப்பாளி. இது 5,000 அடி உயரத்திலும் வளரும்; மற்றச் சாதாரண நிலங் களிலும் வளரும். கடுமையான வெயில், அடை மழை முதலிய வற்றைத் தாங்கும். எந்தப் பரு வத்திலும் எந்த நாட்டிலும் வள ரும். இதற்கு வேண்டியவை. எரு வும் தண்ணீரும். கடுங்காற்று மட் டும் இதை வீழ்த்திவிடும்.

பழங்கள் ருசியில் மாறு பட்டவை. பப்பாளியில் ஹனி-ட்யூ, ஸிலோன், நிக்கொபார் ஜாதிகள் என்று உண்டு. ஹிந்தியில் இதைப் 'பப்பிட்டா' என்றும், வங்காளியில் 'பைப்பலி' என்றும் சொல்லுவார் கள். கன்னடத்தில் 'பப்பாயி' என்றும், தெலுங்கில் 'பப்பாஸ்' என்றும் சொல்லுவார்கள்.

பப்பாளி மரத்தை அநேகமாக எல்லோரும் பார்த்திருக்கலாம். அது மற்ற மரங்களைப் போல் கிளை கள் கொண்டதல்ல. மூங்கில் போல் நேராக வளரும். உச்சியி லிருந்து பல கைகளை விரித்த மாதிரி சோளத் தட்டைகள் போன்ற காம்புகள் நீண் டிருக்கும். இவை குழாய் போல் வட்டமாக வளர்ந்திருப்பது பார்க்க அழகாக இருக்கும். நுனி யில் பல பிரிவுகள் கொண்ட இலை இருக்கும். ஆண் பெண் என்ற இரு வகை உண்டு. ஆண் மரங் களின் காம்புகள் சற்று மெல்லி யவை. இவற்றில் நீண்ட காம் புடன் பூக்கள் மலரும். பூக்கள் வாசனையாக இருக்கும். கொத்துக் கொத்தாகப் பூக்கும். பூ மலர்ந்த ஆண் மரங்கள் பார்க்கக் கவர்ச்சி யாக இருக்கும். இவற்றில் காய்

மூலம்: ஆந்திரப்பிரபா (தெலுங்கு), சென்னை.

கள் தோன்றுவதில்லை. பலனற்ற இந்த மரங்களை வெட்டிவிடுவார்கள். ஆனால் இவை பெரியவையாக வளரும் வரையில் மரம் ஆணா, பெண்ணா என்பது தெரியாது. பெண் மரங்கள் பூக்கும்போது கொத்தாகப் பூக்காமல் பூக்கள் வரிசையாக மரத்தைச் சுற்றி ஒட்ட வைத்தாற்போல் தென்படும்.

பெரிய மரத்தில் வளர்ந்த நல்ல ஜாதிக் காய்களை விதைகளுக்காக விடுவார்கள். ஒரு பழத்திலேயே கணக்கற்ற விதைகள் இருக்கும். மண்ணோடு எருவைக் கலந்த பள்ளங்களில் விதைகளை நடுவார்கள். ஏப்ரல், மே மாதங்களிலோ ஆகஸ்ட், நவம்பர் மாதங்களிலோ விதைகளை நடவேண்டும். நாற்றுக்கள் ஓரடி உயரம் வளர்ந்தபின் அவற்றை எடுத்துத் தனித் தனியே நட வேண்டும். முதலிலேயே வரிசையாகப் பத்தடிகள் இடைவிட்டுத் தோண்டிய குழிகளில் நடுவார்கள். ஓர் ஏக்கர் நிலத்தில் குறைந்தது 800 மரங்களை நடலாம். ஒரு குழியில் இரண்டு நாற்றுக்கள் வீதம் நட்டால் வளர்ந்தபின் ஆண் மரங்களை வெட்டி எறியச் சௌகரியமாக இருக்கும். வளர்ந்த பின் ஒரு குழியில் இரண்டு மரங்கள் இருக்க முடியாது. பழத்தோட்டங்களில் இந்த மரத்தை நடுவதால் மற்ற மரங்களுக்கு எந்த வித அபாயமும் நேராது.

பப்பாளிப் பழம், காய் இரண்டுமே மிகுந்த ருசி உள்ளவை. காயைக் கூட்டு, கறி, தயிர்ப் பச்சடி முதலியவை செய்யலாம். சற்று நெடி அடிக்கும். வேக விட்டு நீரை வடித்துவிட்டால் அது போய்விடும். பழத்தைச் சிறுவர்கள் ஆசையாகச் சாப்பிடுவார்கள். பரங்கிக்காய்களைக் கொண்டு செய்யும் சமையல் வகை யெல்லாம் செய்யலாம். காய்களிலும் பழங்களிலும் வைட்டமின் ஏராளமாக இருக்கிறது.

மரம் நட்ட ஆறு மாதங்களுள் பூத்து ஒரு வருஷத்துக்குள்ளே பழுக்கத் தொடங்கிவிடும். மரத்தில் சடை சடையாய் நெருக்கமாகக் காய்கள் பிடித்திருந்தால் ஆரம்பத்திலேயே இடை யிடையில் சில காய்களைப் பறித்து விடவேண்டும். அப்பொழுது மற்றக் காய்கள் பருக்க அநுகூலமாக இருக்கும். ஓர் ஏக்கருக்குச் சுமார் 450 முதல் 700 மணங்கு வரையில் பழங்கள் கிடைக்கின்றன. ஒரு முறை நட்ட மரம் மூன்று ஆண்டுகள் பயன் தரும். பிறகு அதை வெட்டி விடவேண்டும். இடைக் காலத்தில் வேறு பப்பாளிகளைப் பயிராக்கினால் மறுபடியும் புதிய தோட்டம் தலையெடுக்கும்.

மரத்திலேயே பழுத்த பழம் மிகவும் இனிப்பாக இருக்கும். ஆனால் பறவைகள் அவைகளைக் கோதிவிடும். நன்றாக முற்றிப் பழுக்கத் தொடங்கும்போது முதல் நாள் சாயங்காலம் பறித்த பழங்களை மறுநாள் காலையில் மார்க்கெட்டுக்கு அனுப்புவது சரியாக இருக்கும். பறிக்கும்போது காய்கள் கீழே விழுந்தால் அடிபட்டு நொந்துவிடும்; மெதுவாக அவைகளை இறக்கவேண்டும். பழுத்த பின் அதிக நாட்கள் வைத்தால் அழுகிவிடும்.

பப்பாளிப் பழத்தைச் சமையலுக்கு மட்டுமன்றி ருசியான தின்பண்டங்கள் செய்யவும் உபயோகிக்கலாம். ஹல்வா, ஷர்பத், ஸாலட் முதலியவை செய்கிறார்கள். தண்ணீரை வற்ற வைத்து 'ஃபிளேக்'குகள் கூடச் செய்கிறார்கள்.

இந்த மரங்களுக்கு நோய் பிடிப்பது உண்டு. நோய் கண்ட மரங்களை உடனே சுட்டு அழித்து விடவேண்டும். நோயற்ற நல்ல மரங்களிலிருந்து பழங்களை எடுத்து அவற்றில் உள்ள விதைகளை வெயிலில் உலர்த்திச் சேமித்து வைக்கவேண்டும்.

கொல்லையில் இரண்டொரு மரம் இருந்தால் போதும். குழந்தைகளின் ஓய்வு நேரத் தீனிக்கு கவலையே படவேண்டாம்.



ருஷியாவில் இந்துக் கோயில்

எட்வின் க்ராண்டாவ்ஸ்கி

இந்தப் பழமையான கோயில்பற்றிய ஆச்சரிய வரலாற்றை எழுதியிருக்கும் இவர், ஸோவியத் விஞ்ஞான அகாடமியில் கீழ்நாட்டு நூல் ஆராய்ச்சியில் ஈடுபட்ட ஒரு நிபுணர்.

நூறு ஆண்டுகளுக்கு முன்-1847 இளவேனிலில்-காக்கேஸஸ் பிரதேசத்திலுள்ள டைஃப்ளிஸ் (இப்போது திபிலிஸி என்று இதற்குப் பெயர்; ஸோவியத் யூனியனைச் சேர்ந்த ஜார்ஜியாவின் தலைநகர் இது.) என்ற நகரத்திலே விநோதமான ஈமச் சடங்கு ஒன்று நடந்தது. பிராம்மண யாத்திரிகர் ஒருவர் அங்கே இறந்துவிட்டார். அவரது கடைசி விருப்பப்படி இந்து ரீதியாக அந்திமக் கிரியைகள் நடந்தன. இதைப்பற்றிக் 'காக்கேஸஸ்' என்ற டைஃப்ளிஸ் பத்திரிகை, ''அந்தப் பிராம்மணரை இந்துச் சடங்குகளின்படி தகனம் செய்து அவருடைய அஸ்தியைக் குரா நதியில் கரைத்தார்கள். காஸ்பியன் கடலில் பாயும் இந்த நதி வழியாக அஸ்திகள் 'நிலைபெற்ற தீ' (வாடவாக்கினி?) இருக்கும் பிரதேசத்துக்குப் போய்ச் சேர வேண்டும் என்றுதான் இப்படிக் கரைத்தார்கள்'' என்று குறிப்பிட்டிருந்தது.

காஸ்பியன் கடற்கரையில் அப்படி 'நிலைபெற்ற தீ' என்று அந்தப் பிராம்மணருடைய நண்பர்கள் எதைக் குறிப்பிட்டார்கள்?

ஸோவியத் அஸர்பைஜானின் தலைநகரான பாகுவுக்கு அருகிலுள்ள அப்ஷெரான் தீபகற்பம் எதற்குப் பெயர் பெற்றது என்று பள்ளிக்கூடச் சிறுவன் எவனையாவது கேட்டால், தயங்காமல் உடனே, ''மண்ணெண்ணெய்'' என்று பதில் அளிப்பான். இருந்தாலும், இந்த நூறு ஆண்டுகளாகத்தான் மண்ணெண்ணெய் மக்களின் கவனத்தைக் கவர்ந்திருக்கிறது. அதற்கு முன்பே அப்ஷெரான் தீபகற்பம் பிரசித்தி பெற்றிருந்தது. அங்கே சுரகனி என்ற புதிய சிற்றூர் ஒன்று இருக்கிறது. அதற்கு அருகில் எத்தனையோ காலமாகப் பூமியிலிருந்து தீ கொழுந்துவிட்டு எரிகிறது. நிறமற்ற ஒருவகைக் 'காஸ்'தான் இப்படிக் கொழுந்துவிட்டு எரிவதற்குக் காரணம்; மண்ணெண்

மூலம்: ஸோவியத் லாண்ட் (ஆங்கிலம்: 1-7-'57), புது டில்லி.

ணெய் கிடைக்கும் பிரதேசங்களில் இதைச் சகஜமாகக் காணலாம். சுரகனியருகிலுள்ள இந்தத் தீக் கொழுந்துகளைக் கி. பி. முதல் நூற்றுண்டு வாக்கிலேயேகூடப்பண்டை ஈரானில் ஜாரதுஷ்டிரருடைய கொள்கையைப் பின்பற்றி வந்தவர்கள் வழிபட்டு வந்தார்கள். சில நூற்றுண்டுகளுக்குப்பின் ஜாரதுஷ்டிரருடைய மதத்தின் செல்வாக்குக் குன்றி ஈரானில் இஸ்லாமிய தர்மம் பரவியது. ஏதோ சிற்சில மக்களே தீயை வழிபட்டு வந்தார்கள். இவர்கள்தான் பார்ஸிகள். இவர்கள் இந்தியாவுக்கு ஓடி வந்துவிட்டார்கள். இப்படியே தீயை வழிபட்டு வந்த 'ஹீப்ரூ'க்காரர் ஆயிரக்கணக்கில் பர்ஷியாவில் இருந்து வந்தார்கள். சுரகனியில் கொழுந்து விட்டு எரிந்த தீ மட்டும் முன்போல் பிரபலமாகவே விளங்கிவந்தது. கி. பி. 10-ஆம் நூற்றுண்டில் அராபிய அறிஞரான மசூதி என்பவர், இந்தத் தீயைப் பற்றி எழுதியிருக்கிறுர். 12-ஆம் நூற்றுண்டு முதல், அஸர்பைஜானுக்குச் சென்று வந்த பிரயாணிகள் எல்லாருமே இந்தத் தீயைப் பற்றிச் சொன்னதோடு இங்கே அக்கினியை வழிபடுவோரின் கோயில் ஒன்று இருப்பதாகவும் தெரிவித்தார்கள். செலேபி என்ற துருக்கரும், காம்ஃபெர் என்ற ஜெர்மானியரும், ஹான்வே என்ற ஆங்கிலேயரும், கோவிட்ஸின் என்ற ருஷியரும் 'சுரகனியிலுள்ள இந்தக் கோயில், பார்ஸிகளும் ஹீப்ரூக்காரரும் போற்றும் புண்ணிய ஸ்தலம்' என்றே கருதினுர்கள். ருஷிய விஞ்ஞான அகாடமியார் இந்தக் கோயிலைப்பற்றி ஆராய்ந்தறிய ருஷியக் கீழ்நாட்டு மொழிவல்லுநரான பெரேஸின் என்பவரை அனுப்பியபோது அவரும் இப்படித்தான் எண்ணியிருந்தார்.

பாகுவில் இருந்த முதியவர்கள் பலர், பெரேஸின் அங்கே வந்ததும், ''பொழுது சாய்ந்ததும் கோயிலைப் போய்ப் பாருங்கள். அப்போது பின்னும் அழகாக இருக்கும்'' என்றுர்கள். அப்படியே அவரும் பாகுவை விட்டு அந்தி நேரத்தில் புறப்பட்டுப் போய்ப் பார்த்தார். பின்னுல் அவர் எழுதி வைத்த குறிப்பு இது:

''நாங்கள் அந்த இடத்தை நெருங்க நெருங்க வெளிச்சம் மிகுதியாகிக்கொண்டே வந்தது. ஒரு மலைமேல் ஏறியதும் தீ எரிவது தெரிந்தது. முதலில் பெரிய கொழுந்துகள் சுடர் விடுவது தெரிந்தது. மிகவும் சமீபத்தில் வந்ததும் பூமியிலிருந்து எங்கும் தீக் கொழுந்துகள் எரிவதைக் கண்டோம். அலைக்கும் காற்றில் எல்லா வகை நிறங்களிலும் தீக் கொழுந்துகள் பல விதமான உருவில் அசைந்தாடின. அந்த வெளிச்சத்தில் ஹிந்துக்கள் வசித்துவந்த அந்தக் கோயில் சற்று மங்கலாகத் தெரிந்தது. கோயிலில் கட்டியிருந்த சிமினிக் குழாய்கள் போன்ற அமைப்பிலிருந்து தீக் கொழுந்து கொடி பறப்பதுபோல் தோன்றியது."

பெரேஸினை அந்தக் கோயிலில் இருந்த பக்தர்கள் எல்லாரும் வரவேற்று உபசரித்தார்கள். மறு நாள் அந்தக் கட்டிடம் முழுவதையும் அவர் நன்ருகப் பார்வையிட்டு அங்கிருந்த குருக்களோடும், யாத்திரிகர்களோடும் பேசிக்கொண்டிருந்தார். கோயிலும் அதைச் சுற்றியுள்ள கட்டிடங்களும் இன்று இருப்பது போலவேதான் அன்றும் இருந்தன. கோயில் நீண்ட சதுரமாக ஒரு வகை வெள்ளைக்கல்லால் கட்டியது. நாலு பக்கச் சுவரிலும் தனித் தனியே உயரமான வளைவுகள் கொண்ட வாயில்கள் இருக்கின்றன. கோயிலின் நடுவில் பலிபீடம் ஒன்று உண்டு. மேல் பகுதி வட்டவடிவம் உள்ள விமான ரீதியில் அமைந்திருக்கிறது. கோயிலைச் சுற்றி மதில் உண்டு. குருக்கள்மார் இருப்பதற்கும், யாத்திரிகர் தங்குவதற்கும் உள்ளே 24 அறைகள் இருக்கின்றன. சிம்னிபோன்ற குழாய்களிலிருந்து தீ கொழுந்து விட்டு எரியும் புனிதக்காட்சியைத் தானே காணவருகிறுர்கள் யாத்திரிகர்கள்; அதற்கேற்றபடி கோயில் கட்டிடமும் எளிமையாகவும் ஆடம்பரமற்றுக் கடுமையான முறையிலும் அமைந்திருக்கிறது.

பெரேஸின் இப்படி ஊன்றிக் கவனித்து ஆராய்ந்ததால், சில ரசமான விஷயங்களை அறிய முடிந்தது. முதல் தடவை அவர் அங்கிருந்தவர்களைப் போய்ப் பார்த்து வந்ததும் பரபரப்பூட்டக் கூடிய புதிய தகவல்கள் தெரிந்தன.

கோயிலில் இருந்தவர்களும் சரி, தரிசனம் செய்ய வந்திருந்த யாத்திரிகர்களும் சரி இந்தியர்கள். தாங்கள் இந்தியாவில் இன்ன பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் என்றுகூட அவர்கள் தெரிவித்தார்கள். அவர்கள் எல்லாருமே தங்களுக்கும் பார்ஸிகளுக்கும் எந்த விதமான சம்பந்தமும் இல்லை என்றும் சொன்னார்கள். துறவிகளாகவே வாழ்ந்து வந்தார்கள். எல்லாரும் ஒரே மாதிரி ஆகாரமே-அதுவும் ஓரளவே-உண்டார்கள். அவர்கள் இருந்த அறை ஒன்றின் சுவரில் பச்சை நிறத்தில் பல கரங்கள் கொண்ட காளியின் படம் ஒன்று வரைந்திருந்தது. அதை அப்படியே நகல் எடுத்துக் கொண்டார் பெரேஸின். அங்கே நடந்த சவச்சடங்குகளையும் அவர் ஊன்றிக் கவனித்தார். அந்தப் புண்ணியத் தீயையே இட்டுச் சவத்தைக் கொளுத்தினார்கள். இதற்கென்றே கோயிலுக்கு அருகில் 'காஸ்' மிகுதியாக இருக்கும் ஒரு குழிக்குமேல் மேடை எழுப்பியிருந்தார்கள். சவத்தின்மீது பசும்பாலிலிருந்து கடைந்தெடுத்த வெண்ணெயை அப்பி, இந்த மேடையின் மேல் வைத்துத் தீ மூட்டுவார்கள். அங்கிருந்த பக்தர்களில் சிலர், இந்தியாவிலிருந்து சில பிரமுகர்களின் சடலங்களைத் தகனம் செய்யச் சுரகனிக்கு அனுப்பியதாகவும், பிறகு அந்த மாதிரி அஸ்திகளை இந்தியாவுக்குத் தாங்கள் திரும்ப அனுப்பியிருப்பதாகவும் தெரிவித்தார்கள்.

கோயில் சுவர்களில் கல்வெட்டுக்கள் இருப்பதாகவும் பெரேஸின் குறிப்பிட்டிருக்கிறார். அவை சம்ஸ்கிருத அட்சரத்தில் எழுதியிருப்பவை என்று அவர் எண்ணிக் கொண்டார். ஆனால் பின்னால் போய்க் கவனித்ததில் ஏதோ சில ஸ்தோத்திரங்கள் மட்டும் சம்ஸ்கிருதத்திலும், மற்றவை இப்போது வழங்கும் இந்திய மொழி லிபிகளிலும் எழுதியிருப்பதாகத் தெரிந்தது.

பெரேஸின் அங்கே போய் வந்ததால் பல விஷயங்கள் தெளிவாயின; முக்கியமாக, அது பார்ஸிகள் ஹீப்ருக்காரர்களுடைய புண்ணிய ஸ்தலம் என்று பலரும் எண்ணிவந்தது தவறு என்று தெரிந்தது. பின்புதான் முக்கியமான ஆராய்ச்சிகள் பல நடந்தன. சுமார் ஒரு நூற்றாண்டு வரையில் பல ருஷிய அறிஞர்களும் இப்படியே இந்தக் கோயிலைக் காண வந்தார்கள். பெரேஸினுக்கு அடுத்தபடி இங்கே வந்தவர் டோர்ன். அங்கே இருந்த ஒரு பக்தரிடமிருந்து நீண்ட ஏட்டுச் சுவடி ஒன்றும், சில மகாபாரதச் சுவடிகளும், பல ஸ்தோத்திரப் பாடல்களும் வாங்கிவந்தார். 1900 முதல் 1920-க்குள் இந்தக் கோயிலைப்பற்றிப் பல புதிய தகவல் அடங்கிய கட்டுரைகள் பத்திரிகைகளில் வெளியாயின. கல்வெட்டுக்களை மொழிபெயர்க்கவும் ஏற்பாடாயிற்று.

அஸர்பைஜான் அறிஞர்கள் சிலர் இந்தியப் பழம் பொருள் ஆராய்ச்சி இலாகா டைரக்டர்-ஜெனரலின் காரியாலயத்துக்கு இது விஷயமாக எழுதிக் கேட்கவே, 1936-இல் இந்தக் கல்வெட்டுக்களை மொழி பெயர்த்து அஸர்பைஜானுக்கு அனுப்பினார்கள். இந்திய மொழித் துறையில் பயிற்சி பெற்றவர் வோரோப்யோவ் தேச்யடோவ்ஸ்கி. சமீபத்தில் இவர் காலமானார்; இவர் இன்னும் பல கல்வெட்டுக்களையும் மொழிபெயர்த்து வெளியிட்டிருக்கிறார். இந்தக் கல்வெட்டுக்கள் எல்லாம் கோயில் சம்பந்தமான விவரம் அடங்கிய சாஸனங்களும் தஸ்தாவேஜுகளுந்தான். இவைகளில் சில குர்முகி லிபியிலும் சில தேவநாகரி லிபியிலும் அமைந்திருக்கின்றன. இதில் முதல் கல்வெட்டு 18-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் கடைசிக் கல்வெட்டு 19-ஆம் நூற்றாண்டின் பின்பகுதியிலும் செதுக்கியவை. அப்படியிருந்தும் சில கல்

வெட்டுக்கள் தெளிவாக இல்லை. குர்முகி லிபியில் செதுக்கியவை சீக்கியருடைய முதல் ஜபஸ்துதி (ஜபுஜி சாகிப்)யுடன் தொடங்குகின்றன. தேவநாகரிக் கல்வெட்டுக்கள் விநாயகர் வாழ்த்துடன் ஆரம்பமாகின்றன. இதிலிருந்து அந்தக் கோயில் பல வகைக் கோட்பாடு உள்ளவர்களுக்கும் புனித ஸ்தலமாக விளங்கி வந்தது என்று தெரிகிறது. அதோடு கோயிலின் வரலாற்றையும் பொதுவாகக் கண்டுகொள்ளலாம்.

காகேஸஸ் பிரதேசத்திலுள்ள நாடுகளுக்கும் இந்தியாவுக்கும் கி. பி. 16-ஆம் நூற்றுண்டில் வியாபாரம் பெருகத் தொடங்கியது. அப்போது முன்னைவிட அதிகமாக வியாபாரிகளும் கைத்தொழிலில் தேர்ந்தவர்களும் இந்தியாவிலிருந்து அஸர்பைஜானிலுள்ள ஷிமாக், பாகு முதலிய ஊர்களுக்கு வரலானுர்கள். அவர்கள்தான் இந்த இடத்தில் தீயைத் தெய்வமாக வழிபடத் தொடங்கியிருக்க வேண்டும் என்று தோன்றுகிறது. 1683-இலேயே இந்தியர்கள் சுவர் போல் சுரகனியில், இந்த இடத்தில் எழுப்பினுர்கள். இப்படி எரியும் தீயைப்பற்றிய செய்தி பரவியதும் இந்தியாவிலிருந்து இன்னும் ஏராளமான யாத்திரிகர்கள் இங்கே வந்தார்கள்; பிறகு பல பக்தர்களும் சந்நியாசிகளும் இந்தப் புண்ணிய ஸ்தலத்தில் நிலையாகத் தங்கி வழிபட்டு வந்தார்கள். இவர்களைத் தவிர, பாகுவிலும் அஸர்பைஜானைச் சேர்ந்த மற்ற ஊர்களிலும் இருந்து வந்த இந்தியர்களும் இங்கே நடக்கும் பண்டிகை, பருவம், சடங்கு முதலியவைகளில் கலந்துகொண்டார்கள். கைத்தொழிலில் தேர்ந்த இந்தியர்கள் பலர் 18-ஆம் நூற்றுண்டில் இந்தக் கோயிலுக்கு அருகில் வசித்து வந்தார்கள். 1713-இல் முதல் கல்வெட்டைச் செதுக்கியவன் தாராசந்திரன் என்ற இந்தியத் தச்சன். 17-ஆம் நூற்றுண்டின் கடைசியிலும் 18-ஆம் நூற்றுண்டின் தொடக்கத்திலுந்தான் (இப்போதிருப்பது போல்) கோயில் கட்டிடத்தைச் சீர்திருத்தி அமைத்திருக்க வேண்டும் என்று தெரிகிறது. சில சந்தர்ப்பங்களில் பக்தர்களும் வழிபடுவோரும் ஏராளமாக இருந்தார்கள்; சில சமயம் சுமாராக இருந்தார்கள். 18-ஆம் நூற்றுண்டிலும் 19-ஆம் நூற்றுண்டின் முன்பகுதியிலும் இங்கே பூஜை நேரத்தில் சுமார் 60 அல்லது 70 பேர் வழிபட்டு வந்தார்கள். பொதுவாக, இந்தியாவிலிருந்து வந்த பிராம்மணர்களே பூஜையை நடத்தினுர்கள். 19-ஆம் நூற்றுண்டின் பின்பகுதியிலிருந்து வழிபட வருவோரின் தொகை குறையத் தொடங்கியது. இங்கே 1850-இல் ருஷிய சக்கரவர்த்தி (ஜார்) இரண்டாம் அலெக்காண்டரின் முன்னிலையில் கடைசித் திருவிழா நடந்தது. பிறகு 1880-இல், அங்கே வாழ்ந்த ஒரே பிராம்மணரும் தனியே இருந்து இருந்து சலித்தவராய்க் கோயிலை அப்படியே விட்டுவிட்டுப் போய்விட்டார்.

இந்தக் கோயிலைப்பற்றி இன்னும் எவ்வளவோ தகவல் தெரிய வேண்டியிருக்கிறது. இங்கிருக்கும் கல்வெட்டுக்களில் சில மட்டுமே மொழிபெயர்க்கப் பெற்றிருக்கின்றன. அக்கினி வழிபாடுபற்றியும் இந்திய மதங்களுக்கும் அதற்கும் உள்ள தொடர்புபற்றியும் ஆராய வேண்டியிருக்கிறது. ஸோவியத் அறிஞர்களும் அவர்களுக்குத் துணையாக இந்திய அறிஞர்களும் சேர்ந்து இந்த ஆராய்ச்சியில் ஈடுபட்டு வருகிருர்கள். ருஷியர்களும் இந்தியர்களும் நெருங்கிப் பழகிய ரசமான பழைய வரலாறு இதனுல் தெளிவாகத் தெரியும்.

வேற்றுமை அவசியம்

இரண்டு ஆட்கள் எப்போது பார்த்தாலும் ஒரே அபிப்பிராயம் கொள்வார்களானுல், அந்த இரண்டு பேரும் பொதுவாக உதவாக்கரைகளாகத்தான் இருப்பார்கள்.

—டாக்டர் அடினுர்

மனத்தை உருக்கும் - நம்பவும் முடியாத - சரித்திர நிகழ்ச்சி!

தாராவின் மனைவி

சேஷ நாராயண

டில்லி பாதுஷாவான ஷாஜஹானின் மூத்த மகன் தாரா புகழ் பெற்ற மேதாவி. இளவரசனாக இருக்கும்பொழுதே சிற்றரசர்களுக்கு அவனிடம் அன்பு உண்டு. இலக்கியத்திலும் வேதாந்தத்திலும் தாராவுக்கு ஈடு பாடு அதிகம். கவி உள்ளம் படைத்த ரசிகனான அவனுக்கு அழகே வடிவாக மூன்று மனைவி மார் இருந்தார்கள்.

பட்டத்துக்குரிய இளவரசியின் பெயர் நாதிரா பேகம். ஜார்ஜியா நாட்டைச் சேர்ந்த கிறிஸ்துவப் பெண்மணி இரண்டாவது மனைவி. மூன்றும் மனைவியின் பெயர் ராணு தில்.

ஷாஜஹானுக்குப் பின் தாரா தான் பட்டத்துக்கு வரவேண்டிய வன். ஆனால் சகுனி போன்ற கெட்ட உள்ளம் படைத்த ஔரங்க சீப் தன் உறவினர்களான சுஜா - முராதரைச் சேர்த்துக்கொண்டு நான்கு தடவை தாராவைப் போரில் தோற்கடித்தான். தாரா வேறு வழி இன்றிச் சகோதர னுடன் சமரசம் செய்துகொள்ள வேண்டிய தாயிற்று. அவனுக்கு ராஜ்யத்தின் மேலோ பொருள் களின் மேலோ மோகமே இல்லை. கடைசிப் போரில் தாராவின் தள பதியே அவனுக்குத் துரோகம் செய்தான்; ஔரங்கசீபோடு சேர்ந்துவிட்டான். தாரா நாட்டை விட்டுப் பாரசீகத்துக்கு ஓட வேண்டியதாயிற்று.

அவன் பாரசீக நாட்டு மன்னனை மூன்று தடவை எதிரிகளிடமிருந்து காப்பாற்றியிருந்தான்; அதனால் தான் அங்கே புறப்பட்டுப் போனான். இப்பொழுது பாரசீக மன்னன் தனக்கு உதவி செய்வான் என்றுதான் தாரா நினைத்தான்.

ஆனால் விதி அங்கேயும் அவனுக்கு எதிராகச் சதி செய்தது. தாராவின் உதவியை மறந்த பாரசீக மன்னன் அவனுக்குப் பேட்டியே அளிக்க வில்லை. அதோடு சும்மா இல்லை; ஔரங்கசீபின் சொல்படி அவனைச் சிறையில் இட உத்தரவிட்டான்.

ஔரங்கசீப் படையுடன் வரு கிறான் என்ற வதந்தி தாராவுக்கு எட்டியது. அவன் நாதிராவுக்கு இதைத் தெரிவித்தான். உத்தமி யான அவள் மிகவும் பயந்து நடுங் கினாள்.

மறு நாள் சிறையில் வேறு அறை யில் அவள் பிணமாக இருந்ததைக் கண்டான் தாரா. அவள் அருகில் ஒரு தங்கக் கிண்ணம் கிடந்தது. வைர மோதிரம் அந்தக் கிண்ணத் துக்குள் இருந்தது. நாதிரா தற் கொலை செய்துகொள்வதற்கு முன் பாக அரபி மொழியில் ஒரு கடிதம் எழுதி வைத்திருந்தாள்:

''என் வம்சத்தைக் கெடுத்த கொடியவனான ஔரங்கசீபே, எங்கள் ரத்தத்தைக் குடித்து நீ எதைச் சாதிக்கப் போகிறாய்? கடவுளுக்கு என்ன பதில் சொல்லு வாய்?''

தாரா மிகவும் துக்கத்தில் ஆழ்ந் தான். நாதிராவின் மரணத்தால் அவனுக்குப் பைத்தியம் பிடித்து விடும்போல் இருந்தது.

ஔரங்கசீப் உண்மையிலேயே தான் படையெடுத்து வந்தான். அன்று சிறைச்சாலையில் தன் அறை யில் படுத்திருந்த தாரா, இன்னும் எழுந்திருக்கவில்லை. கோட்டைக்கு வெளியே குதிரைகளின் குளம்படிச் சப்தம் கேட்டது. ''பிடியுங்கள். அடியுங்கள்'' என்ற சொற்களும் அவன் காதுக்கு எட்டின. சிறைச்சாலையிலேயே தான் இருக்கும்பொழுது தன்னைப்

காப்பிரைட்: சாதன (கன்னடம்: 10-2-'57), ராய்ச்சூர்.

பிடிப்பதற்கு ஏன் இவ்வளவு கூச்சல் என்று அவன் உள்ளூற வருந்தினன். ஔரங்கசீபின் ஆட்கள் அவனைப் பிடித்துச் சங்கிலியால் பிணைத்து அழைத்துச் சென்ருர்கள்.

தாராவைத் தில்லிக்கு அழைத்து வந்தவுடன், அவன் கைகளில் விலங்கிட்டு யானையின் மீது உட்காரவைத்து ஊர்வலம் நடத்தினர்கள். தில்லியின் பட்டத்துக்குரிய இளவரசனை தாராவுக்கு இந்தக் கதி நேர்ந்ததே என்று மக்கள் கண்ணீர் சொரிந்தார்கள். தாராவின் ஊர்வலம் சென்று கொண்டிருந்தது. ராஜ பாட்டையில் ஒரு பக்கிரி தாராவின் அவல நிலையைக் கண்டான். யானையின் அருகில் வந்தான். பக்கிரி தாராவுடன் நெருங்கிப் பழகியவன். பக்கிரியின் கண்களில் நீர் ததும்பியது. அவன் தாராவை நோக்கி, ''அரசே, கொடை வள்ளலான தங்களுக்கு ஏன் இந்தக் கடினமான தண்டனை! கடவுள் அன்பு உள்ளம் படைத்தவரல்ல; கருணையற்றவர்'' என்ருன். இதற்குள் ஔரங்கசீபின் ஆட்கள் அவனை அங்கிருந்து இழுத்துச் சென்ருர்கள்.

பிறகு ஔரங்கசீப் தர்பாரைக் கூட்டினன். தாராவைக் குற்றவாளியாக நிறுத்தியிருந்தார்கள். விக்கிரகங்களைப் பூஜிப்பவன், இஸ்லாத்துக்கு விரோதி என்ற இரண்டு குற்றச்சாட்டுக்களை அவன் மீது சுமத்தினர்கள். தாராவுக்கு மரண தண்டனை கிடைத்தது. தில்லியிலேயே அவனைத் தூக்கிலிட்டார்கள்.

தாராவின் கிறிஸ்துவ மனைவியை ஔரங்கசீப் பின்னல் மணந்து கொண்டான்.

தாராவின் மூன்ரும் மனைவி ராணு தில் சிறையிலேயே அடைபட்டுக் கிடந்தாள். ஔரங்கசீப் தன்னைச் சந்திக்கும்படி அவளுக்கு வேலைக்காரி மூலம் ஒரு தரம் எழுதி அனுப்பினன்.

அவள் வீர ராஜபுத்திரப் பெண்மணி. அன்போடு காதலித்து அவள் தாராவை மணந்திருந்தாள். ராணு தில், ஔரங்கசீப்புக்கு எழுதிய பதில் இதுதான்:

''எதற்காக என்னை அழைக்கிறீர்கள்?''

''மோகினி, பட்டுப்போன்ற உன் கூந்தல் அழகைக் கண்டு நான் மயங்கிவிட்டேன். அரண்மனைக்கு வா'' என்று விடை கிடைத்தது.

ராணு தில் உடனே தன் கூந்தலை வெட்டி, அதைக் காகிதத்தில் சுற்றிக் கடிதத்துடன் கொடுத்தனுப்பினள்:

''இதோ அதை வெட்டி அனுப்பியிருக்கிறேன். பார்த்து மகிழ்'' என்பது கடிதத்தின் சுருக்கம்.

வெட்கம் இல்லாமல் ஔரங்கசீப் மறுபடியும் ஒரு கடிதம் எழுதினன்.

''அன்பே, ரத்தம் நிறைந்த உன் அழகிய கன்னத்தின் ருசியைப் பார்க்கலாம் என்று இருக்கிறேன்.''

உடனே ராணு தில் தன் வாளை எடுத்துக் கன்னத்தில் குத்திக் கொண்டாள். ஒரு துணியின்மேல் அந்த ரத்தத்தினல் அவள் எழுதினள்:

''இதோ, என் கன்னத்தின் ரத்தத்தை இந்தத் துணியின் மூலமாக அனுப்பியிருக்கிறேன். இப்பொழுது உனக்குத் திருப்தி ஏற்படும் என்று நினைக்கிறேன்.''

அன்று அந்தி வேளையில் ராணு தில் நெருப்பில் விழுந்து தன் உயிரை மாய்த்துக் கொண்டாள்.

நினைப்பும் குறியும்

சிந்தனை இல்லாமல் பேசுவது, குறி பார்க்காமல் சுடுவதையே போன்றது. —'இங்கிலீஷ் டைஜெஸ்ட்'

விநோதப் பிராணி

கவியரசர் ரவீந்திரநாத டாகுர்

தமிழ்: த. நா. ஸேனுபதி

கவிதை, தத்துவம், சிறுகதை, நாவல், கட்டுரை எதிலும் புது வழி காட்டி, வங்காளத்திலே இலக்கிய மன்னராய்த் திகழ்ந்தார் டாகுர். எத்தனை சிறு கதைகள்! அவைதான் எத்தனை விதம்! 'பொன் மலர்' வெளியீடாக வந்திருக்கும் ஒரு தொகுதியிலிருந்து இந்தக் கதையை எடுத்துத் தந்திருக்கிறோம். தெளிந்த மொழிபெயர்ப்பு. சிறுவர், பெரியவர் எல்லாரும் படிக்கத் தக்க அழகிய கதைகள்.

படைப்புத் தொழில் பெரும்பாலும் முடிந்துவிட்டது. ஓய்வுநேர மணி சொர்க்கலோகத்தில் அடித்தது. அப்போது பிரம்மா மனசில் ஒரு புதிய எண்ணம் தோன்றியது.

பொருள்களைச் சேமித்து வைக்கும் தேவதையை அழைத்து, ''உடனே மண், தீ, நீர், ஆகாயம், காற்று இந்த ஐந்து பொருள்களிலும் கொஞ்சம் கொஞ்சம் எடுத்து வா!'' என்று உத்தரவிட்டார்.

அப்போது அந்தத் தேவதை கை கட்டிப் பணிவுடன், ''தந்தையே, நீங்கள் முன்னே ஆர்வத்தோடு யானை, திமிங்கிலம், மலைப் பாம்பு, சிங்கம், புலி இவைகளைப் படைக்கும்போது கணக்கு வழக்கில்லாமல் பொருள்களை உபயோகித்து விட்டீர்களே! கனமான பொருள்கள் எல்லாம் பெரும்பாலும் செலவழிந்துவிட்டன. இப்போது காற்றும், ஆகாயமுந்தான் மிஞ்சியிருக்கின்றன. அவை எவ்வளவு வேண்டுமானாலும் இதோ தருகிறேன்'' என்றது.

சற்று நேரம் நாலு ஜதை மீசையையும் தாடியையும் உருவிக் கொண்டே இருந்துவிட்டுப் பிறகு பிரம்மா, ''சரி; எதெது கையிருப்போ அதையெல்லாம் கொண்டு வா'' என்றார்.

ஒரு பிராணியைப் படைக்க உட்கார்ந்தார். இதற்குக் கொம்பும் வைக்கவில்லை; நகமும் படைக்கவில்லை. பல் வைத்தார். ஆனால் இது மெல்லப் பயன்பட்டதே தவிரக் கடித்துத் தின்ன லாயக்கற்று இருந்தது. தீயிலிருந்து சிறிது எடுத்துப் பயன்படுத்தினார். அதனால் இந்தப் பிராணி போரில் சில காரியங்களுக்கு உபயோகப்படும் நிலை ஏற்பட்டது. ஆனால் போரில் தானாகக் கால் நகத்தால் பீறும் சக்தி இதற்கு ஏற்படவில்லை. இது முட்டை போடும் பிராணியல்ல; இருந்தாலும், பிற்காலத்தில் மனிதர்கள் ஏதாவது பொய் புரளியான செய்தியைக் கேட்டால், ''இந்தப் பிராணி இட்ட முட்டை மாதிரி'' என்று கேலியாகச் சொல்லும் வழக்கம் ஏற்பட்டது.

எப்படியோ கையில் மிகுதியாக இருந்த காற்றையும் ஆகாயத்தையும் ஏராளமாகப் பயன்படுத்தி இதைப் படைத்துவிட்டார் பிரம்மா. அதனால் இந்தப் பிராணி தன் இஷ்டம்போல் திரியலாயிற்று.

காப்பிரைட்: பொம்மைத் திருடன் (டாகுர் சிறுகதைத் தொகுப்பு);
வெளியிட்டோர்: பொன் மலர் வெளியீடு,
மயிலாப்பூர், சென்னை-4. விலை 12 அணு.

காற்றைவிட வேகமாகத் தாவி ஓடியது. துள்ளித் துள்ளி ஆகாயத்தையே முட்டிவிடுவது என்று தீர்மானம் செய்துகொண்டதுபோல் ஆட்டங் காட்டியது. மற்றப் பிராணிகள் காரணம் இருந்தாலொழிய எகிறுவதில்லை. ஆனால் இதுவோ காரணம் ஏதும் இல்லாமல் துள்ளித் திரிந்தது. தன்னை விட்டே தான் ஓடிவிடலாம் என்று பார்ப்பது போலத்தான் இருந்தது இதன் நிலை! ஆனால் யாரையும் முட்டுவதில்லை; கொல்லுவதில்லை. எப்போதும் ஓடப் பார்க்கும்; அவ்வளவுதான். ஓடிக்கொண்டே தொபீல் என்று கீழே விழும்; சோர்ந்து மயங்கிவிழும். அதுதான் இதன் சுபாவம். ஞானிகள் எல்லாரும், ''மண், நீர், தீ அதிகம் கலக்காமல் காற்றையும் ஆகாயத்தையும் சேர்த்தால் இப்படித்தான் நேரும்'' என்று சொல்லிக்கொண்டார்கள்.

பிரம்மாவுக்கு உண்டான மகிழ்ச்சியைச் சொல்லி முடியாது. பிராணிகள் வாழ்வதற்காக அதற்கு ஏற்றபடி காடு, குகை இப்படிப் பல இடங்களை அமைத்திருந்தார். ஆனால் இது தாவித் தாவிச் செல்வதைப் பார்க்க வேண்டுமென்ற ஆசையால் பரந்த மைதானத்தை இதற்கென்று விட்டு வைத்தார்.

அந்த மைதானத்தின் எல்லையில் ஒரு மனிதன் குடியிருந்தான். அவன் பல சாமான்களைச் சேகரிப்பது வழக்கம். அவைகளைச் சுமந்து செல்வதென்றால் சிரமமாக இருக்கும். அடிக்கடி இந்தப் பிராணி வாயு வேகமாகத் துள்ளி ஓடுவதைப் பார்த்ததும் அவனுக்கு ஓர் எண்ணம் தோன்றிற்று: 'இதை எப்படியாவது கட்டிப் பிடித்துவிட்டோமானால் இதில் ஏறிச் சாமான்களை எடுத்துச் செல்லலாமே!'

கம்பி வலை போட்டு ஒரு நாள் இதைப் பிடித்துவிட்டான். இதன் முதுகில் சேணமும் வாயில் கடிவாளமும் போட்டு, இதன் தோளிலும் கண்களிலும் தோல்பட்டை கட்டினான். சவுக்கால் இதன் கழுத்தில் அடி கொடுத்து, தான் விரும்பும் பக்கமாக இதை ஓட வைத்தான்.

மைதானத்தில் அப்படியே விட்டால் எங்காவது கையை விட்டு ஓடிவிடுமோ என்று மைதானத்தைச் சுற்றி நாலு பக்கமும் சுவர் எழுப்பிவிட்டான். புலிக்குக் காடு இருந்தது; அதனால் அங்கேயே தங்கியிருந்தது புலி. சிங்கத்துக்குக் குகை இருந்தது: அதனால் சிங்கம் அங்கே நிம்மதியாக இருந்தது. ஆனால் இந்தப் பிராணிக்கோ மைதானம் ஒன்றுதான் இடம். ஓய்ந்த வேளைகளில் இது மனிதன் கட்டி வைத்த தனிக் கொட்டகையில் வந்து புல் தின்னும். காற்றும் ஆகாயமும் இதன் உடலில் இருந்தாலும் இதன் தலைவிதி ஓர் இடத்தில் அடங்கிக் கிடக்க வேண்டும் என்றாயிற்று.

சில சமயம் இந்த அடக்கு முறையைப் பொறுக்க முடியாமல் சுவரின் மேல் தாவப் பார்க்கும். ஆனால் இதன் கால் குளம்புதான் தேய்ந்ததே தவிரச் சுவர் பழைய படி அசையாமல் உறுதியாகத்தான் இருந்தது. இருந்தாலும், சுவரின் மேல் பூசிய காரை, சுண்ணாம்பு எல்லாம் உதிர்ந்து அந்தச் சுவர் விகாரமாகி வந்தது.

இதைக் கண்டு மனிதனுக்கு எரிச்சல் எரிச்சலாக வந்தது.

''இதைத்தான் நன்றி கெட்ட தன்மை என்கிறார்கள். தீனி போடுகிறேன்; தண்ணீர் காட்டு கிறேன். இதற்கென்று சம்பளம் கொடுத்து ஆள்கூட அமர்த்தி இதன்மேல் சவாரி செய்ய வைத்துப் பழக்கப் பார்க்கிறேன். அப்படியும் இதை வசப்படுத்த முடிய வில்லையே!'' என்று ஆத்திரம் அடைந்தான்.

இதைத் தடவிக் கொடுத்துத் தாஜா படுத்தப் பார்த்தான். அப்போது மட்டும் இது சும்மா இருந்தது. மனிதன் அண்டை அயலில் இருப்பவர்களைப் பார்த்து, ''எவ்வளவு சாதுவான பிராணி பார்த்தீர்களா!'' என்று பெருமை அடித்துக்கொண்டான். ஆனால் இது அடிக்கடி 'ஹி ஹி ஹி ஹி' என்று கனைக்கலாயிற்று. இதனால் மனிதனுக்குத் தூக்கம் கலைந்து விடும். அக்கம் பக்கத்தில் இருந்தவர்களோ இதைக் கேட்டு, ''ஆகா! என்ன சாது! இருக்கிறவர்களைத் தூங்க விடுகிறதில்லை!'' என்று முணுமுணுக்க லானார்கள். இதன் வாயை மூடப் பலவிதமாக முயன்று பார்த்தான் மனிதன். ஆனால் இதன் மூச்சை ஒரேயடியாக நிறுத்தினாலொழிய வாயை மூட முடியும் என்று தோன்றவில்லை. அப்படி முடியும், இதன் கனைப்புச் சத்தம் காதுக்கு நாராசமாகத் தான் இருந்தது.

ஒரு நாள் பிரம்மாவின் காதிலும் இந்தக் கனைப்புச் சத்தம் விழுந்தது. அவர் உறக்கம் கலைந்து எழுந்து மைதானத்தைக் கவனித்தார். இந்தப் பிராணி இருக்கும் சுவடே தெரியவில்லை.

உடனே அவர் யமதர்மராஜனை அழைத்து, ''பெரிய சாமர்த்தியக் காரன்தான் நீ! என் அருமைப் பிராணியைத் தீர்த்துக் கட்டி விட்டாயோ இல்லையோ?'' என்று வெறுப்போடு கேட்டார்.

யமன், ''சுவாமி, எப்போது பார்த்தாலும் என் மேலேயேதான் உமக்கு வீண் சந்தேகம் ஏற்பட்டு விடுகிறது! அதோ மனிதர்கள் குடியிருக்கும் இடத்தில் சற்றே உற்றுப் பாரும்'' என்றான்.

பிரம்மா அங்கே கவனித்தார். சின்னஞ் சிறு கொட்டகை ஒன்றில் நாலு பக்கமும் அமைந்த சுவருக்குள் தாம் படைத்த தாவும் பிராணி மெதுவாக 'ஹி ஹி ஹி ஹி' என்று கனைத்துக்கொண்டிருந்ததைக் கண்டார்.

பிரம்மாவுக்கு உள்ளம் வெடிக்கும்போல் வேதனை மூண்டது. அவர் மனிதனை நோக்கி, ''அதை விடுவிக்கிறாயா, இல்லையா? என் வார்த்தைக்கு மதிப்புத் தரா விட்டால் இதோ அதற்கு நகம், கடிக்கும் பல் எல்லாம் அமைத்து விடுவேன், ஜாக்கிரதை! உனக்கு என்ன வந்தது அதைப்பற்றி? நீ சும்மா இருப்பதுதானே?'' என்று கூவினார்.

மனிதன், ''சுவாமி, பாவம், இந்தச் சாதுவான பிராணிக்கா கிழிக்க நகமும் கடிக்கப் பல்லும் அமைக்கப் போகிறீர்கள்? இதோ சொல்கிறேன், கேளுங்கள்: என்ன செய்தாலும் இது கட்டிப் போட்டு மேய்ப்பதற்குத்தான் லாயக்கு. இதன் நன்மைக்காகத்தான் இப்படிக் கொட்டகை கட்டி அதில் இதை விட்டிருக்கிறேன். இதற்கேற்ற பேஷான இடம் இதுதான்'' என்றான்.

பிரம்மா மீண்டும் பிடிவாதமாக, ''அதை இப்போது விடுவிக்கிறாயா, இல்லையா?'' என்று கேட்டார்.

மனிதன், ''சரி; சுவாமி, அப்படியே செய்கிறேன். ஆனால் இது நாலு நாள் கூத்துத்தான். அதற்கப்பால் பாருங்களேன். இந்த மைதானத்தைவிட நான் இதற்கென்று அமைத்துக் கொடுத்த கொட்டகைதான் இதற்குப் பாந்தமாக இருக்கப் போகிறது. இதோ சொன்னேன்: என் வார்த்தை பொய்த்தால் உங்கள் காலில் விழுந்து, எவ்வளவு தோப்புக் கரணம் வேண்டுமானாலும் உங்கள் எதிரே போடத் தயார்!'' என்றான்.

பிறகு அவன் இந்தப் பிராணியை மைதானத்தில் விட்டுவிட்டான். ஆனால் பிரம்மா கண்ணயர்ந்திருக்கும் சமயம் பார்த்து இதன் முன்னங்கால் இரண்டையும் சேர்த்து உறுதியான கயிற்றால்

கட்டிவிட்டான். அப்போது பார்க்க வேண்டுமே இதன் துள்ளல் அழகை! தவளை கெட்டது; அவ்வளவு அருமையாக இருந்தது!

பிரம்மா தொலைவில் எங்கோ உயரமான இடத்தில் இருந்தார். அங்கிருந்து இது தவளைபோல் துள்ளுவது மட்டும் அவருக்குத் தெரிந்ததே தவிர இதன் முன்னங் கால்கள் இரண்டையும் சேர்த்துக் கட்டியிருப்பது அவர் கண்களில் படவில்லை. இவ்வளவு பெரிய பிராணி இந்த மாதிரி தவளைப் பாய்ச்சல் பாய்வது அவர் படைப்புத் திறமையையே பழிப்பதுபோல் இருந்தது. அவர், ''சேச்சே! நான் செய்தது தவறுதான்!'' என்று தம்மைத் தாமே வெறுத்துக் கொண்டார்.

இதுதான் சரியான சமயம் என்று மனிதன் அவர் எதிரில் வந்து கைகூப்பி, ''நீங்களே சொல்லுங்கள். இதை வைத்துக்கொண்டு என்ன செய்வது? உங்கள் பிரம்ம லோகத்தில் மைதானம் ஏதாவது இருந்தால் இதோ அங்கே அனுப்பி வைத்துவிடுகிறேன். என் மேல் குறை சொல்லாதீர்கள்!'' என்றான் கண்டிப்பாக.

பிரம்மா, 'இதேதடா தொல்லை!' என்றார் சலிப்புடன்; ''சரி; சரி; நீயே அதை வைத்துக்கொள்; எப்படி வேண்டுமானாலும் செய்து கொள்!'' என்று அவன் விருப்பம் போல் விட்டுவிட்டார்.

மனிதன், ''சுவாமி, இதைச் சமாளிப்பது எவ்வளவு தொல்லை தெரியுமா?'' என்றான்.

அதற்குப் பிரம்மா, ''அதுதான் மனிதனுக்குள்ள சாமர்த்தியம்!'' என்றார்.

உள்ளுக்குள் மகிழ்ச்சி பொங்க மனிதன் இந்தப் பிராணிக்குக் குதிரை என்று பெயரிட்டு இதைத் தன் வாகனமாக அதுமுதல் பயன்படுத்தலானான்.

நிலையான மனம் வேண்டும்

ஒருமனம் வைத்து இறைவனது திருநாமத்தைச் சொன்னால், மன மாசுகள் நீங்கும். மனம் ஒரு குரங்கு. காடோ செடியோ கடற்புறமோ என்று ஓடிவிடும். நாம் கோயிலில் தீபாராதனை பார்த்துக்கொண் டிருப்போம்; ஆனால் நம் மனமோ எங்கேயாவது ஓடித் திரியும்.

ஒரு ஞானி ஒரு வீட்டுக்கு வந்தார். வீட்டு எஜமானியிடம், ''ஐயா எங்கே?'' என்று கேட்டார். ''பூஜையில் இருக்கிறார்'' என்று சொன்னாள் அந்த அம்மாள்.

வந்த ஞானி, ''பூஜையிலா? குப்பை மேட்டிலா?'' என்று கேட்டுவிட்டு அங்கே தங்கி இருந்தார்.

பூஜையை முடித்து ஐயா மாடியிலிருந்து இறங்கி வந்ததும், பெரியவர் கேட்டதைக் கூறினாள் எஜமானி அம்மாள். உடனே அவர், 'நான் குப்பைமேட்டில் இருந்தது வந்தவருக்கு எப்படித் தெரியும்!' என்று வெட்கிப்போனாராம்.

ஐயா பூஜையில் இருந்தாலும் அவருடைய மனம் குப்பை மேட்டுக்குத் தாவிவிட்டது!

—ஒரு பக்தர்

புத்தகப் பகுதி

உடலுக்குள்ளே

மாயவரம் எஸ். மகாலிங்கம்

கடவுளே படைத்த மகா ஆச்சரியமான யந்திரம் என்று மனித உடலைப்பற்றிக் கூறுவார்கள். நம் உடலின் உள் உறுப்புக்கள்தான் எவ்வளவு நுட்பமாய் வேலை செய்கின்றன - அதுவும் நம்மை அறியாமலே! தொடர்ச்சியாகப் பல வாரங்கள் 'சுதேசமித்திரன்' ஞாயிறு மலரில் வந்த கட்டுரைத் தொகுப்பு ஒன்றின் முன் பகுதியை 'உங்கள் உடல்' என்ற தலைப்பில் 'மஞ்சரி' ஏப்ரல் இதழில் வெளியிட்டிருந்தோம். மீதிப் பகுதி இது.

காப்பிரைட்: சுதேசமித்திரன் (தமிழ்),
சென்னை.

உடலுக்குள்ளே

★

மனிதன் ஆகாரம் இல்லாமல் மூன்று வாரங்களும், தண்ணீர் இல்லாமல் மூன்று நாட்களும் இருக்கலாம். ஆனல் காற்று இல்லாமல் மூன்று நிமிஷங்கள்கூட இருக்க முடியாது. ஒரு நிமிஷத்துக்கு நாம் 18 அல்லது 20 தடவை சுவாசிக்கிறேம். (ஒரு நாளில் 25,920 தடவைகளுக்குக் குறைவில்லாமல் சுவாசிக்கிறன் ஒரு மனிதன்.) 35 பவுண்டு காற்றை ஒவ்வொருவரும் ஒவ்வொரு நாளும் சுவாசிக்கிறேம். ஒரு பவுண்டு பிராணவாயுவைத் தினமும் உட்கொள்ளுகிறேம். வயசைப் பொறுத்துச் சுவாச எண்ணிக்கை மாறுதல் அடைகிறது.

பிறந்த 2 மாதக் குழந்தையிலிருந்து இரண்டு வயது வரை 35 தடவைகள் ஒரு நிமிஷத்துக்கு.

2 வயது முதல் 6 வயது வரை 23 தடவைகள் ஒரு நிமிஷத்துக்கு.

6 வயது முதல் 12 வயதுவரை 20 தடவைகள் ஒரு நிமிஷத்துக்கு.

12 வயது முதல் 15 வயது வரை 18 தடவைகள் ஒரு நிமிஷத்துக்கு.

15 வயதுக்கு மேற்பட்டு 16 - இலிருந்து 18 வரை ஒரு நிமிஷத்துக்கு.

மூக்கின் உள்பாகம்



கருப்பையில் உள்ள வரையில் குழந்தை மூச்சு விடுவதில்லை. பிராண வாயுவைத் தாயின் ரத்தத்திலிருந்தே பெற்று, கரியமில வாயுவை அந்த ரத்தத்துக்குள்ளேயே போக்குகிறது.

ஆண்களைவிடப் பெண்களில் மூச்சுவிடும் எண்ணிக்கை அதிகமாக இருக்கும். சாதாரணமாக இருப்பதைவிட வேலை செய்யும் பொழுது சுவாசிப்பதன் எண்ணிக்கை அதிகமாகிறது.

(1) சுவாசித்தல் என்றல், பிராணவாயுவை உட்கொண்டு கரியமில வாயுவை வெளிவிடுதல் என்று அர்த்தமில்லை. உட்கொள்ளும் பிராணவாயுவைக்கொண்டு, திசுக்களைச் சிதைவு அடையச் செய்து (oxidation), அதனுள் அடங்கியிருக்கும் சக்தியைப் வெளிப்படுத்துவதுதான் சுவாசித்தல். இந்தச் சக்தியினல்தான் நாம் பல வேலைகளைச் செய்ய முடிகிறது.

மூக்கினல் சுவாசிக்காமல், வாயினல் சுவாசித்தால் வியாதிக் கிருமிகள் உள்ளே சென்று தொண்டையில் சதை வளரும். இதைத்தான் அடினயிட்ஸ் (Adenoids) என்று சொல்லுகிறேம்.

(2) இரண்டு கைகளினாலும் நாம் 236 ராத்தல் நிறை தூக்கலாம். தோளில் 330 பவுண்டு தூக்கலாம். நம்மை அறியாமலே நம்முடைய உடலின்மீது மூன்று யானைகளின் கனம் - அதாவது 30,000 ராத்தல் காற்று அமுக்கம்-அழுத்திக்கொண்டிருக்கிறது. (பூமியைச் சுற்றி இருக்கும் காற்றின் கனம் சதுர அங்குலத்துக்கு 14·7 ராத்தல் அமுக்கத்தை உண்டுபண்ணுகிறது. இருந்தபோதிலும் நாம் நசுங்கவில்லை. காரணம், காற்றின் அமுக்கம் நம்மீது நாலு பக்கங்களிலும் சமமாகப் பரவிவிடுவதுதான். ஒவ்வொரு மனிதனும் நன்றாக ஊதி உப்பிய ரப்பர்ப் பலூன் மாதிரிதான் இருக்கிறான். உடலின் வெளியே அமுக்கம் இருக்கிறது. ஆகையினால்தான் உடல் நசுங்காமல் இருக்கிறது.

(3) காற்றுக் குழாய் 4 அங்குல நீளம்; முக்கால் அங்குல அகலம். 16 முதல் 20 குருத்தெலும்புகள் (Cartilage) வளையங்களினால் அமைந்திருக்கின்றன. நெகிழக்கூடியவை இந்த எலும்புகள். இவை இரண்டு கிளையாகப் பிரிகின்றன. ஒவ்வொன்றும் பிறகு இரண்டாகப் பிரிகிறது. ஒவ்வொரு கிளையும் திரும்பவும் அநேகச் சிறு கிளைகளாகப் பிரிகிறது. ஒவ்வொரு சிறு கிளையும் அதன் நுனியில் திராட்சைக் கொத்துப்போல் திரளாக இருக்கும் காற்றுப் பைகளாகச் சுவாச கோசங்களுக்குள் முடிவடைகிறது. ஒவ்வொரு கிளையிலும் 1700 காற்றுப் பைகள் இருக்கும். சுவாச கோசங்களில் இத்தகைய பைகள் லட்சக்கணக்கில் இருக்கின்றன. இந்தக் காற்றுப் பைகளை எல்லாம் பிரித்துப் பரப்பினால், அநேக சதுர கஜங்களை இவை அடைத்துக்கொள்ளும். பைகள் ஈரப் பசையுள்ளவை. சுவர்கள் மெல்லியவை; விரிந்து சுருங்கும் இயல்புடையவை. இவை விரியும்பொழுது வெளிக் காற்று உட்செல்லும். சுருங்கும்போது உட்காற்று வெளி வரும்.

இருதயத்தின் இரு புறங்களிலுமாக மார்பில் இரண்டு நுரையீரல்கள் (சுவாச கோசங்கள்) இருக்கின்றன. வலது சுவாச கோசத்தில் மூன்று மடல்களும், இடது சுவாச கோசத்தில் இரண்டு மடல்களும் இருக்கின்றன. இவை கடற்பஞ்சுபோல் மிருதுவானவை. பிறந்த குழந்தையின் சுவாசகோசம் ஊதா (Pink) நிறமாக இருக்கும். வயதானவர்களின் சுவாசகோசம் கறுப்புக் கோடுகள் உள்ள சாம்பல் நிறமான பை போல் இருக்கும். காரணம், சுவாசிக்கும் காற்றில் உள்ள தூசிகள் சுவாசகோசங்களில் போய் அடைவதுதான்.

எவ்வளவு அழுத்தமாகப் பிரயாசைப்பட்டு மூச்சை வெளிவிட்டாலும், சுவாசகோசங்களில் உள்ள காற்றை முழுவதும் நீக்கிக் காலி செய்துவிட முடியாது. எப்பொழுதும் நிரந்தரமாக 2500 கன ஸெண்டிமீட்டர் காற்றைத்தான் ஒவ்வொரு மூச்சிலும் உட்கொள்கிறோம். தினமும் 900 கிராம் கரியமிலவாயுவை மூச்சு விடுவதன் மூலம் வெளியேற்றுகிறோம்.

நம் நுரையீரல்களுக்குப் போதிய காற்றுக் கிடைக்காத காரணத்தினாலேயே கொட்டாவி ஏற்படுகிறது.

(4) தொண்டையில் ஏழு துவாரங்கள் இருக்கின்றன. நடுச் செவிக் குழாய்களின் துவாரங்கள் இரண்டு, பின் நாசித் துவாரங்கள் இரண்டு, உணவுக் குழலின் துவாரம் ஒன்று, காற்றுக் குழலின் துவாரம் ஒன்று, வாய்க்குச் செல்லும் துவாரம் ஒன்று ஆக மொத்தம் ஏழு.

முன் தொண்டை, உணவுப் பாதையும் காற்றுப் பாதையும் கூடும் சந்திப்பாகும். இந்தச் சந்திப்பில் இரண்டு பாதைகளும் ஒன்றையொன்று குறுக்கிட்டுச்



செல்லுகின்றன. முன் தொண்டையின் கீழே உணவுப் பாதையின் பக்கமாகக் காற்றுக் குழல் இருக்கிறது. இதன் வாசலில் ஒரு மூடி இருக்கிறது. அந்த மூடி முன் தொண்டையிலிருந்து உணவுக் குழலுக்கு உணவு செல்லும் நேரம் தவிர மற்ற நேரமெல்லாம் திறந்தே இருக்கும். உணவு செல்லும்போது அது அடைபட்டு ஒரு பாலம்போல் உதவுகிறது. காற்றுக் குழலுக்குள் ஆகாரமும் செல்லாதபடி தடை ஏற்படுகிறது. அப்படி ஆகாரக் குழலுக்குள் செல்லவேண்டிய ஆகாரம் காற்றுக் குழலுக்குள் சென்றுவிட்டால் புரையேறுகிறது.

(5) 'பல் போச்சோ சொல்



பல்லின் பாதங்கள்

போச்சோ' என்பார்கள். உணவை மென்று கூழாக்குவதற்கு மட்டும் பற்கள் பயன்படவில்லை; சொற்களை நன்றாக உச்சரிப்பதற்கும் பயன்படுகின்றன. பற்கள் இல்லாவிட்டால் பேசும்பொழுது காற்றுத் தான் புஸ், புஸ் என்று வரும். பேச்சைப் புரிந்துகொள்ள முடியாமல் வாய் திறக்கும்; ஆனால் வார்த்தைகள் வருவதில்லை. பற்கள் இல்லாத வாய் துருத்தி போல ஒரே ஒலி எழுப்புவதோடு அமைந்துவிடும். எனவே, மேற்கூறிய வசனத்தில் நூற்றுக்கு நூறு உண்மை இருக்கிறது. பேச்சுக்கும் உணவை மெல்லுவதற்கும் மட்டுமே பற்கள் உபயோகப்படவில்லை. முத்துக் கோத்தாற்போல், பளபளப்பாயும் வெண்மையாகவும் பற்கள் அமைந்திருந்தால் அவை முகத்துக்கு ஓர் அலாதி அழகையும் கொடுக்கின்றன. அப்படிப்பட்ட இந்தப் பற்களின் எண்ணிக்கை எவ்வளவு தெரியுமா? ஆச்சரியமான கேள்விதான். எல்லாரும் ''32'' பற்கள் என்று உடனே சொல்லிவிடுவார்கள். ஆனால் இந்த 32 பற்களும் பிறந்தவுடனேயே தென்படுவதில்லை. கிட்டத்தட்ட 20 வயசில் தான் இந்த எண்ணிக்கை தெரியும். குழந்தை பிறந்த ஆறுவது மாதத்தில்தான் பால் பற்கள் தோன்றத் தொடங்குகின்றன. இரண்டாவது வயசில் 20 அரிசிப் பற்கள் தென்படுகின்றன. இவை 6 அல்லது 7-ஆம் வயசிலிருந்து ஒவ்வொன்றாக விழ ஆரம்பித்து 12-ஆம் வயசில் திரும்பவும் முளைக்கின்றன. 17-ஆம் வயசுக்குள் 28 பற்கள் இருக்கும். 17-ஆம் வயதிலிருந்து 25-ஆம் வயசுக்குள் மேலும் நான்கு பற்கள் தோன்றும். சில சமயம் இந்த நான்கு பற்கள் 30-ஆம் வயசில் கூட முளைக்கும். கடைசியில் முளைக்கும் இந்த நான்கு பற்களுக்கும் ஞானப் பற்கள் அல்லது விவேகப் பற்கள் என்று பெயர்.

12 வயசுக்குள் விழும் பற்கள் எல்லாம் திரும்பவும் முளைக்கும். 12 வயசுக்கு மேற்பட்டு விழும் பற்கள் எல்லாம் திரும்பவும் முளைப்பதில்லை. 20-ஆம் வயசில் தெரியும் 32 பற்களும் மேல் தாடைக்கு 16, கீழ்த்தாடைக்கு 16 விகிதம் இருப்பதைக் காணலாம். இந்தப் பற்கள் எல்லாம் ஒன்று போல் இல்லை. உருவத்துக்கும், உபயோகத்துக்கும், அமைப்புக்கும், இருக்கும் இடத்துக்கும் தக்கபடி உளிப்பற்கள், கோரைப் பற்கள், முன் கடைவாய்ப் பற்கள், பின் கடைவாய்ப் பற்கள் என்று நான்கு விதமாகப் பிரித்திருக்கிறார்கள். உணவை உளிப்பற்கள் வெட்டுகின்றன. கோரைப் பற்கள் கிழிக்கின்றன. முன் பின் கடைவாய்ப் பற்கள் அரைக்கின்றன. எண்ணிக்கையிலும் இவை மாறுபடுகின்றன.

ஒவ்வொரு தாடையிலும் ஒவ்வொரு பக்கத்துக்கும்,

பின் கடைவாய்ப் பற்கள்	3
முன் கடைவாய்ப் பற்கள்	2
கோரைப் பற்கள்	1
உளிப் பல்	2
ஆக	8
இரண்டு பக்கத்துக்கும்	16
இரண்டு தாடைகளுக்கும்	32

இந்த 32 பற்களும் கீழ்க்கண்ட வரிசைகளில் அமைந்திருக்கின்றன.

வலது பக்கம்: மேல் தாடை: பி. க. 3; மு. க. 2; கோரை 1; உள் 2. கீழ்த் தாடை: பி.க. 3; மு.க. 2; கோரை 1; உள் 2.

இடது பக்கம்: மேல் தாடை: உள் 2; கோரை 1; மு. க. 2; பி. க. 3. கீழ்த்தாடை: உள் 2; கோரை 1; மு. க. 2; பி. க. 3.

பின் கடைவாய்ப் பற்கள் 12-இல் நான்கு தாமதமாக முளைக்கின்றன. அவைகளைத்தான் விவேகப் பற்கள் என்கிறோம். குழந்தைப் பருவத்தில் பின்கடைவாய்ப் பற்கள் பன்னிரண்டும் தென்படுவதில்லை. ஆகையினால்தான் எண்ணிக்கை இருபதாக இருக்கிறது.

பல்லின் மேல்பாகத்தை மூடிக்கொண்டிருக்கும் வெண்மையான பாகத்துக்குத்தான் சிப்பி (எனமல்) என்று பெயர். இது உடலிலேயே மிகவும் கெட்டியான பாகம். இதற்குக் கெடுதி ஏற்பட்டால் பல் சொத்தையாகி விழுந்துவிடும். உடலில் ஏற்படும் பல வியாதிகளுக்குக் காரணம், பற்களையும் பல்லிடுக்குகளையும் நல்ல முறையில் வைத்துக் கொள்ளத்தவறுவதுதான்.

(6) நம் உடலில் உபயோகம் இராத உறுப்புக்கள் 180 இருக்கின்றன. இவைகளுக்கு எச்சவுறுப்புக்கள் என்று பெயர். அவைகளில் குத எலும்பும் (Coccyx), குடல் வாலும் (Veroniform appendix), பிறை மடிப்பு (Plica Semilunaris) என்ற மூன்றாவது இமையின் எச்சமும், வளர்ச்சி குன்றிப் பயன் அற்றிருக்கும் செவி மடலை இயக்கும் தசைகளும், உடம்பின் மயிர்ப் போர்வையும் நமக்குத் தெரிந்த உறுப்புக்களே. இதனால்தான் ஒரு விஞ்ஞானி நம் உடலை, ''நடமாடும் தொல் பொருட்காட்சிச்சாலை (மியூஸியம்)'' என்று குறிப்பிட்டார்.

(7) மனித மூளையின் எடை மூன்றிலிருந்து நான்கு ராத்தல். பெண்ணின் மூளை ஆணின் மூளையைக் காட்டிலும் எடையில் கொஞ்சம் குறைவு. மூளையில் மூன்று முக்கிய பாகங்கள் இருக்கின்றன. அவை பெருமூளை (Cerebrum), சிறுமூளை (Cerebellum), முகுளம் (Medulla oblongata) என்பவை. ஒருவனுடைய புத்திசாலித்தனம் மூளையின் எடையைப் பொறுத்ததல்ல; பெருமூளையின் மேற்பரப்பில் உள்ள மடிப்புக்களின்



மூளை
1. பெருமூளை
2. சிறுமூளை
3. முகுளம்

எண்ணிக்கையையும் அவைகளுக்கு இடையில் உள்ள ஆழத்தையும் பொறுத்தது. அறிவு, ஆற்றல், துணிவு, ஞாபகசக்தி, கற்பனைசக்தி, உடலைக் கட்டுப்படுத்திக் கொள்ளும் சக்தி, ஐம்புலன்களையும் அடக்கியாளும் சக்தி, மனக்கிளர்ச்சிகள், இயற்கையின் எழிலை அநுபவிப்பது, புஷ்பங்களின் வாசனையை அறிவது, நல்ல பாட்டுக்களை அநுபவிப்பது, உணவுப் பண்டங்களின் சுவையை அறிந்து கொள்ளுவது, சுகம், துக்கம், மகிழ்ச்சி, பசி, தாகம், மயக்கம், வலி - இவ்வளவுக்கும் காரணம் பெருமூளைதான். இது மூளையின் முக்கிய பாகம்; முழு மூளையின் எடையில் பத்தில் ஒன்பது பாகம்.

பெரு மூளையின் வெளியே நரைத்த பொருளும் (Grey matter), உட்புறம் வெள்ளைப் பொருளும் (White matter) இருக்கின்றன. நரைத்த பொருள் தான் மிகவும் ஆச்சரியமான பாகம். இதில் பல லட்சக் கணக்கான நரம்புக் கண்ணறைகள் (Nerve-cells) இருக்கின்றன. புத்தி சாதுரியத்துக்கு இதுதான் பிறப்பிடம். இது ஊறு அடைந்தால் மூளை மழுங்கிவிடுகிறது.

மூளையின் இடது பாகம் உடலின் வலது பாகத்தில் நடக்கும் காரியங்களையும், வலது பாகம் உடலின் இடது பாகத்தில் நடக்கும் காரியங்களையும் கவனித்துக்கொள்ளுகின்றன. கண்கள் இருந்தாலும் மூளைதான் பார்க்கிறது. காதுகள் இருந்தாலும் மூளைதான் கேட்கிறது. நாக்கு இருந்தாலும் மூளைதான் சுவையை அறிந்துகொள்ளுகிறது. மூக்கு இருந்தாலும் மூளைதான் வாசனையை அறிகிறது. தோல் இருந்தாலும் மூளைதான் உணர்ச்சியை உணர்கிறது.

நரம்பு மண்டலம்



நரம்புகளும் தசைகளும் ஒன்றோடு ஒன்று ஒத்துழைக்கும்படி செய்வது சிறு மூளை. குடிகாரன் தள்ளாடுவது சிறு மூளை ஊறு அடைவதனுல்தான்.

இருதயத் துடிப்பு, சுவாசித்தல், வேர்வைச் சுரப்பிகள் வேலை செய்வது போன்ற காரியங்களை முகுளம் கவனிக்கிறது. இதற்கு ஏதாவது ஆபத்து ஏற்பட்டால் உடலுக்கே ஆபத்து; சாவு நேரும். இது குறித்துத்தான் 'பிடரி'யில் அடிக்கக் கூடாது என்று சொல்லுகிருர்கள். அதற்குக் கீழேதான் முகுளம் இருக்கிறது. மேலும், தண்டு வடத்தையும் (Spinal Cord), மூளையையும் ஒன்ருகச் சேர்க்கும் பாலந்தான் முகுளம்.

முகுளத்துக்கு 'மர்ம ஸ்தானம்' (Vital knot) என்றும் ஒரு பெயர். ஒருவன் கயிற்றினுல் தூக்குப் போட்டுக்கொள்ளும்போது அவன் கழுத்தைச் சுற்றிக் கட்டிக்கொண் டிருக்கும் கயிற்றின் முடிச்சு, அவன் உடலின் பாரத்தினுல் கழுத்தின் பின்புறத்தை அழுத்தும்போது, அவனுடைய முகுளத்தைத் தாக்குகிறது. முகுளத்தின் உதவியால் செயல் ஆற்றும் இருதயமும் அசைவற்றுப் போவதால் அவன் இறக்கிருன். தண்டு வடம் 18 அங்குல நீளம்; ஓர் அங்குலத்தில் 3-இல் 1 பங்கு. அதாவது சுண்டு விரல் பருமன். முகுளத்தின் கீழே வால்போல் ஒன்று இருப்பதைக் காணலாம். இதுவே தண்டு வடம். இது உணர்ச்சி உறுப்புக்களிலிருந்து செய்தியை மூளைக்கும், மூளை பிறப்பிக்கும் கட்டளைகளை உணர்ச்சி உறுப்புக்களுக்கும் எடுத்துச் செல்லும். மேலும், அவசரமான காலங்களில் மூளைக்குச் செய்தியை அனுப்பாமல் தானுகவே முடிவுகளைத் தாற்காலிகமாகத் தீர்மானிப்பதற்கு வேண்டிய சக்தியும் இதற்கு உண்டு. உதாரணமாக, ஒருவன் கையில்



மனித உடலில் உள்ள நாளமில்லா சுரப்பிகள்

அவன் அறியாமல் ஊசி குத்தி விட்டாலோ, சூடுள்ள பொருளில் கை பட்டுவிட்டாலோ, திடீரென்று அவன் கையை இழுத்துக் கொள்ளுகிறான் அல்லவா? மூளைக்குச் சென்று, செய்தியைத் தெரிவித்து, அது கட்டளை பிறப்பிக்கும் வரை காத்திருந்தால் என்ன ஆவது? அப்படிப்பட்ட காலங்களில் மூளையின் வேலையைத் தாற்காலிகமாகச் செய்கிறது தண்டு வடம்.

நரம்புகளின் வழியாகச் செய்தி மணிக்கு 200 மைல்கள் வீதம் செல்லுகிறது.

(8) குளிர் காலத்தை விடக் கோடையில்தான் ஞாபக சக்தி அதிகம். அதிக நேரம் வேலை செய்தாலோ, ஒரு வேலையில் தீவிரமாக ஈடுபட்டாலோ, நீண்ட நேரம் யோசனை செய்தாலோ மூளைக்குச் சோர்வு உண்டாகும். பெரியோர்களுக்கு 45 நிமிஷத்திலும், பதினைந்து வயசானவர்களுக்கு 35 நிமிஷ நேரத்திலும், பன்னிரண்டு வயசானவர்களுக்கு 25 நிமிஷ நேரத்திலும் மூளையிலே சோர்வு உண்டாகும். ஆண்களைவிடப் பெண்களுக்குத்தான் ஞாபகசக்தி அதிகம். படுக்கைக்குப் போகுமுன் கடைசியாக நினைத்துக்கொண்ட விஷயம் மறுநாள் காலையில் எழுந்தவுடன் நினைவுக்கு வந்துவிடும்.

(9) சிறியவர்களுக்கு ஒன்பதிலிருந்து பத்து மணி நேரம் தூக்கம் வேண்டும். பெரியவர்களுக்கு ஏழிலிருந்து எட்டு மணி நேரம் தூக்கம் வேண்டும். அதிகத் தூக்கமும் பகல் வேளைத் தூக்கமும் மூளையைப் பாதிக்கும்.

டாக்டர் எலியட் என்பவர் 'ஆண்களைவிடப் பெண்கள் ஒரு நாளில் சராசரியாக 52 நிமிஷங்கள் தூங்குகிறார்கள்' என்று ஆராய்ச்சியின் மூலம் கண்டுபிடித்திருக்கிறார். இரவு பன்னிரண்டு மணிக்கு முன்பு ஒரு மணி நேரம் நன்றாகத் தூங்குவது பன்னிரண்டு மணிக்குப் பின்பு இரண்டு மணி நேரம் தூங்குவதற்குச் சமம்.

தூக்கத்தின்பொழுது தசைகளும் மூளையும் ஓய்வு எடுத்துக் கொள்ளுகின்றன. இருதயம் மெதுவாக வேலை செய்கிறது. சுவாசித்தல் நிதானமாக இருக்கிறது. உடல் உஷ்ணம் கொஞ்சம் தணிகிறது. தூங்க ஆரம்பித்தவுடன் உடலின் எல்லாப் பாகங்களும் ஒரே சமயத்தில் தூங்க ஆரம்பித்துவிடுவதில்லை. முதலில் கண்கள், பிறகு வாசனையை அறியும் உறுப்புக்கள், பின்பு சுவை அரும்புகள், பிறகு காது, கடைசியில் தோல் இந்த வரிசையில்தான் ஓய்வு எடுத்துக்கொள்ள ஆரம்பிக்கின்றன. எழுந்தவுடன் தோல் முதலில் வேலை செய்யத் தொடங்குகிறது. பிறகு கேட்டல், சுவை உணருதல், வாசனை அறிதல், பார்த்தல் முதலிய செயல்களுக்கு உரிய புலன்கள் வரிசைக்கிரமமாக வேலை தொடங்குகின்றன.

(10) தூங்கும்பொழுது சொப்பனம் காண்கிறோமே, அது எவ்வளவு குறுகிய காலத்துக்குள் நடைபெறுகிறது தெரியுமா? சாதாரணமாக, சொப்பனம் 30 விநாடிகளே நீடிக்கிறது. நீண்ட நேரச் சொப்பனம் 90 விநாடிகளும், குறைந்த நேரச்

சொப்பனம் 5 விநாடிகளுக்குக் குறைச்சலாகவும் நடைபெறுகின்றன.

(11) 154 ராத்தல் எடையுள்ள ஒரு மனிதனுக்கு அவனுடைய உள் உறுப்புக்கள் சரிவர வேலை செய்ய ஒரு நாளைக்குக் குறைந்த பட்சம் 1700 காலரி (Calory) உஷ்ணம் தேவை. ஒரு ஸ்திரீக்கு 1300 காலரி உஷ்ணம் வேண்டும். ஒரு காலரி என்பது 1 லீட்டர் தண்ணீரை 1 டிகிரி - ஸெண்டிகிரேடு உஷ்ணம் பெறச் செய்வதற்கு வேண்டிய சூடாகும்.

ஒருவனுடைய உள் உறுப்புக்கள் வேலை செய்வதற்கு வேண்டிய குறைந்தபட்ச உஷ்ண சக்தி கிடைத்தால் மட்டும் போதுமா? பாக்கி வேலைகளைக் கவனிக்கத் தினசரி குறைந்த பட்சம் 800 காலரி உஷ்ணம் தேவை. ஆகவே, சாதாரணமாக வேலை செய்யும் ஒருவனுக்குத் தினம் 2500 காலரி வேண்டும். கடுமையாக உழைப்பவனுக்கு 3000 காலரி தேவை. அதிகக் கடுமையாக உழைப்பவனுக்கு 3600 காலரி தேவை. ஒருவனுக்குத் தினசரித் தேவையான காலரி உஷ்ணம் அவன் எவ்வளவு அங்குல உயரமோ அதை நாற்பதால் பெருக்கினல் கிடைத்துவிடும். உதாரணமாக, ஒருவன் 5½ அடி உயரம் என்றுல், அங்குலத்தில் அவன் உயரம் 66. இதை 40-ஆல் பெருக்க 2640 என்ற எண் கிடைக்கும். ஆகையினுல் 66 அங்குல உயரம் உடைய ஒருவனுக்குத் தினசரி வேண்டிய உஷ்ணம் 2640 காலரிகள். ஒரு மணி நேரத்தில் குறைந்தது ஒருவருக்கு 70 காலரி உஷ்ணமாவது தேவை.

ஒருவன் உடலிலிருந்து 2500 காலரி உஷ்ணம் வெளிப்படுகிறது என்று வைத்துக்கொண்டால் அதில் 80 சதவிகிதம் தோலின் வழியாகவும், 15 சதவிகிதம் சுவாச கோசங்களின் வழியாகவும், 5 சதவிகிதம் மூத்திரத்தையும் மலத்தையும் உஷ்ணப்படுத்துவதற்காகவும் செலவாகின்றன. தோலின் வழியாக வெளியேறும் 80 சதவிகித உஷ்ணத்தில் 25 சதவிகிதம், வேர்வையை ஆவியாக்கப் பயன்படுகிறது. உடலிலிருந்து வெளியாகும் உஷ்ணத்தில் ஆறில் ஐந்து பங்கு உஷ்ண சக்தியாகச் சேதமாகிறது. மிகுதி ஒரு பங்கு வேலை செய்யப் பயன்படுகிறது.

உடலிலிருந்து 24 மணி நேரத்தில் 16 கிராம் நைட்ரஜனும், 210 கிராம் கரியும், 4½ பைண்ட் தண்ணீரும் இன்னும் அநேக உப்புக்களும் வெளியேறுகின்றன. தினம் சுமார் 3 பைண்ட் தண்ணீரும் 31

கல்லீரல்



ராத்தல் ஆகாரமும் சாப்பிடுகிறேம்.

நாம் உட்கொள்ளும் ஆகாரத்தில் 360-இலிருந்து 410 காலரி வரையில் கொடுக்கக் கூடிய நைட்ரஜன் சம்பந்தமான பொருள்களும், 1440 முதல் 1800 காலரி வரையில் கொடுக்கக் கூடிய மாவுப்பொருளும், 720 முதல் 710 காலரி வரை கொடுக்கக்கூடிய கொழுப்புப் பொருள்களும் இருக்க வேண்டும். இதன்படி பார்த்தால் 90-இலிருந்து 100 கிராம் நைட்ரஜன் சம்பந்தமான பொருள்களும் 360-இலிருந்து 450 கிராம் மாவுப் பொருளும் 80-இலிருந்து 90 கிராம் கொழுப்பும் நாம் உட்கொள்ளும் உணவில் இருக்க வேண்டும்.

(12) வெளி வேலைகளையும் உள் வேலைகளையும் செய்ய ஒரு நாளைக்கு 70,00,000 ராத்தல் அடிகள் (Foot-Pounds) சக்தியை மனித உடல் உண்டுபண்ணுகிறது. (ஒரு ராத்தல் அடி என்பது ஒரு ராத்தல் நிறையை ஓர் அடி உயரம் எழுப்புவதற்கு வேண்டிய சக்தி.) இருதயமும் சுவாசகோசங்களும் வேலை செய்யவும், உடல் 98·4 டிகிரி (பாரன்ஹீட்) உஷ்ண நிலையில் இருக்கவும், அது 50,00,000 ராத்தல் அடிகள் சக்தியை உண்டு பண்ணி உள் வேலைகளைச் செய்கிறது. வெளி வேலைகளைக் கவனிக்க 20,00,000 ராத்தல் அடிகள் சக்தியை உண்டு பண்ணுகிறது.

(13) 56 அவுன்ஸ் (சுமார் 1500 கன ஸெண்டிமீட்டர்) மூத்திரம் தினம் வெளியேறுகிறது. இதில் 53 அவுன்ஸ் தண்ணீர், 1½ அவுன்ஸ் மூத்திர உப்பு, 1½ அவுன்ஸ் மற்ற உப்புக்கள் வெளியே செல்லும். மூத்திரத்தின் அளவு பல தன்மைகளைப் பொறுத்தது. குளிர்காலம், நீர் இழிவு வியாதி, அதிகமாகத் தண்ணீர் குடித்தல் இவைகள் எல்லாம் மூத்திரத்தின் அளவை அதிகரிக்கும். கோடைக் காலம், ஜுரம், வேர்த்தல் இவைகள் மூத்திரத்தின் அளவைக் குறைக்கும். இரவைவிடக் காலை நேரங்களிலும், கோடையைவிடக் குளிர் காலங்களிலும் மூத்திரம் அதிகமாக வெளி வரும்; பயந்தாலும் அதிகரிக்கும். நல்ல நிலையில் உள்ள உடலிலிருந்து வெளிவரும் மூத்திரம் லேசான அம்பர், அதாவது, ஏறக்குறைய வைக்கோலின் நிறமாக இருக்கும்.

கண்ணின் உள்ளமைப்பு.



மூத்திர உப்பு யூரியா (Urea) கல்லீரலில் உற்பத்தியாகிறது. அது ரத்தத்தோடு கலந்து பிருக்கங்களுக்கு (மூத்திரக் காய்கள்-Kidneys) வந்து அங்கேதான் பிரிந்து மூத்திரமாக மூத்திரப் பைக்கு வந்து சேர்கிறது.

ஒவ்வோர் உடம்பிலும் இரண்டு பிருக்கங்கள் இருக்கின்றன. ஆணில் 5 அவுன்ஸ் எடை (¼ ராத்தல்). பெண்ணில் 4½ அவுன்ஸ் எடை. கருஞ்சிவப்பு நிறமுடையது. அவரை விதை போன்றது. 4 அங்குல நீளம்; 2½ அங்குல அகலம்; 1 அங்குல கனம். மூத்திரக் குழாய்களின் நீளம் 10 அல்லது 12 அங்குலம். மூத்திரப் பை 5 அங்குல நீளம்.

மூத்திரப்பை ஒரு பைண்ட் (One Pint) மூத்ரம் கொள்ளும். இரண்டு பிருக்கங்களும் சேர்ந்து ஒருவருடைய இருதயத்தின் அளவு இருக்கும். ஒவ்வொரு நிமிஷமும் 1200 கனஸெண்டிமீட்டர் ரத்தம் பிருக்கங்களின் வழியாகக் கடந்து செல்கிறது. இது இருதயத்திலிருந்து வெளிவரும் ரத்தத்தின் அளவில் கால் பங்கு. ஒவ்வொரு பிருக்கத்திலும் ரத்தத்திலிருந்து மூத்திரத்தைப் பிரிக்கும் மிக மெல்லிய குழாய்கள் இருக்கின்றன. இவைகளுக்குச் சிறுநீரகக் குழல்கள் (Uriniferous tubules) என்று பெயர். ஒன்று முதல் ஒன்றரை மில்லியன் குழல்கள் வரைக்கும் ஒவ்வொரு பிருக்கத்திலும் உண்டு. உடலில் ஏதாவது வியாதி ஏற்பட்டுச் சில குழல்கள் உபயோகமற்றுப் போனாலும் மற்றக் குழல்கள் வேலை செய்ய உதவும். இதற்காகவே லட்சக் கணக்கில் குழல்கள் இருக்கின்றன. ஒரு பிருக்கம் நல்ல நிலையில் சரிவர வேலை செய்து வந்தால், மற்றொரு பிருக்கத்தை அகற்றிவிட்டாலும் உடலுக்கு ஒரு விதத் தீங்கும் ஏற்படாது.

குழந்தைப் பருவத்தில் சிறுநீர் வெளிவருவது அறியாமல் தானாகவே நிகழும் செயல் (Reflex). மூத்திரப் பை நிரம்பியவுடன் குழந்தை அறியாமலே மூத்திரக் குழாயின் வழியாகச் சிறுநீர் வெளி வந்துவிடும். ஆனால் வயசு ஆக ஆகச் சிறுநீர் கழிப்பதை நம் இஷ்டத்துக்கு உகந்தபடி கொண்டு வந்து விடலாம்.

பிருக்கங்களும் தோலும் ஒன்றோடு ஒன்று அழகாக ஒத்துழைக்கும். கோடையில் தோலுக்கு அதிக வேலை. குளிர்காலங்களில் பிருக்கங்களுக்கு அதிக வேலை. ஆகையினால்தான் கோடையில் அதிக வேர்வை உண்டாகிறது; குளிர் காலத்தில் அதிகத் தடவைகள் சிறுநீர் கழிக்கும்படியாக நேர்கிறது. பிருக்கங்கள் அதிக வேலை செய்யும்பொழுது தோல் தன் வேலையைத் தாமதமாகச் செய்கிறது. தோல் அதிகமாக வேலை செய்யும்பொழுது பிருக்கங்கள் மெதுவாகத் தம் வேலையைச் செய்கின்றன.

(14) நம் உடலில் இருபதுக்கு மேற்பட்ட சுரப்பிகள் இருக்கின்றன. இவைகளை நாளமுள்ள சுரப்பிகள் என்றும், நாளமில்லாச் சுரப்பிகள் என்றும் பிரிக்கலாம். உமிழ் நீர்ச் சுரப்பிகள், ஜாடராக்கினி நீர்ச் சுரப்பிகள், கணையம் (pancreas), கல்லீரல், சிறு குடல் சுரப்பிகள், வேர்வைச் சுரப்பிகள், எண்ணெய்ச் சுரப்பிகள், மெழுகு அல்லது குரும்பைச் சுரப்பிகள், பால் சரப்பிகள், கோழை அல்லது சளிச் சுரப்பிகள், மண்ணீரல் (Spleen), கண்ணீர்ச் சுரப்பிகள் (Lymph Glands) ஆகிய இவைகள் எல்லாம் நாளமுள்ள சுரப்பிகள் (Exocrine glands). கல்லீரல், மண்ணீரல் இவை இரண்டும் ரத்த டிப்போக்கள். உடலின் எந்தப் பாகத்துக்காவது ரத்தம் வேண்டியிருந்தால் அந்த இடத்துக்கு ரத்தத்தைக் கொடுக்கும். உடலில் உள்ள சுரப்பிகளிலேயே மிகப் பெரிய சுரப்பி கல்லீரல் (Liver). இது 50 அல்லது 60 அவுன்ஸ் எடை உடையது. மனித உடலின் எடையில் 40-இல் ஒரு பங்கு. கருஞ் சிவப்பு நிறம். இடது, வலது மடல்களாகப் பிரிந்திருக்கிறது. வலது மடல் இடது மடலை விட ஆறு பங்கு பெரியது. கல்லீரல் ஒரு நாளைக்கு 15 முதல் 20 அவுன்ஸ் பித்த நீரைச் (Bile juice) சுரக்கிறது; தாமிரத்தையும் இரும்பையும் சேகரித்து வைத்துக்கொண் டிருக்கிறது.

மண்ணீரலின் (Spleen) எடை 6 அவுன்ஸ். கரிய ஊதா நிறம். கருவில் மண்ணீரல் சிவப்பு ரத்த அணுக்களை உற்பத்தி செய்கிறது. குழந்தை பிறந்தவுடன் அதன் வேலையும் மாறுபடுகிறது. உபயோகமற்ற சிவப்பு ரத்த அணுக்களை உடைத்து, அவற்றில் உள்ள வர்ணப் பொருள்களைக் கல்லீரலில் உற்பத்தியாகும் பித்த நீருக்கு நிறம் கொடுக்க அனுப்புகிறது.

இது குறித்தே மண்ணீரலை ''சிவப்பு ரத்த அணுக்களின் கல்லறை. வெள்ளை அணுக்களின் பிறப்பிடம்'' என்று விஞ்ஞானிகள் கூறுகிறார்கள். மண்ணீரலை அகற்றி விட்டால் உடலுக்கு ஒருவிதக் கெடுதியும் ஏற்படாது. மண்ணீரல் உருவத்தில் அடிக்கடி மாறுதல் அடைகிறது. நன்றாகச் சாப்பிட்ட 4 அல்லது 5 மணி நேரத்துக்கெல்லாம் நன்றாக விரிவடைகிறது. பிறகு சுருங்க ஆரம்பிக்கிறது. சில சமயங்களில் இரண்டு அல்லது மூன்று நிமிஷங்களுக்கு ஒரு முறை சுருங்கி, பிறகு விரிவடைந்து, திரும்பவும் சுருங்கித் திரும்பவும் விரிவடைந்துகொண்டே இருப்பதும் உண்டு.

கண்



கணையம் (Pancreas): *8* அங்குல நீளம், $1\frac{1}{2}$ அங்குல அகலம், *3* அவுன்ஸ் எடை. கணையத்தை 'ருசியுள்ள ரொட்டி' (Sweet bread) என்று சாதாரணமாகக் கூறுவார்கள்.

தைராய்டு, பாராதைராய்டு, தைமஸ், அட்ரீனல், பினியல் சுரப்பி, பிட்யூட்டரி சுரப்பி ஜனனேந்திரியச் சுரப்பிகள், கணையத்தில் உள்ள லாங்கர் ஹான் திட்டுக்கள் இவை எல்லாம் நாளமில்லாச் சுரப்பிகள். இவை சுரக்கும் நீர்களுக்கு ஹார்மோன்கள் (Harmones) என்று பெயர். இந்தச் சுரப்பிகள் சரிவர வேலை செய்யாவிட்டால் உடல் வளர்ச்சி, மன வளர்ச்சி, இனப் பெருக்கு, உறுப்புக்களின் வளர்ச்சி எல்லாம் தடைப்பட்டுப் போய்விடும். பிட்யூட்டரி சுரப்பி பட்டாணி அளவுக்கு மூளையின் அடிப் பாகத்தில் ஒட்டிக்கொண்டிருக்கிறது. இந்தச் சுரப்பிக்கு அநேக வேலைகள். இதனாலேயே நாளமில்லாச் சுரப்பிகளுக்குள் இது தலைமை இடம் வகிக்கிறது.

(15) நமக்கு இரண்டு கண்கள் இருப்பதனால்தான் ஒரு பொருளின் முழு உருவத்தையும் நன்கு பார்க்க முடிகிறது. ஒரு பொருளின் பக்கங்களைப் பார்க்க முடிகிறது. ஒரு பொருள் முன்னே இருக்கிறதா, தள்ளி இருக்கிறதா, கட்டியா அல்லது உட்கூடு உள்ளதா என்பவை போன்ற பல உண்மைகளைத் தெரிந்து கொள்ள முடிகிறது. இரண்டு கண்களிலும் ஒரு பொருளின் உருவம் ஒரே மாதிரி விழுவதில்லை; வெவ்வேறாகத்தான் விழுகிறது. ஒரு கண்ணின் மையப் புள்ளியிலிருந்து மற்றொரு கண்ணின் மையப் புள்ளிக்கு இடையே உள்ள தூரம் $2\frac{1}{2}$ அங்குலம். கண் புருவங்களும் அவைகளின் மயிர்களும் இருப்பதனால் கண்களுக்கு மிகவும் நல்லது. அவை கேடயங்கள் போல் கண்களுக்குப் பாதுகாப்பு அளிக்கின்றன. கண்களுக்கு வேர்வை நீர் ஓடி வராமல் தடுக்கின்றன. அப்படிக் கண்களில் வேர்வை நீர் வழிந்தால் அதில் உள்ள அசுத்தங்கள் கண்ணில் பல நோய்களை உண்டுபண்ணும். பார்வையும் மந்தமாகிவிடும். புருவங்கள் இந்த உதவியை மட்டும் செய்வதோடு முகத்துக்கு அழகையும் களையையும் கொடுக்கின்றன.

ஒவ்வொரு கண்ணிலும் வெவ்வேறு விதமான வெளிச்சங்களின் தன்மைகளை அறிந்து, அவைகளை மூளைக்கு உணர்த்துவதற்கு *130* வெளிச்ச உணர்ச்சி ஸ்தானங்கள் (Light Receptors) இருக்கின்றன.

கண்ணின் பின் சுவருக்கு விழித்திரை (Retina) என்று பெயர். இது நரம்புகளால் உருவான ஒரு வலை. பார்க்கும் பொருள்களின் உருவம் இந்தத் திரையில் தலை கீழாகத்தான் விழுகிறது.

ஒரு மனிதன் நிமிஷத்துக்கு *30* தடவை கண் சிமிட்டுகிறான்.

மனிதர்கள் கண்ணீரில் ஒரே ஒரு சொட்டை எடுத்து *6000*

நாக்கு



நாக்கில் வெவ்வேறு உருசி அறிந்து கொள்ளும் இடங்கள்

1. உப்பு, தித்திப்பு
2. புளிப்பு
3. கசப்பு

காது



சொட்டுத் தண்ணீரோடு கலந்தால் போதும்; அந்தக் கலப்பு நீர் நூற்றுக் கணக்கான தினுசு நோய்க் கிருமிகளைக் கொல்லும் சக்தி உடையதாக இருக்கிறது. 'லைஸோஸைம்' என்ற ஒரு வகை ரசாயனச் சத்து மனிதர்களின் கண்ணீரில் ஏராளமாய் இருக்கிறது. அதுவே, கண்ணீருக்கு இந்தக் கிருமியைக் கொல்லும் சக்தி இருப்பதற்குக் காரணம்.

செத்த பிறகு மனித உடல் காலணுவுக்குக்கூடப் பயன் படாது என்று நாம் நினைக்கிறோம். ஆனால் ஒருவர் மாண்டவுடனே சிறிது நேரம் அவருடைய கண்களுக்கு உயிர் இருப்பதாக வைத்திய ஆராய்ச்சிமூலம் கண்டுபிடித்திருக்கிறார்கள். எனவே, ஒருவர் மரணம் அடைந்தவுடனே அவருடைய கண்களை வெளியே எடுத்துக் குருடர்களுக்குப் பொருத்தி வைத்துவிட்டால் அவர்களுக்குப் பார்வை வந்துவிடும். உயிரோடு இருக்கும்போது சாதாரணமாக நாம் ரத்த தானம் செய்கிறோம். உயிர் போன பிறகு நேத்திர தானமும் செய்யலாம் அல்லவா?

(16) ருசியை அறிந்துகொள்ளும் சக்தி நாக்குக்கு இருப்பதன் காரணம், அதில் *3000* சுவை அரும்புகள் இருப்பதுதான். குழந்தைப் பிராயத்தில் அவை அதிக அளவில் இருக்கின்றன. பிறகு கொஞ்சங் கொஞ்சமாக மறைந்து குறிப்பிட்ட அளவுக்குக் குறைந்துவிடுகின்றன. நாக்கின் பின்பாகத்தில் அதிக அரும்புகளைக் காணலாம். நாக்கின் நுனி இனிப்பையும், பின்பாகம் உப்பு, கசப்பு இவை இரண்டையும், பக்கங்கள் புளிப்பையும் அறிந்துகொள்ளுகின்றன.

குழந்தைகளுக்கு நம்மைவிட அதிகச் சுவை அரும்புகள் இருந்தபோதிலும் அவைகள் கசப்பு மருந்துகளையும், குமட்டும் விளக்கெண்ணெயையும் மடமடவென்று குடித்துவிடுவதைப் பார்த்தால் ஆச்சரியமாக இருக்கும். காரணம் ருசி என்பது பயிற்சியினால் வந்த வினை. நாம் 'இது இனிப்பு','அது கசப்பு' என்று சொல்லுவதனால் நாளடைவில் குழந்தைக்கு அந்த ருசி மனப்பான்மை ஏற்பட்டவுடன் கசப்பு மருந்தைக் கொடுத்தால் குடிக்காது. விளக்கெண்ணெயைக் கொடுத்தால் குமட்டி வாந்தி எடுத்துவிடும். பழக்கத்தினாலும் பயிற்சியினாலும், பிறரைப் பார்த்தும் குழந்தைகள் ருசியை அறிந்துகொண்டு விடுகின்றன. சிறு பிராயத்தில் அவைகளுக்குப் பசியையும் தாகத்தையும் தணித்துக்கொள்ள

இடுப்பெலும்புக் கட்டு



பெண்

வேண்டுமென்ற அக்கறையே ஒழிய, ருசியைப்பற்றிய நினைப்பே இல்லை.

(17) மனிதனுடைய காதில் வெளிக் காது, நடுக் காது, உட் காது என்ற மூன்று பாகங்கள் இருக்கின்றன. உட் காதுதான் மிகவும் முக்கியமான பாகம். நடுக் காதையும் தொண்டையையும் ஒரு குழல் இணைக்கிறது. இதற்கு நடுச் செவிக் குழல் என்று பெயர். இதன் வழியாக நடுக் காதுக்குக் காற்றுச் செல்லுகிறது. நடுக் காதில் காற்று

இருந்தால்தான் தெளிவாகக் கேட்கும். ஜலதோஷம், தொண்டை வலி இவைகளின்போது, நடுச் செவிக் குழல் அடைபட்டு விடுகிறது. ஆகையால்தான் தெளிவாய்க் கேட்கும் சக்தியும் குறைகிறது. காது கேட்பதற்குத்தான் பயன்படுகிறது என்று நினைக்க வேண்டாம்; நாம் சமநிலையில் (State of equilibrium) இருப்பதற்கும் அது உதவி செய்கிறது.

காதுகளில் ஒலியை உணரும் 1,00,000 ஸெல்கள் இருக்கின்றன.

காதை விட 10 மடங்கும், மூக்கைவிட 30 மடங்கும் கண்கள் விழிப்புள்ளவை. பார்க்கும் பொருளில் ஒரு சத விகிதப் பிரகாசம் அதிகமாக ஏற்பட்டாலும் கண்கள் அந்த மாறுபாட்டை அறிந்து கொள்ளுகின்றன. ஒலி 10 சத விகிதம் அதிகரித்தால்தான், அதில் உள்ள மாறுதலைச் செவி உணர முடிகிறது. வாசனையில் 30 சத விகிதம் அதிகரித்தால்தான் அதில் ஏற்பட்டுள்ள மாறுதலை மூக்கு உணர முடிகிறது.

(18) ஆணின் குரல் பெண்ணின் குரலை விட அழுத்தமாகவும், தீர்க்கமாகவும் இருப்பதற்குக் காரணம் அவனுடைய குரல் ஒலிப் பெட்டி (Larynx) பெரியதாகவும், ஒலி நரம்புகள் (Vocal Cord) நீளமாகவும் இருப்பதுதான். ஒலி நரம்புகளின் நீளம் ஆணில் 15 மில்லிமீட்டர்: பெண்ணில் 11 மில்லிமீட்டர்.

தான் உண்டுபண்ணும் ஒலியைப் பிறர் புரிந்துகொள்ளும்படி பேச்சாக மாற்றும் சக்தி மனிதன் ஒருவனுக்குத்தான் உண்டு. ஒரு மனிதன் நாள் ஒன்றுக்கு 43,000 வார்த்தைகள் பேசுகிறான்.

கழுத்தின் முன் பாகத்தில் குரல் வளையினால் உண்டான மேடு ஒன்றைக் காணலாம். இதைக் குரல் வளை மணி (Adam's Apple) என்று சொல்லுவார்கள். இது வளர்ச்சி முதிர்ந்த ஆண்களிடம் மிகுதியாகத் தென்படும்.

(19) 27 எலும்புகளையும், 19 தசைகளையும் கொண்ட கை 1000 வகைத் தனி வேலைகளைச் செய்கிறது என்று லாஸ் ஏஞ்சலஸில் உள்ள கலிஃபோர்னியா பல்கலைக் கழக விஞ்ஞான ஆராய்ச்சிக் குழு கூறுகிறது. இடது பக்கத்தில் அமைந்திருக்கும் இருதயம் அதிக வேலை செய்வதனால், அதே பக்கத்துக்கு அதிக வேலை கொடுக்காமல் இருப்பதற்கும், அந்த வேலைகளுக்குச் சமமாக வலது பக்கத்துக்கு வேலை கொடுப்பதற்காகவுந்தான் இயற்கையிலேயே நம் வலது கை பல காரியங்களை அன்றாடம் செய்யப் பயன்படுகிறது. இடது கையைப் பயன்படுத்துவோரின் எண்ணிக்கை மிகக் குறைவு. பெண்களைவிட ஆண்களில்தான் இடது கையைப் பயன்படுத்துவோர் அதிகம்.

(20) ஒவ்வொருவருக்கும் நான்கு டான்ஸில்கள் (Tonsils) இருக்கின்றன. இவை நம் ஆகாரத்தில் உள்ள நோய்க் கிருமிகளை உடலுக்குள் சென்று விடாமல் வடிகட்டி விடுகின்றன. இவைகள் வீங்கிவிட்டால் 'டான்ஸிலைட்டிஸ்' (Tonsilitis) என்ற நோய் உண்டாகிறது.

(21) மனித உடலில் கோடிக் கணக்கான கண்ணறைகள் (Cells) இருக்கின்றன. ஒவ்வொரு கண்ணறையிலும் ஓர் உட்கரு (Nucleus) இருக்கிறது. அந்த உட்கருவில் 24 ஜோடி அல்லது 48 கணுக்கோல்கள் (Chromosomes) இருக்கின்றன. 24 ஜோடிகளும் வெவ்வேறு உருவம், குணம், தன்மை உடையவை.

இடுப்பெலும்புக் கட்டு



ஆண்

ஜனனேந்திரிய உறுப்புக்கள்



குழல் பைகள் (Ovaries), அண்டச் சூல்கள் (Fallopian tubes), கருப்பை (Uterus), யோனி (Vagina), யோனி வாய் (Vulva) இவை எல்லாம் பெண் ஜனனேந்திரிய உறுப்புக்கள். அடி வயிற்றுக்குள்ளே இரு புறங்களிலும் சூல் பைகள் இருக்கின்றன. மொத்தம் இரண்டு உண்டு. ஒவ்வொன்றும் ஓர் அங்குல நீளமும், முக்கால் அங்குல அகலமும், அரை அங்குலக் கனமும் உடையது. ஒவ்வொரு சூல்பையிலும், ஆயிரக் கணக்கான சிறு சூல் குழிகள் (Follicles) இருக்கின்றன. ஒவ்வொரு குழியிலும், ஓர் அண்ட அணு இருக்கும். அண்டக் குழல்கள் இரண்டு உண்டு. இவை சுமார் நாலு அங்குல நீளம் இருக்கும். அடி வயிற்றில் சிறு நீர்ப் பையின் பின்புறத்தில் கருப்பை இருக்கிறது. உருவத்தில் முந்திரிப் பழம் போன்றும், சுமார் 3 அங்குல நீளமும், இரண்டு அங்குல அகலமும் உள்ளது இது. கரு வளரும்பொழுது, இந்தப் பையும் அதற்கு ஏற்றபடி விரிவடையும். கருப்பையின் முன் புறத்தில் சிறுநீர்ப் பையும், பின் புறத்தில் மலக் குடலும் இருக்கின்றன.

ஒவ்வொரு பெண்ணும் சுமார் எழுபது ஆயிரம் அண்ட அணுக்களுடன் பிறக்கிறாள். அவற்றுள் முதிர்பவை முந்நூறு அல்லது நானூறே. அப்படி முதிரும் வயசையே பருவ வயசு என்று கூறுவார்கள். சூல்பையில் அண்டம் முதிர்ந்து, கருத்தரிக்கும் பக்குவ நிலையை அடைந்தவுடன், சூல் பையிலிருந்து விழுந்து, அண்டக் குழலை அடையும். இதற்கு அண்ட வீழ்ச்சி (Ovulation) என்று பெயர். கலவியின் போது ஆணிடமிருந்து வெளிவரும் விந்தணுவின் உட்கரு (Nucleus) அண்ட அணுவின் உட்கருவோடு இரண்டறக் கலந்து ஒரே கண்ணறை ஆவதற்குத் தான் கருத் தரிப்பு (Fertilization) என்று பெயர். அண்ட வீழ்ச்சிக்குப் பிறகு ஒரு சமயம் கருத் தரித்தால், அந்தக் கருவைத் தாங்கி வளர்க்க வேண்டிய முன் ஏற்பாடுகளைக் கருப்பை ஆயத்தம் செய்துகொண்டிருக்கும். அப்பொழுது கருப்பைக்குச் சுரப்பு நீரும், ரத்தமும் அதிகமாகச் செல்லும். கருத் தரிக்காவிட்டால், ரத்த தந்துகிகள் உடைந்து, ரத்தமும், அண்டமும் வெளியே



பிருக்கங்கள்

வந்துவிடும். அப்பொழுது கருப் பையின் உள் தோல் நைந்து, சிறு சிறு துண்டுக ளாக ரத்தத்துடன் வெளி வரும். இதற்குத்தான் மாதவிடாய் (Menstruation) என்று பெயர். முதல் அண்ட வீழ்ச்சியுடன் சம் பந்தமுள்ள மாதவிடாய்க் குத்தான் பூப்பு (Puberty) என்று பெயர். மாத விடாய் ஆன *13, 14, 15* நாட்களில்தான் அண்ட வீழ்ச்சி நிகழும். இதுதான் கருத் தரிப்பதற்கு ஏற்ற காலம். மற்ற நாட்கள் உகந்தவை அல்ல.



ஜனனேந்திரிய உறுப்புக்கள்

இரண்டு மாத விடாய்களுக்கு மத்தியில் உள்ள காலம் சாதாரண மாக இருபத்தெட்டு நாள். சில ஸ்திரீகளுக்கு அவரவர்களின் உடல் நிலையைப் பொறுத்து, குறை வாகவோ, கூடுதலாகவோ இருக்க லாம். கர்ப்ப காலத்திலும், பிரச வம் ஆன சில் மாதங்கள் வரை யிலும் மாதவிடாய் ஏற்படுவ தில்லை.

மாதவிடாய் *13,15* வயதில் தொடங்கி, *40-50* வயதுவரை நடைபெறுகிறது. இவ்வாறு சுமார் *30* ஆண்டு காலம் மாதந்தோறும் ஓர் அண்ட அணு வீதம் வெளி வரும். வெளிவரும் அண்ட அணுக் கள் அனைத்தும் விந்தணுக்களுடன் கலந்து கருவுறுவதில்லை. பெரும் பாலும் இரண்டு மூன்று ஆண்டு களுக்கு ஒரு முறையே கருவுறுதல் நிகழ்கிறது. ஆகவே, ஒரு பெண் பெரும்பாலும் பதினறு குழந்தை களுக்கு மேல் பெறுவதில்லை.

(22) பெண்களுக்கு மாதவிடாய் நின்ற பிறகு *10, 15* வருஷங்களுக் குக் காம இச்சை இருந்தே வரும். பெண் மாதவிடாய் ஆன *11* முதல் *14* நாட்களுக்குள்ளேதான் கருத் தரிக்க நேர்கிறது. அப்பொழுது கருப் பையிலிருந்து அண்டம் (Egg-cell) விடுபடுவதே காரணம். பெண்கள் கருப்பம் தரித் திருக்கும் காலம் சராசரி *270* நாட்கள். மிக அதிகமாகப் போனல் *285* நாட்களுக்குமேல் எந்த ஸ்திரீயும் பிரசவிக்காமல் கருப்பம் தரித்திருக்கவில்லை. *10* மாதங்களோ அதற்கு மேலோ எந்தப் பெண்ணும் கர்ப்பத்தைச் சுமந்திருக்க முடியாது.

'பனிக் குடம்' என்பது கருவைச் சூழ்ந்து நீர் நிறைந்திருக்கும் ஒரு பை. தாய்க்கு ஏற்படும் அதிர்ச்சி, தாக்குதல் போன்ற ஆபத்துக்கு ளிடமிருந்து கருவைக் காப்பாற்று கிறது பனிக் குடம். கொப்பூழ்க் கொடி (Umbilical cord) என்பது, தாயின் ரத்தத்திலிருந்து பிராண வாயுவையும் உணவுப் பொருள் களையும் கரு கிரகித்துக்கொள்ள உதவும் ரத்தக் குழாய்கள் உள்ள ஒரு கயிறு.

இரட்டைப் பிள்ளைகள் பிறப் பதற்குக் காரணங்கள் இரண்டு:

(அ) கருத் தரித்த அண்ட அணு இரண்டு பாகங்களாகப் பிரிந்து, ஒவ்வொன்றும் ஒரு குழந்தையாக வளரலாம். (ஆ) அண்ட வீழ்ச்சி யின்போது இரண்டு அண்ட அணுக் கள் முதிர்ந்து சூல் பையிலிருந்து விடுபட்டு, அண்டக் குழலை அடைய லாம். கலவியின்போது ஒவ்வோர் அண்ட அணுவிலும் ஒவ்வொரு விந்தணு சேர்ந்து, இரண்டு கருத் தரித்து, இரண்டு குழந்தைகள் ஆகலாம்.

சாதாரணமாக முப்பத்தைந்து வயசுக்கு மேற்பட்ட பெண் களுக்கே இரட்டைப் பிள்ளைகள் பிறக்கும்.

(23) பீஜத்தின் (Testis) மிக மெல்லிய குழல்கள் எண்

ணிறந்தவை உண்டு. அவற்றில் விந்து உண்டாகிறது. அந்தக் குழல்களின் நீளத்தையெல்லாம் சேர்த்தால் ஒரு மைல் இருக்கும். அந்தக் குழல்களில் உண்டாகும் விந்து, பீஜத்தின் பின் பகுதிக்குச் சென்று, எபிடிடிமிஸ் (Epididymis) என்னும் குழாயின் வழியாக விந்துவாகிக்குப் (வாஸ் டிபரன்ஸ்) போய்ச் சேர்கிறது. எபிடிடிமிஸ் என்னும் குழாய் சுருளாகச் சுமார் 20 அடி நீளம் இருக்கும். விந்துவாகி 12 முதல் 18 அங்குல நீளம் வரையில் இருக்கும். விந்துப்பை இரண்டு அங்குல நீளமுடையதாகத் தோன்றினுலும் அதை இழுத்துப் பார்த்தால் 5 அங்குல நீளம் இருக்கும்.

ஆண் மகனிடம் ஒரு முறை வெளியாகும் விந்துவில் (Semen) சுமார் 30 கோடி விந்தணுக்கள் இருக்கும். அவற்றுள் ஒன்றுமட்டுமே அண்ட அணுவுடன் கலந்து கரு உண்டாக்க உதவுகிறது. அபூர்வமாக இரண்டு அல்லது மூன்று விந்தணுக்கள் பயன்படுவதும் உண்டு.

கலவியின்போது சுமார் இரண்டு திராம் விந்து வெளிப்படும். விந்தணுக்கள் அதிவேகமாக நீந்த வல்லவை. அவைகளுக்கு ஒரு வாரம் வரையில் உயிர் உண்டு என்றாலும், கரு உண்டுபண்ணும் சக்தி இரண்டு நாட்களுக்குமேல் நீடிப்பதில்லை. நீந்தும் சக்தி சில மணி நேரங்களுக்குமேல் நீடிப்பதில்லை.

பீஜங்கள் வயிற்றின் அடிப்பாகத்தில் கருவாக உள்ள பொழுது உண்டாகின்றன. அதே இடத்தில் அவைகள் இருந்தால், உடலின் உஷ்ணத்தினுல் விந்தணுக்கள் உண்டாவதில்லை. ஆகையால், பீஜங்கள் அடி வயிற்றின் உட்புறத்திலிருந்து இறங்கி, இரண்டு துடைகளுக்கும் இடையே உள்ள இரண்டு பைகளில் வந்துவிடும். இந்தப் பைகளுக்குத்தான் பீஜப் பை (Scrotum) என்று பெயர்.

ஆணில் சிறுநீர்ப் புற வழியாகத்தான் சிறுநீர்ப் பையிலிருந்து வெளிவரும் சிறு நீரும், விந்துவும் வெளிச் செல்லும். பெண்ணுறுப்பில் சிறு நீரும், அண்ட அணுவும் வெளியே செல்லுவதற்கு வெவ்வேறு வழிகள் இருக்கின்றன.

(24) பருவ வயசில் வளர்ச்சியில் ஒரு செழிப்பும், தோற்றத்தில் ஒரு கவர்ச்சியும் ஏற்படுவதற்குக் காரணம் ஹார்மோன் என்கிற நீர்தான். ஆணின் பீஜங்கள் விந்தணுவை உண்டுபண்ணுவதுடன் டெஸ்டொஸ்டிரோன் (Testosterone) என்ற ஹார்மோனையும், சுரக்கிறது. பெண்ணில் அண்ட அணுக்களை உண்டுபண்ணும் சூல் பைகள் ஈஸ்டிரோஜன் (Oestrogen) என்ற ஹார்மோனைச் சுரக்கும். ஆண் பெண் இருவரிடமும் காணும் தனித்தனி உடல் குணங்களுக்கு இந்த ஹார்மோன்கள்தான் காரணம்.

(25) அண்ட அணு 1/125 அங்குல விட்டம் உள்ளது. ஆயினும், அதன் பருமன் விந்தணுவைக் காட்டிலும் 35,000 மடங்கு பெரியது. பருமனில் இவை மாறுபட்டாலும், அண்ட அணுவிலும் 24 கணுக்கோல்கள் உண்டு; விந்தணுவிலும் 24 கணுக்கோல்கள் உண்டு. உடலில் காணும் ஒவ்வொரு கண்ணறையிலும் உள்ள உட்கருவில் 24 ஜோடி கணுக்கோல்கள் இருக்கும்.

பிறக்கும் குழந்தை ஆணு, பெண்ணு என்பது தந்தையின் விந்தணுவைப் பொறுத்தது. தாயின் உடலில் உள்ள ஓவம் (Ovum) என்ற அண்டத்தில் 'எக்ஸ்' (X) என்ற கணுக்கோல் இருக்கிறது. தந்தையின் உடலிலிருந்து வெளியாகும் 'ஸ்பர்ம்' (Sperm) என்ற விந்தணுவில் 'எக்ஸ்', 'ஒய்' (Y) என்ற இரண்டு வகைக் கணுக்கோல்களில் எதுவாயினும் இருக்கலாம். தந்தையிடமிருந்து 'எக்ஸ்' உள்ள விந்தணு, தாயின் அண்டத்தில் வந்து சேர்ந்தால் பெண் குழந்தையும், 'ஒய்' உள்ள விந்தணு வந்து சேர்ந்தால் ஆண் குழந்தையும் உண்டாகும்.

(27) ஒவ்வொருவருக்கும் முதல் வயசில்தான் உடல் அதிக வளர்ச்சியைக் காட்டுகிறது. ஆண் 14 அல்லது 15 வயசில் பருவக் காலத்தை அடைகிறுன். பெண் 13 அல்லது 14 வயசில் பருவக்

காலத்தை அடைகிருள். வாலிபப் பருவம் அல்லது யௌவன தசை புருஷருக்கு 14 வயசு முதல் 25 வயசுவரை; ஸ்திரீக்கு 12 வயசு முதல் 21 வரை.

(28) மனிதனுடைய ஆயுள் சூழ்நிலை, வம்சபாரம்பரியம், ஆகாரம், தொழில், சீதோஷ்ண நிலை, சந்தர்ப்ப நிலை இவைகளைப் பொறுத்தது. சாதாரணமாக, மனிதன் 70-இலிருந்து 80 வயசு வரை உயிரோடு இருக்கிருன். ஆனுலும் ஆயிரம் பேர்களில் ஒருவன்தான் நூறு வயசை எட்டிப் பிடிக்கிருன். நூற்றுக்கு 6 பேர்தான் 65 வயசை அடைகிருர்கள். 700-இல் ஒரே ஒருவன்தான் 80 வயசுவரை ஜீவிக்கிருன்.

உலகத்திலேயே இந்தியாவில் மட்டுந்தான் பெண்களைவிட ஆண்கள் அதிக காலம் வாழ்கிருர்கள். இந்தியாவில் ஆண்களின் சராசரி வயசு 32.45. பெண்களின் சராசரி வயசு 31.66.

(29) நாம் இறப்பது கீழ்க்கண்ட மூன்றில் ஏதாவது ஒரு காரணத்திஞல்: (அ) மூச்சுத் தடைப்படுவது; (ஆ) இருதய வேலை தடைப்படுவது; (இ) நரம்பு மண்டலத்தில் ஏதாவது கெடுதி ஏற்படுவது.

(30) இவ்வளவு உண்மைகள் பொதிந்திருக்கும் மனித உடலைச் 'சிறு உலகம்' (Microcosm) என்று ஆங்கிலத்தில் கூறுவதில் தவறில்லையே! அப்படிப்பட்ட இந்த உடலின் விலை ரூபாய் ஐந்துக்கும் குறைவுதான். அதாவது, உடலில் அடங்கியுள்ள பல மூலப் பொருள்களையும் தனித் தனியாக எடுத்து விலை மதிப்புப் போட்டால், 5 ரூபாய்தான் பெறும்!

"காயமே இது பொய்யடா!
காற்றடைத்த பையடா!"

கவலை காரணம்

சூயஸ் நெருக்கடி ஏற்பட்ட சமயத்தில் பஸ்ஸிலே ஒரு தாயும் மகனும் ஏறினுர்கள். பையனுக்குச் சுமார் ஏழு வயசு இருக்கும். அவனுக்கு டிக்கெட் வாங்கவில்லை. "அம்மா, பையனுக்கு மூன்று வயசுக்குமேல் இருக்கும் என்று தோன்றுகிறதே" என்ருன் கண்டக்டர்.

"இல்லை, அப்பா. போன வாரம் மூன்று வயசாகத்தான் தோன்றினுன். நெருக்கடியால் கவலை பாய்ந்துவிட்டான். அவ்வளவுதான் விஷயம்" என்ருள் தாய். —'ஈவினிங் ந்யூஸ்'

பஹாதுர் ஷா

மன்னர் பஹாதுர் ஷா, மணி முடியை இழந்து, மாற்ருனின் கைதியாகச் செங்கோட்டையிலே சிறைப்பட்டிருந்தார். நேற்றுவரையிலே அவர் இந்தியாவின் சக்கரவர்த்தி; இன்று ஆங்கிலேயரின் கைதி. இப்படிப்பட்ட நாளிலே அவர் காலைப் பசியாற ஒரு பணியாள் அவர் முன் ஒரு தட்டைக் கொண்டுவந்து வைத்தான். அது அவருக்காக விசேஷமாக ஆங்கிலத் தளபதி ஹட்ஸன் அனுப்பியது

நேற்றுத் தம்மை கைது செய்த அதே ஹட்ஸனு இன்று தமக்கு விருந்து அளிக்கிருன் என்ற எண்ணத்தோடு, பஹாதுர் ஷா தட்டைத் திறந்து பார்த்தார்.

அவர் மைந்தர்கள் இருவருடைய தலைகள் அதிலே கிடந்தன! அவற்றைக் கண்டு அழக்கூடப் பஹாதுர் ஷாவால் முடியவில்லை. ஏனென்ருல், அவர் கண்கள் ஏற்கனவே வறண்டிருந்தன. '—மணி விளக்கு'

செத்த பிறகும் சுகம் அடைய மனிதனுக்கு
எத்தனை ஆசை! இல்லையென்றால்
இதெல்லாம் எதற்கு?

பழங்குடிகளின் ஈமச்சடங்கு

விஜயேந்திர

பெயரிடுவதிலும் கல்யாணத்திலும் சடங்குகள் மாறுபடுவதுபோலவே, சவச் சடங்குகளும் இடத்துக்கு இடம் வேறுபடுகின்றன.

உத்தரப் பிரதேசத்தில் 'கொரவ' என்னும் ஒரு ஜாதியார் இருக்கிறார்கள். அவர்களில் யாராவது இறந்துவிட்டால் உறவினர்கள் அதிகமாகக் கூடுவதில்லை. பேய், பிசாசுகளில் அவர்களுக்கு நம்பிக்கை உண்டு. இறந்த ஆசாமி தங்களைப் பிசாசாக வந்து பிடிக்கா திருக்கவேண்டும் என்ற நினைவில் பிணத்தைச் சந்தும் பொந்துமான வழியில் கொண்டு போவார்கள். போன பாதையில் முட்களை நிரப்பிவிடுவார்கள். இறந்தவனுடைய உடலுக்குப் பக்கத்தில் சிற்றுண்டிகள், சாப்பாடு, உடை ஆகியவற்றையும் வைத்து விட்டு வருவார்கள்.

'காரோ' என்னும் ஒரு வகுப்பினர் இறந்தவருடைய உடலை நான்கு நாட்கள் வீட்டிலேயே வைத்திருப்பார்கள். ஐந்தாம் நாள் நள்ளிரவில் பிணத்தை எரிப்பார்கள்.

இறந்தவன் சாதாரண மனிதனாக இருந்தால் சுடுகாட்டில் நாயைப் பலி கொடுப்பார்கள். பணக்காரனாக இருந்தால் வர்ணத் துணிகளாலும் பூக்களாலும் அலங்கரித்த புஷ்டியான எருதைப் பலி கொடுப்பார்கள். ராஜாக்கள் இறந்துவிட்டால் ஒரு வேலைக்காரியை அவர்களோடு சிதையில் தள்ளி விடுவார்களாம். மேல் உலகத்தில் அவர்களுக்கு ஏவல் புரிய ஆள் வேண்டுமல்லவா? தகனம் நடந்தபின் சாம்பலைப் பிணத்தைச் சுட்ட இடத்துக்கு அருகிலேயே புதைத்து விடுவார்கள். இறந்தவன் உபயோகித்த துணிமணிகளையோ, சாமான்களையோ வீட்டில் வைத்துக்கொள்ள மாட்டார்கள்; சிதையிலேயே போட்டு விடுவார்கள்.

'கரவாலர்' என்ற ஒரு வகுப்பினரின் வழக்கம் இது. இறந்தவர் முகத்தின்மேல் நாணயங்களை வைப்பார்கள். தகனம் செய்யும் போது இறந்தவருடைய கால்கள் மேற்கிலும் முகம் கிழக்கிலும் வரும்படி வைப்பார்கள். இறந்தவருடைய தாய் தனியாக இருந்து கொண்டு தகனக் கிரியைகளை நடத்த வேண்டும். அந்தச் சமயத்தில் அவள் தனக்காக எந்த உணவைத் தயாரித்தாலும் அதில் ஒரு பங்கை இறந்தவருக்கு ஒதுக்கி விடவேண்டும். நாலாம் நாள் உறவினர், நண்பர் எல்லோரும் சேர்ந்து விருந்து சாப்பிடுவார்கள். அப்பொழுது மிதமிஞ்சிக் கள்ளைக் குடிப்பார்கள். முப்பதாம் நாள் தம் முக்கியமான உறவினர்களுக்குச் சாப்பாடு போடுவார்கள்.

டோம் ஜாதியினர் பிணத்தைப் புதைப்பதையும் எரிப்பதையும் விடக் காட்டில் எறிந்துவிடுவது மேல் என்று நினைப்பவர்கள். சிலர் காட்டில் இருக்கும் தழைகளால் திண்ணைபோல் அமைத்துப் பிணத்தை அதன்மேல் இட்டு எரிப்பார்கள். வீட்டுக்குத் திரும்புவதற்குமுன் பிணத்தைச் சுட்ட இடத்தில் ஒரு குடிசையைக் கட்டி விட்டு வருவார்கள். இறந்தவன் அதில் வசிப்பான் என்பது அவர்கள் ஐதிகம்.

'ஸாந்தால்' ஜாதியினர் இறந்த அன்றே உடலை எரித்து விடுகிறார்

மூலம்: ஜனப்ரகதி (கன்னடம்), பங்களூர்.

கள். இறந்தவனுடைய வாரிசுகள் சடங்குகளை நடத்துகிறார்கள். சிதை அடுக்குவதற்குமுன் பசுவின் சாணியால் அந்த நிலப் பகுதியைச் சுத்தம் செய்வார்கள். அஸ்தியை ஏதோ ஒரு புண்ணிய நதியில் இட்டுவிடுவார்கள். உயிர் போகும் தறுவாயில், இறப்பவனுடைய ஆத்மா தடை இல்லாமல் வெளியேறட்டும் என்று கதவுகளை யெல்லாம் திறந்து வைப்பார்கள்.

'கோண்டா'க்கள் முன்காலத்தில் பிணத்தைப் புதைத்து வந்தார்கள். இப்பொழுது எரிக்கும் வழக்கத்தைக் கையாளுகிறார்கள். சுவர்க்கம் வடக்குத் திக்கில் இருப்பதாக இவர்கள் கொள்கை. அதனால் தகனம் செய்யும்போது பிணத்தின் கால்களை வடக்கு நோக்கி வைப்பார்கள்.

சிம்ம பூமி என்ற இடத்தில் வாழும் ஒரு வகைப் பழங்குடிகளில் பிணத்தைப் புதைப்பது, எரிப்பது இரண்டும் உண்டு. இறந்தவனுடைய ஆத்மா, மனிதர்களும் வேண்டிய பொருள்களும் தனக்கு இல்லாததால் தன்னைச் சேர்ந்தவர்களை வருத்தும் என்று இவர்கள் எண்ணுகிறார்கள். அதனால் வைத்த இடத்தைச் சுற்றி நாலு புறமும் கல்லையும் முள்ளையும் பரப்பிவிடுகிறார்கள். இரண்டு மாதம் அல்லது ஒரு வருஷத்துக்குப்பின், இறந்தவனுடைய குடும்பத்தினருக்கு ஊராரெல்லாம் ஓர் இடத்தில் ஒன்று கூடிக் கள், ஆடுகள், அரிசி ஆகியவற்றைக் கொடுப்பார்கள். அடுத்த நாள் எல்லோரும் சேர்ந்து இறந்தவனுடைய எலும்புகளைச் சுத்தமான ஒரு பாத்திரத்தில் இட்டு அதன்மேல் பூ வைத்துக் காலியான இடத்தை அரிசியால் நிரப்புவார்கள்.

அஸ்ஸாமில் 'குக்கி' என்ற ஒரு ஜாதியார் இருக்கிறார்கள். இவர்கள் சவச் சடங்குகளைத் தம் தம் வீட்டிலேயே முடித்துக்கொள்ளுகிறார்கள். இறந்தவனுடைய அந்தஸ்துக்குத் தக்கபடி பன்றியையோ ஆட்டையோ பலி கொடுப்பார்கள். குச்சிகளால் நிருமித்த பாடையில் வைத்து ஒரு குடிசைக்குள் வைத்து நெருப்பு வைப்பார்கள். இருபத்துநாலு மணி நேரம் அது எரிந்துகொண்டிருக்கும். அனலில் தீய்ந்த சவத்தின் எலும்புகளைச் சேர்த்து ஒரு கூடையில் வைப்பார்கள். இறந்தவனுக்குக் கை குவித்துக் கடைசி வணக்கம் செய்ய மக்கள் கூடுவார்கள்.

ஆஸ்திரேலியப் பூர்வகுடிகள் மந்திர வித்தைகளில் நம்பிக்கை கொண்டவர்கள். யாராவது இயற்கையாக இறந்துவிட்டாலும் ஏதோ ஏவலினால் நேர்ந்துவிட்டதாக நினைக்கிறார்கள். பிணத்தை ஊர்வலமாகக் கொண்டுபோய்க் காட்டில் ஒரு மரப்பொந்தில் வைத்துவிட்டு வருவார்கள். மூன்று நாட்களுக்குப் பின் போய்ப் பார்க்கும்போது, பறவைகளோ, மிருகங்களோ அதைத் தொட்டிருந்தால் 'கொன்ற' ஆசாமியைத் தேட முனைவார்கள். அப்படி எதுவும் தீண்டாவிட்டால் பிணத்தை ஒரு வருஷம் வரையில் அங்கேயே விட்டு வைத்திருப்பார்கள். பிறகு வீட்டில் எல்லோரையும் விடச் சிறியவன் பிணத்தின் அஸ்திகளைத் தோலில் கட்டி அங்கேயே வைத்துவிட்டு வருவான்.

சில ஜாதியார் அஸ்திகளைக் கறையான் புற்றுக்கு அருகே புதைத்துவிடுவார்கள். கை எலும்புகளை மட்டும் தங்களிடமே வைத்துக்கொள்வார்கள். பிறகு உறவினருடன் வேட்டைக்குப் போய் வருவார்கள். வந்தவுடன் இறந்தவனுடைய தகப்பனிடம் அந்த எலும்புகளையும் வேட்டையில் கிடைத்த மாமிசத்தையும் இலையில் கட்டிக் கொடுப்பார்கள். தகப்பன் எலும்புகளைத் தன் மனைவியிடம் கொடுப்பான். உடனே பெண்களெல்லாம் சேர்ந்து அழுவார்கள். ஊரார் அவர்களுக்கு ஆறுதல் சொல்வார்கள். இறந்தவனுடைய தம்பியோ, அண்ணனோ அந்த எலும்புகளைத் தூரத்தில் எங்கேயாவது புதைத்துவிட்டு வருவான். இவர்களில் வேறு சில ஜாதியார் இறந்தவர்களின் உடலைப் புதைப்பதைக் காட்டிலும் உண்பதே சிறந்தது என்று நினைக்கிறார்கள். வட துருவத்தில் வாழும் 'லேஃப்'

என்ற ஜாதியார் இறந்தவருக்குச் செய்யும் சடங்குகளைச் 'சர்ச்'சில் செய்வது உண்டு. சிலர் இறந்தவருடைய உடலை உயர்ந்த மரக் கிளையில் மிருகங்களுக்கு எட்டாமல் கட்டி வைப்பதும் உண்டு.

அமெரிக்காவில் 'ஹுரோன்' என்னும் ஜாதியார் இறந்தவர்களின் உடலை ஊருக்குள்ளேயே அதற்கென்று கட்டிய வீட்டில் வைத்துவிடுவார்கள். பன்னிரண்டு வருஷங்களுக்குப்பின் அங்கே போய் அஸ்திகளைச் சரியாகப் பொருத்திப் புதுத் துணியில் சுற்றி வீட்டுக்குக் கொண்டு வருவார்கள். அங்கே வேண்டியவர்கள் எல்லாரும் வந்து அதைப் பார்ப்பார்கள். அதற்குப்பின் வெகு ஆடம்பரத்தோடு அஸ்திகளைக் கொண்டு போய்ப் புதைப்பார்கள். அஸ்தியின்மேல் நிறையத் தானியங்களையும் தோல்களையும் குவிப்பார்கள். இந்தச் சடங்கில் பங்கெடுத்துக் கொண்டவர்களுக் கெல்லாம் விதவிதமான உணவு வகைகளைச் செய்து விருந்திட்டு மரியாதை செய்வார்கள்.

சியாம் தேசத்தில் மரப்பெட்டிகளில் மணம் நிறைந்த பூக்களை நிரப்பி அவற்றின்மேல் பிணத்தை வைப்பார்கள். மேலேயும் பூக்களால் மூடிவிடுவார்கள். பிறகு எல்லாருமாகக் கூடி அந்தப் பெட்டியை ஒரு கோயிலில் வைத்து விட்டு வருவார்கள். பிட்சுக்கள் அதன் பக்கத்தில் இருந்து மந்திரங்கள் சொல்லிக்கொண் டிருப்பார்கள். சில தினங்களுக்குப்பின் ஆடம்பரத்தோடு தகனம் செய்வார்கள்.

'ஹல்லோ! அம்மாவா?'

ஒரு நாள் ஒரு பெண் தன் அம்மாவை டிரங் டெலிஃபோனில் கூப்பிட்டாள். இன்ன பட்சணத்தை எப்படிச் செய்வது என்று கேட்டாள். அம்மா அந்த விவரத்தைச் சொல்லி விட்டு, "மகளே, சமையல் சாஸ்திரப் புத்தகம் ஒன்றை வாங்கி வைத்துக்கொள்ளுகிறதுதானே?" என்றாள்.

"என்ன அம்மா நீ! ஒரு டாலர் பணத்தை வீணடிப்பதா?" என்றாள் மகள். —எம். வீன்ஸ்டாக்

நிபுணர்களின் வித்தியாசம்

ஓர் இளம் பெண் கிளாட்ஸ்டன் என்ற ராஜதந்திரியோடு ஒரு நாள் இரவு விருந்துண்ணச் சென்றாள்; அவருடைய அரசியல் எதிரியான பெஞ்சமின் டிஸ்ரேலி என்ற ராஜ தந்திரியுடன் அடுத்த நாள் இரவு விருந்துண்ணச் சென்றாள்.

"இந்த இரண்டு கீர்த்திமான்களையும் பற்றி உனக்கு ஏற்பட்ட அபிப்பிராயம் என்ன?" என்று யாரோ ஒருத்தி அவளைக் கேட்டாள்.

பெண் சற்று யோசித்துவிட்டுச் சொன்னாள்: "நான் கிளாட்ஸ்டனின் பக்கத்தில் உட்கார்ந்துவிட்டு எழுந்து வந்தபோது, இங்கிலாந்திலேயே மகா கெட்டிக்கார மனிதர் அவர்தான் என்று எனக்குத் தோன்றியது; டிஸ்ரேலியின் பக்கத்தில் உட்கார்ந்துவிட்டு எழுந்து வந்தபோதோ, இங்கிலாந்திலேயே மகா கெட்டிக்காரப் பெண் நான்தான் என்று எனக்குத் தோன்றியது." —ராஜகுமாரி மேரி லூயிஸே

EDITED, PRINTED AND PUBLISHED BY N. RAMARATNAM,
FOR MANJARI AT THE M. L. J. PRESS PRIVATE LTD., MADRAS-4.
MANAGING EDITOR: T. J. RANGANATHAN.

அபூர்வ விழா

1940-ஆம் ஆண்டில் ஆகஸ்ட் மாதத்தில் பாரத நாட்டிலேயே முக்கியமான நிகழ்ச்சியொன்று நடந்தது. அதுதான் சாந்திநிகேதனத்தில் நடந்த பட்டமளிப்பு விழா.

பட்டமளிப்பு விழா அங்கு ஆண்டுதோறுந்தான் நடக்கிறது. இதில் என்ன சிறப்பு என்று தோன்றுகிறது அல்லவா? இது வழக்கமாக நிகழும் விழா அல்ல. ஆக்ஸ்போர்டு பல்கலைக் கழகத்தின் சார்பில் இந்தியாவிலேயே பிரமுகரான ஒருவருக்கு விசேஷப் பட்டம் வழங்குவதற்காகத் தனியே அமைந்த விழா இது. அந்தப் பிரமுகர் யார் என்று நினைக்கிறீர்கள்? இந்தியாவின் தேசிய கவி ரவீந்திரர்!

அவர் ஏற்கனவே நோபெல் பரிசு பெற்றிருந்தார். ஆயினும், பழமையான ஆக்ஸ்போர்டு பல்கலைக் கழகம் அவரைச் சிறப்பித்துப் பெருமை பெற விரும்பியது. கண்ணைக் கவர்ந்த அழகான பந்தலில் பல அறிஞர்கள் வீற்றிருந்தார்கள், பேராசிரியர் ராதாகிருஷ்ணன், டாக்டர் எஸ். கிருஷ்ணன், பாபு ராமானந்த சட்டர்ஜி, டாக்டர் சியாமாபிரஸாத் முக்கர்ஜி முதலிய மேதைகளின் குழு, அந்த விழாவுக்கே சோபை தந்தது.

கனம் ஏ. ஜி. ஆர். ஹெண்டர்ஸன், ரவீந்திரருக்கு இலக்கிய டாக்டர் என்னும் கௌரவப் பட்டத்தை வழங்கி, லத்தீன் மொழியில் பேசினர். ஐரோப்பாவின் இடைக்காலத்து இலக்கியத்துக்கும் பண்பாட்டுக்கும் கருவூலமாகத் துலங்கும் அரிய மொழி அது.

அந்தப் பாராட்டுக்கு விடை கூற எழுந்த ரவீந்திரர், பாரத நாட்டின் பழமைக்கும் பெருமைக்கும் அடையாளமாகத் திகழும் இனிய சம்ஸ்கிருதத்தில் பேசினர்.

வைஸ் - சான்ஸலர் வராமையால் அந்த விழாவுக்குத் தலைமை தாங்கிய இந்தியப் பிரதம நீதிபதி ஸர் மாரிஸ் க்வயர், 'ஆக்ஸ்போர்டின் புதிய இளம் டாக்டரை' வரவேற்று, உலக மொழிகளில் சம்ஸ்கிருதத்துக்கு உள்ள மேன்மையை எடுத்துக் காட்டினர். ''நீங்கள் பழமையான மொழியில் பேசிய கருத்தை ஆக்ஸ்போர்டு பல்கலைக் கழகத்துக்கு அறிவிக்கத் தவறமாட்டேன். அந்த மொழி லத்தீனுக்கும் ஆங்கிலத்துக்கும் மதிப்புக்கு உரிய தாயாக விளங்குகிறது. பல்கலைக் கழகத்தின் மொழியும் நான் பேசும் மொழியும் அதையே மூலமாகக் கொண்டிருக்கின்றன'' என்று அவர் மொழிந்தார்.

அந்தச் சமயத்தில் விழா மண்டபம், உலக மாந்தர் அனைவரும் கூடும் இல்லமாகக் காட்சியளித்தது.

ஆதாரம்: ஹிந்து, ஆகஸ்ட்-7, 1940.

Manjari - Aug. '57 **Regd. No. M. 4975**
(Regd. as a Newspaper in Ceylon)

மஞ்சரி

பொருளடக்கம்

ஹேவிளம்பி - ஆவணி **ஆகஸ்ட் 1957**

ஊரும் உலகமும்	.. .. ..	1
சிப்பாய்க் கலகமா?	.. வீர ஸாவர்க்கர்	4
பேதமற்ற நாடு	.. .. ரா. ஸ்ரீ. தேசிகன்	9
என்னைக் கேளுங்கள்	காப்டன் என். சேஷாத்திரிநாதன்	13
பெண்ணே உயர்ந்தவள்	.. இந்தியன் ரெவ்யூ	16
ஆலயத் தத்துவம்	.. .. மாத்ருபூமி	23
தாயும் குழந்தையும்	.. .. ..	27
பகாசுர வதம்	.. .. ..	30
ஆகாயக் காவல்	.. .. யூஸிஸ்	36
ஜான்ஸி ராணி	.. .. ஸ்த்ரீ	41
மனிதனை மிஞ்சும் மரங்கொத்தி	அமிர்தபஜார் பத்திரிகை	47
வேதநாயகம் பிள்ளை	.. .. ..	52
தமிழ் வளர வழி	.. .. ..	53
இனிப்பான பப்பாளி	.. .. ஆந்திரப் பிரபா	57
ருஷியாவில் இந்துக் கோயில்	ஸோவியத் லாண்ட்	59
தாராவின் மனைவி	.. .. சாதன	63
விநோதப் பிராணி (வங்காளிக் கதை)	ரவீந்திரர் - ஸேனு	65
உடலுக்குள்ளே (புத்தகப் பகுதி)	எஸ். மகாலிங்கம்	69
பழங்குடிகளின் ஈமச்சடங்கு	.. ஜனப்ரகதி	86
அபூர்வ விழா	.. ஹிந்து (3-ஆம் அட்டை)	